மே. து. ராசு குமார்

மே. து. ராசு குமார்

# சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்

மே. து. ராசு குமார்

மக்கள் வெளியீடு

மே. து. ராசுகுமார்

# சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்

மே. து. ராசு குமார்


*பொதுப்பதிப்பாசிரியர்*
**ரா. வசந்தா**

**விலை ரூபாய் எண்பது**

k¡fŸ btËpL 88
Kj‰ gâ¥ò or«g® 2004

*nfh¥ò*
ராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15 தானப்ப தெரு திருவல்லிக்கேணி சென்னை 600 005
bjhiyngá 94441 70450

*m¢R*
njth M¥br£ br‹id 600 005

*üyik¥ò*
k¡fŸ m¢rf« br‹id 600 002

மக்கள் வெளியீடு
49 cÅR mÈ rh»¥ bjU všÈR rhiy br‹id 600 002
Ä‹mŠrš makkalveliyeedu@yahoo.com
bjhiyngá mY. 28545532 ïš 28475561




படையல்

தன் வயிற்றில் சுமக்கவில்லை
தாய்ப்பாலும் கொடுக்கவில்லை
தணியாத அன்பினாலே
தாயாக வாழ்ந்திருந்த
பெரியம்மா...
பெரிய அம்மா
வேலாயம்மாள் அவர்களுக்கு.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 8 |
| 1 | முன்னோட்டம் | 17 |
| 2 | கோயில் ஒரு நிறுவனம் | 24 |
| 3 | அரசின் பங்களிப்பு | 30 |
| 4 | கோயிலுக்கு எதிரான குற்றங்கள் | 52 |
| 5 | கோயில் ஒரு நிலவுடைமை அமைப்பு | 61 |
| 6 | கோயில் – நில உற்பத்தியாளர் உறவுகள் | 78 |
| 7 | நிலவுடைமையாளர் பொறுப்பில் கோயில் | 96 |
| 8 | நிலவுடைமையாளர் கையில் நீர் வளங்கள் | 109 |
| 9 | கோயில் என்ற பொருளியல் மையம் ஏன்? | 120 |
| 10 | நிலவுடைமைக்குச் சார்பான கருத்துநிலை உருவாக்கம் | 158 |
| 11 | தொகுப்புரை | 191 |
| | குறிப்புகள் | 227 |

# பதிப்புரை

இந்த நீண்ட கட்டுரை, நூல் வடிவில் எழுதப்பட்டதன்று. சிறு கட்டுரையாக எழுதப்பெற்று, விரிவுபெற்று, பின்னர் மீண்டும் விரிவாக்கப்பட்டு நூல் உருவம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இயக்குநராகவும் வரலாற்றுப் பேரவைத் தலைவராகவும் இருந்த டாக்டர் இரா. நாகசாமி அவர்களும் அப்போது வரலாற்றுப் பேரவையின் செயலாளராக இருந்த நானும் இணைந்து பல ஆக்கமுறையிலான பணிகளை மேற்கொண்டிருந்த காலகட்டம் அது. வரலாற்று உணர்வை வலுப்படுத்த மாவட்டம்தோறும் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிட்டு, வரலாற்றுப் பேரவையும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும் இணைந்து, காஞ்சிபுரத்தில் 1977 சனவரி 8, 9 ஆகிய இரு நாள்கள் ‘செங்கற்பட்டு மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு’ ஒன்றினை ஏற்பாடு செய்தோம். அந்தக் கருத்தரங்கில் ‘கோயில் பொருளாதாரத்தில் அரசின் பங்கு’ என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினைப் படித்தேன். செங்கற்பட்டு மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு என்பதால், இயைபுடன் அந்த மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டுச் செய்திகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அந்தக் கட்டுரை அமைந்தது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுத் தரவுகளையே பெரும்பாலும் பயன்படுத்தி இருந்தாலும், அன்றைய போக்குகளையும் விவரங்களையும் கோயில் தொடர்பான கருத்தோட்டங்களையும் தெரிந்துகொள்ள வேண்டி, தொடர்பான வேறு பல தரவுகளையும் பார்க்க வேண்டியிருந்தது. இதனால், இடைக் காலத்திய கோயில் பொருளியல் பற்றிய முழுமையான தெரிதல்களுக்குப் பின்னரே, மாவட்டக் கருத்தரங்கிற்கான கட்டுரையினை எழுதியிருந்தேன். அப்பொழுது எனது பிஎச்டி பட்ட ஆய்வுக்கான தேடல்கள் ஓரளவு நிறைவுபெற்றிருந்ததால், இதனைச் சற்று விரிவாகவே மேற்கொள்ளமுடிந்தது.

கருத்தரங்கு நிறைவுபெற்ற பின்னர், இக்கட்டுரையை மேலும் விரிவாக எழுதவேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் தொடர்ந்தது. இதனால், இக்கட்டுரையினைச் சிறிது விரிவுபடுத்தி, மேலும் பல தரவுகளைச் சேர்த்து எழுதத் தொடங்கினேன்.



இதற்கிடையே, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் தற்போது பணியாற்றிவருபவரும் வரலாற்றுப் பேரவையின் செங்கை மாவட்டச் செயலாளராக அன்று இருந்தவருமான நண்பர் திரு துளசிராமன் அவர்களின் பெருமுயற்சியில், *செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு* என்ற தலைப்பில், கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து நூலாகக் கொண்டுவர எண்ணினோம். ஆனால், அவ்வேளையில் விரிவாக்கம் பெற்ற எனது கட்டுரை முழுமையாக முடிக்கப் பெறாமல் இருந்தது. ஆகவே, கருத்தரங்கில் படித்த வடிவத்திலேயே ஆறு பக்கங்களிலான கட்டுரை அதில் வெளியிட எடுத்துக்கொள்ளப்பெற்றது.

அப்போது, பேரா. நா. வானமாமலை அவர்கள் சென்னை வரும்போதெல்லாம் நான் தங்கியிருந்த மக்கள் வெளியீடு அலுவலக மாடியில் என்னுடன் தங்குவதுதான் பெரும்பாலும் வழமையாக இருந்தது. இக்கட்டுரையை விரிவாக எழுதிக் கொண்டிருந்தபோது சென்னை வந்து என்னுடன் தங்கியிருந்த பேரா. நா.வா. அவர்கள், இக்கட்டுரையின் பகுதிகளைப் படித்துவிட்டு, அது குறித்து விரிவாக விவாதித்ததுடன், பல கருத்துரைகளையும் வழங்கிச் செழுமைப்படுத்த வாய்ப்பேற்படுத்தினார். அவர்தம் அறிவுரைகள் எனக்குப் பேருதவியாக அமைந்தன. பாளையங்கோட்டை திரும்பிய பேரா. நா.வா. அவர்கள், இக்கட்டுரை குறித்து ஆராய்ச்சிக் குழுத் தோழர்களிடமும் கூறியிருக்கிறார்.

அப்போது பேரா. நா.வா. அவர்களின் மணிவிழாவினையொட்டி ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய மலர் ஒன்று *தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள்* என்ற தலைப்பில் வெளியிட முடிவுசெய்யப்பட்டிருந்தது. அந்த மலரில் இந்தக் கட்டுரையை வெளியிடலாம் என்றும் *செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்குத்* தொகுப்பில் இடம்பெறப்போகும் கட்டுரையில் இருந்து இது விரிவாக்கப்பட்டதாகவும் புதிய செய்திகளை இணைத்து வேறுபட்டதாகவும் இருந்ததால் தடை இல்லை என்றும் தோழர்கள் கூறினார்கள். அதற்கேற்ப, முப்பது பக்கங்களாக விரிவுபெற்ற இக்கட்டுரை ‘பிற்காலச் சோழர் காலத்தில் கோயில் பொருளாதாரமும் அரசின் மேலாதிக்கமும்’ என்ற தலைப்புடன், பேரா. நா.வா. அவர்களது மணிவிழா மலரில் இடம்பெற்றது.

*தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள்* (நவம்பர் 1978), *செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு* (டிசம்பர் 1978) ஆகிய இரண்டு நூல்களுமே சற்றேறக்குறைய ஒன்றாகவே வெளிவந்தன. இதனையடுத்து, 1981ஆம் ஆண்டு மதுரையில்

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது *செம்மலர்* வெளியிட்ட *உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலரில்* இக்கட்டுரையைத் தோழர் கே. முத்தையா அவர்கள் என் ஒப்புதல் பெறாமலேயே வெளியிட்டிருந்தார். கருத்துப் பரவலை வரவேற்கும் நான், தோழமை இதழ் ஒன்று எனது கட்டுரையை வெளியிட்டமைக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைந்து, இதனால் தோழர் முத்தையா அவர்களின் அறிமுகத்தையும் பெற்றேன். இதே போன்று, இலங்கையிலும் இக்கட்டுரை தட்டச்சு முறையில் படியெடுக்கப்பட்டு மாணவர் களிடையே பகிர்வு செய்துகொள்ளப்பட்டதாக அறிந்தேன்.

எனது ஆய்வுக் கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து நூலாகக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தில் 1987ஆம் ஆண்டு எழுத்தச்சு முறையில் நூறு பக்கங்களுக்கு மேல் கோப்புச் செய்யப்பட்டது. முதல் கட்டுரையான 'தமிழ்நாட்டில் நிலவுடைமையின் தோற்றம் – சில குறிப்புகள்' என்ற கட்டுரை யில் சில திருத்தங்களைச் செய்து செப்பனிட விழைந்ததால் ஏற்பட்ட சுணக்கம், அத்தொகுப்பினை அச்சிட முடியாமல் செய்துவிட்டது. மக்கள் அச்சகத்தின் உரிமையாளனாக அப்போது நான் இருந்தாலும், சில திங்கள்களுக்கு மேல் எழுத்துக்களை முடக்கி வைத்திருக்க முடியவில்லை. ஆகவே, கோப்புச் செய்யப்பட்டவை யாவும் அச்சிடப் பெறாமலேயே கலைக்கப்பட்டுவிட்டன.

அடுத்து, 1998ஆம் ஆண்டு எழுத்தச்சு முறையிலேயே மீண்டும் இதே கட்டுரைகள் கோப்புச் செய்யப்பட்டன. சில கட்டுரைகள் உள்ளடங்கிய பல பக்கங்கள் அச்சிட்டும் முடிக்கப்பட்டன. அப்போது, 'பிற்காலச் சோழர் காலத்தில் கோயில் பொருளாதாரமும் அரசின் மேலாதிக்கமும்' என்ற இக்கட்டுரையினை மெய்ப்புப் பார்த்துக்கொண்டிருந்த போது–பிழைதிருத்தம் செய்துகொண்டிருந்தபோது, மேலும் சில எண்ணவோட்டங்களை இதில் சேர்க்கவேண்டும் எனத் தோன்றியது. அதற்கேற்ப, பிழைதிருத்தும்போது பல பகுதி களைப் புதிதாக இணைக்கத்தொடங்கி, முப்பது பக்கங்களாக இருந்த கட்டுரை நூறு பக்கங்களுக்கு மேல் வளர்ந்துகொண் டிருந்தது. மேலும்மேலும் புதிய பகுதிகளைச் சேர்க்கத் தொடங்கியதால், உடனுக்குடன் பக்கங்களை அச்சிடமுடியாத நிலையும் தொடர்ந்தது.

இதற்கிடையில் கணினியில் கதிரச்சுக் கோப்புப் பரவலாக நடைமுறைக்கு வந்துவிட்டதால், எனது துணைவியார், தமது பொறுப்பில் அப்போது இருந்துவந்த எழுத்தச்சு வகையிலான மக்கள் அச்சகத்தை மூடிவிட முடிவு செய்தார். இதனால்,



இக்கட்டுரையின் பெரும் பகுதி உள்ளிட்டு, 144 பக்கங்கள் அச்சேறிய எனது தொகுப்பு நூலின் எஞ்சிய பக்கங்களைத் தொடர்ந்து அச்சிட இயலவில்லை. இவ்வாறாக, இரண்டாவது முறையாகத் தொடங்கப்பட்ட எனது கட்டுரைகளின் தொகுப்பு முயற்சியும் ஈடேறாமல் இடையிலேயே நின்றுபோய் விட்டது.

இந்த விவரங்களை அறிந்திருந்த எனது மைத்துனரும் நண்பரும் நலம் விரும்பியுமான சிறுநீரகவியல் வல்லுநர் டாக்டர் மு.ஆ. முத்துசேதுபதி அவர்கள், ஒரு நாள் எனது ஆய்வுகளை நூலாக்கம் செய்வது குறித்த பேச்சுவந்தபோது இந்தப் பெரிய–நீண்ட கட்டுரையை மட்டும் தனி நூலாக வெளியிடலாமென்ற கருத்தினை முன்மொழிந்தார். அடுத்து, இதே எண்ணத்தைத் தெரிவித்தவர் பேரா. ஆ. சிவசுப்பிர மணியன் அவர்கள். இருப்பினும், இது கட்டுரையாகவே எழுதப் பெற்றிருந்ததால் உடனடியாக நான் முடிவெடுக்கவில்லை. இதனையடுத்து, தமிழகம் வந்திருந்த பேரா. கா. சிவத்தம்பி அவர்களும் தனி நூலாக வெளியிடலாமென்ற எண்ணத்தை வழிமொழிந்தார். அத்துடன், நூலுக்கான ஒருசில தலைப்பு களையும் பரிந்துரைத்தார். இந்த நிலையில், எனது துணைவி யர் திருமதி வசந்தா அவர்களின் வலியுறுத்தல் இந்நூலாக்க முயற்சியை விரைவுபடுத்திவிட்டது. பேரா. கா.சி. அவர்கள் பரிந்துரைத்தவற்றைத் தழுவியே இந்நூலுக்கான தலைப்பும் அமைந்திருக்கிறது.

தற்போதைய அச்சாக்கப் பணியின்போது, மேலும் சில பகுதிகள் சேர்க்கப்பட்டதால், இந்நூல் இப்போதைய வடிவத் தினைப் பெற்றிருக்கிறது. பொருளடிப்படையில் இயல்களைப் பிரித்துக்கொண்டு அதற்கேற்ப எழுதப்பெறாமல், எழுதப் பெற்ற பகுதிகளே இயல்களாகப் பிரிக்கப்பட்டு, இயல் தலைப்பு களும் தரப்பட்டுள்ளன. எழுதப்பெற்ற கட்டுரையினை அடியொற்றியே புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு விரிவுகொண்ட தால், நூலின் பொருள் எல்லைகளும் அதற்கொப்பவே கட்டுரையின் வரைவெல்லைக்கேற்ப அமையப் பெற்றுள்ளன. இதனால், தனி நூலுக்கான முழு வடிவமைப்பினை இந்நூல் இன்னும் பெறவில்லை என்றே தோன்றுகிறது. அத்துடன், இது ஒரு முழுமையான நூலும் அன்று. *சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்* என்னும் தலைப்புக்குரிய முழு விவரங்களும் இதில் உள்ளடங்கப்பெறவில்லை. இதுவரை வெளிவராத பார்வையில், சில விவரங்கள் மட்டுமே விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. இவையும், விவரங்களின் பட்டியலாகத் தொகுக்கப்படாது, கொள்கைநிலை எடுத்துரைப்புகளாகவே

இடம்பெற்றிருக்கின்றன. பெருமளவில் விரவிக்கிடக்கும் ஆவணங்களை நுணுகி ஆய்ந்து, இதனை மேலும் விரித்து எழுத வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஆழப் பதிந்து கிடக் கிறது.

இந்நூலில் சில விவரங்கள் அல்லது சொற்றொடர் அமைப்புக்கள் திரும்பத்திரும்ப வருகின்றன. சொல்லப்படு கின்ற கருதுகோள்களைத் தெளிவுபடுத்தவும் வலியுறுத்தவும் இவை இன்றியமையாதனவாகவிருந்தன. அதே போன்று, வெவ்வேறு சமூக-பொருளிய-பண்பாட்டு நிகழ்வுகளையும் சமூக அசைவியக்கங்களையும் விவரிப்பதற்கான அடிப்படைக் கூறுகள் சில, ஆங்காங்கு மீண்டும் கூறப்பட வேண்டியனவாகி விட்டன. மேலும், தமிழில் சில கலைச்சொல்லாக்கங்கள் தாங்கிநிற்கும் பொருள்கள் இன்னும் நிலைப்படுத்தப்படாமல் இருப்பதால், அத்தகைய சொற்கள் வெளிப்படுத்தும் விளக்கங் களைப் புரிதலுக்காக விரித்துக் கூறவேண்டியிருந்தது. இவை யாவற்றையும் மீறி, சிலவிடங்களில் கூறியது கூறலும் நிகழ்ந் திருக்கிறது.

இதனை முதலாவதாக எழுதிச் சற்றேறக்குறைய இருபத் தெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நீண்ட காலப் பகுதியில் இப்பொருள் தொடர்பான பல ஆய்வுகள் வெளிவந்திருக் கின்றன. புதிய சில தரவுகளும் கிடைத்திருக்கின்றன. எனது பார்வையும் புரிதலும் விரிந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் முழுமையாக உள்வாங்கிக்கொண்டு எழுதப்பட்டதாக இந்நூல் அமைந்திருக்கிறது என்று கூற முடியாவிட்டாலும், அவற்றின் போக்குகள் யாவும் உள்ளடங்கியிருக்கின்றன.

இருந்தாலும், தமிழ்நாட்டின் சமூக-பொருளிய-பண் பாட்டு வரலாறு இன்னும் முழுமையாக வெளிக்கொண்டு வரப்படவில்லை என்ற மனக்குறை தொடர்ந்துகொண்டே யிருக்கிறது. இவற்றின் கூறுகளாகப் பல ஆய்வுகள் தனித்தனியே வெளியிடப்பட்டிருக்கின்றன என்றாலும், இவை யாவற்றையும் ஒருங்கிணைத்து, இடைவெளிகளை இட்டு நிரப்பி, இணைப்புக் கூறுகளை விரித்துரைத்து, இவற்றின் மைய இழை களாக ஓடும் போக்குகளைப் புரியவைத்து, சமூக வளர்ச்சியின் படிநிலைகளை வரையறுக்கவேண்டும். தனி ஆய்வுகளைப் பார்த்துப் பெருமைப்படும்போதே, தடைபட்டுக் கிடக்கும் பணிகளை நினைத்தால் ஏக்கம் மேலோங்குகிறது.

ஆனாலும், இத்தகைய பெருமுயற்சியை மேற்கொள்வதில் என்ன தடையிருக்கிறது என்ற வினா எழலாம். முனைப்பின்மை என்பதன்றி வேறொன்றில்லை. தமிழ்நாட்டின் சமூக-பொரு ளிய-பண்பாட்டு வரலாற்றினை முழுமைப்படுத்தும் பணியை



ஓர் இயக்கமாகவே தொடங்கவேண்டும்; ஒரு வேள்வியாகவே நடத்தவேண்டும்; ஒரு சவாலாகவே முடிக்கவேண்டும்.

இடைக் காலத்தைப் பொருத்தவரை, இதில் மார்க்சீயப் பார்வையுடன்கூடிய முயற்சிகள் அருகியிருந்ததாலேயே எதிர் பார்த்த அளவிலான வளர்ச்சி ஏற்படவில்லை எனலாம். இவற்றுக்கான சில முனைப்புகள் தோன்றியிருந்தும், மூன்று காரணிகளால் அவை வழி மாறிச் சென்றுவிட்டனவாகத் தெரிகின்றன.

முதலாவதாக, மார்க்சீயப் பார்வையுடன் ஆய்வுகளை மேற்கொண்ட சிலரின் சிறப்புத் தேர்வாக இடைக் காலம் குறித்த ஆய்வுகள் இல்லாததால், அவர்கள் கல்வெட்டு மூலங் களையோ, தொடர்பான குறிப்புகளை உள்ளடக்கிய *கல்வெட்டு ஆண்டு அறிக்கை*களையோ நேரடியாக அறிமுகம் செய்துகொள்ளமுடியவில்லை.

இரண்டாவதாக, அவர்கள், இடைக் காலம் குறித்து அப் பொழுது ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த திரிக்கப்பட்ட ஆய்வு முடிவுகளையும் அவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட தரவுகளுக் கான தவறான விளக்கங்களையும் (interpretation) அப்படியே எடுத்துக்கொண்டனர்.

மூன்றாவதாக, தமிழ் அறியாத மார்க்சீய அறிஞர் சிலர், தமிழ்நாட்டு வரலாறு குறித்து ஆங்கில நூல்களில் இருந்த திரிக்கப்பட்ட ஆய்வுகளையும் தரவுகளின் தவறான விளக்கங் களையும் நம்பி எடுத்துவைத்த பிழைபட்ட முடிவுகளை அடியொற்றியே, தமிழ் ஆய்வாளர் சிலர் தங்கள் ஆய்வுகளை அமைத்துக்கொண்டார்கள்.

இவற்றால், இடைக்காலத்தின் சமூக-பொருளிய-பண் பாட்டு வரலாறெழுதியல், பல திருப்புமுனைகளைத் தொட வேண்டியதாயிற்று. உரிய வழித்தடத்தை இப்போது அடைந் திருந்தாலும், முன்னைய படிவங்களும் பதிவுகளும் ஒரு சிலரிடையே இன்னும் நீடித்திருக்கின்றன.

இந்த வகையில் பலவற்றைக் கூறமுடியும். இடைக் காலக் கோயில் குறித்த சில திட்டமிடப்பட்ட, திரிக்கப்பட்ட கருதுகோள்கள் ஆழமாக வேரூன்றியுள்ளன. குறிப்பாக, பக்தி இயக்கம், மக்கள் இயக்கமாகவே கொள்ளப்பட்டு வருகிறது. அன்றைய சூழலில், அடித்தட்டு மக்கள் பிரிவினரைப் பக்தி இயக்கம் ஈர்த்திருந்ததால், அந்த மக்களை ஆளுமைப்படுத்த முடிந்தது என்றும் மக்கள்திரளை ஒருமைப்படுத்தி, அனை வரும் இணை என்ற மாயையை உருவாக்க முடிந்தது என்றும் மார்க்சீய அறிஞர்கள்கூட நம்புகின்றனர். சமூக-பண்பாட்டுத் தளத்தில் பக்தி இயக்கத்தின் விரிவும் வீச்சும் வியக்கத்தக்கவாறு

இருந்தது உண்மையென்றாலும், அது எந்தப் பகுதி மக்களுடைய இயக்கமாக மட்டுமே சுருண்டு கிடந்தது என்பதையும் நுணுகிப் பார்க்கவேண்டியுள்ளது. அதே போன்று, அக்காலத்திய பிராமணர்களின் இருப்பு எத்தகையதாக இருந்தது என்பது மிகைப்படுத்தலாகவே நீடித்துவருகிறது. சோழ நாட்டின் நீர்வளப் பகுதியில் பெரும்பாலானவற்றைப் பிராமணர்களே கொண்டிருந்தார்கள் என்ற மாயையைக் கொண்டிருக்கும் பலரை இன்னும் மாற்றமுடியவில்லை. இதனால், நீர் வள வாய்ப்புகளின் திறவுகோல் பிராமணரிடமே இருந்தது என்று அவர்கள் இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவற்றினையொட்டிய வேறு சில தவறான புரிதல்களும் சேர்ந்து மேனிலையாக்கம் குறித்த வழி மாறிய வரையறுப்புகளுக்கு இட்டுச்சென்றன.

பக்தி இயக்கம், பிராமணர் இருப்பு நிலை, மேனிலையாக்கம் போன்றன குறித்த புரிதலற்ற கருதுகோள்கள், சமூக அசைவியக்கங்களை மதிப்பிடுவதில் தவறான வழிகளைக் காட்டிவிட்டன.

இவையன்றி, இன்னும் பல அடிப்படைகள் தெளிவுபடுத்தப்படவில்லை. நிலம் தொடர்பான உறவுகள், பெருமளவு நிலங்கள் ஒரு சிலரிடம் சென்றுசேர்ந்தமை, அவர்கள் அந்த நிலங்களைப் பெறுதற்குக் கையாண்ட வழிமுறைகள், நீர் வளங்கள் நிலவுடைமையாளர் பிடியில் இருந்தமை, நிலத்தில் உழைப்பைச் செலுத்தியவர்களின் பங்களிப்பு, உழுதோர்–உழுவித்தோர் உறவுகள், கோயில் தனி அமைப்பாக நிறுவப்பட்டு வலுப்படுத்தப்பட்டமை, நிலவுடைமை திடப்படுத்தப்பட்டமை, ஒரு கட்டத்தில் வேளாண் தொழில்நுட்ப வளர்ச்சி முடக்கம் என்பன போன்றவை மேலும் விளக்கம் பெறுதல் வேண்டும்.

மழை அல்லது இயற்கை நீரைக்கொண்டு நடைபெற்ற வேளாண்மையிலிருந்து, ஏரி-வாய்க்கால் போன்ற பாய்ச்சல் முறைக்கு மாறிய தொழில்நுட்பமும், இந்தத் தொழில்நுட்பப் பயனை நிலவுடைமையாளர் கைக்கொண்டதும், இதைக் கொண்டு நிலங்களைக் கையகப்படுத்தியதும், புதிய விளைபொருள்களும் என இவை நில உரிமை முறையில் கொண்டு வந்த மாற்றங்களைத் தெளிவாக அறிந்துகொண்டால்தான், அன்றைய சமூக வளர்ச்சிப் போக்கை முழுமையாகப் புரிந்து கொள்ளமுடியும்.

இவை குறித்த விளக்கங்கள் யாவும் இந்நூலில் இடம்பெறவில்லையென்றாலும், அடிப்படையில் சில புரிதல்களுக்கான முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப்



புரிதல் முயற்சிகள், புதிய தொடக்கங்களுக்கு வாய்ப்பளிக்கலாம்–வழியேற்படுத்தலாம்.

இவற்றையெல்லாம் யாராவது செய்ய முன்வந்தால் மகிழ்வும் மனநிறைவும் கொள்வேன்.

கட்டுரையாகத் தொடங்கப்பட்டு, நூலாக மாறியிருக்கும் இதன் உருவாக்கத்திலும், ஏதாவதொரு வடிவிலான வெளியீட்டிலும் துணைநின்ற ஒவ்வொருவருக்கும் எனது நன்றியுரியதாகும்.

இறுதியில் தொகுப்புரை இணைக்கப்படுவதை டாக்டர் முத்துசேதுபதி அவர்கள் வலியுறுத்தினார். அதற்கொப்பத் தொகுப்புரை இடம்பெற்றிருக்கிறது. இந்நூலினை முழுமையாகப் படித்துக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதுடன், வேண்டிய சில விவரங்களையும் கொடுத்துதவியவர் எனது நீண்ட நாளைய தோழரும் கல்வெட்டறிஞருமான முனைவர் இரா. பூங்குன்றன் அவர்கள். மிகத் தூண்டுதலாக அமைந்த அவருடனான உரையாடல்களுக்குக் கடப்பாடுடையேன்.

முன்னர், எழுத்தச்சு முறையில் கோப்புப் பணி தொடங்கப்பட்டபோது, பிழை திருத்தத்துக்கான மெய்ப்பிலேயே பெரும்பாலான மாற்றங்களும் சேர்க்கைகளும் செய்யப்பெற்று, பல பக்கங்களாக இந்நூல் விரிவுகொண்டது. இப்பணிகளை எழுத்தச்சு முறையில் மேற்கொள்வதும் திருத்தங்களுக்கு ஏற்பக் குறிப்பு எண்களை மாற்றிப்போடுவதும் எளிதன்று. இவற்றையெல்லாம் முகம் கோணாமல் மன நிறைவோடு செய்தளித்தவர்கள் மக்கள் அச்சகத்தினர். இப்பணிகளில் எனக்குத் துணை நின்ற திருமதி ஆர். தேவி, திருமதி ச. சந்திரா, திருமதி வி. இந்துமதி, திருமதி ம. தரணி, திருமதி சு. செல்வி, திருமதி சி. அனுசுயா, திரு ஏ. மணி, திரு ரா. தனராசு மற்றும் எந்திர இயக்குநர் திரு எம். நாராயணசாமி ஆகியோர் என் நினைவுக்கு வருகின்றனர்.

வேண்டியவாறு நூல் விரிந்துகொண்டே சென்றபோதும், இடையிடையே சேர்க்கைகள் இருந்தபோதும் செப்பமாக்குவதில் ஒத்துழைத்த சிறீ ராகவேந்திரா கணினியகத்தின் உரிமையாளர் திரு. எஸ். தனசேகரன் மற்றும் செல்வி கோ. சித்ரா ஆகியோருக்கு நன்றி உரியது.

இந்நூலின் சில பகுதிகளைச் சேர்ப்பதும் திருத்துவதும் மாற்றுவதும் ஒழுங்கமைப்பதுமான பணிகளைக் கணினியின் துணைகொண்டு நானும் மேற்கொண்டேன். அறிவியல்நுட்ப வளர்ச்சியின் பயன் இது. இந்த வாய்ப்பு மட்டும் இல்லாமலிருந்தால் இதை நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது. இதில் வேண்டியபோதெல்லாம் எனக்கு உதவிய ஓவியா ஒளி

அச்சு உரிமையாளர் திரு ஆ. குமார் அவர்களின் பங்களிப்பினைக் குறிப்பிட விழைகிறேன். நமக்குக் கிடைத்திருக்கின்ற இலக்கியங்களையும் கல்வெட்டுக்களையும் இன்ன பிற தரவுகளையும் இந்த உயர்நுட்பத்தின் பயனைக் கொண்டு தொகுத்துப் பகுத்து ஆய்வுக்குட்படுத்தினால், தமிழ்நாட்டின் சமூக-பொருளிய-அரசியல்-பண்பாட்டு வரலாற்றினை முழுமையாகப் பெறமுடியுமே என்ற எண்ணம்தான், நான் கணினியில் பணி மேற்கொண்டபோது மேலோங்கி நின்றது.

இந்நூலாக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உற்றுழி உதவியதுடன், ஊக்கமும் கொடுத்தவர்கள் எனது துணைநலம் திருமதி ரா. வசந்தா, எமது மக்கள் செல்வன் மே.து.ரா. இனியன், செல்வன் மே.து.ரா. கனியன் ஆகியோர்.

எனது அன்னைக்கு முன் பிறந்த திருமதி வேலாயம்மாள் அவர்களது அன்பையும் அரவணைப்பையும், நினைவு தெரிந்த நாள் முதல் பெறும் பேறு எனக்குக் கிடைத்திருந்தது.

செல்வமும் செல்வாக்கும் மிக்க இல்லத்தில் பிறந்து, அதற்கியைந்த இல்லமொன்றிலேயே புகுந்த அவர்கள், மணமான சில திங்கள்களிலேயே—பதினெட்டு நிறையாத பருவத்திலேயே, வாழ்க்கைத்துணையுடன் வாழ்வையும் இழந்தார்கள்.

இன்றைய அளவில் பல கோடிகளைத் தாண்டும் வாழ்வுச் சொத்துரிமை கிடைத்ததைக்கூடப் பெறாமல், பிறந்த இல்லத்தில், உடன்பிறந்தாரின் மக்கள்பால் அன்பைப் பொழிந்து வந்தார்கள்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, வாழ்வுச் சொத்துரிமை, முழு உரிமையாக மாறிய பின்னரும் அதை நாடவில்லை. இந்துச் சட்டப்படி, வேறு வகையான் வந்த கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள புகுந்த இல்லச் சொத்துக்களையும் தொடவில்லை.

அவர்கள் அனைவருக்கும் அன்னையாக வாழ்ந்தமையால், அத்தை என்ற உறவுமுறையில் அழைக்கவேண்டியவர்கள்கூட, அவர்களைப் பெரியம்மா என்றே அழைத்து வந்தார்கள்.

அன்பையும் அருளையும் ஆதரவையும் ஆளுமையையும் பற்றுதலையும் பாசத்தையும் மட்டுமே சொத்துக்களாகக் கொண்டு வாழ்ந்திருந்த பெரியம்மா அவர்கள், என் மேல் கொண்டிருந்த அன்பு அளவற்றது.

இதனை எழுதும்போது துளிர்க்கின்ற கண்ணீரைக் கொண்டு அவர்களது நினைவுகளுக்கு இந்நூலினைப் படைக்கின்றேன்.

**மே.து. ராசு குமார்**



## இயல் 1

# முன்னோட்டம்

இடைக் காலத்தில் கோயில் என்ற அமைப்பு, கிளை பரப்பி மாபெரும் நிறுவனமாக வளர்ந்திருந்தது.

சமய நம்பிக்கை சார்ந்த இன்றைய கோயில்கள் வழிபடும் மையங்களாகத்தான் பெரிதும் இருந்துவருகின்றன. ஆனால், இதற்கு மாறாக, இடைக் காலக் கோயில்கள் சமூக- பொருளிய-பண்பாட்டு மையங்களாகவே விளங்கின. இந்தக் கோயில் என்ற அமைப்பில் நேரடியாகத் தொடர்புகொண்டிருந்த உடைமைப் பிரிவினராயினும், மறைமுகமாகத் தொடர்புகொள்ள வேண்டிய நிலையில் இருந்த உழைக்கும் கீழ்த்தட்டுப் பிரிவினராயினும், ஏதோவொரு வகையில் வேண்டியோ, வேண்டாமலோ அதனோடு பிணைக்கப்பட்டுக் கிடந்தார்கள். இருப்பு, செயல்பாடு, பங்களிப்பு, தாக்கம் எனப் பல்வேறு முனைகளில் கோயில்களைப் பற்றிய விரிவான ஆய்வுகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அவற்றுள் இதுவும் ஒன்று.

இருப்பினும், கோயில்கள் குறித்த வழக்கமான பார்வையன்றி, நிலங்களின் உடைமை உரிமை, நில உற்பத்தி உறவுகள், பொருளியக் கூறுகள், பண்பாட்டுத் தாக்கம் என்பன போன்ற வேறுபட்ட நோக்கில் கிடைத்துள்ள கல்வெட்டுத் தரவுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவை யாவற்றையும் ஒரு தொடக்கம் என்றுதான் கொள்ள முடியும். இந்த நோக்கில், தற்போதுள்ள தரவுகள் பார்க்கப்படலாம்—பார்க்கப்பட வேண்டும் என்பதற்கான முன்னோட்டமே இந்த நூல்.

சிறு கட்டுரையாக 1977இல் எழுதப்பட்டு, அடுத்த ஆண்டில் பெரியதொரு கட்டுரையாக விரிந்து, இருபத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நூலாகவே இது உருப்பெற்றிருக்கிறது. கட்டுரையினையொட்டியே நூலாக விரிவாக்கம் கொண்டதால், நூலின் வரைவெல்லைகளும் அதற்கேற்பவே அமைந்துள்ளன. இருப்பினும், முடிந்தவரை, தலைப்புக்கேற்பக் கோயிலின் பொருளியல் குறித்த ஆய்வுகள், விவரங்களின் பட்டியல் என்ற முறையில் அல்லாது கொள்கை நிலையில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. கட்டுரை எழுதப்பட்ட பிறகு இடையில் நீண்ட பல ஆண்டுகள் கடந்துவிட்டதால் எனது படிப்பிலும் பார்வையிலும் புரிந்துகொள்ளுதலிலும்

ஏற்பட்டுள்ள வளர்ச்சி, மாறுதல் ஆகியன இந்நூலிலும் எதிரொலித்தல் இயற்கை.

**நிலவுடைமை அமைப்பின் நலன் காக்கும் அரசு**

முதலில், 'கோயில் பொருளாதாரத்தில் அரசின் பங்கு' என்ற தலைப்பில் எழுதப்பட்ட சிறுகட்டுரை, விரிவாக்கம் கொண்டபோது 'பிற்காலச் சோழர் காலத்தில் கோயில் பொருளாதாரமும் அரசின் மேலாதிக்கமும்' என்ற தலைப் பினைப் பெற்றது. தொடக்கத்தில், கோயில் பொருளாதாரத்தில் அரசின் பங்கு என்ற அளவில் கருத்துக்கள் குறுகிய வரையறைக் குள் வலியுறுத்தப்பட்டிருக்க, அடுத்ததாகக் கோயில் பொருளியல் குறித்த விவரங்களுடன், கோயில்களின்பாலான அரசின் மேலாதிக்கமும் விவரிக்கப்பட்டிருந்தது.

அன்றைய நிலையில், எனது எண்ணவோட்டங்கள், கோயில் மேலாண்மையில் நேரடியாகவே மன்னனது பங்கு இருந்தது என்பனவாகவே அமைந்திருந்தன. முதல் வடிவத்தில் "கோயில் என்ற அமைப்பை அரசன் தனது நேரடி மேற்பார்வையில் நிர்வாகம் செய்தான்" என்றே குறிப்பிட் டிருந்தேன்.[1] அத்துடன், விரிவு செய்த கட்டுரையிலும் இந்த எண்ணங்களே பெரிதும் விவரிக்கப்பட்டுக் கீழ்க்கண்டவாறு முடிக்கப்பட்டிருந்தன:[2]

> மாபெரும் கோயில்கள் பலவற்றை அமைத்து, அவற்றுக்கு மிகுந்த சொத்துக்களை அளித்து, மக்களோடு இயைந்த தனி நிறுவனங்களாக அவற்றை அன்றைய அரசர்கள் உருவாக்கியதற்கு இந்தப் பின்னணியே அடிப்படைக் காரணமாகும்.

ஆனால், இக்கருத்தோட்டங்கள், இந்நூலில் முழுமை யாகச் செழுமைப்படுத்தப்பட்டுள்ளன. கோயில் ஒரு அமைப்பு என்ற வகையில், அதன் பொதுத்தன்மைகளை வெளிப்படுத்தும் வகையில் மன்னர்களுடைய மேற்பார்வை இருந்தது என்பது மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மன்னர்கள் சார்ந்திருந்த நிலவுடைமை அமைப்பின் நலன்களைக் காப்பதாகவும் வலுப் படுத்துவதாகவும் வளர்ப்பதாகவும் இத்தகைய மேற்பார்வை விளங்கியமையும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

நிலவுடைமையாளர்களின் தனித்த நிறுவனமான கோயில் களில், அவற்றில் வழிபாட்டுரிமைகூட இல்லாத நிலவுடைமை யற்ற உழைக்கும் மக்கள், கோயில் நிலங்களின் உற்பத்தியாளர் என்ற வகையில் மட்டுமே உறவு கொண்டிருந்தார்கள். உற்பத்தி யோடு தொடர்புடைய இந்த உறவுகளுக்கான நெறிமுறைகளை வடிவமைப்பதிலும் செயல்வகைகளை உருவாக்குவதிலும்



மன்னர்கள் தலையிடவேண்டியிருந்தது. இதனை, மன்னர்கள் நிலவுடைமையமைப்பின் சார்பாளராக இருந்தே நிறைவேற்றி யிருக்கிறார்கள். நிலவுடைமையாளர்களின் தனித்த கட்டுப் பாட்டில், அவர்களுடைய தனியுரிமை போன்று கோயில்கள் இருந்தாலும், அவற்றையும் பொது நிறுவனங்களாகக் காட்டு தற்கான முயற்சிகளாகவே இவை செய்யப்பட்டிருக்கின்றன.

இங்கு மன்னன் அல்லது அரசு என்ற அமைப்பினை, தனித்து மேலிருந்து செயல்படுவதாகப் பார்க்காமல், அது நிலவுடைமைப் பகுதியினரின் சார்பாக நிற்கும், நிலவுடைமை யாளர்களின் அமைப்பு என்றே பார்க்கவேண்டும். இதுவே இந்நூலிலும் அழுத்தமாக வலியுறுத்தப்படுகிறது.

**பக்தி இயக்கத்தின் பங்களிப்பு**

அடுத்து, பக்தி இயக்கத்தின் பங்களிப்புப் பற்றியதாகும். இடைக் காலத்தில், பக்தி இயக்கம் மக்களை ஈர்த்திருந்ததாகவே முன்னர் நான் எண்ணியிருந்தேன். அதனாலேயே, கீழ்க்கண்ட வாறு குறிப்பிட்டிருந்தேன்:[3]

> நிலவுடைமை அமைப்பின் சார்பில், அவ்வமைப்பின் மிகப் பெரிய நிறுவனமாக நின்ற கோயில்களை எதிர்த்துப் பல வடிவங்களில் இயக்கங்களும் எதிர்ப்புகளும் உருவான கட்டத்தில், கடும் அடக்குமுறையென்ற கருவி செய லிழந்துவிட்ட சூழ்நிலையில், கோயில்களை அனைத் திற்கும் அப்பாற்பட்ட ஒரு புனித இடமாக உயர்த்தி, எளியவர்களுக்கு எட்டாத, ஆனால் அதற்கு அடங்கிக் கிடக்கின்ற மன உணர்வைச் சமயங்கள், இறை நம் பிக்கைகள் வழியாக ஊட்டிவிட்டார்கள். அதாவது, தங்களுக்கு நேருகின்ற துன்ப துயரங்களும் தொல்லை களும் இறைவனின் திருவிளையாடல்கள் என்ற தத்து வத்தை எளிய மக்கள் ஏற்கும்படி செய்தார்கள். இதன் விளைவாகக் கூலி விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர் களும் வேளாண் தொழிலோடு இயைந்த கருவிகளைச் செய்யும் சிறு கைத்தொழிலாளர்களும் தாங்கள் சுரண்டப் பட்டுத் தொல்லைக்குள்ளாவதைக் கோயில்களுக்குச் செய்கின்ற கடமை–கடன் என்று கருதித் தாங்கிக்கொண்டு உரிமைக் குரல் எழுப்புவதற்கு மாறாகப் பொறுமையைப் பெருமையாகக் கொண்டார்கள்.

அனைத்து வரலாற்றாளர்களும் ஆய்வாளர்களும் கொண் டிருந்த–கொண்டிருக்கின்ற பொதுக்கருத்துடன் அப்போது உடன்பட்டிருந்தேன். பக்தி இயக்கம், அன்றைய அனைத்துப் பிரிவினரையும் ஈர்த்திருந்ததால், உடைமைப் பகுதியினர்,

உடைமையற்ற உழைக்கும் பகுதியினர் எனவிருந்த யாவரும் இணை என்ற மாயையை அது உண்டாக்கி, சமூகத்தை ஒருமைப்படுத்தி, மக்கள் திரளை ஆளுமைப்படுத்த முடிந்திருந்தது என்பதுவே இப்பொதுக்கருத்தாகும்.

ஆனால், கிடைத்திருக்கின்ற தரவுகளை முழுதுமாக நுணுகிப் பார்க்கும்போது, இது பொருந்துவதாகத் தெரியவில்லை. எனவே, பக்தி இயக்கம் மற்றும் அதன் ஆளுமை குறித்த எனது எண்ணங்கள் காலப்பேக்கில் முற்றாக மாறியிருந்தன. இவை விரிவாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

பக்தி இயக்க காலத்தில், உழைக்கும் மக்களின் வழிபாட்டு முறைகள் மாறியிருந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லை. அவர்கள் தொடர்ந்து நாட்டார் கடவுளர்களையே வழிபட்டு வந்தார்கள். இது, பெரும்பாலும் இன்று வரை தொடர்கிறது. இந்த நிலையில், நில உடைமைப் பகுதியினரின் எதிர்பார்ப்புகளுக்கும் தேவைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஏற்றதாக உருப்பெற்ற வழிபாட்டு முறையும் அதையொட்டிய பக்தி இயக்கமும், உடைமைகளற்ற உழைக்கும் மக்கள் பகுதியினரைச் சென்றடைந்திருக்க வாய்ப்புகளில்லை. அதற்கேற்றவாறு, உடைமைப் பகுதியினரோ, தங்கள் கோயில்களில் உழைக்கும் பகுதியினர் வழிபடுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன், சமூக-பொருளிய-பண்பாட்டு வேறுபாடுகள் இவர்களிடையே எத்தகைய மாற்றமுமின்றித் தொடர்ந்து கொண்டிருந்தன. அப்படியிருந்தபோது, அன்றைய வேறுபட்ட பகுதியினர் யாவரும் இணை என்ற உணர்வையோ, அவர்களுக்குள் ஒருமைப்பாட்டினையோ, இதன் காரணியாக உடைமையாளர்களின் ஆளுமையையோ எதிர்பார்க்கவே இயலாது.

**மேனிலையாக்கம்**

வரலாற்றாளர் மற்றும் ஆய்வாளர்களது மற்றொரு பொது உடன்பாடு மேனிலையாக்கம் குறித்ததாகும். சமக்கிருதவயவாக்கம் (Sanskritisation) என்றே திட்டமிட்டுக் குறிக்கப்பட்டுக் கொண்டிருந்த, இது இன்று, மேனிலையாக்கம் ஆகியுள்ளது. பெயர்தான் மாறியுள்ளதேயன்றி, இது குறித்த கண்ணோட்டம், அறிதல், புரிதல், தெளிதல் என்று எதுவுமே யாரிடமும் மாறிவிடவில்லை. இதில் ஓர் ஒற்றுமை என்னவெனில், தமிழ்ச் சூழலில், மேனிலையாக்கம் என்ற உண்மைக்கு ஒவ்வாத கொள்கைநிலை அல்லது கருத்துருவினைத் திறமையுடன் அறிமுகப்படுத்திய வருணப் போக்குக் கொண்டவர்களின் பார்வையினையே சிறிதும் மாற்றமின்றி முற்போக்காளர் உள்ளிட்ட பிறரும் பிடித்துக்கொண்டிருப்பதுதான். ஆனால் இங்கு, மேனிலையாக்கத்துக்கு மாறாகத் தமிழ்நிலையாக்கமே நடந்தேறியுள்ளது.



தங்கள் மொழியைத் துறந்து, புகுந்த இடத்தின் மொழியினை ஏற்று, அனைத்து வகைகளாலும் உள்ளூருடன் பிணைக்கப்பட்டவர்களாகப் பிராமணர்கள் மாறிய பிறகு மேனிலையாக்கம் எப்படி ஏற்பட்டது அல்லது ஏன் ஏற்படவில்லை என்பன புரிந்துகொள்ளப்படவேண்டியவையாக இருப்பதால், இவை குறித்த விளக்கங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. கோயில்களோடும் வழிபாட்டு முறைகளோடும் உறவுகொண்டவர்களாகவும் பிராமணர்கள் இருந்ததால்–இருப்பதால் இப்பகுதியும், இடைப்பிறவரலாக இல்லாமல் இயைபுடன் இந்நூலில் இணைந்துள்ளது என்றே கொள்ளலாம்.

**சமூக–பொருளிய–பண்பாட்டு நிலை**

நிலவுடைமை முறை, நில உற்பத்தி, நீர் வளங்களைக் கொண்டிருத்தல், மிகை உற்பத்தியைப் பகிர்வு செய்து கொள்ளுதல் ஆகியனவே கோயில் பொருளியத்தின் மையக் கூறுகளாகும். இந்த இடத்தில், கோயில் என்ற தனி அமைப்பு, நிறுவனமாக வளர்த்தெடுக்கப்பட்டமைக்கான பின்னணியையும் பார்க்கவேண்டும். இவை யாவும் இந்நூலில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, நீர் பாய்ச்சுதலின் தொழில்நுட்பம் அறிமுகமான பிறகு, நீர் வளங்கள் யாவும் ஒரு சில தனியரிடம்–கோயில் உள்ளிட்ட நிலவுடைமையாளர்களிடம் சென்றுவிட்டதால் ஏற்பட்ட நில உரிமை மாற்றங்கள், அதனால் ஏற்பட்ட உற்பத்தி உறவுகள் ஆகியன எத்தகைய சமூக-பொருளிய-பண்பாட்டு நிலைமைகளை உருவாக்கின என்பதனை வெளிப்படுத்துதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கோயில்களின் ஒழுகலாறுகள்**

தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் போன்ற இடங்களில் அமைந்துள்ள கோயில்கள் சோழப் பெருமன்னர்களால் அமைக்கப் பெற்றவை. இத்தகைய கோயில்களின் வரவுகளும் செலவுகளும் மேலாண்மை முறைகளும் செயல்பாடுகளும் முற்றிலுமாகத் தனித்து நிற்பவையாகும். இவற்றுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகளும் பெருமளவில் இருந்தன. இந்த விவரங்கள் யாவும் நுணுக்கமாகப் பதியப் பெற்றுள்ளன. இந்தக் கோயில்கள் ஓர் ஊரைச் சார்ந்து மட்டும் இருக்கவில்லை. தஞ்சைக் கோயிலுக்கான நிலங்களும் வருவாய் வாய்ப்புகளும் சோழநாட்டின் பல பகுதியில் விரவிக் கிடந்தன. கடல் தாண்டி ஈழத்திலும் இருந்தன. மையக் கோயில்களாகவும் தலைமைக் கோயில்களாகவும்

விளங்கிய இவற்றின் மேலாண்மையும் ஒரு சிலருடைய பொறுப்பில் மட்டுமே இருந்துவிடவில்லை; மன்னனது மேற் பார்வையிலேயே நடைபெற்று வந்தது.

எனவே, இக்கோயில்களின் ஒழுகலாறுகள், பிற ஊர்களில் எழுந்திருந்த கோயில்களிலிருந்து மாறுபட்டவை. எடுத்துக் காட்டாக, தஞ்சை அல்லது கங்கைகொண்டசோழபுரம் கோயிலின் மேலாண்மைக் கட்டமைப்புக்கும் வேறு பிற கோயில்களின் கட்டமைப்புக்கும் பெரிதும் வேறுபாடுகள் உண்டு. இதனால், தஞ்சை போன்ற மையக் கோயில்களின் கல்வெட்டுக் களில் கிடைத்திருக்கின்ற நுணுக்கமான விவரங்களைக் கொண்டு, பிற கோயில்களையும் அப்படியே பொருத்தி ஆய்வுக்குட்படுத்தி விட முடியாது. இந்த விவரங்களில் இழையோடும் அடிப்படை களைப் புரிந்துகொண்டு, பிற ஊர்களில் அமைந்திருந்த கோயில் களை மதிப்பிடலாம்.

தஞ்சை போன்ற கோயில்கள் சோழநாட்டினுடைய நில உற்பத்தி வளத்தின் உயர் நிலையையும் செல்வச் செழிப்பின் மேன்மையினையும் வெளிப்படுத்துகின்றன. ஊர்களில் அமைந் துள்ள கோயில்கள் அந்தந்த ஊர்களின் உற்பத்தி வளத்தையும் செல்வச் செழிப்பையும் காட்டுவன. இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் இங்கு ஆய்வுகள் அமைத்துக்கொள்ளப்பட்டிருக் கின்றன.

கோயில்களின் தோற்றம், இருப்பு, செயல்பாடுகள், பயன்பாடுகள் என யாவும் எப்படி நிலவுடைமை நலன்களை வலுப்படுத்தவும் திடப்படுத்தவும் துணையாக நின்றன என்ற விவரங்களின் அடிப்படைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**தரவுகள்**

இடைக் காலத்தைப் பற்றிய விவரங்களைத் தருகின்ற தரவுகளாக அமைந்திருக்கும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் ஆகியன அன்றைய அரசுகளின் ஆவணங்களாக அமையப் பெற்றவை. ஆனாலும், அவை யாவும் பொது நலன் தொடர்பானவை மட்டுமே. ஊர் சபை, நகரம், நாடு, கோயில், அரசாட்சி ஆகியவற்றோடு தொடர்புகொண்ட நிலம், உற்பத்தி, நீர் வளம், வரி, அலுவல், மேலாண்மை, கொடை என ஏதாவதொரு வகையிலான ஆட்சிமுறைச் செயல்பாடுகளை யொட்டி எழுதப்பெற்றவை இவை. பொது நலனுக்கோ, ஆட்சி முறைக்கோ நேரடித் தொடர்பில்லாத தனியார் குறித்த விவரங்கள், நில உரிமை மாறுதல்கள், தனியார் உற்பத்தி உறவு கள், பிற சமூக-பொருளிய-பண்பாட்டுக் கூறுகள் போன்ற வற்றுக்கான ஆவணங்கள் இல்லாமல் இருந்திருக்க முடியாது.



ஆனால், அவை ஓலைகளில் இருந்திருக்கலாம். அவற்றைக் கல்லில் எழுதி, அனைவரின் பார்வைக்கும் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. எனவே, அத்தகைய பதிவுகள் இன்று கிடைக்கவில்லை. இந்த நிலையில், கிடைத்திருக்கின்ற பதிவு களைக் கொண்டுதான் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பதிவுகள், அன்றைய வாழ்க்கை முறையின் அனைத்து விவரங்களையும் முழுமையாகக் கொண்டிருப்பவை யல்ல எனினும், இருக்கின்றவையே அன்றைய சமூக-பொருளிய-பண்பாட்டுக் கட்டமைப்பினை ஓரளவு வரையறுக்கத் தக்கன வாக இருக்கின்றன.

அந்த வகையில், இடைக் காலக் கோயில்களைப்பற்றிய ஆய்வுகள், அன்றைய தமிழகத்தில் இருந்த நீர்வளப் பகுதிகளது சமூக-பொருளிய-பண்பாட்டு ஆய்வுகளின் ஒரு பகுதியாகவே அமையும். அத்துடன், மக்கள் வாழ்க்கை முறையின் போக்கு களைப் புரிந்துகொள்வதற்கான மையக் கருத்தோட்டத்தையும் அவை வெளிப்படுத்தும்.

## இயல் 2

# கோயில் ஒரு நிறுவனம்

பிற்காலச் சோழர் காலக் கோயில்கள் நிலவுடைமை நிறுவனங்களாகவும் மேலாண்மை அமைப்புகளாகவும் நாட்டின் கருவூலங்களாகவும் கலைக்கூடங்களாகவும் கல்விச்சாலை களாகவும் மருத்துவமனைகளாகவும் கடன் தரும் வங்கிகளாக வும் வேலை தரும் அமைப்புகளாகவும் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இயைந்திருந்தன.

**பொருளிய மையம்**

ஊர்ப் பொருள்நிலை மையமாகவும் உள்ளாட்சி உறுப் பாகவும் இருந்த கோயில்களின் பணியும் பங்கும் சிறப்பிடம் பெற்றிருந்ததில் வியப்பில்லை. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களையும் பல்வேறு நீர்ப்பாசன வாய்ப்புகளையும் கொண்டிருந்த கோயில்கள், உற்பத்தியிலும் உற்பத்தியைப் பங்கீடு செய்வதிலும் தங்கள் பணிகளைச் செய்திருக்கின்றன.

பெரும்பாலான கோயில்கள் பல்வேறு வடிவங்களில் உடைமைகளைக் கொண்டிருந்தன. தனியுரிமையுடைய பயிர் செய் நிலங்களாகவும்[1] குத்தகைப் பங்குரிமை கொண்ட கொடை நிலங்களாகவும்[2] இறையுரிமை கொண்ட வருவாய் வரும் நிலங்களாகவும்[3] ஆடுமாடு போன்ற கால்நடைகளாக வும்[4] பொன்னாகவும்[5] பொற்காசுகளாகவும்[6] பொன் அணி கலன்களாகவும்[7] இன்னும் பல்வேறு கொடைகளின் உரிமை யாகவும்[8] கோயில்களுக்கு உடைமைகள் குவிந்துகிடந்தன.

அவ்வப்போது அரசர்களும்[9] அரச குடும்பத்தினரும்[10] அரசு அதிகாரிகளும்[11] படைத்தளபதிகளும்[12] ஊர் அமைப்பு களும்[13] வணிக அமைப்புகளும்[14] பிற இன அமைப்புகளும்[15] நடன மகளிரும்[16] கோயில் ஊழியர்களும்[17] பொதுமக்களும்[18] அளித்த கொடைகள் கோயில்களுக்குக் கிடைத்து வந்த வருவாயைப் பல பங்குகளாக்கிக் கோயில்களைத் தனிப்பெரும் நிறுவனங்களாக உருவாக்கியிருந்தன.

மக்களின் அன்றாட வாழ்க்கையோடும் பொருளிய உறவு களோடும் கோயில்கள் இரண்டறக் கலந்து இணைந்திருந்தன. ஊர், சபை போன்ற உள்ளாட்சி அமைப்புகளின் கூட்டம் நடக்கும் மையமாகவும்[19] விசாரணை நடைபெறும் இடமாக வும்[20] கோயில்கள் இருந்தன. ஊர் மக்கள் கூடுகின்ற பொது இடமாக இருந்தமையாலும் இத்தகைய உள்ளாட்சி அமைப்பு களின் கூட்டங்களை நடத்துதற்கேற்ற பொது மண்டபங்கள் கோயில்களிலேயே அமைந்திருந்தமையாலும், ஊர், சபை ஆகிய அவைகளின் பணிகள் பெரும்பாலும் கோயில் நிலம், நிவந்தம், கோயிலுக்குச் செலுத்தவேண்டிய வரி, வட்டி என்று கோயில்களோடு ஏதாவதொரு முறையில் தொடர்புகொண் டிருந்தமையாலும் கோயில்கள் கூட்டம் நடக்கும் மையங் களாக இருந்தன எனலாம்.



கோயில்கள் கருவூலங்களாக இருந்ததுடன், வணிகர் களுக்கும் ஊர் மக்களுக்கும் அவ்வப்போது வட்டிக்குக் கடன் கொடுத்து உதவும் வங்கிகளாகவும் செயல்பட்டு வந்தன.[21] பொது மக்களுக்கு மட்டுமின்றி ஊர், சபை போன்ற உள்ளாட்சி அமைப்புகளும் தங்களுடைய பணிகளுக்குக் கோயில்களி லிருந்து கடன் பெற்ற செய்திகளைக் காணலாம்.[22] பல கோயில்கள் ஆடல், பாடல் போன்ற கலைகளை நடத்துகின்ற அரங்கங்களாக அமைந்திருந்ததோடு,[23] இக்கலைகளைப் பயிற்றுவிக்கும் கல்லூரிகளாகவும் விளங்கின. பல கோயில்கள், தமக்கென்று தனியாக நடனக் குழுவினரையும் இசைக் குழுவினரையும் இவற்றைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களையும் கொண்டிருந்தன.[24] சிற்ப, ஓவியக் கலைக்கூடங்களாகக் கோயில்கள் காட்சி தருவதற்கு இன்றும் நூற்றுக்கணக்கான கோயில்கள் நம் கண்முன்னே சான்றாக நிற்கின்றன.

**வேலை வாய்ப்புத் தரும் அமைப்பு**

இவை யாவற்றுக்கும் மேலாகக் கோயில்கள் நில உற்பத்திப் பெருக்கத்திலும் உற்பத்திப் பங்கீட்டிலும் பெரும் பங்கு கொண்டிருந்தன. நில உற்பத்தி, கோயில் பணிகள், கோயில் காவல் என்று பல்வேறு வகைகளில் மக்களுக்கு வேலை தரும் நிறுவனங்களாகவும் விளங்கின.

தஞ்சைப் பெரிய கோயிலில் 400 தேவரடியார்களும் வேறு பல பணிகளுக்கு நூற்றுக்கணக்கான ஊழியர்களும் இருந்ததை அறிகின்றோம். நடனக் கலைக்கன்றி, வேறு கோயில் பணி களுக்கும் தேவரடியார் இருந்தனர். முதலாம் ராசேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டு (கிபி. 1018) நத்தம் கல்வெட்டு, கோயில் பணியாளர்களுக்கு ஊதியமாக நெல் எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்ற விவரத்தினை அளிக்கிறது.[25] இதே மன்னனின் 26ஆம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டு (கிபி 1038), கோயிலில் பணிபுரிந்த 12 தேவரடியார்களுக்கு உணவளிக்க நிலம் நிவந்தம் தரப்பட்டதைக் கூறுகிறது.[26] முதலாம் ராசாதி ராசனின் முப்பத்துமூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி

1061), கோயில் பணிமகனைப் பற்றிக் குறிப்பிடுகிறது.[27] திருவொற்றியூர்க் கோயிலில் *திருவெம்பாவை*, *தேவாரம்*, *திருப்பதிகங்கள்* ஆகியன பாடுதற்கும் பூசாரிகள், நடனமகளிர், நடன ஆசிரியர்கள் ஆகியோரைப் பேணுதற்கும், வீணாகக் கிடந்த 60 வேலி நிலம் அரசனது ஆணையால் பண்படுத்தபட்ட விவரத்தினை வீரராசேந்திரனது கல்வெட்டு ஒன்று தெரிவிக் கிறது.[28]

திருவொற்றியூர்க் கோயிலில் நெல் குத்துதற்கு ஐந்து பெண்களும் அவர்களது வழித்தோன்றல்களும் வாயலூர் கிழவன் திருவேகம்பம் உடைய செந்தாமரைக் கண்ணன் என்பவனால் அளிக்கப்பட்டதை மூன்றாம் ராசராசனது பத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுப் (கிபி 1237) பதிந் திருக்கிறது.[29]

திருக்கச்சியூரில் காணப்படும் அரசன் பெயரில்லாத ஒரு கல்வெட்டு, பாரிப்பாக்கம், அரும்பாக்கம், மாத்தூர் ஆகிய மூன்று ஊர்களிலும் இருந்த நிலங்கள் கொடையாகத் தரப் பட்டதையும் இந்நிலங்களைக் கூத்தன்பாக்கம் கோயிலைச் சார்ந்த பணியாளர் உழுதுவரவேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருப்பதையும் பதிந்திருக்கிறது.[30] கோயில்கள் தங்களுக்குத் தரப்பட்ட அல்லது உரிமையுடைய நிலங்களைத் தாமாகவே தங்கள் பணியாளர்களைக் கொண்டு பயிர் செய்ததை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது என்று கருதவும் இடம் உண்டு. இருப்பினும், இது மேலும் ஆய்வுக்குரியதாகும். கோயிலில் இருந்த பல்வேறு பணியாளர்களையும் அவர் களுக்குத் தரவேண்டிய ஊதிய விவரங்களையும் விரிவாகக் கிபி 1046ஆம் ஆண்டைச் சார்ந்த முதலாம் ராசாதிராசனின் திருவொற்றியூர்க் கல்வெட்டுப் பதிந்திருக்கின்றது.[31]

இவ்வாறு, சோழர் காலக் கோயில்கள் பல்வேறு பணி களுக்காகப் பலருக்குப் பணியளித்து, அவர்களுக்கு ஊதியமும் கொடுத்து வந்த செய்தியினைக் கல்வெட்டுகள் விரிவாகவும் விளக்கமாகவும் தருகின்றன.

**சமயப் பணிகள்**

இதே போன்று, பக்தர்களைப் பேணவும் உணவளிக்கவும் சமயப் பணிகளை மேற்கொள்ளவும் பெரிய கோயில்களை யொட்டியும் கோயில்களின் கட்டுப்பாட்டிலும் பல மடங்கள் நடத்தப்பட்டன. கோயில்கள் செய்யவேண்டிய சமயப் பணிகளை இம்மடங்களே நிறைவேற்றி வந்தன. மன்னர்களும் தாங்கள் நம்பிக்கைகொண்டிருந்த சமயங்களின் வளர்ச்சியை முன்னிட்டு மடங்களை உருவாக்கி, அங்கு நூற்றுக்கணக்கான பக்தர்களைப் பேணவும் பல்வேறு பணிகள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்திருந்தனர். வீரராசேந்திரனின் 4ஆம் ஆட்சி யாண்டுத் (கிபி 1067) திருவொற்றியூர்க் கல்வெட்டு, ராசேந்திர சோழ மடம் பற்றிக் குறிப்பிடுகிறது.[32] முதல் குலோத்துங்கனின் 49ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 1119), திருவொற்றியூர்க் கோயிலுக்குள் அமைந்திருந்த குலோத்துங்க சோழன் மடத்தில் 50 பக்தர்களுக்கு உணவளிக்க கங்கைகொண்ட சோழபுரம் அரண்மனையிலிருந்து அரசனே ஆணை பிறப்பித்ததைத் தெரி விக்கின்றது.[33] இவ்வரசனின் 42ஆம் ஆட்சியாண்டுத் திருக் கழுக்குன்றம் கல்வெட்டு, ஒருவன் கொடையாகக் கொடுத்த பத்துக் காசுகளைக் கொண்டு, கோயில் மேலாண்மையினர் நிலம் வாங்கி, மடம் நடத்த ஏற்பாடு செய்த செய்தியைக் கூறுகிறது.[34]

இரண்டாம் ராசாதிராசனின் 9ஆம் ஆட்சியாண்டிலும்[35] (கிபி 1172), மூன்றாம் குலோத்துங்கனின் 19ஆம் ஆட்சி யாண்டிலும்[36] (கிபி 1197) பதியப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள், மடத்தின் அலுவல்களைக் கண்காணிக்க 'மடபதி' என்ற பெயரில் மடத்தின் தலைவர் இருந்ததைக் குறிப்பிடுகின்றன. இந்த மடபதிகள் கோயில் மேலாண்மையிலும் பங்குபெற்றிருந்தனர் என்பதையும் இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இரண்டாம் ராசாதிராசனின் மேலே குறிப்பிடப்பட்ட கல்வெட்டு, மடபதியின் பெயரைச் சதுரான பண்டிதர் என்று குறிப்பிடுவதிலிருந்து அவர் சமய நூல் வல்லார் என்பதையும் சமயப் பணிகளை நிறைவேற்ற இத்தகைய வல்லுநர்கள் இருந்ததையும் அறியலாம்.

**நில உற்பத்தியாளர்**

உற்பத்திக்கு அடிப்படையான விளைநிலங்களைப் பெரு மளவில் உரிமையாகக் கொண்டு, உற்பத்தியை உருவாக்குவதில் பெரும்பங்கு கொண்டிருந்த இடைக் காலக் கோயில்கள், நில உற்பத்திக்கு இன்றியமையாத் தேவையான நீர் வளங்களை நிலைப்படுத்தி, நீர்ப்பாசன வாய்ப்புகளை விரிவாக்கி வைத் திருந்தன. நீர்ப்பாசனத்துக்கான ஏரிகளும் குளங்களும் வாய்க் கால்களும் வேறு பல பாசன வழிமுறைகளும் பெருமளவில் கோயில்களுக்கு உரித்தாக இருந்திருக்கின்றன.

கிபி 1000இல் வெட்டப்பட்ட முதலாம் ராசராசனது 15ஆம் ஆட்சியாண்டு மணிமங்கலக் கல்வெட்டு, ஊர் அவை குளத்துக்கு அருகில் கூடி 800 குழி நிலத்தைக் கோயிலுக்குக் கொடையளித்ததைக் கூறுகிறது.[37] முதல் ராசாதிராசனது மூன்றாம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டு (கிபி 1021), முழுப் பாசன வாய்ப்புகளுடன் 2308 குழி நிலமும் அந்நிலத்தை உழும் குத்தகையாளர்களுக்குக் குடியிருப்பு மனைகளும், ஆரியவம்மை என்ற பெண்ணால், திருவொற்றி

யூர்க் கோயிலைச் சார்ந்த ராசேந்திரசோழன் மடத்தில் மகேசு வரர்களுக்கு உணவளிக்க வழங்கப்பட்ட செய்தியினை உரைக் கிறது.[38]

**கோயிலிடம் நீர் வளங்கள்**

திருக்கச்சியூரில் பதியப்பட்டுள்ள மூன்றாம் குலோத்துங் கனின் இருபத்துமூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நீர்ப் பாசன வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதில் கோயிலுக்கு இருந்த முன் முயற்சியையும் கடமையையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.[39] செங்குன்றம் கிராமத்தின் அம்பர்பாக்கம் என்ற ஊரில் வாழ்ந்த மக்கள் தாங்கள் உழுது வந்த தேவதான நிலங்களுக்குப் பாசன வாய்ப்புகள் இன்றிப் பயிரிட இயலாத நிலையில் இருந்தனர். கோயில் இதற்காகத் தனியே ஒரு குளம் வெட்டி, மதகு அமைத்து, வாய்க்கால் எடுத்துத் தனக்குரிமையான நிலங்கள் பயிரிடப்பட ஏற்பாடுகளைச் செய்தது.

முதலாம் குலோத்துங்கனின் மூன்றாம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டு (கிபி 1073), ஆற்றைத் தேக்கித் தடுத்து அதன் வழியாக நீர் பாய்ச்சுதல், ஆற்று நீரை மண்வெட்டியில் வெட்டி நீர் பாய்ச்சுதல், பிரம்புக்கூடையில் இறைத்து நீர் பாய்ச்சுதல் ஆகிய மூன்று வகையான நீர்ப் பாசன முறைகளே அப்போது சட்டமுறையில் ஏற்கப்பட்டிருந்ததை விளக்குகிறது.[40] நீர்ப் பாசன வாய்ப்புகளைச் செய்துகொடுத்த துடன், முறைமைகளையும் வகுத்து, கிடைக்கின்ற நீரைப் பகுத்துப் பாய்ச்சுவதன் வழியாகப் பெருமளவில் நிலங்களை உற்பத்திக்குக் கொண்டுவரவும் சீரான உற்பத்திக்கு உறுதி செய்யவும் வழிவகை செய்திருந்தனர்.

இரண்டாம் ராசேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டு (கிபி 1059), கோட்டூர் எனப்படும் சோழ வித்யாதர சதுர்வேதிமங்கலத்துச் சபை, திரிபுவன மாதேவிப் பேரேரியிலிருந்து வாய்க்கால் அமைக்க, கூவம் என்னுமிடத்தில் நிலம் விற்கப்பட்டதைப் பதிந்திருக்கிறது.[41] ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கிபி 1112இல் முதல் குலோத்துங்கனின் 42ஆம் ஆட்சியாண்டுக் கூவம் கல்வெட்டு, திருபுவனமாதேவிப் பேரேரியைச் செப்பனிட நெல்லும் மீன் பாட்டம் என்ற வரியும் கோயிலுக்கு வழங்கப்பட்டதைக் குறிப்பிடுவது ஈர்ப்புக்குரியதாகும்.[42] ஏரியில் மீன் பிடிப்பதற்குப் போடப்படும் மீன்பாட்டம் என்ற வரி கோயிலுக்குக் கொடுக் கப்பட்டு, கோயிலே செப்பனிடும் பணியினையும் மேற் கொண்டதை இக்கல்வெட்டுத் தெளிவு செய்கிறது. மேலும், நீர்ப் பாசன அமைப்புகள் தொடர்ந்து செப்பனிடப்பட்டு,



முழுமையான பயன்களைப் பெற நிலையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையும், அதற்குக் கோயிலும் துணையாக நின்றிருந்தமையும் காணலாம்.

இவ்வாறு, கோயில்கள் உற்பத்தியில் ஈடுபட்டதுடன், உற்பத்தியான பொருள்களைப் பங்கீடு செய்வதிலும் பணியாற் றியதுடன், அவை மேலாண்மை அமைப்புகளாகவும் பொருள் நிலை உறவுகளைக் கட்டுப்படுத்தும் வலிமை மிக்க கருவிகளாக வும் அரசியல் போக்குகளை உருவாக்கும் மையங்களாகவும் விளங்கியமை தெரிகின்றது. புதிய விளைநிலங்கள் பண்படுத்தப் பட்டு, உற்பத்தியோடு இயைந்தவர்களாகத் தச்சர், கொல்லர், குயவர் போன்ற சிறு தொழிலாளர்கள் தோன்றி, ஊர்கள் தம் தேவைகளைத் தாமே நிறைவேற்றிக்கொள்ளும் தகுதி பெற்ற வுடன், வலுப்பட்ட நிலவுடைமை அமைப்பை மேலும் வலுப் படுத்த, பெருமளவில் நிலங்களையும் பிற சொத்துக்களையும் உடைமையாகக் கொண்ட பொருள்நிலை உறவுகளைக் கட்டுப்படுத்தும் சக்தியுடன் கூடிய கோயில்கள் அரசியல் மையங்களாக உருப்பெற்றன.[43]

### இயல் 3

# அரசின் பங்களிப்பு

இத்தகைய வலிமை கொண்ட நிறுவனம்–நிலவுடைமை நிறுவனம் உருப்பெற்றபொழுது அதனை நிலைப்படுத்தவும் முறைமைப்படுத்தவும், இந்த நிலவுடைமை நிறுவனத்துக்கு–நிலவுடைமை அமைப்புக்கு எதிராகத் தோன்றுகின்ற சக்தி களை அடக்கவும் ஒடுக்கவும், படைவீரர்களையும் மேலாண்மை எந்திரத்தையும் கொண்ட அரசு தனது பங்கினைச் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

**பல முனைப் பங்களிப்பு**

கோயில்களின் அன்றாட அலுவல்களில் துணைபுரிதல், கோயில்களின் வருவாயை மிகுத்தல், கோயில்களின் உற்பத்திச் சக்தியைப் பெருக்குதல், கோயில்களை எதிர்ப்போரைத் தடுத் தல், கோயில் என்ற பொது நிறுவனத்தைக் காத்தல், கோயிலின் நிலவுடைமை நலன்களைப் பேணுதல் என்று அரசின் பங்கு பல்வேறு முனைகளிலும் இருந்துவந்ததை நாம் தெளிவாகக் காணமுடியும்.

மக்களுடைய பொருள்நிலை வாழ்க்கையோடு கோயில் களின் பொருளியமும் இணைந்திருந்ததால், கோயில்களின் வருவாய்களையும் பணிகளையும் மேலாண்மை செய்வதிலும் முறைமைப்படுத்தி ஒழுங்குசெய்வதிலும் மன்னர்கள் மிகுந்த ஈடுபாடு செலுத்தினார்கள். இதன் வழியாகக் கோயில்களின் உடைமைகளாக இருந்த நிலங்களின் உற்பத்தியிலும் உற்பத்தி உறவுகளை முறைமைப்படுத்துவதிலும் மன்னர்களுடைய பங்கு வலுப்பெற்றிருந்தது.

இங்கு, மைய அரசு அல்லது மன்னன் செலுத்திய பங்களிப்பினை ஆயும்போது ஒன்றை மறந்துவிடக்கூடாது. ஊர், சபை, நகரம், போன்ற உள்ளாட்சி அமைப்புகள் பெரும் பாலும்–நடைமுறையில் முழுமையாக என்றுகூடச் சொல்லாம் –தம்மளவில் தன்னாட்சி பெற்றவையாக விளங்கினாலும், அவை யாவும் நிலவுற்பத்தி அமைப்பின் உறுப்புகளாகவே நீடித் திருந்தன. இந்த உறுப்புகளின் மையப்புள்ளியாக விளங்கியவன் தான் மன்னன். மன்னனது மைய அரசின் நலன்களுக்கும் நில வுடைமையாளர்களது உள்ளாட்சி அமைப்புகளின் நலன்



களுக்கும், அடிப்படையில், ஆழமான முரண்பாடுகளோ வேறுபாடுகளோ எந்த நிலையிலும் இருக்கவில்லை. நிலவுரிமை நலன்கள் என்று வரும்போதெல்லாம், ஒன்றுக்கொன்று அடியொற்றியே செயல்பட்டிருக்கின்றன. எனவே, அரசின் பங்களிப்பினை உள்ளாட்சிகளின் செயல்பாடுகளிலிருந்தோ, உள்ளாட்சிகளின் செயல்பாடுகளை அரசின் பங்களிப்பி லிருந்தோ முற்றிலுமாகப் பிரித்துப் பார்த்துவிடமுடியாது. ஆனாலும், பிராமணர் சபைகளைக் கண்காணிப்பதிலும் கோயில்களில் பிராமணர்களின் செயல்பாடுகளை மேற் பார்வையிடுவதிலும் அரசு வேறுபட்ட அணுகுமுறையையே கைக்கொண்டு வந்திருக்கிறது. அதாவது, பிராமணர்களையும் அவர்களது அமைப்புகளையும், தமது முழுமையான நேரடிப் பார்வையில் வைத்துக்கொண்டு அரசு கட்டுப்படுத்தி வந்திருக் கிறது. இருந்தாலும், அரசு பொதுவாக மேல்முறையீட்டு மன்றமாகவும்–மேல்முறையீட்டு மன்றம் போலவும் விளங்கி யிருக்கிறது என்பதையும் பார்க்கத் தவறிவிடக்கூடாது. இவற்றையெல்லாம் இங்கு மனத்தில் இருத்திக்கொண்டுதான் கிடைக்கின்ற தரவுகளை நுணுகிப் பார்க்கவேண்டும்.

கோயில்களின் அன்றாட அலுவல்களை நடத்த ஸ்தானத் தார்,[1] ஸ்ரீகார்யம்[2] போன்றவர்களும் கோயில் அவை உறுப்பினர் களும் இருந்தனர். இருந்தபோதிலும் உடைமைகளும் வருவாயும் மிகுந்திருந்த கோயில்களின் அலுவல்களை மேற் பார்வை செய்ய அரசனுடைய பணியாளர்கள் அமர்த்தப் பட்டிருந்தார்கள். இவர்கள் திருவேலைக்காவல்,[3] கோயில் நாயகம்[4] என்று கல்வெட்டுக்களில் கூறப்படுகின்றனர். நமக்குக் கிடைத்திருக்கின்ற கல்வெட்டுச் சான்றுகள் ஸ்தானத்தார், ஸ்ரீகார்யம், திருவேலைக்காவல், கோயில் நாயகம் போன்ற பொறுப்புகளை ஏற்றிருந்தாரது பணிப் பிரிவுகளையும் அன்றாட அலுவல்களையும் தெளிவாக வரையறுத்துக் கூறவில்லை என்றாலும், ஸ்தானத்தாரும் ஸ்ரீகார்யம் செய்வோரும் பெரும் பாலும் கோயில்களின் வழிபாட்டு முறைமைகளை நிறை வேற்றுவோராகவும் திருவேலைக்காவல், கோயில் நாயகம் ஆகியோர் கோயில் உடைமைகளையும் வருவாய்களையும் மேற்பார்வை செய்வோராகவும் இருந்தனர் என்று கொள்ள லாம்.

**கோயில் மேற்பார்வை**

வருவாய் குறைந்த கோயில்களில் மைய அரசின் அதிகாரிகள் இருக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பெருமளவு நிலங் களும் வருவாயும் இருந்த கோயில்களின் மேலாண்மையை நேரடியாகக் கண்காணிக்கவும் இதன் வழியாகக் கோயில்

நிலங்களிலிருந்து முழுமையான உற்பத்தியும் வருவாயும் கிடைக்கச் செய்யவும் அரசன் தன்னுடைய அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொண்டான்.

இத்துடன் அவ்வப்போது அரசனுடைய ஆணையை ஏற்று உயர் அதிகாரிகள் கோயிலுக்கு வந்து அன்றாட அலுவல்கள் நடைபெறும் முறைமையையும் வருவாய்-செலவு போன்ற கணக்குகளையும் மேற்பார்வையிட்டுச் சென்றார்கள். இது நாட்டின் பொருளாக்கத்தில் கோயில்களின் பங்களிப் பினைக் காட்டுகின்றது எனலாம்.

கிபி 1038ஆம் ஆண்டில், முதல் ராசேந்திரனது 26ஆம் ஆட்சியாண்டில் ராசேந்திரசிங்க மூவேந்தவேளான் என்ற அதிகாரி நடத்திய கோயில் விசாரணையைத் திருவொற்றியூர்க் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[5] திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள வக்காணிக்கும் மண்டபத்தில் நடந்த இந்த விசாரணையில் அதிகாரிகள் செய்த பணிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட் டுள்ளன. கோயிலில் நடைபெறவேண்டிய இறைமுறைமைகள் யாவை என்பதைக் குறிப்பிட்டு, அவற்றுக்கு வாங்கவேண்டிய பொருள்களின் பட்டியலையும் அவற்றின் விலைகளையும்கூட இறுதி செய்த நிகழ்வு தெளிவாக்கப்பட்டுள்ளது. மேலும், குற்றத் தண்டத்தினின்று கிடைக்கின்ற வருவாயைக்கொண்டு செய்யவேண்டிய முறைமைகள் தனியாகப் பட்டியலிடப்பட் டுள்ளன. அதேபோன்று, கோயில் ஊழியர்களிடமிருந்தும் கோயில் தேவதான நிலங்களிலிருந்தும் பெறுகின்ற நெல்லில் இருந்து செய்யவேண்டிய முறைமைகளும் தெளிவாக முடிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் ராசாதிராசனது இருபத்தாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 1044), திருவொற்றியூர்க் கோயிலில் இருந்த மண்ணைகொண்டசோழன் மண்டபத்தில் அதிகாரிகளான வளவன் மூவேந்தவேளான், விக்கிரம்மசிங்க மூவேந்தவேளான் ஆகியோர் நடத்திய விசாரணையைக் குறிப்பிடுகிறது.[6] இக்கல்வெட்டிலும் பல்வேறு பொருள்களின் விலைகள் குறிப் பிடப்பட்டிருப்பதுடன் கோயிலுக்குச் சேரவேண்டிய வரியும் வரையறை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், கோயிலுக்குச் சேரவேண்டிய வருவாய் விவரங்கள் யாவும் வெளியிடப் பட்டுள்ளன. மேலும், பயிரிடப்படாமல் வீணாகக் கிடந்த நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்ய அந்த அதிகாரிகள் செய்த ஏற்பாடுகளும் அக்கல்வெட்டிலேயே கூறப்படுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

வீரராசேந்திரனது இரண்டாம் ஆட்சியாண்டுக் கல் வெட்டு, கிபி 1064இல் வக்காணிக்கும் மண்டபத்தில் அதிகாரி



ஜெயசிங்க குலகால விழுப்பரையர், அரசனுடைய பிறந்த நாளை முன்னிட்டு நெசவாளர்கள் செலுத்தவேண்டிய வரிகளைக் கோயிலுக்குப் பகுத்துக் கொடுத்த செய்தியினை விவரிக்கின்றது.[7]

மீண்டும், முதலாம் குலோத்துங்கனது ஏழாம் ஆண்டுக் கல்வெட்டு, கிபி 1077இல் ராசராசன் மண்டபத்தில் அதிகாரி ராசராச மூவேந்தவேளான் நடத்திய விசாரணையைக் குறிப்பிடு கிறது.[8] கோயில் விசாரணையுடன், அதிகாரி திருவொற்றியூர்க் கோயிலில் வீரராசேந்திரன் திருப்பள்ளியெழுச்சி பாடுவதற்குப் பணம் கிடைக்கச்செய்த செய்தியும் கல்வெட்டில் கூறப்படு கிறது.

கோயில் நிலங்களிலிருந்து வரவேண்டிய குத்தகை வருவாய், நில உற்பத்தியாளர்களிடமிருந்து வரவேண்டிய வரி, தண்டம் போன்ற வருவாய், ஊர், சபை, நகரம், தனியார் ஆகியோருக்குக் கொடுத்திருந்த காசுக்கான வட்டி ஆகிய வரவினங்கள் முறையாக வந்திருக்கின்றனவா என்பதனையும் பார்த்து, கோயில் ஊழியர்களுக்கு உரிய முறையில் வழங்கப்பட வேண்டிய ஊதியம், கோயிலில் விளக்கெரித்தல் போன்ற கொடைகளை முறையாக–முழுமையாக நடத்தல் போன்ற செலவினங்களில் ஒழுங்கீனம் நடைபெறாமல் இருக்கிறதா என்பதையும் அதிகாரிகள் அவ்வப்போது கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

**நில உற்பத்தியை மேம்படுத்தல்**

கோயிலின் கணக்குகள் முறையாகவும் சீராகவும் இருக்கின் றனவா என்பதைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதோடு மட்டும் அரசன் அல்லது அதிகாரிகளின் பணி முற்றுப் பெறுவதில்லை. கோயிலின் நிலங்கள் ஒவ்வோர் ஆண்டும் முறைப்படிப் பயிரிடப்படவேண்டும். கோயில் நிலங்கள் பெரும்பாலும் குத்தகையாளர்கள் வழியேதான் பயிரிடப்பட்டு வந்தன. எனவே, கோயில் நிலங்கள் முழுமையாகப் பயிரிடப் படாமல் விடப்பட்டால், கோயிலின் வருவாய் குறையும். கோயிலின் வருவாய் குறைகின்ற காலத்தில் ஊழியருக்கு ஊதியம், இறை முறைமைகள், பிற கோயில் பணிகள், நடன மகளிர், நடன ஆசிரியர் போன்றோருக்கான ஊதியம் ஆகிய அனைத்தும் தடைபடும். கோயில், மக்கள் வாழ்வோடு பல்வேறு முனைகளிலும் இரண்டறக் கலந்து நின்றதால், கோயிலின் வருவாய் குறைவது மக்களிடையே நேரிடையான தாக்கத்தை ஏற்படுத்தும். இசை, நடனம் போன்ற கலைப் பணிகளும் கடன் வழியில்லாது வணிகமும், குறிப்பாகப் புதிய ஏரி, குளம் போன்ற நீர்ப்பாசன வாய்ப்புப் பெருக்கமின்றி வேளாண் தொழிலும் வளர்ச்சி குன்றி வளம் குறைய வாய்ப்பாக அமைந்துவிடும்.

பிற்காலச் சோழர் காலத்தில் கோயில்களின் பிடியிலும் விளைநிலங்கள் இருந்ததால் உற்பத்திக் குறைவால் ஒரு குறிப்பிட்ட கோயிலின் வருவாய் குறைகிறது என்பது மட்டுமல்லாது, நாட்டின் மொத்த உற்பத்தியும் இதனால் குறையும். எனவே தான், கோயில்களை மேற்பார்வை செய்ய வந்த அதிகாரிகளும், வரவு-செலவுக் கணக்குகளைப் பார்த்ததோடு நின்றுவிடாமல் கோயில் நிலங்களில் உற்பத்தியைப் பெருக்குவதிலும் கோயில்களுக்குக் கிடைத்துவரும் வருவாய் மிகுவதற்கும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

நிலங்கள் மட்டுமின்றி, கோயிலுக்கு உரித்தாயிருந்த பொன் அணிகலன்கள் போன்ற மதிப்பு மிக்க பொருள்களின் விவரங்களையும் அதிகாரிகள் மேற்பார்வையிட்டார்கள். கிபி 1003இல் வெட்டப்பட்ட முதலாம் ராசராசனின் 18ஆம் ஆட்சியாண்டுத் திருநாமநல்லூர்க் கல்வெட்டு, மங்கலங்கிழான் காளப்பன் பாழிநக்கன் என்ற அதிகாரி கோயிலில் இருந்த பொன் அணிகளின் எடை அளவுகளை ஒப்பிட்டுப் பார்த்தபோது, சில அணிகள் குறையக் கண்டு, காணாமற்போனவற்றைக் கண்டுபிடித்ததை அறிவிக்கிறது.[9] நிலங்களைப் போலவே, அணிகலன்களின் பட்டியல்களும் மிக நுணுக்கமாக எடை, அளவு, வகை போன்ற விவரங்களுடன் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.[10]

**தவறுகளைத் திருத்துதல்**

கோயில் நிலங்கள் பற்றிய ஆவணங்களும் விவரங்களும் தெளிவாக இருந்தாலும், இவற்றை மேற்பார்வை செய்யக் குழுக்களும் அதிகாரிகளும் இருந்தாலும், இதில் பல தவறுகளும் நடைபெற்றன. கிபி 1002இல் பதியப்பட்ட முதலாம் ராசராசனின் பதினேழாம் ஆட்சியாண்டுத் திருமாளம் கல்வெட்டு, கோயில் நிலத்தைத் தனியார் ஒருவர் தவறாக எடுத்துப் பயன்படுத்தியதைக் கண்டுபிடித்து, திரும்பப் பெற்றதைக் குறிப்பிடுகிறது.[11]

இப்படித் தனியார் ஒருவர் செய்ததன்றி, மாராயமங்கலம் என்ற பிராமணர் சபையே திட்டமிட்டுப் பல ஆண்டுகள் கோயில் நிலத்தைக் கள்ள நோக்குடன் எடுத்துப் பயன்படுத்தி வந்ததையும், ஆட்சியாண்டு அழிந்துவிட்ட முதலாம் ராசேந்திரனின் தெற்குக்காடுக் கல்வெட்டு விவரிக்கிறது.[12] கோயிலுக்கு உடைமையான இரண்டு நிலங்களிலிருந்து முப்பத்தைந்து ஆண்டுகளாகப் பிராமணர்களின் சபை உற்பத்தியை எடுத்துப் பயன்படுத்தி வந்தது. உற்பத்தியின் பயன் எதுவும் கோயிலுக்குத் தரப்படவில்லை. இதையறிந்த அன்னதான யோகி என்பவன் அரசனிடம் முறையிட்டான். விவரங்களை அறிய ராசேந்திர சோழ மூவேந்தவேளான் என்ற அதிகாரி கோயிலுக்கு அரசனால் அனுப்பப்பட்டான். கோயிலுக்கு வந்த அந்த அதிகாரி, உரிய ஆவணங்களைப் பார்வையிட்டு, சபை உறுப்பினர்களையும் அழைத்து ஆய்ந்தபோது குற்றச்சாட்டு உண்மையென உறுதிப்பட்டது. கோயிலின் உடைமையைத் தவறாக எடுத்துப் பயன்படுத்தியதற்காகப் பிராமணர் சபைக்குத் தண்டம் செலுத்துமாறு ஆணையிடப்பட்டது. அன்று செல்வமும் செல்வாக்கும் கொண்டிருந்த பிராமணர்கள்கூட இத்தகைய ஊழல்களையும் ஒழுக்கக்கேடுகளையும் செய்துவந்தார்கள் என்பது நோக்கத்தக்கது.



கிபி 1182இல் பதியப்பட்ட திருக்கோடிக்காவலில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று, கோயில்களின் உடைமை தொடர்பாகக் கண்டிப்பான வழிமுறைகள் பின்பற்றப்பட்டதைக் காட்டும் நிகழ்வு ஒன்றை முன்நிறுத்துகிறது.[13] கோயிலுக்கு உடைமையான நிலம் ஒன்று முறைமாறி எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், அதில் நீர் பாய்ச்சுவதற்கான வாய்க்கால் ஒன்றும் வெட்டப்பட்டது; இதுபற்றிய உண்மை தெரிந்தவுடன், அரசன் அந்த வாய்க்காலை மூடிவிடுமாறு ஆணையிட்டு, அதன் பிறகு நிலம் கோயிலுக்குத் திரும்பக் கிடைக்கச் செய்தான். கோயில் நிலத்தை எடுத்து, உற்பத்திக்கான வாய்க்கால் அமைத்திருந்தாலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**கோயில் உடைமைகளைக் காத்தல்**

கோயில் நிலத்துக்கு உரிமை கொண்டாடப்பட்ட வேறு வகையானதொரு நிகழ்வும் கிபி 1195இல் வழக்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கனின் பதினேழாம் ஆட்சியாண்டைய திருமாளம் கல்வெட்டில் கூறப்படுகிறது.[14] கோயிலுக்கு அருகில் இருந்த ஒரு நிலத்தை ராசவல்லவப் பல்லவரையன் என்பான் வைத்திருந்தான். இந்த நிலம் கோயிலுக்கு உரியது என்று கோயில் அவையினர் உரிமை கொண்டாடினர். வேசாலிப் பரையர் என்ற அதிகாரி இச்சிக்கலை விசாரித்தார். இந்த நிலத்தை ராசராசப் பெருவிலைக்குத் தான் வாங்கியதாகக் கூறி அதைப் பயன்படுத்திவந்த ராசவல்லவப் பல்லவரையன் சில ஆவணங்களை முன்வைத்தான். கோயில் அவையினர் தாங்களும் ராசராசப் பெருவிலைக்கு வாங்கியதாகவும் ராசராசனின் நான்காம் ஆட்சியாண்டிலிருந்து பதின்மூன்றாம் ஆட்சியாண்டு வரை கோயிலின் பயன்பாட்டிலேயே அந்நிலம் இருந்து வந்தது எனவும் உரிய ஆவணங்களைக் காட்டினர். இறுதியில், நிலம் கோயிலுக்கு உரியது என்று முடிவு செய்யப்

பட்டது. இதை மறுத்து மேல் முறையீடு செய்யப்படாததால், நிலம் கோயிலுக்குரியதாயிற்று.

கோயிலின் பயன்பாட்டில் ஒன்பது ஆண்டுகள் இருந்த ஒரு நிலம் எப்படிக் கைமாறியது என்பது வியப்பாக உள்ளது. இந்த நிலம் கோயிலுக்கு அருகிலேயே இருந்ததாகக் கல்வெட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கோயிலுக்கு அருகில், அதன் பயன்பாட்டில் இருந்த நிலத்தை, அந்தக் கோயிலின் அறங் காவலர்கள் உள்ளூரில் இருந்தபோதே, வேறு ஒரு தனியாள் எப்படித் தன் பிடிக்குள் கொண்டுவந்தான் என்பதற்கான விளக்கம் எதுவும் தெரியவில்லை. கோயில் அறங்காவலர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இத்தகையதொரு செயல் நடந்திருக்க இயலாது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், கோயில் அறங்காவலர் களாகப் பொறுப்பேற்றவர்கள் இதைக் கண்டுபிடித்திருக்க லாம். எப்படியிருப்பினும், இந்நிலம் கோயிலுக்கு உரியது என்பது பதிவுகளிலும் கோயில் சுவற்றின் கல்வெட்டிலும் இருந்திருக்கும்போது நிலப் பயன்பாட்டு மாற்றம் எப்படி நடந்திருக்க முடியுமோ! கோயில் நிலம் எவ்வாறெல்லாம் தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கான பொய்யான ஆவணங்களும் உருவாக்கப்பட்டன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. அடிக்கடி நடைபெற்ற விசாரணைகளும் மேற்பார்வைகளும் கோயில் உடைமை களைக் காக்கும் முயற்சிகளாகவே அமைந்தன.

கோயிலில் அரசனது பணியாளர்களாக திருவேலைக் காவல், கோயில் நாயகம் போன்ற அதிகாரிகள் இருந்தாலும், அவ்வப்போது பெரிய அதிகாரிகள் வந்திருந்து யாவற்றையும் நேரிடையாகக் கண்காணித்திருக்கின்றனர். இப்படிக் கண் காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் அனுப்பப்பட்ட வர்கள் பெருந்தனம்[15] என்ற பிரிவைச் சார்ந்த அதிகாரிகள் ஆவார்கள். அரசனுக்கு அடுத்து மிகுந்த அதிகாரங்களையும் உரிமைகளையும் கொண்டிருந்த இவர்கள் கோயில் உடைமை களின் சிக்கலான மேலாண்மை குறித்துத் தேவையான முடிவு களை எடுத்து நடைமுறைப்படுத்த அவ்வப்போது ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். முதலாம் இராசாதிராசனின் இருபத் தாறாம் ஆண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டு, மேற்பார்வை யிடவும் விசாரணை செய்யவும் வந்த விக்கிரமசிங்க மூவேந்த வேளான், பெருந்தனம் தண்டநாயகம் என்ற உயர் அதிகாரி என்பதைக் கூறுகிறது.

> மைய அரசின் உயர் அதிகாரிகளும் சில காலங்களில் அரசனும் கோயில் மேலாண்மையிலும் அலுவல்களிலும் அவ்வப்போது மேற்பார்வையும் விசாரணையும் செய் திருப்பதாகக் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டிருப்ப தானது, மக்கள் வாழ்வில் கோயிலின் சிறப்பான பங்கு வளர்ந்து வருவதையும் கோயிலின் உடைமை, வருவாய் போன்ற அலுவல்களில் தளராத விழிப்புடன் கூடிய கட்டுப்பாடு இருப்பதன் இன்றியமையாமையையும் சோழ அரசு உணர்ந்திருந்ததைக் காட்டுகின்றன



என்று பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் குறிப்பிடுகின்றார்.[16] வேறு எந்த அரசர் குலத்தின் ஆட்சிக் காலத்திலும் நடைபெறாத அளவு திறமையாகக் கோயில் விசாரணையும் மேற்பார்வையும் சோழர் காலத்தில்தான் நடைபெற்றிருக்கின்றன.[17]

நில உற்பத்தியல்லாத கோயிலின் பிற இறைமைப் பணி களும் முறையாக–முழுமையாக நடைபெற அரசர்களும் அதிகாரிகளும் முனைப்புடன் ஏற்பாடுகள் செய்தனர். இதற்கென உரிய ஆணைகள் அவ்வப்போது நடைமுறைப் படுத்தப்பட்டன. கோயில் என்ற அமைப்பு உற்பத்தியோடு தொடர்புகொண்டிருந்தாலும், அந்த உற்பத்தியெனும் அடித் தளம் முறையாக நடைபெற, இறைமைப் பணிகள் என்ற மேற்கட்டுமானம் ஒழுங்குற அமையவேண்டும். இதில் அரசர் கள் விழிப்புடன் செயல்பட்டனர் என்றே கூறவேண்டும்.

கிபி 1078ஆம் ஆண்டைச் சார்ந்த முதலாம் குலோத்துங் கனின் எட்டாம் ஆட்சியாண்டுத் திருவரங்கக் கல்வெட்டு, அக்கோயிலில் இறை முறைமைகளை முழுமையாகச் செய்யக் கோயில் நிலங்களிலிருந்து பெறுகின்ற வருவாய் போதுமான தாக இல்லையென்பதால், வேறு புதிய நிலங்கள் வழங்கப்பட்டு, வருவாய் மிக வழியேற்படுத்தித் தரப்பட்டதைப் பதிந்திருக் கிறது.[18]

வல்லத்தில் வாழ்ந்த எண்ணெய் ஆட்டுவோர் நாள் தோறும் ஓர் ஆழாக்கு எண்ணெய் கோயிலுக்கு வழங்க வேண்டும் என்று ராசேந்திரன் பிறப்பித்த ஆணையை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.[19] கிபி 1119இல் முதல் குலோத்துங்கனது நாற்பத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பவனம் பாக்கம் கிராமத்தைப் பிரித்து எழுத்தறிவர்நல்லூர் என்ற பெயரில் கோயிலுக்குக் கொடுத்து, கோயிலுக்குள்பட்டிருந்த குலோத்துங்கசோழன் மடத்தில் 50 பக்தர்களுக்கு உணவளிக்க வழிசெய்த செய்தியைக் கூறுகிறது. இதற்கான ஆணையை அரசனே கங்கைகொண்ட சோழபுரம் அரண்மனையில் வீற்றிருந்தபோது பிறப்பித்திருக்கிறான்.[20] இதேபோன்று, மூன்றாம் குலோத்துங்கன் 100 வேலி நிலம் கொடுத்த செய்தியை அவனது 27ஆம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டுக் காட்டுகிறது.[21]

சிங்கவிஷ்ணு சதுர்வேதிமங்கலத்தில் வீணாகக் கிடந்த 60 வேலி கோயில் நிலம் வீரராசேந்திரனது ஆணையினால் பண் படுத்தப்பட்டு வீரராசேந்திர விளாகம் என்று மறுபெயரிடப் பட்டு அதன் வருவாய் கோயிலில் *திருவெம்பாவை*, *தேவாரம்*, *திருப்பதிகங்கள்* பாடவும் பூசாரிகள், நடன ஆசிரியர், நடன மகளிர் ஆகியோருக்காகச் செலவிடவும் பயன்படுத்தப் பட்டதைத் திருவொற்றியூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.[22] இந்த நிலம் உற்பத்தியில்லாமல் இருந்ததால், வழிபாட்டு முறைமை கள் தடைபடவும் பூசாரிகள், நடன ஆசிரியர், நடன மகளிர் ஆகியோருக்குக் கிடைக்கவேண்டிய ஊதியம் குறையவும் நேர்ந்ததால் அரசன் தலையிட்டு ஆணையிடவேண்டிய நிலை ஏற்பட்டது எனலாம்.

கிபி 1213ஆம் ஆண்டில் திருக்கச்சியூரில் வெட்டப்பட்ட மூன்றாம் குலோத்துங்கனின் 35ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கோயிலுக்கு 67 வேலி நிலம் வழங்கப்பட்டதையும், தேவதான நிலங்கள் சீர்குன்றி உற்பத்தியற்றுப் போய்விட்டதால் வழிபாடும் கோயிலில் பழுதுபார்த்தல் போன்ற பணிகளும் தடைபட்டிருந்ததையும் அதனால் வேறு நிலம் தரவேண்டிய தேவை ஏற்பட்டதையும் பதிவு செய்திருக்கிறது.[23] இக்கல் வெட்டு, கோயில் நிலங்களின் உற்பத்தி கெட்டு வருவாய் குறைவதால் ஏற்படும் விளைவுகளைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருப்பதை அறிகிறோம்.

வீரராசேந்திரனது 7ஆம் ஆட்சியாண்டுப் பெரம்பூர்க் கல்வெட்டு (கிபி 1070), மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்துச் சபை, நிலத்தைத் திருத்தி மீண்டும் பயிரிடத் தகுதியாகப் பண்படுத்திய பின் அந்த நிலத்தைக் கோயிலுக்குக் கொடையாக வழங்கியதை எடுத்துக்காட்டுகிறது.[24] இக்கல்வெட்டில் மதுராந்தகச் சதுர் வேதிமங்கலத்துச் சபை தன்னிடம் இருந்த நிலம் உற்பத்திக்கு உதவாது சீர்கெட்டுக் கிடந்ததை அப்படியே கோயிலுக்கு வழங்காமல், அதைப் பண்படுத்தி உற்பத்திக்கும் வருவாய்க்கும் ஏற்றதாக மாற்றி வழங்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். கோயிலுக்கு அல்லது பிறருக்குக் கொடையாக வழங்கப்படும் நிலம் அல்லது வேறு பொருள் எதுவாக இருப்பினும் அதனைச் சீர்கெட்ட நிலையில் கொடையாக வழங்குவது வழமையன்று. ஆகவே, சபை இங்கு நிலத்தைப் பண்படுத்திய பின் தருவது குறிக்கத்தக்கதாகும். இங்கு மற்றொன்றையும் பார்க்க மறந்து விடக்கூடாது. இந்த நிலம் உற்பத்திக்கே கொண்டுவரப்படாத, திருத்தப்பெறாத காட்டு நிலம் அன்று. உற்பத்திக்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் ஏதோ சில காரணிகளால் உற்பத்தி மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்ட நிலம்தான். நில உற்பத்தி உரிமை மாற்றத்தினால் ஏற்பட்ட சிக்கல் ஏதாவதுகூட இதற்குக் காரணியாக இருந்திருக்கலாம். அடுத்து, உற்பத்திக்கு ஏற்ற வருவாய் உள்ள நிலங்கள் பல கோயிலுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருப்பதையும் அறிகின்றோம்.



**நீர் வளங்களை முறைப்படுத்தல்**

இருப்பினும், உற்பத்திக்குப் பண்படுத்தப்படாத புன்செய் நிலங்களும் அவ்வப்போது கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்டன. பெயர் குறிப்பிடாது பரகேசரிவர்மன் என்று கூறும் சோழ மன்னனின் 13ஆம் ஆட்சியாண்டு விருத்தாசலக் கல்வெட்டு இதனைத் தெரிவிக்கிறது.[25] திருமுதுகுன்றத்தில் இருந்த சூரியதேவன் கோயிலுக்கு நெற்குப்பையில் இருந்த குடிமக்கள் புன்செய் நிலத்தைக் கொடையளித்தார்கள். அந்த நிலத்தைக் கோயில் பெற்ற பின்னர், பண்படுத்தப்பட்டு உற்பத்திக்கு ஏற்றதாக மாற்றப்பட்டதும் அக்கல்வெட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்துக்கு நீர் வள வாய்ப்புகள் இல்லாத நிலையில் முன்னர் இது புன்செய் நிலமாக நீடித்திருந் திருக்கலாம். நீர் வள வாய்ப்புகள் கோயிலின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அல்லது கோயில் அவை உறுப்பினர்களாக இருந்த நிலவுடைமை கொண்ட வேளாளர், பிராமணர் பிடிக்குள் இருந்ததால், அந்நிலத்துக்கு நீர் பெறுவதில் தடைகள் இருந் திருக்கலாம். ஆனால், கோயில் கொடையாகப் பெற்றவுடன் அது உற்பத்தி நிலமாக உருமாறிவிட்டது. இந்த உண்மைகளை உறுதிப்படுத்தும் வகையில் வேறு சில சான்றுகளும் கிடைத் திருக்கின்றன.

ஆக்கூரில் இருக்கும் ராசராசனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நிலம் கோயிலுக்குக் கொடையளிக்கப்பட்டவுடன் கோயிலுக்குரிய நீர் வள வாய்க்கால் வழியாக நீர் பெற்றதைக் கூறுகிறது.[26] இந்த விவரங்கள் யாவும் நீர் வள வாய்ப்புகள் கோயில்களோடு தொடர்புடையவர்களின் மேலாண்மையின் கீழ்தான் இருந்தன என்பதைத் தெரிவிக்கின்றன. அதாவது, வேளாளர், பிராமணர் போன்ற நிலவுடைமையாளர் பிடியில் தான் இருந்தன என்பது புலப்படுகிறது.

இதை மேலும் உறுதிசெய்யும் வகையில், மேலப்பாடியின் இரு கல்வெட்டுகள், நீரின் பயன்பாடு தொடர்பாக அரசனது ஆணைகள் தேவதான நிலங்களுக்கு முன்னுரிமை தந்ததைக் குறிப்பிடுகின்றன. அங்குள்ள தேவதான நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதில் தொடர்ந்து தொல்லைகள் ஏற்பட்டது தொடர் பாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை அது விவரிக்கிறது; தேவதான நிலங்களுக்கு நீர் பாய்ச்சாமல், வேறு நிலங்களுக்கு நீர் செல்வதால்தான் இந்நிலை என அறிந்து, தேவதான நிலங் களுக்கு வாரத்தில் குறிப்பிட்ட சில நாள்களில் நீர் விடவேண்டும்

என்று அரசன் ஆணை பிறப்பித்தான்.[27] இத்தகையதொரு ஆணை வந்த பிறகும் தேவதான நிலங்கள் வேண்டிய நீர் பெற முடியவில்லை. இதையறிந்த அரசன் மீண்டும் மற்றோர் ஆணை பிறப்பித்து, ஏரி நீரினைத் தேவதான நிலங்களுக்கு மட்டும்தான் பயன்படுத்தவேண்டும் என்றும் வேறு நிலங்களுக்குப் பயன் படுத்தக்கூடாது என்றும் வரையறை செய்தான்.[28] சிறு நிலப் பகுதி தொடர்பான ஆவணங்களாக இவையிரண்டும் இருப் பினும், இத்தகைய முறைமைகள் இருந்தன என்பதை உறுதிப் படுத்துகின்றன எனலாம்.

இந்த எடுத்துக்காட்டுக்களை முழுமையாகப் பார்க்கும் போது, நீர் வள வாய்ப்புக்கள் கோயில்களுக்குத் தனியுரிமை யாக இல்லாதவிடங்களிலும், முன்னுரிமை தரத்தக்க வகையில் இருந்தன என்ற முடிவுக்கு வரமுடியும். கோயில் ஒரு நிலவு டைமை கொண்ட அமைப்பாக உருவாகியிருந்ததால், அது நில உற்பத்திக்குத் தேவையான—அடிப்படையான அனைத்தையும் பெற்றிருந்ததில் வியப்பில்லை. அதேபோழ்தில், கோயில் என்ற அமைப்பின் மேலாண்மையை மேற்கொண்டிருந்த நில வுடைமை கொண்ட வேளாளர் போன்றோரின் கட்டுப் பாட்டின்கீழ் நீர் வள வாய்ப்புகள் யாவும் வந்ததையும் ஒதுக்கிவிடமுடியாது. நிலம் எளிய சிறு விவசாயிகள் கையில் இருக்கும்போது நீர் வள வாய்ப்புப் பெற இயலாததையும், கோயிலின் கைக்கு மாறியவுடன் நீர் வளத்தின் பயனைப் பெற முடிந்ததையும் பார்க்கிறோம். கோயிலைப் போன்றே, வேளாளர், பிராமணர் ஆகிய நிலவுடைமையாளர்களும், சிறு அளவில் நிலம் கொண்டிருந்தவர்களிடமிருந்து நிலத்தைப் பெற நீர் வள வாய்ப்புகளைக் கருவியாகப் பயன்படுத்தி யிருக்கக்கூடும் என்பதையும் முழுமையாக மறுப்பதற்கில்லை. பெரிய அளவில் நிலங்களை உரிமையாகக்கொண்டிருந்த அதிகாரிகளும் அரசனும் இவர்களது நலன்களைக் காப்பதி லும் பேணுவதிலும் கருத்தாக இருந்தார்கள் என்றே கொள்ள வேண்டும்.

**கோயில் நில உற்பத்திச் சிக்கல்கள்**

கோயில் வருவாய் குறையாமலிருக்கவும் கோயில் நிலங்கள் முறைப்படி உழுது பயிரிடப்படவும் நேரிடையாகத் தலை யிட்டு உரிய முறையில் ஆணை பிறப்பித்ததுடன், கோயில் நிலங்கள் சீர்குன்றினால் வருவாய் குறையாமல் இருக்க அத்தகைய நிலங்களை உடனடியாகச் சீர்படுத்தவும், இயலாத இடத்து வேறு நிலங்களை வழங்கவும் அரசர்கள் ஏற்பாடு செய்தார்கள். கோயில் நிலங்கள் குத்தகை முறையில் விவசாயி



களுக்குப் பயிரிட வழங்கப்படுவதற்கு விரிவான வரைமுறை களும் விதிகளும் வகுக்கப்பட்டு அவை பிறழாது பின்பற்றப் படுகின்றனவா என்பதையும் அரசர்களும் அதிகாரிகளும் கண்காணித்து வந்தார்கள்.

கிபி 1172இல் திருவொற்றியூரில் பதியப்பட்ட இரண்டாம் ராசாதிராசனது 9ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வடுகப்பெரும் பாக்கம் என்ற தேவதானக் கிராமத்தில் நிலங்கள் உழுதற்கு வேண்டிய குத்தகையாளர் இன்றிப் பயிரிடப்படாமல் இருந் ததையடுத்து அரசன் ஆணையின்படி அமுதன் கிழவன் பெரியான் சோமன் என்பவனுக்குக் குத்தகைக்கு விடப் பட்டதைக் கூறுகிறது.[29] அடுத்த சில ஆண்டுகளில், கிபி 1197 இல், மூன்றாம் குலோத்துங்கனது ஆட்சிக் காலத்தில் மீண்டும் ஆதன்பாக்கம் என்ற தேவதானக் கிராமம் குத்தகையாளரின்றிப் பயிரிடப்படாமல் இருந்ததையடுத்து அரசனுக்குத் தெரிவிக்கப் பட்டு, அரசனது ஆணைக்கிணங்க அந்நிலம் குத்தகைக்கு விடப் பட்டதைத் திருவொற்றியூரில் இருக்கும் வேறொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[30]

இந்த இரண்டு கல்வெட்டுக்களும் சோழர் காலத்தின் குத்தகை முறையினையும் கோயில் நில உற்பத்தி முறையினையும் குறித்து அடிப்படையான தகவல்களைத் தருகின்ற வகையில் வரலாற்றுக் கருவூலங்களாக அமைந்திருக்கின்றன என்று கூறுவது மிகையான சொற்கள் அல்ல. இந்த இரண்டு கல்வெட்டுக்களிலும் குறிப்பிட்டுள்ளபடி குத்தகையாளர்கள் ஏன் கிடைக்கவில்லை என்று விரிவாக அறிய இயலவில்லை யென்றாலும்,[31] குத்தகை அளவு மிகுந்திருந்தமையோ அல்லது அந்நிலங்கள் தரங்குறைந்தவையாக இருந்தமையோ இதற்கான காரணியாக இருந்திருக்கும். கோயில் மடத்தின் தலைவர், ஸ்தானத்தார், கோயில் மேற்பார்வையாளர், தலைமைக் கணக்கர், பிற கோயில் நிலங்களின் குத்தகையாளர்கள் ஆகியோர் குத்தகையாளர் கிடைக்கவில்லை என்ற தகவலை மன்னனிடம் முறையீடாகத் தெரிவிக்கின்றனர். கோயில் நிலத்தின் உற்பத்தி யில், கோயில் தொடர்புடைய அனைவருக்கும் இருந்த கூட்டுப் பொறுப்பை அறிவதுடன், கோயில் நிலம் குறித்த முறைமை களில் இறுதி முடிவெடுக்கின்ற உரிமை மன்னனிடமே இருந்து வந்ததையும் இங்குக் காண்கிறோம். கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விடுதற்கும் குத்தகை அளவு குறித்தும் விரிவான வரைமுறைகளும் தெளிவான விதிகளும் இருந்திருக்கவேண்டும். இந்த வரைமுறைகளையும் விதிகளையும் மாற்ற அரசனது ஒப்புதல் தேவையாக இருந்திருக்கலாம். கோயில் அறங்காவலர், குத்தகையாளர்கள் ஆகியோரது முறையீடுகளுக்கு ஏற்ப

அரசன் தேவதான நிலத்தைக் குத்தகைக்குத் தர இயைந்து அதற்கேற்ப ஆணையிட்டிருக்கவேண்டும்.[32]

இதனால், கோயில் நிலங்கள் யாவும் மன்னனது ஒப்புதல் பெற்ற பின்னரே குத்தகைக்கு விடப்பட்டன என்று முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. சிக்கல் தோன்றும்போது, மேல் முறை யீட்டாளனாக நின்று மன்னன் கோயில் குத்தகையை இறுதி செய்கிறான் என்பதைத்தான் இந்நிகழ்வு காட்டுகின்றது. பண் படாத நிலங்கள் மேலும்மேலும் பண்படுத்தப்படவும் நீர் வள வாய்ப்புக்களைப் பெருக்கவும் சோழர் காலத்தில் எடுக்கப் பட்ட முயற்சிகளைக் கருத்தில்கொண்டும் பார்க்கும்போது குத்தகையாளர் கிடைக்காமல் போகுமளவுக்கு, அன்று பெரு மளவு நிலங்கள் உற்பத்திக்கு வந்துவிட்டன என்றும் உழைப்புக் குப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது என்றும் முடிவுக்கு வரப் போதுமான சான்றுகள் எதுவும் இல்லை. கோயில் நிலங்களில் உற்பத்தியை மேற்கொள்ளக் குத்தகையாளர் கிடைக்காமல் போகின்ற நிலை, அன்றைய கட்டத்தில், பெரும்பாலும் அந்நிலங்களுக்கான குத்தகை அளவு மிகுந்திருந்ததாலேயே ஏற்பட்டிருக்கிறது. அத்துடன், தரம் குறைந்திருந்து, குத்தகை யும் மிகுந்திருந்த நிலங்களைப் பயிரிடவும் உழுகுடிகள் முன்வர வில்லை. இதைப் பல பதிவுகள் உறுதிசெய்கின்றன.

எனவே, இங்கு சிக்கலுக்கான அடிப்படைக் காரணம் முன்னர் குறிப்பிட்டவாறு, நிலம் தரக்குறைவாக இருந்ததும் குத்தகை அளவு மிகுந்திருந்ததுமேயாகும். கோயில் நிலங்களை உழுதற்குக் கடுமையான வரைமுறைகளும் விதிகளும் இருந்த தால், எளிய மக்கள் மிகுந்த குத்தகையும் வரியும் செலுத்த வேண்டியதாயிற்று. வேறு வழியின்றி, இந்த வரைமுறைகளை யும் விதிமுறைகளையும் ஏற்று அவர்கள் கோயில் நிலங்களை உழவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். இத னால், அவர்கள் ஏற்ற சுமையும் பெற்ற தொல்லையும் மிகுதி.[33]

இந்த நிலையில், உள்ளூர் நில உடைமையாளர்களான கோயில் அறங்காவலர்களுக்கும் உழுகுடிகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட முடியாமல்போகும்போது மன்னன் உதவு கின்றான். தனது மேனிலை ஆளுமையைப் பயன்படுத்துகிறான். குத்தகை அளவினை மிகுதிப்படுத்தி ஆணை பிறப்பித்து நிலவுடைமையாளர்களுக்குத் துணை நின்றிருந்த மன்னவனே, நடுநிலையாளனாக மாறி, ஓர் உடன்பாட்டுக்கு வர வாய்ப்பேற் படுத்துகிறான். நிலவுடைமை அமைப்பின் சுரண்டல் முறையை மாற்றாமல், அதன் நலன்களுக்கு முழுமையான அரணாக நின்றாலும், உற்பத்தி கெட்டு நிலவுடைமைக் கட்டமைப்புக்குத் தீது நேரும்போது, சிறிது விட்டுக்கொடுத்து, அதன்வழியாக



இணக்கம் காண அன்றைய ஆளும் சக்திகள்—மன்னர்கள் முயன்றிருப்பதையே இத்தகைய நிகழ்வுகள் தெளிவுபடுத்து கின்றன.

**கோயிலில் உடைமையாளர் நலன்கள்**

நீர் வள வாய்ப்பில்லாத நிலத்தை உழுது பயிரிட யாரும் முன் வராத நிலையை இடையர்பாக்கத்தில் உள்ள இரண்டாம் ராசாதிராசனின் 11ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 1174) எடுத்துக்காட்டுகிறது.[34] கோயிலுக்கு உரிமையான ஒரு வேலி நிலம் ஊர் எல்லையில் இருந்தது. ஒதுக்கப்பட்ட இடத்தில் தனியாக இருந்ததால், நீர் பெற்றுப் பயிரிடப்பட முடியாத நிலையில் அந்நிலம் இருந்தது. எனவே, அந்நிலத்தைப் பயிரிடக் குத்தகையாளர் யாரும் முன் வராதது இயற்கை. இந்தப் பயிரிட இயலாத நிலத்தை ஊர் அவைக்குக் கொடுத்துவிட்டு, தமது விருப்பப்படி இதற்கு மாற்றாக மாடுகளைக் கோயில் அவை பெற்றுக்கொண்டது. கோயிலின் பொருளிய அமைப்பு, உற்பத்தியில் அதற்கு இருந்த பங்கு, நீர் வள வாய்ப்புகளில் இருந்த உரிமை போன்றவற்றினால் கோயிலின் ஆதிக்கம் பெரும்பாலும் ஊரைக் கட்டுப்படுத்தியது என்பதை இக்கல் வெட்டுத் தெளிவாக்குகிறது.

ஆயினும், அன்றைய கட்டத்தில், கோயில் மேலாண்மை, ஊர் மேலாண்மை ஆகிய இரண்டுமே நிலவுடைமையாளர் களிடமே இருந்துவந்துள்ளன. அப்படியிருந்தபோது, கோயில் நிலத்தை ஊர் நிலமாக மாற்றியதில் நிலவுடைமையாளர் களுக்கு எத்தகைய பயன் கிடைத்திருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதில் வேறு ஏதாவது நோக்கம் உள்ளடங்கி யிருந்ததா என்பதும் புலப்படவில்லை. உற்பத்திக்கு உதவாத நிலத்தில் பயன் எதுவும் இருந்திருக்காது. ஆனால், மாற்றாகக் கோயில் பெற்றுக்கொண்ட மாடுகள்வழி பால் உற்பத்தி பயனாகக் கிடைத்திருக்கும் என்பதுடன் இனப் பெருக்கத்தின் வழி கிடைத்த வருவாயும் கூடுதலாக இருந்திருக்கும். அதாவது, வருவாய் கொண்ட உடைமைகள் கோயிலுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால், ஊர் நலனைவிடக் கோயிலின் நலன் பெரிது என்ற எண்ணத்தை உருவாக்க முயன்றிருக்கலாம். அல்லது, பயிரிடப்படமுடியாத நிலத்தினை அந்த ஊரின் உழைக்கும் மக்களைக்கொண்டு திருத்திப் புன்செய்ப் பயிர் செய்வதற்கு ஏற்றதாக மாற்ற எண்ணியிருக் கலாம். எப்படியிருப்பினும், பின்னர் பயனடையப்போகிறவர் கள், நேரிடையாகவோ மறைமுகமாகவோ நிலவுடைமை யாளர்கள்தாம். ஆகவே, இதிலொன்றும் வியப்பு இல்லை. இடைக் காலத்தின் உற்பத்தி முறைகளையும் உறவுகளையும்

இவற்றை மிக இறுக்கமாகக் கைக்கொண்டிருந்த கட்டமைப்பு களையும் அவற்றினது செயல்பாடுகளின் வகைகளையும் மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள இத்தகைய தரவுகளை மிக நுண்ணிய ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய இன்றியமை யாமையையே இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.

கோயிலுக்கு இருந்த இந்த ஆதிக்கம் கிபி 887ஆம் ஆண்டிலேயே ஏற்பட்டுவிட்டதை விஜயாலயனின் 16ஆவது ஆட்சியாண்டின் உக்கல் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது.[35] இங்கு ஊர் நிலத்தை, கோயில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்வதைக் காண்கிறோம். “அடிகளுக்கு ஸ்ரீகார்யஞ் செய்கின்ற சக்ரவாணி நம்பி விண்ணப்பத்தினால் சம்வத்சர வாரியப் பெருமக்களும் எரி வாரிய பெருமக்களும் உள்ளிட்ட மகாசபையோம் எம்மூர் புவநி மாணிக்க விஷ்ணுஹ்ரகத்து” கூடி நிலத்தைக் கொடையளித்தனர் என்றும் இதற்கு “இப்பரிசு சபை பணி ஒட்டிக் குடுத்தென் சக்ரபாணி நம்பியென்” என சக்ரவாணி அனுமதி கொடுத்தான் என்றும் இக்கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கல்வெட்டில் இரண்டு செய்திகள் வலியுறுத்தப்படு கின்றன. கோயில் விரும்பினால் விண்ணப்பத்தின் வழியாக ஊர் நிலத்தை வேண்டிப் பெறமுடியும் என்பது ஒன்று. இத்தகைய நிலமாற்றங்களுக்குக் கோயிலின் அனுமதியும் தேவை என்பது மற்றொன்றாகும்.

இங்கு, ஊர் அவை அல்லது ஊராருக்கு உரித்தாக இருந்த நிலத்தைக் கேட்டுப் பெறும் உரிமையைக் கோயில் பெற்றிருந்தது என்பதுடன், கோயில் ஊரின் மேலாண்மையிலும் தலையிட்டுப் பல பணிகளை மேற்கொண்டிருந்தது என்பதும் தெளிவாகிறது. இத்தகைய மேலாண்மையைச் செலுத்த அரசனது பொதுவான ஒப்புதல் இருந்திருக்கலாம். அல்லது, கோயில் அவையும் ஊர் அவையும் நிலவுடைமையாளர் பொறுப்பில் இருந்ததால் இத்தகைய மாற்றங்கள் எளிதில் நடந்திருக்கலாம்.

**நிலவுரிமைச் சிக்கல்கள்**

இதே போன்று வேறொரு வகையான நில மாற்றத்தைக் கிபி 1080இல் வெட்டப்பட்ட முதல் குலோத்துங்கனின் பத்தாம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டுப் பதிவு செய் திருக்கிறது.[36] கோயிலின் அலுவல்களைப் பார்வையிடவும் விசாரணை மேற்கொள்ளவும் வந்திருந்த அதிகாரிகள் சுந்தர சோழ மூவேந்தவேளான், குருகுலராஜர் ஆகியோர் அரசனது ஆணைக்கேற்ப, தளியிலார் என்ற நடன மகளிர் சீவிதமாக அனுபவித்து வந்த நிலத்தைக் கோயிலுக்கு எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வேறு நிலம் கொடுக்கச்செய்தனர்.



வேளச்சேரியில் கிடைத்துள்ள முதல் ராசேந்திரனின் 6ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 1018), வௌாச்சேரி கிராமத்தில் இருந்த பிராமணர் அல்லாதார் நிலங்கள் யாவும் கட்டாயப் படுத்தப்பட்டுக் கோயிலுக்கு விற்கப்பட்டதைப் பதிவு செய் துள்ளது.[37] இத்தகைய கட்டாயப்படுத்தும் செயலைக் கிராமச் சபையோ, ஊர்அவையோ தன்னிச்சையாகச் செய்திருக்க இயலாது. ஆகவே, அரசின் முன் அனுமதி பெற்று இந்த மாற்றம் நடைபெற்றிருக்கவேண்டும்.

முதல் குலோத்துங்கனின் இருபதாம் ஆட்சியாண்டுக் கூவம் கல்வெட்டு (கிபி 1090), வேறொரு வகையான நில மாற்றத்தைக் குறிக்கிறது.[38] வீரராசேந்திரனின் இரண்டாம் ஆட்சியாண்டில் (கிபி 1065) அக்கிலிப்பட்டன் என்பவனுக்கு நிலம் ஒன்று விற்கப்பட்டது. இந்நிலம் தங்களுக்குரியது என மதுராந்தகநல்லூர், நரசிங்கமங்கலம் மற்றும் இரு ஊர்களைச் சேர்ந்த நான்கு சபைகள் உரிமை கொண்டாடின. நிலம் யாருக்குரியது என முடிவு செய்ய இயலவில்லை. இருபத்தைந்து ஆண்டுகள் இந்த நில உரிமை குறித்துச் சிக்கல் நீடித்து வந்தது. சிக்கலைத் தீர்க்க வேறு வகைச் சான்றுகளும் இல்லை. கோயிலுக்கு இந்நிலத்தைத் தருவதற்கு இறுதியாக நான்கு சபைகளும் ஒப்புக்கொண்டன. ஆகவே, இந்நிலம் முதலாம் குலோத்துங்கனின் இருபதாம் ஆட்சியாண்டில் (கிபி 1090) கோயிலுக்கு உரித்தாக்கப்பட்டு, நீண்ட பல ஆண்டுகளாக நிலவிய இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

**கோயிலுக்குக் கிடைத்த பிற வருவாய்**

நில உற்பத்தியல்லாத பிற வகை வருவாய்களும் கோயில் களுக்குக் கிடைக்க அரசர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இத்தகைய வருவாய் வாய்ப்புகள் பெரும்பாலும் வரிகளாகவே இருந் திருக்க முடியும்.

கோயிலுக்கு உரிமையாக இருந்த திருவொற்றியூர் மற்றும் சில ஊர்களில் பல வரிகளுக்கு விலக்குத் தரப்பட்டிருந்தது. கோயிலின் வரி வருவாயை உயர்த்த எண்ணிய மூன்றாம் ராசராசன் தன் 7ஆம் ஆட்சியாண்டில் (கிபி 1225) வெட்டி, புடவை முதல், திரைக்காசு, ஆசுவிகள் காசு, குடிக்காசு, இனவரிக் காசு, கார்த்திகைக் காசு, வெளிச்சின்னம், வெட்டிக் காசு, சிறுபாடி காவல், கங்காணிக் காசு, குற்றத் தண்டம், பட்டித்தண்டம் போன்ற பல வரிகளையும் உவச்சர், நெசவாளர், எண்ணெய் ஆட்டுவோர் போன்றோர் செலுத்த வேண்டிய வரிகளையும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அவை கோயிலுக்குச் சேரவேண்டும் என்று ஆணை யிடப்பட்டது திருவொற்றியூரில் பதியப்பெற்றுள்ளது.[39]

கோயிலுக்குச் சேரவேண்டியவற்றை முறையாகவும் ஒழுங்காகவும் சேர்ப்பிக்காதவர்கள் கண்டிப்புடன் தண்டிக்கப்பட்டார்கள். இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றவர்களையும் அச்சப்படுத்தி, கட்டுப்படச் செய்யக்கூடிய அளவில் கடுமையானதாகவும் அடக்குமுறை அடிப்படை கொண்ட வகையில் இரக்கமற்றதாகவும் அமைந்திருந்தன.

முதல் குலோத்துங்கனின் 12ஆம் ஆட்சியாண்டில் (கிபி 1082) வெட்டப்பட்ட இடையர்பாக்கம் கல்வெட்டு, ஒரு நிகழ்வை விரிவாகக் கூறுகிறது. கோயிலில் ஒவ்வொரு நாளும் விளக்கெரிப்பதற்கு எண்ணெய் தருமாறு இடையர்களிடம் ஒரு பெண் 30 காசு கொடுத்திருந்தாள். ஆனால், இடையர்கள் 30 காசுக்கு நாள்தோறும் எண்ணெய் தர இயலாது என மறுத்துவிட்டார்கள். ஆகவே, ஊரார் அந்தக் காசுக்கு ஒரு நிலத்தை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குக் கொடுத்துவிட்டார்கள்.[40] இங்கு அடக்குமுறை என்ற அளவில் எதுவும் பதிவாகவில்லையெனினும், கோயிலுக்குச் சேரவேண்டிய கொடை அல்லது வருவாய் எப்படிக் கண்டிப்புடன் முறைப்படுத்தப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

பிற்காலச் சோழர் காலத்தில் இருந்த பல்வேறு வரிகள் கோயில்களுக்கு வழங்கப்பட்டு, மைய அரசு செய்யவேண்டிய சில பணிகள் கோயில்கள் வழியாகவும் நிறைவேற்றப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வகையில் ஏரி, குளம், வாய்க்கால் அமைத்தல் போன்ற பணிகளையும் கோயில்களே நிறைவேற்றியிருக்கின்றன. இதனால், கோயிலின் வரி வருவாய், கோயிலின் மொத்த வருவாயில் குறிக்கத்தக்க அளவு இருந்திருக்கும் என உறுதியான முடிவுக்கு வர முடியும். ஒரு குறிப்பிட்ட வரி எதற்காகப் போடப்படுகிறதோ அந்தப் பணியை, வரி யாருக்குப் போய்ச் சேர்கிறதோ அந்த அமைப்புதான் நிறைவேற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, ‘சிறுபாடிக்காவல்’ என்ற வரி ஊர்க் காவலுக்குச் செலவிடப்படும் வரியாகும்.[41] இந்த வரியைக் கோயில் வாங்கினால், காவலுக்குக் கோயில் பொறுப்பேற்கவேண்டும். உள்ளூர் அவைக்கு இந்த வரி சென்றால், அந்த அவை ஊர்க்காவலுக்கான செலவை ஏற்கவேண்டும். சில வகை வரிகள், குறிப்பிட்ட சில பணிகளுக்காகவே வாங்கப்படுவதால் அக்குறிப்பிட்ட பணிகளை, வரி பெறுபவர் நிறைவேற்றுவது முதன்மையான கடமையாகும்.

பிற்காலச் சோழர் காலத்தில் நில உடைமை நிறுவனமாக வலுப்பெற்ற கோயில்களுக்குப் பல்வேறு வரிகள் பெறும் உரிமையும் இருந்தது. கோயில்கள் மைய அரசின் அல்லது உள்ளூர் அமைப்புகளின் சார்பில் சில மேலாண்மைப் பணிகளையும் பராமரிப்புப் பணிகளையும் சிறிதுசிறிதாக ஏற்று நிறைவேற்றி வந்தமையையே இது காட்டுகிறது எனலாம்.



இரண்டாம் ராசாதிராசனின் ஐந்தாம் ஆட்சியாண்டு (கிபி 1171) கம்பனார்கோயில் கல்வெட்டு, வளைநகர் என்ற ஊரில் உள்ள அவை, வரிகள் பெறும் உரிமையைக் கோயிலுக்கு வழங்கியதை எடுத்துக் கூறுகிறது.[42]

ஊர் அவை பெற்றுத்தரவேண்டிய வரிகள், கோயிலைச் சென்றடைய வேண்டியவாறு கொடையளிக்கப்பட்டிருந்ததால், கோயிலே நேரிடையாகப் பெற்றுக்கொள்ள வழியேற்படும் வகையில் இத்தகைய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இருப்பினும், கோயில் மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கிடையே இருந்து வந்த பிணைக்கப்பட்ட உறவினையே இவை காட்டுகின்றன எனலாம். இரண்டு அமைப்புகளுமே நிலவுடைமை கொண்ட பிரிவினரால் கட்டுப்படுத்தப்பட்டமையால், கோயிலின் பெயரில் வரி பெறுவது எளிது என்ற முறையில் இத்தகைய மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கலாம்.

திருவானைக்கோயிலில் பதியப்பெற்றிருக்கும் மூன்றாம் குலோத்துங்கனின் 12ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டினால் (கிபி 1190), மன்னன் அரும்பாக்கம் எனும் ஊரில் இருந்த சில நிலங்களைப் பிரித்து வேறு சில ஊர்ப் பகுதிகளுடன் சேர்த்து அநபாயநல்லூர் என்ற பெயரில் கோயிலுக்குக் கொடுத்திருப்பதை அறிகின்றோம்.[43] இதே மன்னனின் 38ஆம் ஆட்சியாண்டிலும் புன்னைவாயில் என்ற ஊரிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து வேறு ஊரின் பகுதிகளுடன் சேர்த்துக் கோயிலுக்கு வழங்கியிருக்கிறான்.[44] இதே போன்று, மூன்றாம் ராசராசனது 19ஆம் ஆட்சியாண்டிலும் ஊர்ச் சீரமைப்பு நடைபெற்றது.[45] இத்தகைய ஊர்ப் பிரிவினைகளும் சீரமைப்புகளும் கோயில்களின் உள்ளூர் மேலாண்மையை முறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். ஊர் மேலாண்மைப் பணிகளில் கோயில்களில் பங்கு மிகுந்து வந்ததையே இவை உறுதிப்படுத்துகின்றன.[46]

**கோயில் ஒரு மாற்று ஆட்சியமைப்பா?**

இவற்றைக் கொண்டு, கோயில்கள் மைய அரசின் ஆட்சிமுறைக்கோ, உள்ளூர் அமைப்புகளின் பணிகளுக்கோ மாற்றாக உருவாகிச் செயல்பட்டு வந்தன என்ற முடிவுக்கும் வரவேண்டியதில்லை. சோழ நாட்டின் மையப் பகுதியை எடுத்துக்கொண்டால்கூட, அன்றைய நிலையிலும், பிராமணர்களது பிரமதேயம் அல்லாதவையாகப் பெருமளவிலான வேளாண் குடியிருப்புகள் இருந்திருக்கின்றன என்பதையும் புறக்கணித்துவிடக்கூடாது.[47]

இந்த வேளாண் குடியிருப்புகள் யாவற்றிலும், நிலவுடைமை கொண்டிருந்த வேளாளர்களே முதன்மை பெற்றவர்களாக வாழ்ந்திருந்தார்கள். இதனால், ஊர் அவை என்பதும் இந்த வேளாளர்களான நிலவுடைமையாளர்களைக் கொண்டதாகவே விளங்கியிருக்க முடியும். இதைப் போன்றே, இந்த வேளாண் குடியிருப்புகளைச் சார்ந்திருந்த கோயில்களும் அந்தந்த ஊர் களைச் சார்ந்த வேளாளர்களின்–நிலவுடைமையாளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன என்பதைச் சொல்லவேண்டிய தில்லை. எனவே, நடைமுறையில், உள்ளூர் அவையாக இருந்தா லும், கோயில் அவையாக இருந்தாலும், இவை இரண்டுமே நிலவுடைமைப் பிரிவினரைக் கொண்டதாகவே அமையப் பெற்றிருந்தன. ஒரு சில இடங்களில், ஊர் அவை மட்டுமே இருந்து கோயில் மேலாண்மைப் பணிகளையும் மேற்கொண்டிருக்கலாம்; சில பகுதிகளில், கோயில் அவைகளே முன்னின்று உள்ளூரின் ஆட்சிப் பணிகளை நிறைவேற்றியிருக்கலாம். இரண்டு அவை களுமே தனித்தனியாகவும் செயல்பட்டிருக்கலாம். எப்படி யிருந்தாலும், இரண்டிலும் நிலவுடைமையாளர்களான வேளாளர்களே பங்குகொண்டிருந்தார்கள் என்பது வெளிப் படை. ஊர் அவையிலும் கோயில் அவையிலும் இருந்த தனியர் யாவரும் நிலவுடைமைப் பிரிவைச் சார்ந்தவர்களே.

எனவே, இந்த இரண்டு அமைப்புகளுக்கும் அடிப்படையில் வேறுபாடுகளோ, முரண்பாடுகளோ இருந்திருக்க முடியாது. அப்படி இருக்கவில்லை என்பதே உண்மை. ஏனெனில், கோயில் களும் நிலவுரிமைகொண்ட உடைமை நிறுவனங்களாகவே விளங்கிவந்தன. ஆகையால், கோயில்கள் மாற்று ஆட்சியமைப்பு களாக உருவாகிச் செயல்பட்டுவந்தன என்று கொள்வதைவிட, இணையான ஆட்சியமைப்புகளாகவே இருந்துவந்தன என்று கூற முடியும்.

வளமான உற்பத்திப் பகுதிகளில், வேளாளர், பிராமணர், வணிகர், அதிகாரிகள் போன்ற பெரும் நிலம் கொண்டவர் களுக்கு இணையாக, கோயில் என்ற மற்றொரு நில உரிமை கொண்ட அமைப்புத் தோன்றியது, நிலவுடைமை முறை யினையே பொதுத் தன்மை கொண்டதாகக் காட்டுவதற்குத் துணையாக இருந்திருக்கலாம்.

**கோயிலின் உடைமை குறித்த ஆவணங்கள்**

கோயில்களின் உடைமைகளுக்கும் கொடைகளுக்கும் எவ்வகைத் தீங்கும் வராதவாறு மன்னர்கள் காத்து வந்தனர். இவை குறித்த விவரங்கள் யாவும் கோயில் சுவற்றில் கல்வெட்டுக் களாகப் பதிவு செய்யப்பட்டு, அரசின் பதிவேடுகளாகவும்



பொது மக்களின் பார்வைக்குட்பட்ட தகவல் பட்டியல் களாகவும் விளங்கின. இதன்றி, செப்புப் பட்டைகளில் வடிக்கப் பட்ட ஆவணங்களும் இருந்திருக்கின்றன என்பதை நமக்குக் கிடைத்த பல செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

கோயில் சுவற்றில் உள்ள கற்களில் வெட்டப்பட்ட பதிவுகளும் செப்பேடுகளாகச் செய்யப்பட்ட ஆவணங்களும் அல்லாது, பனையோலைகளில் எழுதப்பட்ட பதிவேடுகளும் அக்காலத்தில் நிலவிவந்தன. தமிழ் இலக்கியச் செல்வங்கள் பனை ஏடுகளில் எழுதப்பட்டது போன்று, நிலவுரிமை போன்ற பதிவுகளும் பனை ஏடுகளில் இருந்திருக்கின்றன எனலாம்.

கிபி 1106இல் வெட்டப்பட்ட திருக்கோவிலூரில் இருக்கும் முதலாம் குலோத்துங்கனின் 36ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பனையோலைகளில் எழுதப்பட்டிருந்த பழைய ஆவணங்கள் கரையானால் அரிக்கப்பட்டுவிட்டதால், புதிதாக மீண்டும் வேறு ஆவணங்கள் உருவாக்கப்பட்டுத் தரப்பட்டதைத் தெரிவிக்கின்றது.[48] ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனது 23ஆம் ஆட்சியாண்டில் கொடுத்த கொடைகளை இந்த ஆவணங்கள் குறித்ததென்பதால், பல ஆண்டுகளாக இந்த விவரங்கள் காக்கப்பட்டு வந்துள்ளன என்பதை அறியலாம். அத்துடன், கோயிலுக்கான இரண்டு வேலி நிலம் குறித்த மிக நுணுக்கான எல்லை விவரங்களையும் இது கூறுகிறது. முதல் குலோத்துங்கனின் 39ஆம் ஆட்சியாண்டின் (கிபி 1109) தென்திருப்பேரைக் கல்வெட்டு, கோயில் நிலங்களைப் பற்றிய விவரங்கள் கொண்ட ‘கையீடு’ தவறிவிட்டதால், வேறு ஒரு புதிய ‘கையீடு’ சபையினரால் கொடுக்கப்பட்டதைப் பதிந் திருக்கிறது.[49]

கரையான் அரித்தும் ‘கையீடு’ தொலைந்தும், பின்னர் புதிய ஆவணங்கள் உருவாக்கப்பட்டன என்பது, இவற்றின் படிகள் வேறு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுக் காப்புடன் வைக்கப்பட்டிருந்தன என்பதையே காட்டுகின்றன. அன்றாடப் பயன்பாட்டுக்கும் எளிதில் பார்வையிடவும் வாய்ப்பாக ஆவணங்கள் பனையோலையிலும் இருந்திருக்கலாம். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் அவ்வப்போது அரசர்கள் கோயில்களின் உடைமைகளை உறுதிசெய்தும் சட்டத்துக்குப் புறம்பாகக் கைமாறிய நிலங் களை மீட்டும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

கச்சிப்பேடு விஷ்ணு கோயிலுக்குச் சேரவேண்டிய வரி, வட்டி போன்ற வருவாய் குறித்த விவரங்கள் கல்வெட்டுக்களில் பதிவுசெய்யப்பட்டிருப்பதை உறுதிசெய்து உத்தம சோழன் தனது 16ஆம் ஆட்சியாண்டில் (கிபி 986) வெளியிட்ட செப்புப்

பட்டயம் காஞ்சியில் கிடைத்திருக்கிறது.[50] இந்தச் செப்புப் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் விவரங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களிலும் பதியப் பெற்றிருப்பது நோக்கத்தக்கதாகும். இக்கல்வெட்டுக் கள் பெயர் குறிப்பிடப்படாத கோராசகேசரிவர்மன்,[51] கோபரகேசரிவர்மன்[52] ஆகியோர் காலத்தவையாகும்.

சட்டத்துக்குப் புறம்பாகக் கைமாறிவிட்ட அகஸ்தீசுவரர் கோயிலுக்கு உரிய நிலம், நந்திவர்மன் என்பவனால் கண்டுபிடிக்கப்பட்டு அந்நிலம் மீண்டும் கோயிலிடம் ஒப் படைக்கப்பட்டதை மூன்றாம் குலோத்துங்கனின் 32ஆவது ஆட்சியாண்டு (கிபி 1210) மாகரல் கல்வெட்டுப் பதிவு செய் துள்ளது.[53] கோயிலின் உடைமை விவரங்கள் கல்வெட்டுக்களில் பதிவு செய்யப்பட்டதன் பயனை இக்கல்வெட்டு முழுமையாக உணர்த்துகின்றது என்று கருதலாம். கோயில் சுவற்றில் இப்படி விவரங்கள் பதியப்படுவது அரசின் இன்றியமையாத அலுவ லாக இருந்து வந்தது. திருவொற்றியூர்க் கோயிலுக்கு, முன் ஆண்டுகளில் நுந்தா விளக்குகளும் மாடுகளும் கொடையாகக் கொடுக்கப்பட்ட விவரங்கள் கல்லில் வெட்டப்படவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டு, மடத்தின் தலைவர் மடபதி சதுராணன பண்டிதரின் வேண்டுகோளினால் கோயில் கணக்கு திருவொற்றியூர் உடையான் உறவாக்கினான் என்பவனால் இரண்டாம் ராசாதிராசனின் 9ஆம் ஆட்சியாண்டில் (கிபி 1172) கல்லில் வெட்டப்பட்டுள்ளது.[54] கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகள், அறக்கட்டளைகள் யாவற்றுக்கும் அரசனிடம் இருந்த பதிவேடுகளுடன், கோயில் கணக்கனிடமும் விவரங்கள் இருந்திருக்கவேண்டும். இந்த விவரங்களின் அடிப்படையில் முன் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட கொடைகள் கோயில் சுவற்றில் பதியப்பட்டன. கோயில் உடைமைகள் பற்றிய விவரங்கள் விடுபடாமலிருக்க எடுத்துக்கொள்ளப்பட்ட முழுமையான முன்னேற்பாடுகளையே இங்கு நாம் காண் கிறோம்.

**செயல்படுத்தப்பட்ட ஆணைகள்**

கோயில் நிலங்கள் தொடர்பான மன்னனது ஆணைகள் காலங்கடந்த போதிலும் நிறைவேற்றப்பட்டன. ராசராச வின்னகர், குந்தவை வின்னகர் போன்ற கோயில் நிலங்களுக்கு உள்ளவாறு திருவாய்ப்பாடி கோயில் நிலங்களுக்கும் குறைந்த அளவிலேயே வரி பெறவேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. முதலாம் ராசாதிராசனுடைய 27ஆம் ஆட்சியாண்டின் 137ஆவது நாளில் பிறப்பிக்கப்பட்ட இந்த அரசாணை, மூன்று ஆண்டுகள் கழித்து, 30ஆம் ஆட்சி யாண்டின் 240 ஆவது நாளன்றுதான் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதை எண்ணாயிரத்தில் உள்ள கல்வெட்டு (23 பிப்ரவரி 1048) அறிவிக்கிறது.[55] இந்த இடைவெளிக்கான காரணி புரியவில்லையென்றாலும், சோழர் ஆட்சியின் வலுவான காலப்பகுதியில்கூட அரசாணை உரிய இடத்துக்குச் செல்ல மிகுந்த காலம் பிடித்திருப்பது, மேலாண்மைக் குறைகளால் ஏற்பட்டிருக்கலாம் அல்லது ஆணையில் கூறப் பட்ட வரிக் குறைப்பை உடனடியாக நிறைவேற்ற முடியாமல் போயிருக்கலாம். எப்படியிருப்பினும், வலு மிகுந்த காலங்களில் கூட, கோயில் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் அப்படியே தொடர்ந்தன என்பதையே அறிகிறோம்.



இவ்வாறு, அரசும் அதன் பகுதிகளாக இருந்த நிலவுடைமை அமைப்புகளான ஊர், சபை, நகரம் போன் றவையும், கோயில் என்ற நிறுவனத்தைக் காத்து நிற்பதில் முழுமையான பங்களிப்பினைச் செலுத்திவந்தன.

## இயல் 4

# கோயிலுக்கு எதிரான குற்றங்கள்

கோயில் என்ற நிறுவனம் நிலவுடைமையாளர்களின் நிறுவனமாக உருவாகியிருந்த நிலையில், அதைக் காப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும், எல்லாவற்றுக்கும் மேலாக அதனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்கும் வாய்ப்பாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கோயில்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். மீண்டும் இத்தகைய குற்றம் நிகழக் கூடாது என்பதற்காகக் கொடுமையான தண்டனை தரப்பட்டிருக்கலாம். கோயில் மேலாண்மையில் தொடர்புடையவர்களோ, கோயில் பணியாளர்களோதாம் இத்தகைய தவறுகளைச் செய்வதற்கான வாய்ப்புப் பெற்றவர்கள். கோயில் நலன்களைக் காக்கவேண்டிய காவலர்களே, கள்ளர்களாக மாறுவதைச் சற்று வேறுபடுத்திப் பார்ப்பதும் இயற்கைதான். இருப்பினும், சில தனியரைவிட, உடைமை அமைப்பின் நலனே முன்னிறுத்தப்பட்டது.

முதலாம் ராசராசனின் ஏழாம் ஆட்சியாண்டைச் சார்ந்த (கிபி 991) கோவிந்தப்புத்தூர்க் கல்வெட்டு, கோயில் அலுவல்கள் முறைப்படி நடைபெற, பொறுப்பாளர்களுக்கு இருந்த அதிகாரங்களை விவரிக்கின்றது.[1] பெருந்தரம் என்ற உயர் வகையைச் சார்ந்த அதிகாரியான அம்பலவன் பழுவூர்நக்கன் குவல்லாலன் என்பவன் கோயிலுக்கு ஒரு பொறுப்பாளரை ஏற்பாடு செய்து, அவனுக்குக் கோயில் பணியாளர்கள் மீது முழு அளவில் கட்டுப்பாடு இருக்கும் வகையில் பல அதிகாரங்களைத் தந்தான். கோயில் பொறுப்பாளராக இருப்பவனை எதிர்க்கும் வேளாளர்களை உடனடியாகப் பணி நீக்கம் செய்யவும், அவர்கள் பிராமணர்களாக இருந்தால் 25 கழஞ்சு தண்டம் போடவும் வழியேற்படுத்தப்பட்டது.

### கோயில் பொறுப்பாளரை எதிர்த்தோர் யார்?

இங்கு ஓர் ஐயம் ஏற்படுவதும் இயற்கை. கோயில் பொறுப்பாளராக நிலவுடைமையுள்ளவர்தாம் இருந்திருக்க முடியும். அவரை எதிர்த்த பிராமணர் யாராக இருக்க முடியும் என்பதற்கு, நிலவுரிமையற்ற பிராமணர் என்று எளிதில் மறுமொழி கூறிவிட முடியும். ஆனால், கோயில் பொறுப்பாளரை, வேளாளரே ஏன் எதிர்க்கவேண்டும் என்ற ஐயம் விளக்கத்தை வேண்டி நிற்கிறது. வேளாளர் என்றாலே நில உற்பத்தியாளர்கள்தானே, அப்படியிருக்கும்போது கோயில் பொறுப்பாளராக இருந்த வேளாளரை ஏன் வேளாளரே எதிர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த ஐயம் எழுகிறது.



அரச குடும்பத்தினர், அதிகாரிகள், படைத்தலைவர்கள், பெரும் நிலவுடைமையாளர் எனப் பல்வேறு ஆதிக்கப் பிரிவினர், தொடர்ந்து பல வகையானும் வெவ்வேறு காரணிகளைக் காட்டி சிறு அளவில் நில உற்பத்தியில் ஈடுபட்டு வந்தவர்களிடமிருந்து நிலங்களைப் பறித்துவந்திருக்கிறார்கள். நில உற்பத்தியாளர் என்ற நிலையில் வேளாளராகப் பெயர் பெற்றிருந்த இத்தகைய சிறு நில உடைமையாளர்கள், இப்படிப் பல்வேறு காரணிகளால் நிலங்களை இழந்து, உழுகுடி எனப்படும் குத்தகையாளராகவும் நிலத்தில் உழைப்பை மட்டும் செலுத்தும் வேளாண் கூலிகளாகவும் மாறியிருந்தார்கள். 'குடிநீங்கா'து உழுகுடிகளாகவோ, 'குடிநீக்கி'க் கூலியாளர்களாகவோ இவர்கள் படிநிலை இறக்கம் பெற்றது உடைமை முறையில் தொடர்ந்து ஏற்பட்டுவந்த மாற்றத்தின் விளைவினாலேயாகும். இவர்கள் இவ்வாறு குத்தகையாளராகவும் கூலிகளாகவும் மாறிய பிறகும்கூட, பிறப்பினடியாகக் குடிமுறையிலோ, சாதி அடிப்படையிலோ அல்லது சமூக அடுக்கு முறை நிலையிலோ, பிற உழைக்கும் பகுதியினரிடமிருந்து பிரித்துக் காட்டத்தக்க வகையில் வேளாளர் என்றே சில காலம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அடுத்தடுத்த தலைமுறைகளில் இவர்கள் 'வேளாளர்' என்ற தகுநிலையினை இழந்து உழுகுடிகளாகவோ, கூலிகளாகவோ மட்டுமே கொள்ளப்பட்டார்கள்.

அய்யம்பேட்டையில் உள்ள 13ஆம் நூற்றாண்டுக்குக் கல்வெட்டொன்று, நாள் ஊதியத்துக்குப் பணியாற்றிய வேளாளரைக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[2] இத்தகையோருக்கும், இவர்களிடமிருந்து நிலங்களின் பயனைப் பறித்துக்கொண்டவர்களுக்கும் நில உற்பத்தி உரிமை தொடர்பான பல பூசல்கள் தொடர்ந்து இருந்து வந்தன.

### இரு வகைக் குற்றங்கள்

இதனால், கோயிலுக்கெதிரான குற்றங்கள் இரண்டு வகையினவாக இருந்தன. ஒன்று, திருட்டு, களவு போன்ற பொருள் தொடர்பான குற்றங்கள்; மற்றது, கடுமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நில உற்பத்தி உரிமை தொடர்பான 'குற்றங்கள்'. இந்த உற்பத்தி உரிமை தொடர்பான குற்றங்கள்,

ஆதிக்கம் மிக்க நிலவுடைமையாளர்களால் எந்த நிலையிலும் பொறுத்துக் கொள்ளப்படவேயில்லை.

ஊட்டத்தூரில் உள்ள விக்கிரம சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 1131), கோயிலில் செய்த குற்றத்துக்காகப் பிராமணன் ஒருவனுக்கு 20 காசு தண்டம் போடப்பட்டதைக் கூறுகிறது.[3] இதை அவன் செலுத்தாததால், ஸ்ரீகந்த சதுர்வேதிமங்கலத்தில் உள்ள அவனது நிலம் ஊர் அவையால் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதே போன்று, ஊட்டத்தூர் கோயிலின் இறைவிக்குரிய அணிகலன்களைக் களவாடிய பிராமணனது நிலத்தைக் கோயிலுக்குத் தருமாறு அவன் வற்புறுத்தப்பட்டதை, கிபி 1199இல் பதியப்பட்ட றாம் குலோத்துங்கனின் 21ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ந்துக்காட்டுகிறது.[4]

மூன்றாம் குலோத்துங்கனின் பதினாறாவது ஆட்சியாண்டில் (கிபி 1194) கோயில் உடைமைகளில் ஊழல் புரிந்தவன் சிவதுரோகியாகக் கொள்ளப்பட்டு, அவனுக்குக் கடுமையான தண்டனை தரப்பட்டதைக் கோவிந்தப்புத்தூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.[5] கோயில் பணத்தைக் கையாடிய உண்மை வெளியானவுடன், அவன் ஊரைவிட்டே ஓடி விட்டான். அதனால், அவனுடைய வீடு அவன் இல்லாமலேயே சோதனையிடப்பட்டது. அவனது இல்லத்தில், அளவுக்கு மீறி 40 கலம் நெல்லும் கோயிலைச் சார்ந்த பல பாத்திரங்களும் இருந்தன. அவை பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் நின்று விடாமல், அவனது வீடு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அந்த மனையின் உரிமையை அவன் என்றும் பெற முடியாதவாறு, அந்த இடத்தில் ஒரு பிள்ளையார் கோயிலும் கட்டப்பட்டது. தவறு செய்தவன் குடியிருந்த வீடு, அவனுக்கு முழு உரிமை கொண்டதாகவே இருந்திருக்கவேண்டும். கோயில் அல்லது ஊர்க்குப் பொதுவானதாக இருந்திருந்தால், இடித்து, அந்த இடத்தில் கோயில் எழுப்பவேண்டிய அளவுக்குப் போயிருக்கமாட்டார்கள். அந்த மனையைக் கையகப்படுத்தி, வேறு ஒருவர் குடியிருக்க ஏற்பாடு செய்திருப்பார்கள். தன்னுரிமை கொண்ட மனையாக அது இருந்ததையே இது மெய்ப்பிக்கிறது. உள்ளாட்சி பற்றிய உத்திரமேரூர்க் கல்வெட்டுக்களில் சில, 'தன் மனையில் அகம் எடுத்துக்கொண்டிருப்பது' சமூக உயர்நிலையாகக் காட்டப்பட்டு, இது அவை உறுப்பினர் தேர்வுக்கான தகுதிகளில் ஒன்றாகவும் கூறப்படுவதை இங்கு மனத்தில் கொள்ளவேண்டும்.[6]

மூன்றாம் ராசராசனின் ஒன்பதாவது ஆட்சியாண்டு (கிபி 1225) திருநாகேசுவரம் கல்வெட்டுக்கள் இரண்டு, வேறு வகையானதொரு நிகழ்வைக் காட்டுகின்றன. பல கோயில்களில் கணக்கெழுதும் பணியினை மேற்கொண்டிருந்த உடன் பிறந்தார்[7] இருவரும் மற்றொருவனும் கோயில் உடைமைகள் பலவற்றைக் களவாடியதோடு, இறைவனுக்குரிய ஆடைகள், கோயிலின் செங்கற்கள் போன்றவற்றையும் தங்களுக்காக எடுத்துக்கொண்டார்கள். இது குறித்து அறிந்த கோயில் அவையினர், மேல் அதிகாரியான பிள்ளை யாதவராயன் என்பானிடம் முறையிட்டார்கள். அப்போது, செயங்கொண்ட சோழ சதுர்வேதிமங்கலத்தில் தங்கியிருந்த அரசன், இதனை முழுமையாக விசாரித்து, அவர்களைக் காவலில் வைத்ததுடன், அவர்களுக்கு உரிமையான நிலங்கள் யாவற்றையும் பறிக்க ஆணை பிறப்பித்தான். அந்த நிலங்கள் 40,000 காசுகளுக்கு விற்கப்பட்டுக் கோயிலுக்குத் தரப்பட்டன. கோயில் கணக்கெழுதும் உரிமையும் வேறொருவனுக்கு 3000 காசுகளுக்குக் கொடுக்கப்பட்டது.[8]

சிவபுரத்தில் உள்ள மூன்றாம் ராசராசனின் 23ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 1239) தரும் விவரங்கள் வியப்பானவை.[9] இரண்டு சிவபிராமணர்கள், கோயிலின் அணிகள், பணம் ஆகியவற்றை எடுத்துச்சென்று அவர்களது காமக்கிழத்தியிடம் கொடுத்துவிட்டனர். அத்துடன், அவர்களது நிலத்துக்காகச் செலுத்தவேண்டிய தொகையையும் கொடுக்கவில்லை. இதைக் கேட்கச் சென்றவர்களிடமும் முறை தவறி நடந்துகொண்டனர். மேலும், அரசாணையினை ஏற்க மறுத்ததோடு, அரசன் அனுப்பிவைத்த ஆள்களையும் அவர்கள் அடித்துத் துன்புறுத்தினர். இது 'ராசதுரோக'மாகவும் 'சிவதுரோக'மாகவும் கொள்ளப்பட்டு, அவர்களுடைய உடைமைகள் யாவும் பறிக்கப்பட்டன.

தஞ்சை மாவட்டம் உடையலூரில் இருக்கும் மூன்றாம் ராசராசனின் இருபத்துநான்காம் ஆட்சியாண்டைச் சார்ந்த (கிபி 1240) மற்றொரு கல்வெட்டு, கோயில் சிலைகள், அணிகள் போன்றவற்றைக் களவாடிய இருவருடைய உடைமைகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு, அவை பொதுவில் விற்கப்பட்டுப் பின்னர் அதிலிருந்து கிடைத்த தொகை மன்னனின் கருவூலத்தில் சேர்க்கப்பட்டதனைக் காட்டுகிறது.[10] பொதுவாகக் கோயிலில் ஊழல் செய்தவர்கள், ஒழுங்குமுறை தவறியவர்கள், கள்ளமிட்டோர் போன்றோருடைய உடைமைகள் பறிக்கப்பட்டு, அவை கோயிலுக்கே வழங்கப்பட்ட நிலையினைத்தான் பெரும்பாலும் காண்கிறோம். ஆனால், இங்கு, கள்ளர்களுடைய உடைமைகள் விற்கப்பட்டதில் கிடைத்த தொகை அரசுக் கருவூலத்தைச் சென்றடைந்திருக்கிறது. இதற்கான

பின்னணி தெரியவில்லை என்றாலும், இத்தகைய குற்றங்கள் கடுமையாகக் கொள்ளப்பட்டன என்பதே இங்கு உறுதிப்படு கின்றது.

**கோயிலுக்குத் தீங்கிழைத்தோர்க்குக் கடும் தண்டனை**

கோயில்களுக்கெதிரான செயல்கள் வளர்ந்து வலுப்பட்டு விடக்கூடாது என்பதில் எவ்வளவு கடுமை காட்டப்பட்டது என்பதற்கான பல எடுத்துக்காட்டுகளைக் கண்டோம். ஒப்பீட் டளவில் நோக்கினால்கூட, கோயிலுக்குத் தீங்கிழைத்தவர்கள், பிற குற்றங்களைச் செய்தவர்களைவிட வேறுபடுத்தியே பார்க்கப்பட்டிருப்பதையும் அறியலாம். கொலை போன்ற கொடும் குற்றங்களுக்குக்கூட மரண தண்டனையோ உடைமை பறித்தலோ இல்லாத நிலைதான் இருந்திருக்கிறது.

ஒரு நாடாள்வான், விற்படையைச் சார்ந்த ஒருவனைக் குத்திக் கொன்றுவிட்டதற்குத் தண்டனையாகக் கோயிலில் விளக்கெரிக்க 96 ஆடுகளைக் கொடையளிக்கச் செய்யுமாறு மட்டுமே இரண்டாம் ராசேந்திரன் உள்ளூர் அமைப்பினைக் கேட்டுக்கொண்டான்.[11] ஒரு படைவீரனை மற்றொரு படை வீரன் கொலை செய்த நிகழ்விலும், இறந்தவனுடைய உறவினர்களோடு உடன்பாடு கொண்டு கோயிலில் விளக் கெரிக்க ஒப்புக்கொண்டதே தண்டனையாகக் காட்டப்படு கிறது.[12] இரவில் ஏற்பட்ட ஒரு கலகத்தில் படை அதிகாரி ஒருவன் கொல்லப்பட்டதையடுத்து, அவனுடைய மனைவியும் தீப் புகுந்து இறந்ததற்கும்கூட, குற்றவாளிகள், விளக்கெரிக்கு மாறுதான் உயர் அதிகாரிகளாலும் நாட்டாராலும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.[13] இதைவிடக் கொடுமையான ஒரு நிகழ்வும் உள்ளது. வரி கொடுக்க வேண்டாத நிலையிலும், வரி தர வேண்டும் என ஓர் உள்ளூர் பணியாளன் வற்புறுத்திக் கொடுமை இழைத்ததால், அவமானம் தாங்க முடியாமல் ஒரு பெண் தற்கொலை செய்துகொண்டாள். இதற்குக் காரணியான குற்றவாளிக்கு வெறும் 32 காசுகள் மட்டுமே தண்டம் போடப் பட்டது.[14] கொலை உள்ளிட்ட பெரும்பாலான குற்றங்களுக்கு விளக்கெரித்தல் அல்லது தண்டம் மட்டுமே தண்டனையாகத் தரப்பட்டுள்ளது.[15]

ஆனால், கோயில்களுக்கெதிரான சிறு குற்றங்களுக்குக் கூட உடைமைப் பறிப்புதான் தண்டனையாக இருந்தது என்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இவை அரசனுக்கெதி ரான குற்றங்களோடு இயைபாகக் கொள்ளப்பட்டுள்ளன. இளவரசனாக இருந்த இரண்டாம் ஆதித்தன் கொலையில் தொடர்புடைய சிவபிராமணர்களுடைய நிலங்களைப் பறித்து,



அதில் கிடைக்கின்ற தொகையினைக் கோயிலுக்கு வழங்குமாறு முதல் ராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டு (கிபி 987) உடையார்குடிக் கல்வெட்டில் ஆணையிடப்பட்டுள்ளது.[16] முதலாம் ராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டு (கிபி 993) சீர்காழிக் கல்வெட்டு, அரசனுக்கெதிரான ‘துரோகத்துக் குட்பட்டா’ருடைய நிலங்கள் மட்டுமன்றி, அவர்களுடைய உறவினர்களின் உடைமைகளும் பறிக்கப்பட்டு, ‘ராசராசப் பெருவிலை’யாக ஏலமிடப்பட்டதைக் கூறுகிறது.[17] மூன்றாம் ராசராசனின் 14ஆம் ஆட்சியாண்டைய (கிபி 1230) வலிவலம் கல்வெட்டு, எட்டு அதிகாரிகள் சேர்ந்து அரசனுக் கெதிரானவர்களின் நிலங்களை விற்று 33,000 காசுகளைக் கருவூலத்தில் சேர்த்ததைக் காட்டுகிறது.[18] அரச துரோகிகளின் ஐந்து வேலி நான்கு மா நிலம் விற்கப்பட்டு 13,000 காசுகள் எடுத்துக்கொள்ளப்பட்டதை இதே அரசனின் 21ஆம் ஆட்சி யாண்டுக் கோயில்திருமலம் கல்வெட்டு (கிபி 1236) விவரிக் கிறது.[19]

இளவரசனைக் கொலை செய்த பிராமணர்களுக்கு– நாட்டில் கலகம் விளைவித்தவர்களுக்கு–துரோகிகளாக மாறி யவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதே தண்டனைதான், கோயிலில் சிறு குற்றம் செய்தவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பது கோயிலின் சிறப்பு நிலையினை எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

**தண்டனையாக நிலப் பறிப்பு**

உடைமைகளை–அதாவது நிலத்தைப் பறித்து ஏலத்தில் விடுவது என்பதுதான் அன்றிருந்த மிகப் பெரிய தண்டனை என்று கொள்ளலாம். அரசனுக்கெதிரான கலகம், கோயிலுக்கு எதிராகத் தீங்கிழைத்தல், இவற்றோடு நிலத்துக்கான வரி அல்லது குத்தகையினைச் செலுத்தாததும் மன்னிக்கத் தகாத குற்றமாகவே பார்க்கப்பட்டிருக்கிறது. இதற்கான தண்டனையும் நிலத்தைப் பறித்தலாகவே இருந்தது. இரண்டு ஆண்டுகள் நிறைந்து மூன்றாமாண்டும் வரி செலுத்தாதவர்களுடைய நிலங்களைப் பறித்து, விற்றுவிட உள்ளூர் அமைப்புகளுக்கு ஒப்புதல் அளித்ததை முதலாம் ராசராசனின் 24ஆம் ஆட்சி யாண்டு (கிபி 1009) உக்கல் கல்வெட்டு எடுத்துக்காட்டுவதையும் மனதில் கொள்ளவேண்டும்.[20]

> .......சொணாட்டும் சொணாட்டுப்படும் புறணி நாடுகளி லும் தொண்டை நாட்டிலும் பாண்டி நாடாந ராஜ ராஜ வளநாட்டிலும் பாப்பன் ஊர்களி

> லும் வைஷ்னவர் ஊர்களிலும் சமணர் ஊர்களிலும் காணி உடையார் யாண்டு 16ஆவது முதல் 23ஆவது வரையில் ஈராண்டு நிரம்பி மூவாண்டு தந்தங் காணியான நிலங் களுக்கு அவ்வவ ஊர்களிலாரொடும் ஊரிடு வரிப்பாடு இறை இறாது போநார் காணி
> உடையாரைத் தவிர ஊர் நிலமாய் அவ்வவ ஊர்களிலாரெ விற்றுக்கொள்ளப் பெறுவார்களாகவும் யாண்டு 24 ஆவது முதல் ஈராண்டு நிரம்பி மூவாண்டு ஊரிடு வரிப்பாடு இறை இறாது போனார் காணி உடை
> யாரைத் தவிர அவ்வவ ஊர்களிலாரெ விற்றுக்கொள்ளப் பெற்றுவார்களாகமென்று.......

என இந்த ஆணை மிகத் தெளிவாக இதனைக் குறிக்கின்றது.

கோயில்களின் உடைமைகளுக்குத் தீங்கு விளைவித் தவர்கள் யாவரும் ‘சிவதுரோகி’களாகவும்[21] மன்னரின் ஆணை களை எதிர்த்தோர் ‘ராசதுரோகி’களாகவும்[22] கொள்ளப்பட்டு இவர்களது உடைமைகள் யாவும் பறிக்கப்பட்டுள்ளன. ‘ராசதுரோகம்’ என்று கூறப்படுவது, அரசியல் தொடர்புடைய தாகப் பொருள் தந்தாலும், அரசனை அரசியல் முறையில் எதிர்ப்பதையோ, அரசியல் கலகம் அல்லது போராட் டத்தையோ மட்டும் குறிப்பிடுவதன்று.[23] கோயிலுக்கு எதிரான செயல்களும் சிவதுரோகம், ராசதுரோகம் என்றுதான் கொள்ளப்பட்டன.[24]

கோயில் நிலங்களை முறை மீறி எடுத்துக்கொண்டவர்கள் அல்லது கோயில் உடைமைகளில் ஊழல் செய்தவர்கள், கோயில் பணத்தைக் களவு செய்தவர்கள் என்று இத்தகைய குற்றங்களைப் புரிந்தவர்கள் யாவரும் நிலவுரிமை கொண்ட வர்களாக இருந்தார்கள்; அல்லது தம் மனையில் அகம் எடுத்துக் கொண்டிருந்த உயர்நிலை பெற்றவர்களாக–உடைமை யாளர்களாக இருந்தார்கள். மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் குற்றம் செய்தவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருப்பது இதைத் தெளிவுபடுத்துகின்றது. சமூக நிலையில் உயரிடத்தில் இருந்தவர்களில் சிலரே இதில் ஈடுபட்டதால், அரசனோ அரசனது ஒப்புதல் பெற்ற மேலதி காரிகளோதான் மேற்பார்வையிட்டு, விசாரணை நடத்த வேண்டியிருந்தது. குற்றங்கள் மிகுந்ததாலோ, அரசன் வேறு பணிகள் ஆற்றவேண்டிய நிலையிலோ, குற்றவாளிகளைத் தண்டிக்க மாற்று ஏற்பாடும் வேண்டியதாயிற்று. இரண்டாம் ராசராசனின் ஆறாம் ஆட்சியாண்டுப் பந்தநல்லூர்க் கல்வெட்டு (கிபி 1152), இத்தகைய தண்டமளிக்கும் உரிமையைக்



கோயிலில் உள்ள பஞ்சாச்சாரியர், தேவகன்மிகள், மகேசு வரர்கள், ஸ்ரீகரணம் செய்வார் ஆகியோருக்கு மாற்றிக் கொடுத் ததைக் குறிப்பிடுகின்றது.[25] கோயில் உடைமைகள் தொடர் பான தவறுகளைச் செய்யும் சிவபிராமணர்கள், கோயில் நிலத்திற்குரிய மேல்வாரத்தை முறையாகத் தராத குத்தகை யாளர்கள் மற்றும் பிற குற்றங்களைச் செய்தோரையும் தண்டிக்க இந்த ஆணை வழிவகுக்கின்றது. அத்துடன், கோயி லில் இருந்த பொன்னைக் களவிட்ட சிவபிராமணர்களும் அவர்களது வழித்தோன்றல்களும் கோயிலுக்குள் எப்பொழுதும் எக்காலத்தும் நுழையக்கூடாது என்றும் முடிவு செய்யப் பட்டது.

கோயிலுக்குச் சேரவேண்டிய வரிகளைப் பெறும் பொறுப்பு ஊர் அவையிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிபி 1213இல் மூன்றாம் குலோத்துங்கனின் 35ஆம் ஆட்சி யாண்டுத் திருவொற் றியூர்க் கல்வெட்டு, புன்னைவாயில் அவை உறுப்பினர்கள் கோயிலுக்குச் சேரவேண்டிய வரியினைப் பெற்றுத்தர மறுத்து விட்டனர் என்பதற்காகச் சிறைப்பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கிறது.[26] ஒரு வேலிக்கு ¼ மாடை ‘பொன் வரி’ என்று இடப்பட்டதற்கு, வழக்கமாகப் பயிரிடப்படாத நிலங்களுக்குத் தரப்படும் விலக்குத் தரப்படவில்லை என்பதால் வரி பெறுவதில் தடை இருந்தது. இருப்பினும், அந்த அவைக்குரிய 80 வேலி நிலம் 200 காசுக்கு விற்கப்பட்டுக் கோயிலுக்கு உரித்தாக்கப் பட்டுவிட்டது. கோயிலுக்குச் சேரவேண்டிய வரி அல்லது பிற வருவாய்களைத் தராதோருக்கு மட்டுமல்ல, அவற்றை முறைப் படி பெற்றுத் தராதோருக்கும் எப்படிப்பட்ட கடுமையான தண்டனைகள் காத்திருந்தன என்பதையே இக்கல்வெட்டுக் காட்டுகிறது.

### கோயில் எதிர்ப்பில் அடித்தள மக்கள் உணர்வுகள்

இங்கு குற்றம் என்பது, திருட்டு போன்ற தவறுகளாக இருந்தது ஒரு புறம். மறுபுறம் இவை நில உற்பத்தி உரிமை போன்றவற்றுக்கான அடித்தள மக்களது எதிர்ப்புணர்வுகளின் விளைவுகளாகவும் பல நிலைகளில் இருந்துள்ளன என்பதையும் பார்க்கத் தவறிவிடக்கூடாது.

கோயில்களுக்குக் கொடையளிக்கப்பட்ட நிலங்கள் பல சிறு உற்பத்தியாளரிடமிருந்து பறிக்கப்பட்டிருந்ததால் அவர்களுடைய பகை நீடித்துக்கொண்டிருந்தது. அத்துடன், கோயில் நிலங்களை உழுதுவந்தவர்கள் தரவேண்டிய மேல்வாரத்தின் அளவினை அவ்வப்போது உயர்த்தியதால் ஏற்பட்ட இயலாமையும் இதோடு இணைந்துகொண்டது. இவையன்றி, வரிப் பளு வேறு அடித்தள

மக்களை வாட்டியதால், வரி பெறுவதிலும் பல தடைகள் இருந்தன. இத்தகைய பின்னணியில் கடுமையாக நடந்துகொள்ள வேண்டிய நிலையில் கோயில் இருந்தது.

கோயிலுக்கு எதிரான சிறு குற்றங்களும்கூட மிகக் கடுமையாகக் கருதப்பட்டதை வேறு வகைகளிலும் பார்க்க முடியும். உடைமைப் பிரிவினருக்கு மாறான எச்செயலும் எளிதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது ஒன்று; மற்றொன்று, சிறு குற்றங்களுக்கே கடுமையான தண்டனை என்றால் நில உரிமை வேண்டுதல், மேல்வாரம் தராதிருத்தல், வரி மறுத்தல் போன்ற பெரிய குற்றங்கள் பொறுத்துக்கொள்ளப் படமாட்டா என்பது நிலைநாட்டப்பட்டது ஆகும். அதே போன்று, கோயிலுக்கு எதிராகத் தவறிழைத்த வேளாளர், பிராமணர் போன்ற உயர் பிரிவினரே தண்டிக்கப்படும்போது, உழுகுடியினரைத் தண்டிப்பதும் ஏற்கத்தக்கதுதான் என்பதும் உறுதி செய்யப்பட்டது.

கோயில்களுக்கு மாறான அனைத்துச் செயல்களும் நிலவுடைமை முறைமைக்கு எதிரான கடுமையான, ஏற்றுக் கொள்ள முடியாத குற்றங்களாகவே கருதப்பட்டன.

பொதுவாக, கோயில் தொடர்பான குற்றங்கள் கடுமை யாகக் கொள்ளப்பட்டமையும், கோயில் உடைமைகள் சீராகக் காக்கப்பட்டமையும் அன்றைய சமூக ஒழுங்குமுறையின் பகுதியாகவே இருந்தன; சமூக ஒடுக்குமுறையின் தொடர்ச்சி யாகவே விளங்கின. நடைமுறையில், கோயில்களுக்கு எதிரான போக்குகளை அடக்கவும் ஒடுக்கவும் எடுக்கப்பட்ட செயல் பாடுகள், கோயில் உடைமைகளைக் காப்பதற்கு மேற் கொள்ளப்பட்ட செயல்முறைகள் என யாவுமே நிலவுடைமை முறையைப் பேணுவதற்கு எடுக்கப்பட்ட வழிவகைகளாகவே அமைந்திருந்தன.



## இயல் 5

# கோயில் ஒரு நிலவுடைமை அமைப்பு

கோயில்களுக்குப் பல வகைகளிலும் வடிவங்களிலும் உடைமைகள் இருந்தன. முன்னரே குறித்தவாறு, தனியுரிமை யுடைய பயிர்செய் நிலங்களாகவும் குத்தகைப் பங்குரிமை கொண்ட கொடை நிலங்களாகவும் இறையுரிமை கொண்ட வருவாய் வரும் நிலங்களாகவும் ஆடுமாடு போன்ற கால்நடை களாகவும் பொன்னாகவும் பொற்காசுகளாகவும் பொன் அணிகலன்களாகவும் இன்னும் பல்வேறு கொடைகளின் உரிமையாகவும் கோயில்களுக்கு உடைமைகள் பரந்து கிடந்தன. இந்த உடைமைகளைக் கொண்டிருப்பதற்கு ஏதுவாக இருந்த கட்டமைப்புகளும் வேறு பல பெருமதிகளும் எண்ணற்றவையாக இருந்தன. எடுத்துக்காட்டாக, கோயில் நிலங்களின் உற்பத்திக்கு உதவ ஏரிகள், குளங்கள், வாய்க்கால் என்றும் ஆடுமாடுகளை அடைத்துவைக்கும் தொழுவங்கள் என்றும் கோயில் பணிகளுக்கான பண்டபாத்திரங்களென்றும் கோயில் பணியாளர்களுக்கான மனைகளென்றும் கோயில் நிலங்களின் உற்பத்திப் பொருள்களைக் கொட்டிவைக்கும் பண்டகசாலைகளென்றும் பொன் அணிகலன்களைக் காத்து நிற்கும் கருவூலங்களென்றும் இன்னும் எண்ணிலடங்காச் சொத்துக்கள் குவிந்து கிடந்தன.

இவற்றுள், நிலம் உற்பத்திக் கருவியாகவும் இருந்ததால், அது மிகத் தனித்ததொரு உடைமையாக இருந்து வருவாயை அள்ளிக் குவித்தது. காசுகள், மாடுகள் போன்ற பிறவும் பயன் தரத்தக்கனவாகவே இருந்தன என்பதும் உண்மைதான். கோயில்கள் தம்மிடமிருந்த காசுகளைக்கொண்டு வட்டி பெற்றிருக்கலாம். மாடுகளிருந்ததால் பால்படு பொருள்களைப் பெற்றிருக்கலாம். வேறு வகையான வருவாய் இனங்கள் எவ்வளவோ இருந்திருக்கலாம். இத்தகைய வருவாய் முழுமை யும் அந்தந்தக் கோயிலுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. சில வகை வருவாய் வாய்ப்புகள் உள்ளூரிலேயே பகிர்ந்து கொள்ளப்பட்டன. கோயில் பணிகளாக இருந்தாலும் சரி, உள்ளூர் நில விளைவுத் தேவைகளுக்கான பணிகளாக இருந்தாலும் சரி, பெரும்பாலான பணிகளுக்கு நெல் முதலான உற்பத்திப் பொருள்களே ஊதியமாக வழங்கப்பட்டன. சில

வகைப் பணிகளின் ஊதியத்துக்காகப் பணிசெய்காணியாக நிலம் வழங்கப்பட்டிருந்ததால் ஊதியம் தனியாகத் தரப்பட வில்லை. இந்த நிலையில், இத்தகைய கோயில் வருவாய் இனங்களின் சுழற்சி உள்ளூரிலேயே பெரும்பாலும் மையப் பட்டிருந்தது.

**எஞ்சிய உற்பத்தியைக் குவித்த நிலம்**

இவற்றுக்கு மாறாக, நிலம் தானே ஒரு தொழிற்சாலையாக விளங்கி, உற்பத்தியைக் குவித்துச் செல்வத்தைப் பெருக்கியதால் வேளாண் விளைபொருள்கள், அன்றைய பொருள் வளத்தின் அடிப்படை ஊற்றுக்கண்ணாக இருந்தன. இவ்வாறு நிலத்தில் விளைந்த நெல் முதலான வேளாண் பொருள்கள், உள்ளூர் வேண்டல்களுக்குப் பயன்கொள்ளப்பட்டதன்றி, எஞ்சியும் மிஞ்சியும் உபரியாக மிகுந்து கிடந்தன. இப்படி, எஞ்சி மிகுந்து கிடந்த நெல் முதலான வேளாண் விளைவுகள் யாவும் விற்பனைப் பொருள்களாக–விற்பனைப் பண்டங்களாக மாறி, உள்நாட்டு வெளிநாட்டு அங்காடிகளுக்குச் சென்றன. இவற் றின் விற்பனையில் கிடைத்த செல்வக் குவியலே, அரசையும் அரச இல்லத்தினரையும் கோயில்களையும் நிலவுடைமை யாளரையும் பொருளிய அளவில் மிக உயர்நிலைக்கு–உன்னத நிலைக்குக் கொண்டுசென்றன.

வேளாளர், பிராமணர், வணிகர் போன்ற தனி நில வுடைமையாளர்களிடம் இருந்த நிலவுரிமை எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டதோ, மதிக்கப்பட்டதோ அப்படியே கோயில் உடைமையும் கொள்ளப்பட்டது. பொருத்தமாகச் சொல்ல வேண்டுமெனில், எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கவாறு இன்னும் மேனிலையிலேயே போற்றப்பட்டது.

**விலை கொடுத்தும் வாங்கிய நிலங்கள்**

இந்த நிலையில், கோயில்களுக்குக் கொடைகள் வழியாகக் கிடைத்த நிலங்கள் மட்டும்தாம் உரித்தாக இருந்தன என்றில்லாமல், கோயில்களும் தங்களுக்கிருந்த பிற வாய்ப்பு களைக் கொண்டு விலை கொடுத்து நிலங்களை வாங்கிக் கொண்டன.

கிபி 1072ஆம் ஆண்டைய முதலாம் குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சியாண்டுத் திருவொற்றியூர்க் கல்வெட்டு, தனக்குக் கொடையாகக் கிடைத்த 240 காசுகளைக் கொண்டு, கோயில் 5 ஊர்களில் நிலங்கள் வாங்கியதைத் தெரிவிக்கிறது.[1] அதேபோன்று, இதே அரசனின் கிபி 1112ஆம் ஆண்டுத் திருக்கழுக்குன்றக் கல்வெட்டு, கொடையாகத் தரப்பட்ட 10 காசுகளைக் கொண்டு நிலம் வாங்கியதைக் கூறுகிறது.[2]



கோயிலுக்குக் கிடைத்த தொகை பெரிதாக இருப்பினும் சிறிதாக இருப்பினும், அது நிலம் வாங்கச் செலவிடப்பட்டது குறிக்கத்தக்கது. இதேபோன்று, உள்ளாட்சி அமைப்புகள் பலவும் தங்களிடமிருந்த நிலங்களைக் கோயிலுக்கு விற்றிருக் கின்றன. இதுவும் அவ்வப்போது நடைபெற்றிருக்கிறது.[3]

பணம் மட்டுமன்றி, கோயிலுக்குக் கிடைத்த பொன்னும் நிலம் வாங்கப் பயன்படுத்தப்பட்டது. பரகேசரிவர்மனின் பத்தாம் ஆட்சியாண்டு உடையார்குடிக் கல்வெட்டு, நந்தி பூத்தான் என்பவன் கொடையாகக் கொடுத்த பொன்னைக் கொண்டு கோயில் நிலம் வாங்கியதைப் பதிந்திருக்கிறது.[4] இதுவன்றி, தங்களிடமிருந்த வேறு வகையான உடைமை களைப் பயன்படுத்தி அல்லது மாற்றிக் கோயில்கள் நிலத்தில் முதலீடு செய்தன. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திருக்கண்ணபுரத்தில் உள்ள மூன்றாம் ராசேந்திரனின் இருபதாம் ஆட்சியாண்டுக் (கிபி 1264) கல்வெட்டினைக் குறிப்பிடலாம்.[5] திருக்கண்ணபுரத்தில் உள்ள இறைவனுக்கு அணிவிக்கும் ‘வீரராசேந்திரப் பதக்கம்’ என்ற அணியினை விற்று, அதிலிருந்து கிடைத்த 5350 காசுகளைக் கொண்டு, 1¾ வேலி நிலம் வாங்கப்பட்டுள்ளது. நிலம் வாங்குவதற்காக, இறைவனுடைய அணிகளையே விற்ற நிலையை இங்குக் காணலாம்.

**நிலத்தின் உயர் மதிப்பு**

பிற உடைமைகளைவிட, நிலவுடைமை சிறப்பு மிகுந்ததாக விளங்கியிருக்கவேண்டும். மேலும், செல்வாக்குத் தரக்கூடிய தாகவும் இருந்திருக்கலாம். அத்துடன், பொன் அணிகளாக இருந்தபோதிலும், அவை வரவில்லாத வெற்று முதலீடு களாகவே இருந்திருக்கும். மேலும், காசுகளாக இருந்தாலும் அதிலிருந்து கிடைக்கின்ற வட்டி போன்ற வருவாய் குறைவாக இருந்திருக்கலாம். ஆனால், நிலத்தில் முதலீடு செய்யும்போது, உற்பத்தி வருவாய், பிற வகை வருவாய்களைவிட மிகுதியாகவே இருந்திருக்கவேண்டும். இதனால்தான், நிலத்தில் முதலீடு செய்கின்ற முறைமை வரவேற்பைப் பெற்றிருந்தது. தனியாரைப் போன்றே கோயில்களும் முடிந்த அளவு தங்களது நில உரிமை அளவை மிகுத்துக்கொண்டிருந்தன என்பதையே இத்தகைய சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

முன்னரே பார்த்த முதல் குலோத்துங்கனின் 12ஆம் ஆட்சியாண்டில் (கிபி 1082) வெட்டப்பட்ட இடையர்பாக்கம் கல்வெட்டினை இங்கு வேறு வகையாகவும் நோக்கவேண்டி யுள்ளது. கோயில் ஒன்றில் ஒவ்வொரு நாளும் விளக்கெரிப்

பதற்கு எண்ணெய் வழங்க ஒரு பெண் இடையர்களிடம் 30 காசு கொடுத்திருந்தாலும், 30 காசுக்கு நாள்தோறும் எண்ணெய் தர இயலாது என இடையர்கள் மறுத்துவிட்டனர். எனவே, ஊரார் அந்தக் காசுக்கு ஒரு நிலத்தை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குக் கொடுத்துவிட்டார்கள்.[6] இதுதான் அக்கல்வெட்டுக் கூறும் செய்தியாகும்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இதன் நேரிடையான பொருள் புரிகின்றது. இடையர்களைப் பொருத்தவரை, 30 காசுகளுக்கு ஆண்டுதோறும் ஒவ்வொரு நாளும் எண்ணெய் வழங்குவது என்பது இயலாததாகக்கூட இருந்திருக்கலாம். ஆனால், இயைபான வேறு பல கல்வெட்டுப் பதிவுகளை வைத்துக்கொண்டு ஆய்கின்றபோது, அந்தக் காலத்தில் காசுகள் மதிப்பிழந்து வந்ததையும் நிலங்களின் மதிப்பு உயர்ந்து வந்ததையும் காணலாம். இப்படி நாளடைவில், காசுகளின் மதிப்புக் குறைந்துபோய்விட்டதால், முதலில் ஏற்றுக்கொண்டபடி 30 காசுகளுக்கு இடையர்களால் ஆண்டுதோறும் ஒவ்வொரு நாளும் எண்ணெய் வழங்க முடியாமல் போயிருக்கலாம். இந்த நிலையில், அன்றைய நாளில் மதிப்புமிக்க பொருளான நிலத்தில் அந்தக் காசுகளை முதலீடு செய்ய ஊரார் முடிவெடுத்திருக்கலாம். தொடக்கத்தில் கொடையாளர் விழைந்தபடி அறச்செயலைத் தொடர்ந்து செயல்படுத்த, நில உற்பத்தி வருவாய் உதவியாக இருந்திருக்க வாய்ப்புகள் உண்டு. எனவே, நிலத்தின் மதிப்பும் உற்பத்திச் செல்வமும் உயர்ந்து வந்ததால் நிலத்திலான முதலீடுகள் மிகுந்துவந்தன என்பது உறுதிப்படுகின்றது.[7]

**காலந்தோறும் மன்னர்கள் போற்றியமை**

கோயில்கள் இவ்வாறு நிலவுடைமை அமைப்பாகப் பல்வகையானும் மக்களுடைய வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், பெரும்பாலும் எல்லா நாட்டு மன்னர்களும் படையெடுப்புக் காலங்களில்கூட கோயில்களின் உடைமைகளை மாற்றவோ எடுக்கவோ முன்வரவில்லை. மன்னர்களது நாடு, இனம், சமயம், நம்பிக்கைகள் யாவற்றையும் கடந்து–யாவற்றுக்கும் அப்பாற்பட்ட வலிமை வாய்ந்த நிலவுடைமை நிறுவனங்களாகக் கோயில்கள் நின்று நிலவின. பெரும் மன்னர்களது ஆட்சிக் காலங்களில் வழங்கப்பட்ட கொடைகள் அவர்களுக்குப் பின்னர் வந்தவர்களாலும் போற்றிக் காக்கப்பட்டன.

முதல் ஆதித்தன் தனது 21ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 892) புதுப்பாக்கத்துச் சபையாருக்குக் கொடுத்த தேவதானம் அவனது மகன் முதல் பராந்தகனால் 4ஆம் ஆட்சியாண்டில் (கிபி 909) உறுதிசெய்யப்பட்டதைத் திருமால்புரக் கல்வெட்டுக் கூறுகிறது.[8] இதிலுள்ள நிகழ்வுகள், கோயில் கொடைகளில் காட்டப்பட்ட விழிப்பினைக் குறிக்கின்றன. முதல் ஆதித்தன் காலத்தில் சிற்றியாற்றூர் என்ற ஊரில் உள்ள செங்கப்பாடி கிழான் என்பானது காணி அல்லாத பிற நிலங்களின் உற்பத்தி யாவும் கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்டன. இந்த ஆணை கிபி 892இல் வெளியிடப்பட்டிருப்பினும் பல ஆண்டுகள் இது கணக்குப் பதிவேடுகளில் எழுதப்படவில்லை. இது கிபி 911இல் முதல் பராந்தகன் ஆட்சியில் கண்டுபிடிக்கப்பட்டு, முறையாக்கப்பட்டது. அடுத்து, முதல் பராந்தகனது 36ஆம் ஆட்சியாண்டில் (கிபி 943), முன்னர் விலக்களிக்கப்பட்ட செங்கப்பாடிகிழானது காணி வருவாயும் கூடுதலாகக் கோயிலுக்கு வழங்கப்பட்டது. இந்தக் கொடைக்குப் பொறுப்பேற்றிருந்த புதுப்பாக்கம் சபையினர் இதை வழங்காமல் ஏமாற்றி வந்தனர். இது குறித்து உத்தம சோழனின் 14ஆம் ஆட்சியாண்டில் (கிபி 985) முறையிடப்பட்டதால், மன்னன் இதனை விசாரணை செய்து, தவறு செய்த புதுப்பாக்கம் சபையினருக்குத் தண்டமிட்டுக் கோயிலுக்குச் சேரவேண்டிய நெல், பொன் போன்ற கொடைகள் முறையாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்தான். புதுப்பாக்கத்துச் சபைக்கு எதிராகக் கோயில் அறங்காவலர்கள் கொடுத்த முறையீட்டினையடுத்து, மன்னனே இதில் தலையிட்டுப் பழைய கொடைகளை உறுதிசெய்ததுடன் விவரங்களைப் பதிவேடுகளில் எழுதவும் ஆணையிட்டிருக்கிறான். சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளாக, பல இடையூறுகள் ஏற்பட்டபோதும், அடுத்தடுத்து வந்த அரசர்களால் கோயிலுக்கான கொடைகளும் அறங்களும் முறையாகப் பேணப்பட்டுள்ளன–போற்றப்பட்டுள்ளன.

ஒரே குலத்தைச் சார்ந்த மன்னர்களது கொடைகள் போற்றப்படுவது இயல்பு என்று கருதலாம். ஆனால், நீண்ட பல ஆண்டுகள் நாட்டை ஆட்சி புரிந்து, வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்த பெருமைக்குரிய ஓர் அரச குல மரபினர் போரில் தோற்கடிக்கப்பட்டு, அந்த அரச குல மரபினர் மீண்டும் உயிர்த்தெழ இயலாத அளவு அடக்கி ஒடுக்கப்பட்டு, மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்ட பிறகும், வெற்றிப் புகழுடன் ஆட்சிக்கு அடுத்து வந்த வேறு அரச குல மரபினர் தங்களால் வெல்லப்பட்ட அரச குலத்தினரின் கொடைகளையும் கோயில் என்ற நிலவுடைமை நிறுவன அமைப்பையும் போற்றிக் காத்தனர்.

மேலைச் சாளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிர மாதித்தன் கிபி 734இல் பல்லவ நாட்டின் மீது படையெடுத்துக் காஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டான். காஞ்சியில் இருந்த ராச சிம்மேசுவரர் ஆலயத்தின் உடைமைகள் எதையும் எடுக்கவோ, சிதைக்கவோ முயற்சிக்காமல் யாவற்றையும் கோயிலுக்கே கொடுத்துவிட்டான். அத்துடன், கோயிலின் கலையழகைக் கண்டு மனம் ஒன்றிய அவன், கோயிலுக்குத் தீங்கு செய்யும் எண்ணத்தையும் கொள்ளவில்லை. இச்செய்தி காஞ்சியில் உள்ள இரண்டாம் விக்கிரமாதித்தனின் கல்வெட்டில் பதியப் பட்டுள்ளது.[9]

இதே போன்று, பல்லவப் பெருமன்னர்கள் பொலிவிழந்து சோழர்கள் தலைதூக்கிய காலத்தில், பல்லவர்கள் விட்டுச் சென்ற கோயில் கொடைகளைச் சோழ மன்னர்கள் திரும்பவும் அளித்துக் காத்தனர். திருக்கழுக்குன்றத்தில் பதியப்பட்டுள்ள கோராசகேசரிவர்மனான முதல் ஆதித்தனின் 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கிபி 898), பல்லவப் பெருநாட்டின் புகழை நாட்டிய வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் (கிபி 630-668), ஸ்கந்தசிஷ்யன் (கிபி 731-732) ஆகிய மன்னர்கள் அளித் திருந்த கொடைகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட செய்தியினை விவரிக்கிறது.[10]

மீண்டும் சோழர்கள் சோர்ந்து, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தின் பேரரசர்களான பின்னர், சோழப் பேரரசர்களின் கொடைகளைப் போற்றினர். சடாவர்மன் இரண்டாம் சுந்தர பாண்டியனது 15ஆவது ஆட்சியாண்டின் (கிபி 1291) திருக்கச்சியூர்க் கல்வெட்டு, மூன்றாம் குலோத்துங்கனின் 20, 38ஆம் ஆட்சியாண்டுகள் (கிபி 1198, 1216), மூன்றாம் ராசராசனது 15,17ஆம் ஆட்சியாண்டுகள் (கிபி 1233,1235), முதலாம் சுந்தர பாண்டியனின் 7ஆம் ஆட்சியாண்டு ஆகியவற்றைக் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.[11] இந்த மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட கொடைகள் நூற்றுக்கணக்கான ஆண்டு களுக்குப் பிறகும் நிலைத்திருந்திருக்கின்றன. இவ்வரச குலத்தினர் யாவரும் கோயில்களின் உடைமைகளைப் பாதுகாத்ததோடு மேலும் பெருக்கவும் உதவினர்.

**மன்னர்கள் போற்றியமைக்கான காரணிகள்**

மைய அரசு மாறினாலும் போரில் வெற்றி கொண்டு புதிய நிலப் பகுதிகளைக் கைக்கொண்டாலும், மன்னர்கள் கோயில் களையும் இவற்றையொட்டிய அமைப்புகளையும் போற்றியது ஏன் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

பொதுவாக, போர் வெற்றிகளால் கிடைத்த உற்பத்தி நிலங்களின் விரிவாக்கம், வரி போன்ற வரவினங்களை மிகுவித்து



மன்னர்களது கருவூலங்களை நிறையச் செய்திருந்தது. இருந் தாலும், மன்னர்கள் தாங்கள் ஆளுமைக்குக்கொண்டுவந்த புதிய பகுதிகளின் நில உற்பத்தி உறவுகளுக்கு எத்தகைய இடையூறும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால், கோயில் மற்றும் நிலவுடைமைப் பகுதியினரின் அப்போதைய நடைமுறைச் செயல்பாடுகளில் மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிட வில்லை.

தோல்வியுற்ற மன்னர்களின் கருவூலங்கள் கொள்ளை கொள்ளப்பட்டனவேயன்றி, அந்தக் கருவூலங்கள் நிறையக் காரணிகளாக இருந்த, நிலவுடைமைப் பகுதிகள் உள்ளிட்ட கோயில் போன்ற உற்பத்தி அமைப்புகள் காக்கப்பட்டன; போற்றவும்பட்டன. ஏனெனில், வெற்றி கொண்ட மன்னர்களது கருவூலங்களை மீண்டும் நிறைக்க–மேலும் நிறைக்க, அவர் களது ஆட்சியின் கட்டுப்பாட்டிற்குப் புதிதாக வந்திருந்த அந்த உற்பத்தி அமைப்புகள் வேண்டப்பட்டன. பொன் முட்டை யிடும் வாத்தினை வெற்றி கொண்ட மன்னர்கள் காத்துவரவே விழைந்தனர்.

வெற்றிகொண்ட பகுதிகளை ஆட்சிபுரிய விழைவு கொள்ளாது, கொள்ளை ஒன்றையே நோக்கமாகக்கொண்ட மாலிகபூர் போன்றவர்களே, கோயில் மற்றும் பிற உடைமை களைக் கொள்ளையடித்திருக்கிறார்கள்.

மேலும், வெற்றி பெற்றவர்களது ஆட்சி ஆளுமையில், அவர்களுக்குப் போர்களில் வீரர்களைத் தந்துதவவும் உள்ளூர் அமைதியைக் காக்கவும் கோயில் அமைப்பைக் கைக்கொண் டிருந்த நிலவுடைமைப் பகுதியினரின் ஒத்துழைப்பு வேண்டிய தாயிருந்தது. ஆகவே, வெற்றி கொண்ட மன்னர்கள் கோயில் களைப் போற்றியதிலும் நோக்கம் இருந்தது.

மன்னர்களுடைய போர் முனைப்புகள்கூட, நீர் வளப் பகுதிகள் அல்லது நீர் வளத்துக்கான வாய்ப்புள்ள பகுதிகளை நோக்கியே இருந்தன என்பதையும் இங்கு பார்க்கத் தவறிவிடக் கூடாது. ஆகவே, பல மன்னர்களும் கோயில்களைத் திட்ட மிட்டே காத்துவந்தனர் எனலாம்.

**கோயிலைக் காத்த படை வீரர்**

பலவாறு கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடை களும் கோயில் வருவாயை உயர்த்தப் போடப்பட்ட வரிகளும் கூலி விவசாயிகள் மேல் திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் பல்வேறு கட்டங்களில் உழைக்கும் மக்களிடையே நிறைவின் மையை ஏற்படுத்தி வரி எதிர்ப்பு, உழ மறுப்பு, ஒத்துழையாமை போன்ற வெவ்வேறு வகையான இயக்கங்களை உருவாக்கி, கிளர்ச்சி அல்லது போராட்டத்துக்கான வழியினைத் திறந்து

விட்டிருக்கின்றன.[12] இவற்றை அடக்கவும் ஒடுக்கவும் மீண்டும் ஏற்படாமல் தடுக்கவும் மூன்று கை மகாசேனை,[13] மூன்று படைப் பொற்கோயில் கைக்கோளர்,[14] மதிட் சேவகர்[15] போன்ற போர்ப்படைப் பிரிவுகள் தனியாகக் கோயிலுக்கென்று அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

இதன்றிப் பல கோயில் ஊழியர்களின் பெயர்கள் வீரமுஷ்டி, வீரபத்திரர் என்று வழங்கப்பட்டிருப்பதைக் கொண்டு இவர்கள் படை வீரர்களாக இருந்திருக்கலாம் என்று அறிஞர் திரு. தி.ந. சுப்பிரமணியம் கருதுகின்றார்:[16]

> இவ்விதம் கோயில்களைச் சைனியத்தாரின் பாது காப்பிலே ஒப்படைக்கும் பழக்கம் அந்நாளிலே தென்னிந் தியாவிலும் இருந்ததாகத் தெரிகிறது..........
> இவற்றைக் கவனிக்கும்போது அந்நாளிலே சில கோயில் களிலேனும் தங்களுக்கெனத் தனியாகச் சேனை வீரர் களைக் கொண்டிருந்ததென்று கொள்வதில் தவறு இல்லை.

கோயில் உடைமைகளையும் கருவூலங்களையும் காக்க 'திருமெய்காப்பார்' என்ற பெயரில் பல ஊழியர்கள் தஞ்சை போன்ற செல்வமிக்க கோயில்களில் இருந்திருக்கிறார்கள்.[17] ஆனால், படைவீரர்கள் என்று கொள்ளத்தக்க பிரிவினர் இருந்தது ஆழ்ந்த ஆய்வுக்குரியதாகும்.

பல்லவர் காலத்தில் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நிலவுரிமை மாற்றம்–தமது உழைப்பினால் காடுகளாகக் கிடந்த நிலங்களைப் பண்படுத்திய அல்லது நேரடி உழைப்பில் உற்பத்தியை உருவாக்கிக் கொடுத்த பிரிவின ரிடமிருந்து நிலங்கள் வலுவில் பறிக்கப்பட்டு, உற்பத்தியில் நேரிடையாக ஈடுபடாத வேளாளர், பிராமணர், கோயில்கள் போன்ற மறைமுக உடைமையாளர்களுக்குச் செய்யப்பட்ட நிலவுரிமை மாற்றம்[18]–சமூக அமைதியைக் குலைக்கின்ற சூழ் நிலைகளை முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவாவது உருவாக்கியிருக்கவேண்டும். பிராமணர், வேளாளர் போன்ற உயர்நிலையினரின் நில ஊடுறுவல் முயற்சிகளுக்கு உறுதுணை யாகவும் உற்ற காவலாகவும் இருந்தது மன்னன்தான் என்பதை மறைத்துவிட முடியாது. அரசனது படை வலிமையும் அற ஒழுக்கக் கோட்பாட்டுத் திணிப்புகளும் மட்டுமே அன்று முளைவிட்ட அமைதியின்மையை முற்றிலுமாக முறியடித் திருக்க முடியாது. பரந்துபட்ட நிலப்பகுதியில் உற்பத்தி வாய்ப்புகள் ஏற்பட்ட பின்னர், அரசனது ஆணை என்ற சட்ட நெறிக் கட்டுப்பாடுகளன்றி, படை வலிமையின் துணை,



வேண்டியபோது வேண்டியவாறு, கிடைத்திருக்க வாய்ப்பில்லை. இந்நிலையில், நிலவுரிமை கொண்டவர்களின் உள்ளூர்ப் படை களாகக் கோயிலை மையப்படுத்திய பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம்.

இவை, கோயிலைக் காக்கும் போர்வையில் நிலவுடைமை நலன்களை மேம்படுத்தும் பணிகளை மிகச் சிறப்பாகவே நிறைவேற்றியிருக்க முடியும். அந்தந்தப் பகுதிகளின் நிலைமை களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப இப்படைப் பிரிவுகளின் தன்மைகள் வேறுவேறாக அமைந்திருக்கலாம். இருந்தாலும், இவற்றின் நோக்கங்களும் நடைமுறைகளும் நிலவுடைமை நலன்களைக் காத்தலாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்ப தில் ஐயமில்லை.

அம்பாசமுத்திரம் அருகிலுள்ள திருவாலீசுவரம் மற்றும் சேரன்மாதேவி கோயில்களை மூன்றுகை மகாசேனை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டதை வைத்து,[19] கோயில் உடைமைகள் மற்றும் கருவூலங்களைக் காக்கும் பணிகளை மட்டுமே இவை மேற்கொண்டன என்ற முடிவுக்கு வந்துவிட இயலாது. இந்தப் படையினர் பல பொதுப் பணிகளுக்கான பொறுப்புகளை மேற்கொண்டதையும் கோயில் பணிகளின் காப்பாளர்களாக விளங்கியதையும்[20] புறக்கணித்துவிடக் கூடாது. கோயிலிடமிருந்து வரி பெற அதிகாரிகளுக்குத் துணை யாகப் படையினர் செயல்பட்டதையும் அறிகிறோம்.[21] அதே போன்று, கோயிலுக்குச் சேரவேண்டிய வரி அல்லது வருவாயினைப் பெறவும் நிலங்களில் உற்பத்திப் பங்கினைப் பெறவும் படையினர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அத்துடன், இப்படைகள் வேண்டியபோது, வேண்டிய வாறு மன்னர்களின் போர் முயற்சிகளுக்கும்கூடப் பயன்படுத் தப்பட்டிருக்கலாம். கோயில்களின் மேற்பார்வையில் பயிற்சி பெற்றுப் பராமரிக்கப்பட்ட நிலைப்படை போன்றதாகவும் அமைந்திருக்கலாம்.

**அடக்குதலுக்கு மாற்று**

எல்லா இயக்கங்களையும் அடக்குமுறையைக் கொண்டு– அரசாணை என்ற சட்டநெறிக் கட்டுப்பாடுகளைக் கொண்டு மட்டுமே ஒடுக்க இயலாது. ஆகவே, பொது மக்கள் பெரு மளவில் பங்குகொள்ளும் பேரியக்கங்கள் உருவாவதைத் தடுக்க வேறு வகையான உணர்வுகளும் வகுக்கப்பட்டன. இரண்டாம் ராசாதிராசனது எட்டாம் ஆட்சியாண்டுத் திருக்கச்சியூர்க் கல்வெட்டு (கிபி 1171) இதற்குத் தக்க சான்றாகும்.[22] காஞ்சி, அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் 24 நகரங்களில் உள்ள எண்ணெய்

ஆட்டுவோர் ஒன்றாகக் கூடி, கோயிலைச் சேர்ந்த பகுதிகளில் இருக்கும் செக்குகளுக்கு வழக்கமாகத் தரும் வரியுடன் சேர்ந்து அனைவரும் குறிப்பிட்ட அளவு எண்ணெய்யும் செக்குக்கு ஒரு காசு என்றும் தருவதென முடிவுசெய்தார்கள். இப்படிக் கொடுக்கவேண்டியது ‘சாதி தர்மம்’ என்றும் இதில் தவறுவோர் சாதிக்குத் துரோகம் செய்வோர் என்றும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

பல்வேறு இனத்தை அல்லது ஊரைச் சார்ந்த குடிமக்கள் அவ்வப்போது தங்களுடைய குறைகளைத் தீர்க்கவும் முடிவு களை மேற்கொள்ளவும் ஒன்றாகக் கூடித் தீர்மானங்களை இயற்றியிருக்கிறார்கள் என்பதைப் பல கல்வெட்டுக்கள் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துத்தருகின்றன. ஊர், சபை, நகரம் போன்ற உள்ளாட்சி அமைப்புக்களைப் போன்றே, இன அல்லது ஊர் மக்களும் தங்களுக்குள் கட்டுப்பாட்டுடன்கூடிய ஒழுங்குகளையும் வரையறைகளையும் வகுத்துக்கொண்டு, தங்கள் நலன்களை முன்னிலைப்படுத்தி முடிவுகளை மேற் கொண்டிருக்கின்றனர். சில கட்டங்களில் இவர்கள் அரசு, அதிகாரிகள், கோயில்கள், ஆதிக்கம் கொண்ட நிலவுடைமை யாளர்களான பிராமணர், வேளாளர் ஆகியோரை எதிர்க்கவும் துணிந்திருக்கின்றனர் என்பதைக் கிடைத்திருக்கின்ற சில கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

கிபி 1073இல் முதல் குலோத்துங்கனின் மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு, நிகரிலி சோழமண்டலத்தின் எழுபத் தெட்டு நாடுகளும் சயங்கொண்ட சோழ மண்டலத்தின் நாற்பத் தெட்டாயிரம் பூமியும் பெரும்படை வலங்கை மகாசேனைக்கு வழங்கப்பட்ட ராசேந்திர சோழப் பதினெண் பூமியும் உள்ளிட்ட நாடுகளில் சோழ குலம் தோன்றிய நாளிலிருந்து மாடுகளுக்கும் எருமைகளுக்கும் இல்லாத வரி போடப் பட்டதை எதிர்த்து வரி கொடுக்கவேண்டிய தேவையில்லை என்று ‘பெரிய விஷயத்தார்’ கூடி முடிவெடுத்ததைக் காட்டு கிறது.[23] ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இடையர்பாக்கக் கல்வெட்டில் (கிபி 1282) இடையர்கள் முப்பது காசுக்கு எண்ணெய் அளக்க மறுத்ததைப் பார்த்தோம்.[24]

இந்தப் பின்னணியில் ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் தாங்களாகவே கூடிக் கோயிலுக்கு, வரிக்கு மேல் கூடுதலாக வரி தருவதாக முடிவெடுத்து, இதனைச் ‘சாதி தர்மம்’ என்று நியாயப்படுத்துவது ஆழ்ந்த ஆய்வுக்கும் சிந்தனைக்கும் உரிய தாகும். நிலவுடைமை அமைப்பின் சார்பில், அவ்வமைப்பின் மிகப் பெரிய நிறுவனமாக நின்ற கோயில்களை எதிர்த்துப் பல வடிவங்களில் குமுறல்களும் எதிர்ப்புகளும் உருவான



கட்டத்தில், கடும் அடக்குமுறையென்ற கருவி செயலிழந்து விட்ட சூழ்நிலையில், கோயில்களை அனைத்திற்கும் அப்பாற் பட்ட ஒரு புனித இடமாக உயர்த்தி, எளியவர்களுக்கு எட்டாத ஆனால், அதற்கு அடங்கிக்கிடக்கின்ற மன உணர்வைக் கோயில்கள், இறை நம்பிக்கைகள் வழியாக ஊட்டிவிட முயன் றார்கள். அதாவது, தங்களுக்கு வரும் துன்ப துயரங்களும் தொல்லைகளும் இன்னல்களும் இறைவனின் திருவிளையாடல் கள் என்ற தத்துவத்தை எளிய மக்கள் ஏற்கும்படி செய்ய முயன்றார்கள்.

இதன் விளைவாக, கூலி விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் வேளாண் தொழிலோடு இயைந்த கருவி களைச் செய்யும் சிறு கைத்தொழிலாளர்களும் தாங்கள் சுரண்டப்பட்டுத் தொல்லைக்குள்ளாவதைக் கோயில்களுக்குச் செய்கின்ற கடமை–கடன் என்று கருதித் தாங்கிக்கொண்டு உரிமைக் குரல் எழுப்புவதற்கு மாறாகப் பொறுமையைப் பெருமையாகக் கொள்வார்கள் என்று எண்ணப்பட்டது– எதிர்பார்க்கப்பட்டது.

> சுவாமிக்காக உழைக்கிறோம். நமது பொருளாதாரத் துன்பங்கள் சுவாமிக்காக என்ற பக்தியுணர்வைத் தூண்டு வது எளிதாயிற்று. இம்மாற்றங்களில் ஏற்படும் பளு முழு வதையும் ஏற்றுக்கொண்டு மன அமைதிகொள்ளப் பக்திப் பிரச்சாரம் பயன்பட்டது

என அன்றைய சுரண்டலின் தத்துவத்துக்குப் பக்தி இயக்கம் துணையிருந்ததை ஆய்வுப் பேரறிஞர் பேராசிரியர் நா. வானமா மலை அவர்கள் விளக்குகிறார்கள்.[25] கோயிலுக்கு அதிக வரி தருவது இறைவனுக்குச் செய்யும் பணி என்ற எண்ணத்தை உருவாக்கியதுடன் இதனைச் சாதி தர்மமாகவும் காட்டிக் கட்டுப்படவைத்தார்கள். ஆனால், இப்படி அனைவரையும் கட்டுப்படுத்த முடியவில்லை. காஞ்சி, அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் 24 நகரங்களில் உள்ள எண்ணெய் ஆட்டுவோர் ஒன்றாகக் கூடி ‘சாதி தர்மம்’ கருதி எடுத்த முடிவு, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்றதன்று. விலக்காக ஒன்றிரண்டு இடங்களில் இந்த மாயை ஏற்கப்பட்டிருக்கலாம். ஆனால், வேறு வழியின்றியே இவையெல்லாம் பொறுத்துக் கொள்ளப்பட்டன.

**கோயில் சார்ந்த தீர்வுகள்**

கிபி 1236இல் வெட்டப்பட்ட மூன்றாம் ராசராசனின் இருபதாம் ஆட்சியாண்டைச் சார்ந்த தலைஞாயிறு கல்வெட்டு, கோயில் தொடர்பானவற்றில் இருந்த பொதுவான உணர்வு

களை எடுத்துக்காட்டுகிறது.[26] தனியார் ஒருவன் திருநாமத்துக் காணியாகக் கோயிலுக்கு நிலம் ஒன்றை விற்றான். ஆனால், கோயில் அறங்காவலர்கள் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த நிலத்துக்கான தொகை 2000 காசுகளைக் கொடுக்க வில்லை. இது தொடர்பாக, 'ஆராச்சியர்' மற்றும் 'முதலி'கள் கொடுத்த தெளிவான ஆவணங்கள் அவனிடம் இருந்ததால், பணத்தைப் பெறமுடியாத அவன் வழக்குத் தொடர்ந்தான். வாங்கிய நிலத்துக்குப் பணம் கொடுக்காத கோயில், ஐந்து ஆண்டுகளாக அந்த நிலத்தில் உற்பத்திக்கான ஏற்பாடுகளையும் செய்யவில்லை. இதையறிந்த மன்னனும் சபையும், கோயிலின் 'தேவகன்மி'களை அழைத்துப் பேசியதுடன், இந்தச் சிக்கலைத் தீர்க்க 'ஆராய்ச்சியர்' என்ற நடுவரிடம் அனுப்பிவைத்தனர். வழக்கு, கோயிலுக்குச் சார்பாக இல்லையென்பதையறிந்த வுடன், நிலத்தை விற்றவனுடைய உறவினர்கள் இதில் தலை யிட்டு, வழக்கு நடக்காமலேயே, இணக்கமான உடன்பாடு ஏற்பட வழிவகுத்தார்கள்.

கோயிலுக்கு எதிரான வழக்கு எழுவதும், இதில் கோயில் தோல்வியுறுவதும் அன்று எதிர்பாராததாக இருந்தது. அப்படி நடந்துவிட்டால், கோயிலையொட்டி எழுப்பப்பட்டிருந்த மாயை வெளிப்பட்டுவிடும். அத்துடன், கோயில் என்றாலும், அதனுடைய பொறுப்பிலிருந்த அறங்காவலர்கள்தாம் இத் தகைய தவறுகளுக்குக் காரணிகளாக இருந்திருப்பார்கள். இருந்தாலும், கோயில் அல்லது அதனைப் பேணிவந்த வேளாளர் போன்ற நிலவுரிமை கொண்டவர்களுக்கு எதிராக எதுவும் நடக்கக்கூடாது என்பதற்கான முயற்சிகளே இது போன்ற நிகழ்வுகள் எனலாம். தனியொருவன் கோயிலில் செய்த குற்றங்களுக்குத் தண்டிக்கப்பட்டபோது, கோயில் என்ற பொது அமைப்பைக் காக்க அதன் அறங்காவலர்கள் கருத்துடன் இருந்தார்கள் என்ற தோற்றத்தை முன்னிறுத்த முடியும். ஆனால், கோயிலே தவறிவிட்டதாகத் தெரிந்தால், அந்த அமைப்பின் மேலுள்ள நம்பிக்கை சிதைந்து விடும். அதனால் தான், இதுபோன்ற வழக்குகளே ஏற்படா வண்ணம் பார்த்துக் கொண்டனர் என்று கொள்ள இடமுண்டு.

இதனால், கோயில் நிலங்கள் தொடர்பாக எழுகின்ற ஐயங்கள்–வேறுபாடுகள்–பூசல்கள் போன்றவற்றுக்கு, நீதி நெறிகளுக்கு அப்பாற்பட்ட முறையிலான தீர்வுகள் பெறுவதற்கு முடிந்தது. கோயிலை மையப்படுத்திய இத்தகைய தீர்வுகள், தனிமனிதர்களைவிடக் கோயில் மேன்மையுடையது என்ற மனநிலையை ஏற்படுத்தின. இதனை சேரன்மாதேவியில் உள்ள சுந்தரசோழனின் 19ஆம் ஆட்சியாண்டு (கிபி 975) ஆவணம்



தெளிவாகக் காட்டுகிறது.[27] கோயில் நிலங்களை உழுதுவந்த கல்லூர் என்ற ஊரினர், தாங்கள் செலுத்தவேண்டிய உற்பத்திப் பங்கு, வரி போன்றவற்றைக் கொடுக்கமுடியாததால், அந்நிலங் களில் தாங்கள் பயிரிட இயலா நிலையைத் தெரிவித்தனர். இதை வைத்துக்கொண்டு அவர்கள் அந்த நிலங்களிலிருந்து நீக்கப் பட்டதுடன், மீண்டும் கோயில் நிலங்களில் உழுகின்ற உரிமையைக் கேட்கக்கூடாது என்றும் அந்தக் கோயில் நிலங்கள் வேறு யாரையேனும் கொண்டு பயிரிடப்படும்போது, அதனைத் தடுக்கக்கூடாது என்றும் அவர்கள் உறுதியளிக்க வலியுறுத்தப்பட்டார்கள். கோயில்களது நலன்களுக்கேற்ற வாறு வரையறைகளை வகுத்துக்கொள்ள இத்தகைய வலியுறுத்தல்கள் கோயில்களின் பெயரில் மேற்கொள்ளப் பட்டன. பயிரிடுவோரை இச்சைப்படி மாற்றவும் அவர்கள் உரிமைகளை மறுக்கவும் இதனால் இயலுவதாயிற்று எனலாம்.

**உற்பத்தியாளரிடம் இறுக்கம்**

இங்கு மற்றொரு முரணையும் பார்க்கவேண்டும். கோயில் நிலங்களை உழுதுவந்த ஊரினர், தாங்கள் செலுத்தவேண்டிய உற்பத்திப் பங்கு, வரி போன்றவற்றைக் கொடுக்கமுடியாததால் தான் அந்நிலங்களில் பயிரிட முன்வரவில்லை. அத்துடன், தங்கள் இயலாமையையும் தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். அப்படியிருக்கும்போது, ஏன் அவர்களை நிலத்திலிருந்து நீக்கிய தாகப் பதிவு செய்துகொள்ளவேண்டும்? மீண்டும் கோயில் நிலங்களில் உழுகின்ற உரிமையைக் கேட்கக்கூடாது என்றும் அந்தக் கோயில் நிலங்கள் வேறு யாரையேனும் கொண்டு பயிரிடப்படும்போது, அதனைத் தடுக்கக்கூடாது என்றும் ஏன் அவர்களிடம் உறுதியளிக்க வலியுறுத்தவேண்டும்? இந்த நிலத்தைப் பொருத்தவரை அதனுடைய முழு உரிமையும் கோயிலுக்கே இருந்திருக்குமாயின் அல்லது உழுகுடிகளுக்கு வேறு எத்தகைய உரிமையும் அந்நிலத்தில் இல்லாதிருந்திருக்கு மாயின், கோயில் தனக்கு ஏற்புடைய உற்பத்திப் பங்கு தருபவர் களிடம் நேரிடையாகவே நிலத்தை ஒப்படைத்திருக்க முடியும். ஆனால், இங்கு அப்படி நடைபெறவில்லை. அதற்கு மாறாக, நிலத்தை உழுதுவந்தவர்களிடம் இருந்த ஏதோ உரிமையைப் பறிக்கவேண்டுமென்ற ஆத்திரமே வெளிப்படுகிறது. மேலும், இறுக்கமும் புலப்படுகிறது.

இதற்கு இயைபாகவுள்ள மற்றொரு சான்று, முதல் குலோத்துங்கனின் 24ஆம் ஆட்சியாண்டின் (கிபி 1094) திருவரங்கக் கல்வெட்டில் காணக்கிடைக்கின்றது.[28] கோயில் நிலங்களில் உற்பத்தி மேற்கொண்டிருந்த குடியினர் தங்கள் பங்கினைச் செலுத்த முடியாதவர்கள் ஆனார்கள். இதன்

விளைவாக அந்த ஊர் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கோயில் நிலங்கள் வேறு புதிய குத்தகையாளர்களுக்குப் பயிரிடத் தரப்பட்டுவிட்டன.

இதற்கடுத்த கட்ட நிலையைச் சீர்காழி வட்டம் திருக் கோலக்காலில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் 35ஆம் ஆட்சியாண்டின் (கிபி 1213) கல்வெட்டுக் காட்டுகின்றது.[29] கோயில் நிலத்துக்கான பங்கினைக் கொடுக்கத் தவறியதற்காக, உழுதுவந்த ஒருவனுடைய நிலம் பறிக்கப்பட்டு வேறொரு வனுக்கு, மேலும் மிகுதியான குத்தகைக்குத் தரப்பட்டுவிட்டது. பரகேசரிவர்மன் என்று மட்டும் பொறிக்கப்பட்ட சோழ மன்னன் ஒருவனது திருவெண்காட்டுக் கல்வெட்டு, இப்படி முன்னைய பயிரிடுவோரை மாற்றி, மிகு வருவாய் கிடைக்கக் கூடிய வகையில் வேறு ஒருவருக்குக் கோயில் நிலங்கள் பயிரிட வழங்கப்பட்டதை விவரிக்கின்றது.[30] இதனால், முறையாகவும் ஒழுங்காகவும் குத்தகையினைச் செலுத்தி வந்தவர்களும் மாற்றப்பட்டு, மேலும் மிகுதியாகத் தர ஒப்புக்கொண்டவர் களிடம் கோயில் நிலங்கள் கொடுக்கப்பட்டன. கோயில் நிலங்களாக இருந்ததால், எண்ணியபடி பயிரிடுவோரை மாற்றவும் பங்களவை உயர்த்தவும் முடிந்தது.

இத்தகைய மாற்றங்கள் தன்னிச்சையான நிகழ்வுகளாக இருந்தால் தொடர்புள்ளவர்களிடமிருந்து எதிர்ப்பும் மறுப்பும் ஏற்பட வாய்ப்புகள் மிகுதி. இதை நடைமுறையில் செயல் படுத்துவோராக உள்ளூர் நிலவுடைமையாளர்கள் இருந்ததால், அவர்கள் மேலான சினமாகப் பாயவும் வழியேற்படும். இதைத் தடுக்க இது போன்ற மாற்றங்களுக்கு அரசனது ஆணையும் பெறப்பட்டது. இப்படி முதலாம் குலோத்துங்கனின் ஆணை யினைப் பெற்ற பின்னர், தொடர்ந்து மேல்வாரம் தரமுடியாமல் போன கோயில் நிலங்களின் உழுகுடியினரை மாற்றி, வேறு உழுகுடியினருக்குக் கொடுத்ததை கிபி 1112 ஆண்டைய திருமாலம் கல்வெட்டு விவரிக்கிறது.[31]

கோயில் நிலங்களை உழுதுவந்த பலரில் ஒருவர் மட்டும் முறையாக மேல்வாரம் தரவில்லை என்றால், அது அவரது தனிப்பட்ட தவறு என்று கொள்ளலாம். ஆனால், பலர் இவ்வாறு மேல்வாரம் தரமுடியாமல் போனது, உண்மையான இயலாமையே என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்த நிலையில், வேறு சிலர் அதே கோயில் நிலங்களைப் பயிரிட முனைந்தாலும் என்ன புதிய முன்னேற்றம் கண்டுவிடப் போகிறார்கள் என்பது கணக்கில் கொள்ளப்படவேயில்லை. சில உழுகுடிகளால் கொடுக்கப்படமுடியாத குத்தகையினை வேறு சில உழுகுடிகள் மட்டும் எப்படிக் கொடுத்திருக்க



முடியும்? ஒரு சில ஆவணங்கள் குறிப்பதுபோல, முன் கொடுத்ததைவிட மிகுதியான குத்தகை எப்படிக் கொடுத்திருக்க முடியும்?

இங்கு உழுகுடிகளை மாற்றியதன் நோக்கம் வேறானதாக இருக்கவேண்டும். அந்த நிலத்தில் ஏதாவதொரு வகையில் உரிமை கொண்டிருந்தவர்களாக இருந்ததால், அவர்களை வெளியேற்றுவதிலேயே விரைவு காட்டப்பட்டிருக்கிறது.

இவை யாவும் எதைச் சுட்டிநிற்கின்றன? ஒரு தனித்த புதிய பொருளிய மையம் உருவாகி, வளர்ந்து, வலுப்பெற்று விட்டதையே இவை பறை சாற்றுகின்றன.

உழுகுடிகள் அல்லது பயிரிட்டு வந்தோரின் நில வெளி யேற்றம், குத்தகை அளவை மிகுத்தல், அது தொடர்பான பிற கட்டுப்பாடுகள், உழைப்புச் சுரண்டல், இதனால் கோயில் பெற்ற பயன்பாட்டுக்கு மிகையான எஞ்சிய உற்பத்தி, இப்படி எஞ்சிய உற்பத்தியாக–உபரியாகக் குவிந்து கிடந்த நெல் முதலான வேளாண் விளைவுகள் யாவும் விற்பனைப் பொருள் களாக–விற்பனைப் பண்டங்களாக மாறி உள்நாட்டு வெளி நாட்டு அங்காடிகளுக்குச் சென்றமை, இவற்றின் விற்பனையில் கிடைத்த செல்வக் குவியல், இவ்வாறு கிடைத்த செல்வக் குவியலால் பொருளிய அளவில் மிக உயர்நிலைக்கு–உன்னத நிலைக்குச் சென்றமை, இன்ன பிற இயைபான போக்குகள் என யாவுமே, கோயில் ஒரு தனித்த நிலவுடைமை அமைப்பாகவே மாறியிருந்தது என்பதைத் தெளிவாக்கிவிடுகின்றன.

நிலங்களைப் போன்ற நிலைத்த வருவாய் தரக்கூடிய உடைமைகளைக் கோயில் கொண்டிருந்ததால், பெரும் நிலவுடைமையாளர் என்று கருதத்தக்கவாறு மட்டுமே இருந்து விடவில்லை. உள்ளாட்சிப் பொறுப்புகள் சிலவற்றையும் ஏற்றுச் செயல்பட்டு வந்ததை முன்னரே பார்த்தோம். வரிகளைக் கோயில் பெற்றுக்கொண்டதும், பெற்றுக்கொண்ட வரிகளைப் பயன் படுத்திச் சில ஆட்சிப் பணிகளை நிறைவேற்றியதும் பொது அமைப்பு அல்லது நிறுவனம் என்ற அளவில் இயைபானதாகக் கூடக் கொள்ளப்படலாம். ஆனால், உண்மை நிலை யாது என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது. கோயில் நிலவுடைமை யாளர்களின் கைகளில் இருந்ததால், இந்த ஆட்சிப் பொறுப்பு களும் அவர்களின் பிடியிலேயே இருந்தன. அத்துடன், இந்த ஆட்சிப் பொறுப்பு வேறு வகையான சுரண்டல் வாய்ப்புகளுக்கும் இடம் தந்தது.

பாடி காவல், ஊர் காவல் போன்ற வரிகளைக் கோயில் பெற்றுவந்தது.[32] இந்த வரிகள் காவல் பணிக்காகப் பெறப்

பட்டவையாகும். காவல் என்பது பெரும்பாலும் உடைமை களைக் காப்பதாகவே இருக்கமுடியும். கோயில் உடைமைகள், நிலவுடைமையாளரின் இல்லங்கள், நில உற்பத்திப் பொருள்கள், உற்பத்தி நிலங்கள், ஆடுமாடு போன்ற கால்நடைகள், வணிகர் களாக இருப்பின் அவர்களது பொருள்கள் ஆகியனவே காவலுக்கு உரியனவாகும். உடைமைகளற்ற அடித்தட்டுப் பிரிவின ரிடம் காவல் காக்க எதுவுமே இருக்கவில்லை. ஆனால், காவலுக்கான வரிகள் ஊர் மக்கள் அனைவரிடமும் பெறப் பட்டன. இது ஒரு மறைமுகமான சுரண்டலாகவே அமைந்திருந் தது.

இந்த வரிகளைக் கோயில் வாங்கினாலும் ஊர் அவை பெற்றாலும் ஒன்றுதான். ஏனெனில், இவற்றால் பயன் பெற்றோர் நிலவுடைமைப் பிரிவினர்தாம். இருந்தாலும், இந்த வரிகளைக் கோயில் வழியாகப் பெற்றதற்குக் காரணி இருந்தது. கோயிலின் பெயரில் வரிகளைப் பெற்றபோது கடுமை காட்ட முடிந்திருக்க லாம்.

கோயில்கள் செல்வாக்குப் பெற்று, ஆட்சிப் பொறுப்புகள் பல அவற்றிடம் வந்துவிட்டன என்று வரலாற்றாய்வாளர்கள் இதனைக் கருதுகிறார்கள். ஆட்சிப் பொறுப்புகள் கோயில் களிடம் வந்துவிட்டன என்றோ, உள்ளாட்சிகளிடம் இருந்தன என்றோ பிரித்துப் பார்க்கவேண்டியதில்லை. ஆட்சிப் பொறுப்பு கள் யாரிடம் இருந்தாலும், அவை உள்ளூர் நிலவுடைமையாளர் களிடம் இருந்ததாகவே ஆகும். மேலும், இந்த வரிகளால், பெற்ற பயனும், இதனால் மாறியிருக்கப் போவதில்லை. கோயிலிடம் இருந்த ஆட்சிப் பொறுப்புகள் ஊர் அவையிடம் சென்றிருந் தாலும், ஊர் அவையிடமிருந்து கோயிலுக்கு மாறியிருந்தாலும், இதை ஒருவர் கொடுத்து, மற்றொருவர் பெற்றுக்கொண்டதாகக் கொள்ள முடியாது. யாரும் பொறுப்பைக் கொடுக்கவுமில்லை, வாங்கிக்கொள்ளவும் இல்லை. உள்ளூர் நிலவுடைமையாளர் களிடம் இருந்த பொறுப்புகள் அவர்களிடமேதான் இருந்தன. உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்ப, தங்கள் நலன்களுக்கேற்ப ஊர் அவையின் பெயரிலோ, கோயிலின் பெயரிலோ அவர்கள் ஆட்சிப் பொறுப்புகளை மேற்கொண்டு வந்தார்கள். கோயில் அல்லது உள்ளூர் அவையின் பொறுப்பில் இருந்த நீதி வழங்குமுறைக்கும் இது பொருந்தும்.

இனக்குழு மக்கள் அனைவரும் ஒன்றுகூடித் தங்களது முடிவுகளை மேற்கொள்ளும் வழமை தொடக்கக் கட்டத்தில் இருந்து வந்தது. உணவு திரட்டுதல், பங்கிடுதல், இடம் பெயர்தல், வாழ்வியல் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளுதல், தண்டனை



வழங்குதல் என அவர்தம் வாழ்வின் அனைத்துக் கூறுகளும் அந்த இனமக்கள் யாவரும் கூடியிருக்கும் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டன. ஆனால், சமூக அசைவியக்கத்தின் விளைவாக, இத்தகைய முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரங்களை நிலவுடைமையாளர் முழுமையாக எடுத்துக்கொண்டனர். உள்ளாட்சியாகக் கொள்ளப்படும் இதில், நீதி கூறுவதும் தண்டனை வழங்குவதும் உள்ளடங்கியிருந்தன. நிலவுடைமை யற்ற பிரிவினர், முடிவுகளை ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாக இருந்தார்களேயன்றி, கருத்துக்கள் கூறவோ, முடிவுகள் எடுப்பதில் பங்கு பெறவோ வாய்ப்பளிக்கப்படவில்லை. உள்ளாட்சி செய்து வந்த நீதி வழங்குதலைக் கோயில் செலுத்தியது புதுமையன்று என்றே கூறவேண்டும்.

இவ்வாறாக, வழிபடுமிடமாகவும், உடைமைகளைக் கொண்டதாகவும், ஆட்சிப் பொறுப்புகளை நிறைவேற்றியதாக வும், நீதிமன்றமாகவும் உயர்ந்து, அன்றைய நிலவுடைமை நலன்களைப் பல்லாற்றானும் பேணிக் காக்கும் மாபெரும் நிறுவனமாகக் கோயில் உருப்பெற்றிருந்தது. இதற்கு அடித்தள மாக, கோயில் தானே ஒரு நிலவுடைமை அமைப்பாகவும் மேலோங்கி நின்றது.

## இயல் 6

# கோயில் – நில உற்பத்தியாளர் உறவுகள்

கோயில் நிலங்களைப் பற்றிக் கூறவந்த பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார், கொடையளித்தோர் கோயிலுக்கு மிக உயரளவு நன்மைகள் பெற முனைந்ததாகவும் அந்த நிலங் களைப் பயிரிட்டோர் அந்தக் கொடையின் நோக்கத்தை நிறை வேற்றுவதில் உதவுவதற்காகத் தங்களைப் பிழிந்துகொண்டு– கசக்கிக்கொண்டு பாடுபட முன்வந்ததாகவும், தமக்கே உரிய அழகிய நடையில் கற்பனைகளை அடுக்குகிறார்.[1] நிலவுடைமை கொண்ட வேளாளர், பிராமணர், வணிகர், அதிகாரிகள் போன் றோர் எத்தகைய விட்டுக்கொடுத்தலும் இல்லாமல், கோயில் போன்ற பொது நிறுவனங்களின் முழுமைப் பயனையும் முற்றாகத் துய்த்து வந்த நிலையில், நில உற்பத்தியாளர்களான உழுகுடிகள்–பயிரிடுவோர் தங்களை மேலும்மேலும் வருத்திக் கொண்டு கோயில்களுக்கு உழைத்துழைத்துத் துன்பங்களை மட்டுமே விளைவாகப் பெற்றுத் துயரத்தில் மூழ்கிக்கிடந்தனர் என்பதையே அவர்தம் கூற்று மெய்ப்பிக்கிறது.

### மிகு பங்களவு தரவியலாத உழுகுடிகள் நீக்கப்படுதல்

பயிரிடுவோரை மாற்றுவதும் பங்களவை மிகுவிப்பதும் மட்டுமே தொடர்ந்த நிலையில் பல சிக்கல்கள் எழுந்தன. உற்பத்தி முறையிலும் நுட்ப அளவிலும் பெரும் மாற்றம் ஏற்படுத்தாமல், நன்செய் நிலங்களாக இருந்தபோதிலும் விளைச்சல் அளவு மாறாத நிலையில், மிகுந்த குத்தகையை எதிர்பார்த்தது அவ்வப்போது எதிர்வினைகளையும் உருவாக்கியது. பங்கினைச் செலுத்த இயலாத உற்பத்திக் குடிகள் இன்னல்களை ஏற்க வேண்டியதாயிற்று. இதனால், பிற உழுகுடிகளைப் போன்றே கோயில் நிலங்களைப் பயிரிட்டு வந்தவர்களும் குத்தகை தரமுடியாத நிலைக்கு உள்ளானார்கள். ஆனால், கோயில் நிலங்களின் உழுகுடிகள் மேலான நடவடிக்கைகளும் தாக்குதல் களும் மிகக் கடுமையாக அமைந்தன. பழைய உழுகுடிகள் நீக்கப்பட்டு, இன்னும் மிகுதியான கட்டுப்பாடுகள் ஏற்றப்பட்ட நிலையில் புதிய குத்தகையாளர்களுக்குக் கோயில் நிலங்கள் கொடுக்கப்பட்டன. புதிய உழுகுடிகள் பொறுப்பேற்றதை



யடுத்தும் சிக்கல்கள் நீங்கிவிடவில்லை. ஏனெனில், புதியவர்கள் நிலங்களைப் பெற்ற பின்னரும் நடைமுறை நிலைமைகளில் குறிப்பிடத்தக்க உடனடி மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்துவிட வில்லை. முன்னைய உழுகுடிகள் பட்டுவந்த அனைத்து அல்லல்களையும் அவலங்களையும் புதிதாக வந்தவர்களும் அடையவேண்டியிருந்தது. இந்த நிலைமைகளில், அவ்வப் போது, சூழ்நிலைகளுக்கேற்பக் கோயில்கள் விட்டுப்பிடிக்கும் முறையையும் மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

### ஊரைவிட்டு நீங்கிய உழுகுடிகளுக்கு விட்டுக்கொடுத்தல்

இதனைத் திருமாந்துறையில் உள்ள மூன்றாம் ராசராசனின் 15ஆம் ஆட்சியாண்டுக் (கிபி 1231) கல்வெட்டு விவரிக்கின்றது.[2] கோயில் நிலங்களுக்கான மிகு பங்களவினைக் கொடுக்க முடியாத உழுகுடிகள், வேறு வழியின்றி ஊரை விட்டு வெளியேறிவிட்டார்கள். இதனால், கோயில் வருவாய் குறைந்து, இறைமைப் பணிகள் பெரிதும் சீர்குலைந்தன. இதனையடுத்து, கோயில் நிலங்களுக்கான கடமையை ஒரு வேலிக்கு 60 கலம் என்று குறைத்து இறுதியாக்கி, வெளியூர் சென்றவர்கள் மீண்டும் திரும்பி வந்து குடியேறி உற்பத்தியில் ஈடுபடுமாறு ஊக்கப் படுத்தப்பட்டார்கள்.

இதேபோன்ற நிலைமையில், உழுகுடிகள் ஊரைவிட்டுப் போவதைத் தடுத்து நிறுத்தி, முன் ஆண்டுகளில் பயிரிடப்படாத கோயில் நிலங்கள் உற்பத்தி பெற வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்த 'காவல் காணியாளர்' பற்றிய குறிப்புகளைக் கும்ப கோணம் வட்டம் துக்காச்சியிலுள்ள மூன்றாம் ராசராசனின் 23ஆம் ஆட்சியாண்டு (கிபி 1239) ஆவணம் அறிவிக்கிறது.[3]

பங்களவு, மேல்வாரம், குத்தகை என்று வெவ்வேறு பெயர்களில் குறிக்கப்பட்டாலும், இத்தகைய உழுகுடிகள் தங்கள் உழைப்பின் வழியாக நிலத்தில் வேளாண்மை செய்து உற்பத்தியை உருவாக்கினார்கள். இதில் ஒரு பகுதி–பெரும் பகுதி பங்களவாகக் கோயிலுக்குச் சென்றுவிட்டது. இந்த நிலையில், கோயில் நிலங்களுக்கான பங்களவைத் தர இயலாத உழுகுடிகள் பெரும்பாலும் ஊரைவிட்டு வெளியேறியதாகவே பல பதிவுகள் தெரிவிக்கின்றன. கோயில் நிலத்தையோ அல்லது வேறு ஏதாவது வகை நிலத்தையோ தங்கள் உழைப்பின்வழியாக விளைவித்து உரியவர்களுக்குப் பங்களவு–மேல்வாரம் கொடுத்து வந்த உழுகுடிகள், அப்படிப் பயிர் செய்வதற்கு விருப்பம் இல்லையென்றால் அத்தகைய நிலத்தில் பயிர் செய்யாமல் விட்டுவிடவேண்டியதுதானே, ஏன் ஊரைவிட்டு வெளியேறவேண்டும் என்ற வினா எழும்புவது இயற்கை. குறிப்பிட்ட பங்களவு–குத்தகை தரமுடியுமென்றால் வேளாண்

பணியினை மேற்கொள்ளலாம், இல்லையென்றால் விருப்பமின்மையைத் தெரிவித்துவிட்டு வேறு பணிகளை மேற்கொள்ளலாம் என்பது இன்றைய நாளில் பொது நடைமுறையாக இருக்கலாம். ஆனால், அன்றைய நிலையில், நிலத்தில் உழைப்பைச் செலுத்திப் பயிர்த் தொழில் மேற்கொள்வதா, வேண்டாமா என்பதை முடிவெடுக்கக்கூடிய உரிமை உழுகுடிகளின் கைகளில் இருக்கவில்லை என்றே தெரிகிறது.

இங்குதான் நிலவுடைமை அமைப்பின் கட்டுப்பாடுகளையும் முறைமைகளையும் புரிந்துகொள்ளவேண்டும். நிலவுடைமையாளர்கள்–கோயில் உள்ளிட்டுத்தான்–முடிவெடுத்த பங்களவுக்கு ஒப்புதல் கொடுத்துவிட்டு உழுதொழிலை மேற்கொண்டால்தான் உள்ளூரில் வாழ்ந்திருக்கமுடியும். இல்லையென்றால் உள்ளூரில் குடியிருக்கவே முடியாது. வேறு தொழிலைச் செய்துகூடப் பிழைப்பை நடத்தமுடியாது. தொழிலடிப்படையிலான சாதி முறை வேரூன்றிவிட்டிருந்த சமூக அமைப்பில், செய்தொழிலை மாற்றிக்கொள்வதையும்கூட, அத்தகையதொரு சமூக அமைப்பைத் தமது நலன்களுக்காக உருவாக்கி வைத்திருந்த அன்றைய உடைமைப் பிரிவினர் ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள். இதுதான் அன்றைய வாழ்வின் உண்மை நிலை. அன்றைய நிலையில், நில உற்பத்தி உரிமை இழப்பையன்றி–சிறுஅளவிலான நிலவுரிமை இழப்பையன்றி, வேறு மாற்றம் எதையும் உழுதுண்போர் எதிர்பார்த்திருக்கவும் முடியாது.

எனவே, உடைமைப் பிரிவினரின் கட்டுக்களுக்கு உள்படமுடியாத நிலை ஏற்படும்பொது, உழுகுடிகளுக்கு இரண்டு மாற்றுகள்தாம் இருந்தன. ஒன்று, கட்டுப்பாட்டினை மீறும்போது ஊரைவிட்டு அவர்களால் வெளியேற்றப்படுதல்; மற்றொன்று, தாங்களாகவே ஊரைவிட்டு வெளியேறிவிடுதல். இதனால், உடைமைப் பிரிவினரின் நிலக் குத்தகை அளவைச் செலுத்த இயலாத உழுகுடிகள் வேறு வழியின்றியே ஊரைவிட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. முன்னது தண்டனையாக அமைந்துவிடுவதால், பின்னதையே பெரும்பாலும் உழுகுடிகள் தேர்ந்தெடுக்கவேண்டியதாகிவிட்டது.

இத்தகைய சூழல்களில், மேலும் பிழியப்படுவதற்கு ஏதுவாக வேறு உழுகுடிகள் கிடைக்காத கட்டங்களில்தாம், ஊரைவிட்டுத் தாமாகவே வெளியேறிச்சென்ற உழுகுடிகளை இணக்கம் காட்டி அழைத்துவந்து, குத்தகையைக் குறைத்து, முன்னர் பயிர் செய்த அதே நிலத்திலேயே தொடர்ந்து உழுதொழில் செய்யுமாறு ஊக்கப்படுத்தினார்கள். குத்தகைக் குறைப்பு செய்யப்பட்டதிலிருந்தே, அதற்கு முன்னர் முறையான, கொடுக்கக்கூடியதான, நடைமுறைக்கேற்ற, அளவான குத்தகை கேட்கப்படவில்லை என்பதும், உற்பத்திக்குக் கேடு வந்துற்ற பின்னரே விட்டுக்கொடுத்தல் நடந்திருக்கிறது என்பதும் புலனாகிறது.



கோயில், ஊர் நிலங்கள் போன்ற 'பொது' வகையல்லாது, தனி நிலவுடைமையாளர் நிலம் குறித்தும் இதே அளவுகோல்தான் பின்பற்றப்பட்டிருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டுவதன்று.

இதனையொட்டிய மற்றொரு நிகழ்வை மூன்றாம் ராசராசனின் ஆறாம் ஆட்சியாண்டைய (கிபி 1222) கோயில் திருமலம் கல்வெட்டும் பதிந்திருக்கிறது.[4] கோயில் நிலங்களைப் பயிரிட்டு வந்தவர்கள், தாங்கள் தரவேண்டிய பங்கு மிகுதியாக இருந்ததால், மீண்டும் மறு ஆய்வு செய்து, அந்த அளவை மாற்றியமைக்க வேண்டினார்கள். இதனை ஏற்றுக்கொள்ளாத கோயில், இப்படி வேண்டிய உழவர்களிடமிருந்து நிலங்களை முதலில் திரும்ப எடுத்துக்கொண்டது. ஆயினும், உழுகுடியினரின் வேண்டுகோளைக் கோயில் முற்றிலுமாகப் புறக்கணித்துவிட முடியவில்லை.

**கோயில் உழுகுடிகளின் பங்களவு**

பிற நிலங்களைப் பயிரிட்டு வந்தவர்களைவிடக் கோயில் நிலங்களைப் பயன்படுத்தி வந்தவர்கள் தனித்தே பார்க்கப்பட்டார்கள் என்பதனை இரண்டாம் ராசாதிராசனின் பதினான்காம் ஆட்சியாண்டைச் சார்ந்த (கிபி 1177) திருக்குறுகாவூர், ஆச்சாள்புரம் ஆகிய இடங்களில் கிடைத்த இரண்டு கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன.[5] பல வகையான நிலங்களையும் உழுதுவந்தோர் பெறும் உற்பத்தியளவை இக்கல்வெட்டுகள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. வெள்ளான்பற்று, புறப்பற்று போன்ற நிலங்களில் ஐந்தில் இரண்டு பங்கும், குடிப்பற்றுக்கு மூன்றில் ஒரு பங்கும், முழு நீர் வாய்ப்புள்ள விளைநிலங்களுக்குச் 'செவ்வாரம்' என்ற பெயரில் இரண்டில் ஒரு பங்கும், விளைநிலங்களாக இருந்து விளைவிக்கப்படாமல் பாசிப்பயறு போன்றன பயிரிடப்பட்டால் செவ்வாரமும், பிற நிலங்களில் பயிரிடப்படும் பயறு வகைகளுக்கு வழக்கமான அளவும் உழுவோர்க்குக் கிடைக்கவேண்டும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆனால், கோயில் நிலங்களுக்கு மட்டும் இவ்வாறு வரையறுக்கப்பட்ட அளவு எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, நிலங்களின் தரத்துக்கேற்ப அளவு இறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், வரையறை எதுவுமின்றி, மேல்வாரம் அல்லது பங்களவு தரவேண்டிய நிலையில் கோயில்

நிலங்களைப் பயிரிட்டோர் இருந்தனர். மேலும், வரையறை ஏதுமில்லாததால், மேல்வாரத்தினை மிகுவிப்பதும் எளிதாக இருந்திருக்கவேண்டும். இதுவன்றி, கடமை என்ற வரியையும் நிலத்தினை உழுபவர்களே தரவேண்டியிருந்தது. இந்தக் கட்டுப் பாடுகளை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே நிலங்களில் பயிரிடவேண்டும் என்றும், இவற்றை ஏற்றுக்கொள்ளாதவர் கள் நிலங்களிலிருந்து வெளியேறி, இத்தகைய வரைமுறைகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வழிவிடவேண்டும் என்றும் உறுதி யான மொழிகளில் தெளிவான முடிவுகள் இங்கு மேற்கொள் ளப்பட்டிருக்கின்றன.

**உழுகுடிகளிடம் இறுக்கம்**

கோயில்கள் சூழ்நிலைகளுக்கேற்ப விட்டுக்கொடுத்தும் தட்டிப்பறித்தும் நிலவுடைமை நலன்களைக் காத்துவந்தாலும், இறுக்கமான வரைமுறைகள் தொடர்ந்து இருந்துவந்தன. கோயிலின் புனிதத்தன்மை என்னும் எளிதில் இணங்கக்கூடிய வழிமுறை, கோயில் நிலங்களின் உரிமை தொடர்பானவற்றிலும் உதவியது என்றே கொள்ளவேண்டும்.

தேவதான நிலத்துக்காக ஆண்டுக்கு ஒரு வேலிக்கு 8 கலம் என்ற அளவில் செலுத்தவேண்டியதைப் பல ஆண்டுகளாகக் கொடுக்க ஒருவர் மறுத்துவிட்டார். இதனால், தேவதானமான அந்த நிலம் திருநாமத்துக்காணியாக மாற்றப்பட்டது. நிலம் பறிக்கப்படுவதற்குப் பழைய உழுகுடியிடம் ஒப்புதலும் பெறப் பட்டு, உள்ளூராட்சி அதை ஏற்றுக்கொண்ட பின்னர், வேறு ஒருவருக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. தலைச்செங் காட்டிலுள்ள மூன்றாம் ராசராசனின் (கிபி 1222) கல்வெட்டுக் கூறும் இந்நிகழ்வு தனித்துவமானதாகும்.[6] தேவதானமாக இருக்கும்வரை, அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயை மட்டுமே கோயில் பெறுகிறது. ஆனால், திருநாமத்துக்காணியானவுடன், கோயில் அந்த நிலத்துக்கு முழு உரிமையையும் பெற்று விடுகிறது.[7]

கோயிலின் நிலவுடைமை நலன்களுக்காக இறைவன் பெயரில் நிலத்தை உரிமையாக்கியதும், இதை வைத்துப் பழைய உழுகுடியிடம் உரிமை மாற்றத்துக்கான ஒப்புதல் பெற்றதும் நடந்திருக்கிறது. இந்த ஆவணத்தின்படி, கோயிலுக்குத் தர வேண்டிய அளவு மிகக் குறைவாகவே இருக்கிறது. மேலும், வரி அல்லது குத்தகை மிகுதியால் கோயிலுக்கு நெல் தர இயலாத நிலை ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. நில உரிமை தொடர்பான சிக்கல் இருந்ததால்தான் நிலம் திருநாமத்துக் காணியாக எடுத்துக்கொள்ளப்பட்டதா என்ற நோக்கிலும் பார்க்கவேண்டியுள்ளது. தேவதானமாக இருந்த அந்த நிலம்



திருநாமத்துக்காணியாக மாற்றப்பட்டபோது, அதில் முன்னர் பயிரிட்டுவந்த பழைய உழுகுடியிடம் ஒப்புதல் பெறப்பட்டது என்பதுதான் ஆழ்ந்த பார்வைக்குரியதாகிறது.

**உழுகுடிகளுக்கிருந்த தலையீட்டுரிமை**

தேவதானம், திருநாமத்துக்காணி என எப்பிரிவில் இருந் தாலும், இங்கு முன்னர் பயிரிட்டுவந்த பழைய உழுகுடிக்கு ஏதாவதொரு வகையில் தலையீட்டுரிமை (*locus standi*) என்று கூறத்தக்க அளவில் அடிப்படைப் பயிரிடும் உரிமை ஏதாவது இருந்துள்ளதாகவே தெரிகிறது. இது பெரும்பாலும், நிலத் தைப் பண்படுத்திப் புதிதாக உற்பத்திக்குக் கொண்டுவந்தவர் களின் தலைமுறையினர், தொடர்ந்து பயிரிட்டுக்கொண்டிருந்த வழிமுறை உரிமையாகத்தான் இருக்கமுடியும். அரச இல்லத் தினர், அதிகாரிகள், கோயில்கள், வேளாளர், பிராமணர் எனப் பல்வேறு பகுதியினர் நிலங்களைக் கைக்கொள்ளுமுன் நிலங் கள் பெரிதும் இத்தகைய உழுவோரிடமே இருந்துவந்தன. அதனால்தான், இங்கு முன்னர் பயிரிட்டு வந்த பழைய உழுகுடி யிடம் ஏதோ ஒரு நிலையில் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது போலும்!

பிற ஆவணங்கள் தரும் விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்கு நிலத்தின் பங்களவு மிகக் குறைவாக இருந்திருப்பதுகூட இதனால்தானோ என்னவோ? இப்படிக் குறைவாக இருக்கும் பங்களவைக்கூட–குத்தகையைக்கூட, நிலத்தைப் பயிரிட்டவர் கொடுக்க மறுத்திருக்கிறார் என்பதைத் தான், அவர் மேற்கொண்டிருந்த, அன்றைக்கு இயலக்கூடிய தான அறவழிப் போராட்ட வடிவமாகப் பார்க்கவேண்டி யுள்ளது. அத்துடன், பயிரிட்டு வந்தவரின், ஏதோ ஒரு வகை யிலான நில உரிமைப் பிடிப்பையும் இங்கு நாம் மிகத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. ஏனெனில், குத்தகைக்கு உழும் நிலத்தின் மீது இதுபோன்ற உணர்வு அடிப்படையிலான பிடிப்பு இருக்கப் பெரிதும் வாய்ப்புகளில்லை.

இங்கு இன்னுமொன்றையும் தெளிவுபடுத்திக்கொள்ளுதல் இன்றியமையாததாகிறது. தங்கள் நலன்களுக்காகப் பல சமூகக் கட்டுப்பாடுகளை உருவாக்கி வைத்திருந்த அன்றைய உடைமைப் பிரிவினர், தங்கள் நலன்களுக்குப் புறம்பான எதையும் ஏற்றுக்கொள்ள முன்வராதபோது, இத்தகைய போக்கை மட்டும் எப்படி ஏற்றுக்கொண்டிருக்கமுடியும்? நில உடைமைப் பிரிவினரின் கட்டுப்பாடுகளோ, சமூகக் கட்டமைப்போ, உற்பத்தி உறவுகளோ, ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்டதொரு காலத்தில் அனைத்துப் பகுதி களிலும் ஒரே அளவில், ஒரே வடிவில் நடைமுறைப்படுத்தப்

பட்டனவல்ல. பல்லாண்டு கால வாழ்க்கைப் போராட்டத்தின் விளைவுகளாகவே அவை தோன்றி, பல்வேறு வடிவங்கொண்டு, பல நிலைகளில் சூழல்களையொட்டி நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன; உற்பத்தி உறவுகளின் தன்மைகளுக்கேற்பவும் அவ்வப்போதைய தேவைகளையொட்டியும் அவற்றின் போக்கு களிலும் செயல்படுத்துதலிலும் வேண்டிய மாறுதல்கள் உருவெடுத்திருக்கும். இந்தப் படிமுறை வளர்ச்சி, குறிப்பிட்ட ஓர் இடத்தில் அல்லது ஒரு நிலையில் நின்றுவிடக்கூடியதன்று; தொடர்ந்துகொண்டேயிருப்பதாகும். இதுதான் சமூக வளர்ச்சி விதியின் அடிப்படையாகும். இத்தகைய வளர்ச்சிக் கட்டங் களின் ஒரு நிலையில் ஏற்பட்ட நிகழ்வையே தலைச்செங்காடு ஆவணம் எடுத்துரைக்கிறது.

**கோயிலிடம் நிலம் இழப்பு**

இங்குகூட, நிலத்தைப் பயிரிட்டு வந்தவர், பல்லாண்டு களாகக் குத்தகை தர மறுத்து நடத்திய அறப்போராட்டத்தில் தோல்வியுற்று, தனது நிலத்தினைக் கோயிலுக்கு முதலில் தேவதானமாகவும் பின்னர் திருநாமத்துக்காணியாகவும் தர வேண்டிய வற்புறுத்தலுக்குக் கட்டுப்படவேண்டியதாகிவிட் டது. அன்றைய சமூகக் கட்டமைப்பு, ஆதிக்கம் கொண்ட உடைமைப் பிரிவினரின் செயல்களுக்கே சார்பாக நின்றிருக் கிறது. ஆகவே, இங்கு இறுதி வெற்றி, கோயிலைக் கொண் டிருந்த உடைமைப் பிரிவினருக்குத்தான் கிடைத்திருக்கிறது என்பதிலும் ஐயமில்லை.

எப்படியும் கோயிலின் பெயரில் உழுகுடியினரின் உரிமை கள் பறிக்கப்பட்டிருப்பதை இந்நிகழ்வு முன்னிறுத்துகின்றது எனலாம். அதாவது, கோயிலைக் காட்டி நிலப்பறிப்பு நடத்தப் பட்டிருக்கிறது. இவ்வாறு, உண்மை உழைப்பில் ஈடுபட்டிருந் தவர்களிடமிருந்த நிலங்களைக் கையகப்படுத்தக் கோயிலும் அதன் மேம்பட்ட தன்மையும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இதனைத் தெளிவுபடுத்தும் வகையில், இரண்டாம் ஆதித்த னுடைய நான்காம் ஆட்சி ஆண்டுத் திரைமூர்க் கல்வெட்டு அமைந்திருக்கிறது.[8] கோயில் நிலங்களுக்காக ஆண்டுதோறும் 256 கலம் நெல்லுக்கு மாறாக, 160 கலம் நெல் மட்டுமே தரப் பட்டு வந்திருக்கிறது. கோயில் கணக்குகளைப் பார்வையிட வந்த மேலதிகாரிகள் இதைக் கண்டு கேட்டபோது, கோயில் நிலங்கள் குடிநீக்கா தேவதானமாக இருப்பதால்தான் குறை வாகத் தரப்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால், உரிய ஆவணங் களை ஆய்ந்தபோது அந்த நிலங்கள் தேவதான நிலங்களாகத் தான் பதிவு செய்யப்பட்டிருந்தனவேயன்றி, குடிநீக்காத் தேவ



தானமாக இருக்கவில்லை. இதனால், பயிரிடுவோர் மிகுதியான அளவான 256 கலம் நெல் தரவேண்டுமென முடிவு செய்யப் பட்டது.

இங்கு, பயிரிடுவோர் குடிநீக்கா தேவதானமாக உரிமை கொண்டாடியது தவறா அல்லது ஆவணப் பதிவுகள் உண்மைக்கு மாறாக உருவாக்கிக்கொள்ளப்பட்டனவா என்று தெளிவாகத் தெரியவில்லை. இருந்தாலும், இதிலிருந்து குடி நீக்கா தேவதானமாக இருப்பின் அத்தகைய குடிநீங்காத குடிகளுக்குச் சில சலுகைகள்–விட்டுக்கொடுத்தல்கள் இருந் திருக்கின்றன எனத் தெரிகின்றது. அவர்கள் பயிரிட்ட நிலத் துக்கு, குறைவாகவே மேல்வாரம் அல்லது குத்தகை பெறப்படும் வரைமுறை இருந்திருக்கவேண்டும். இது ஏன் என்பதுதான் பின்னணியினை விளக்குகின்றது. பல தலைமுறைகளாக உழுது வரும் தங்கள் நிலங்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்கப் பொதுவாக யாரும் முன்வந்திருக்கமாட்டார்கள். இருந்தாலும், அத்தகைய குடிகளிடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டு–பறிக்கப் பட்டுக் கோயில்களுக்கு வழங்கப்பட்டதாலேயே இவ்வாறான சில விட்டுக்கொடுத்தல்கள் விலக்காகத் தரப்பட்டிருக்கின்றன எனலாம். இல்லையெனில், வழக்கமாக மேல்வார அளவை மேலேற்றுவதிலேயே குறியாக இருக்கும் கோயில் அவையினர், குறைந்த அளவிலான பங்கைப் பெற்றிருக்கமாட்டார்கள். அதுவும் 256 கலத்தில் 96 கலத்தினை விட்டுக்கொடுப்பது என்பது எட்டில் மூன்று பங்களவுக்கு ஒப்பதாகும்.

இதைக் கோயில் அவையினர் விட்டுக்கொடுத்து வந்தார் கள் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இரண்டு தனியர் தொடர்பான சிக்கல் என்றால், வாய்மொழி உடன் பாடுகளை உறுதிசெய்ய இயலாத நிலையில், யார் சொல்வது உண்மை என்பது புலப்படாமலேயே போய்விடலாம். இங்கு, கோயில் தொடர்பான நிலங்களின் மேல்வாரப் பங்களவில்தான் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. இங்கு கூறப்படுவது, தேவதான நிலங்களாக இருப்பினும், குடிநீக்கா தேவதான நிலங் களாக இருப்பினும் உழுகுடியினர் தரவேண்டிய பங்களவை இறுதி செய்து, அதைப் பதிவும் செய்திருப்பார்கள். ஏனெனில், ஆண்டுதோறும் 256 கலம் நெல் என்று ஓர் அளவு குறிக்கப் பட்டுள்ளதால், பதிவு இல்லாமல் இத்தகைய அளவு தெரிந் திருக்காது. அதே வேளையில், தொடர்ந்து 160 களம் நெல் மட்டுமே பெற்றுவந்ததற்கும் ஏதோ ஒரு காரணி இருந்திருக்க வேண்டும். ஆனாலும், காலப்போக்கில் இத்தகைய சலுகை களும் சிறிதுசிறிதாகக் குறைக்கப்பட்டுப் பின்னர் பறிக்கப்பட் டிருக்கலாம்.

இங்குகூட, பயிரிடுவோரில் ஏதோ ஒருவர் மட்டுமே தனியாக நெல்லைக் குறைத்துக் கோயிலுக்குத் தந்துவிட வில்லை. பயிரிடும் குடிகளில் பலர் மேற்கொண்ட செயலாகவே இது தோன்றுகிறது. பலர் தொடர்புடையதாதலால், ஆவணம் பதிவு செய்யப்பட்ட முறையில்கூட ஏதாவது ஒளிவு மறைவுகள் இருந்திருக்கலாம். கல்வியறிவில்லாத குடிகள் ஏமாற்றப் பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும், ஏதாவதொரு வகையில், பல தலைமுறைகளாகப் பயிரிட்டுவந்த உழுகுடிகளிடமிருந்த சிறு அளவிலான நிலங்கள் அடுத்தடுத்துப் பறிக்கப்பட்டு, பெரும் நிலவுடைமையாளர்கள் அல்லது கோயில்களின் கைகளுக்குச் சென்றன. நில உடைமை முறையில் ஒரு வகை யான திடப்படுத்துதல்–வலுப்படுத்துதல் அக்காலகட்டத்தில் தொடர்ந்து நடந்தேறிக்கொண்டிருந்தது.

**கோயில் ஊழியர் தீப்புகுதல் – மறுஆய்வு**

இந்த இடத்தில் கோயில் நிலங்களின் உரிமைகளை நிலை நாட்டக் கோயில் ஊழியர்கள் சிலர் தீயில் புகுந்தும் வேறு வகையிலும் தங்களது உயிர்களைத் தாங்களே போக்கிக் கொண்ட நிகழ்வுகளையும் மறு ஆய்வு செய்யவேண்டியுள்ளது. இவர்கள் யாவரும் கோயிலில் பணியாற்றிய ஊழியர்களாகவே இருந்தார்கள் என்பதும், இவர்கள் இப்படி உயிர்களைப் போக்கிக்கொண்ட பின்னர் இவர்களது நினைவாக ஆங்காங்கே அறக்கொடைகள் அமைக்கப்பட்டிருப்பதும் தற்செயல் நிகழ்வுகளாகத் தெரியவில்லை.

மாயவரத்தையடுத்த புஞ்சையில் உள்ள இரண்டாம் ராசாதிராசனின் கிபி 1177ஆம் ஆண்டைய கல்வெட்டுக் கூறும் செய்தி இங்கு ஆய்வுக்குரியது.[9] கோயிலுக்கு உரித்தான தேவதான நிலமொன்றின் எல்லைக் கற்களை அகற்றிவிட்டு நான்கு பேர் அதனைப் பயன்படுத்திவந்தார்கள். இந்த நிலம் கோயிலுக்குத் தான் உரியது என்பதை அறங்காவலர்களும் ஊரில் உள்ள ஆண்டார்களும் மகேசுவரர்களும் உறுதிப்படுத்தி, நட்டுவைத்த எல்லைக் கற்களை அந்த நால்வரும் அகற்றிவிட்டது குறித்துக் குற்றம் சாட்டிய பின்னரும் சில திருச்சூலவேளைக்காரர்கள் தீப்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இவர் தம் நினைவாக இவர்களது உலோக உருவங்கள் நிறுவப்பட்டு, அவற்றுக்கு வழிபாடு நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. இதற்காகக் கோயில் நிலத்தினை முறையற்றுப் பயன்படுத்திய நால்வரிடமிருந்தே தண்டமும் பெறப்பட்டிருக் கிறது.

கிபி 1249ஆம் ஆண்டைச் சார்ந்த மூன்றாம் ராசேந்திரனது அன்பில் கல்வெட்டும் இதையொட்டிய விவரங்களையே



கொடுக்கின்றது.[10] ஆனால், இங்கு தனியாருக்கு மாறாகச் சபையே கோயில் நிலத்தைத் தவறாகப் பயன்படுத்திவந்ததையடுத்து, பழுதையாண்டார் என்பவர் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டார். அவர் நினைவைப் போற்ற அரை வேலி நிலம் கொடையாகக் கொடுக்கப்பட்டு, உணவு படைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

**நில உரிமையை நிலைநாட்டத் தீப்புகுதல்**

மேலோட்டமாகப் பார்க்கும்போது, அந்த நிலங்களில் கோயில்களுக்கிருந்த உரிமையை–உடைமையை நிலைநாட்ட இவர்கள் தங்கள் உயிர்களைப் போக்கிக்கொண்டார்கள் என்பதாகத் தெரிந்தாலும், இவர்கள் அந்த நிலங்களில் தங்களுக் கிருந்த உடைமை உரிமைகளையோ அல்லது பயிரிடும் உரிமை களையோ வெளிப்படுத்தவே இத்தகைய செயலில் ஈடுபட்டார்கள் என்பதாகத்தான் படுகிறது. கோயில் நிலத்தின் உடைமையைக் காட்ட–நிலைநாட்ட அந்தக் கோயிலில் பணியாற்றிய ஊழியர் கள் தங்கள் உயிரைப் போக்கிக்கொள்ளும் அளவுக்குச் செல்ல வேண்டியதில்லை.

கோயிலின் பொது அலுவல்களை மேற்பார்வையிட்டு வந்த அறங்காவலர் குழுவினர், கோயிலையொட்டிய வாழ் வினால் நடைமுறையில் முழுப் பயனையும் பெற்றுக்கொண்டு இறைமைப் பணிகளில் ஈடுபட்டிருந்த பிராமணர் போன்றோர், வரவு செலவுகளைப் பார்த்து வந்த கோயில் கணக்கர்கள், பொது மேலாண்மை கொண்டிருந்த நிலவுடைமைப் பகுதியின ரான உள்ளூர் அவையினர் எனப் பல உயர் மட்டங்களிலான பொறுப்பாளர்கள் இதில் தலையிட இருந்தபோதிலும், திருச்சூலவேளைக்காரர் போன்ற சமூக அடுக்கின் கடை நிலையில் இருந்தவர்கள் இடையில் புகுந்து கோயிலின் உடைமையை–உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளத் தங்கள் உயிரைப் போக்கிக்கொண்டார்கள் என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

இன்னும் சற்றுத் தெளிவாகவே சொல்லவேண்டுமென் றால், கோயிலின் அன்றாட அலுவல்களில் இந்தத் திருச்சூல வேளைக்காரர் போன்ற பணியாளருக்கு எத்தகைய பங்களிப் பும் இருக்கவில்லை என்பதுதான் உண்மை நிலை. அப்படி யிருக்கும்போது, கோயிலின் நிலம் தொடர்பான வரவு செலவு மேலாண்மையில் அவர்களுக்குப் பங்கு இருந்திருக்கும் என்ப தற்கான வாய்ப்புகளே இல்லை. எந்தக் கோயிலின் நலனுக்காக இத்தகையோர் தங்கள் உயிரை விட்டார்களோ, அந்தக் கோயிலில் வழிபடுவோராகவாவது, இந்தத் திருச்சூலவேளைக் காரர் போன்ற பணியாளரின் இல்லத்தினரோ, அவர்களது

உறவினரோ அல்லது அவர்களைச் சார்ந்தவரோ இருந்திருப் பார்களா என்பதுகூட ஐயம்தான். நிலவுடைமையாளரின் நிறுவனமான கோயிலில், நிலம் இல்லாதவருக்கு எந்த இடமும் இருந்திருக்காது என்பது மட்டுமல்ல, எத்தகைய ஈடுபாடும் இருந்திருக்க முடியாது. ஒரு வேளை, கோயில்களுக்குரியதாகக் கொள்ளப்பட்ட நிலங்கள் கோயில்களுக்கே கிடைத்திருந்தா லும், அவற்றின் பயன் எதுவும் இந்த திருச்சூலவேளைக்காரர் போன்றோரை எட்டியிருக்கப்போவதில்லை. அத்துடன், தங்கள் உயிரை மாய்த்துக்கொள்வதன்வழி அவர்கள் அடைந் திருக்கப்போகும் வேறு நன்மைகள் யாவை என்பதும் புலப்பட வில்லை. அல்லது, இதனால் அவர்கள் வெளிப்படுத்த எண்ணிய விழைவு யாது என்பதும் புரியவில்லை. இப்படியிருக்கும்போது, தங்களுக்கு எந்த வகையிலும் நேரடியாகவோ மறைமுக மாகவோ தொடர்பில்லாத கோயிலின் நில உரிமைச் சிக்கலுக் காகத் திருச்சூலவேளைக்காரர் போன்ற பணியாளர் தங்கள் உயிரையே முடித்துக்கொள்ள ஏன் முன்வரவேண்டும்?

கோயில் நிலங்களின் உரிமைகளை நிலைநாட்ட, திருச்சூல வேளைக்காரர் தீப்பாய்ந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டனர் என்றுதான் பதிவுகள் தெளிவாகக் கூறுகின்றன. கோயில் நிலங்களின் உரிமைகளைக் காக்கின்ற பூசலில் இவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது உயிரை இழந்தார்கள் என்று இருந்தால்கூட அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக் கலாம். ஏனெனில், கோயில் ஊழியர் என்ற வகையில், அவர்கள் கொண்டிருந்த பணியின் அடிப்படையில் கோயிலுக்கு உரிய நிலங்களைக் காக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் இருந்த தால், இது பொருத்தமான நிகழ்வாகவும் தெரியும். ஆனால், அவர்கள் நிலங்களைக் காக்கும் கடமையில் கொல்லப்பட வில்லை; மாறாக, தாங்களாகவே உயிரை விட்டிருக்கிறார்கள் என்பதுதான் நெருடலாக உள்ளது.

இங்கு உயிரை நீக்கிக்கொண்டவர்களுக்கு, முன்னர் குறிப்பிட்டவாறு, அந்தந்தக் கோயில் நிலங்களில் ஏதோவொரு வகையில் உரிமையோ, உறவோ, தொடர்போ அல்லது குறைந்தது பங்கு முறையோ ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும். அதுவும், உணர்வடிப்படையிலும் பயன்பாட்டு அடிப்படையிலும் ஆழமாக வேரூன்றிய பிடிப்பாகவே இது அமைந்திருக்கவேண்டும். மனித வாழ்வின் இறுதிநிலையான இறப்பையே உறுதியுடன் தழுவிக்கொள்ளத் தயாராகிவிட்ட தன்இழப்பு–துறப்பு–தியாகம் என்பது இதைத்தான் காட்டி நிற்கிறது.



**இரு வகை நில உறவுகள்**

நிலத்தைப் பொருத்தவரை, இரண்டு வகையான உறவுகள் தாம்–பிடிப்புகள்தாம் குறித்துக் கூறத்தக்கவாறு இருந்திருக்க முடியும். முதலாவது, நிலத்தின் உரிமையைப் பெற்று, அதைக் கைக்கொண்டிருப்பதுடன், முழுமையாகத் துய்த்தும் அனு பவித்தும் வருவதன் அடையாளமாக நடைமுறையில் அதில் பயிரிட்டு வருவதுமான உறவாகும். இந்த முதலாவதில் பல கூறுகள் உள்ளடங்கியிருக்கின்றன. வழிவழியாக (அல்லது விற்பனை வழியாக) நிலத்தின் உரிமையைப் பெற்றிருத்தல், அதைத் தன்னகத்தே கொண்டிருத்தல், அதனைத் தொடர்ந்து பயன்படுத்துமுகத்தான் பயிரிட்டு வருதல், அரசு அமைப்பு களுக்குத் தரவேண்டிய வரி போன்றனவன்றி வேறு வகையில் விளைவை முழுமையாக அடைதல், தமது தலைமுறை யினருக்குக் கையளிக்கின்ற நியாயமான வாய்ப்புப் பெற்றிருத் தல் என்பன அவற்றுள் அடிப்படையானவையாகும்.

இரண்டாவதாக, நிலத்தின் மேல் கொண்டுள்ள உறவு, அதனைப் பயிரிடுவதால் பெறுகின்ற தொடர்பு மட்டுமே. உடன்பாட்டின் வழியாகவோ, ஏற்பாட்டின் அமைவிலோ, இணக்கத்தின் பேரிலோ, குறிப்பிட்ட கால வரையறைகளுக்கு உள்பட்டு, நிலத்தில் பயிரிடக் கிடைப்பதாக, இந்தக் குத்தகை உறவு நடைமுறையில் இருக்கும். இதில் கிடைக்கும் நில உற்பத்தியை முழுமையாகத் துய்க்கும் வாய்ப்பு இருக்காது. நிலத்தை ஏதோவொரு வகையில் உடைமையாகக் கொண் டிருப்பவருக்கு, கிடைக்கின்ற உற்பத்தியில் ஒரு பங்கு தர வேண்டியிருந்ததே, அவருடைய சட்ட வகையிலான நில உரிமையை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடுகிறது. வேறு அளவி லான கேட்புரிமை எதுவும் அன்று இதில் இருக்கவில்லை.

இந்த இரண்டாவது வகையிலான உறவுக்காக, அதாவது குத்தகைக்குப் பயிரிட்டு வந்ததால் பெற்றிருந்த நிலத்தின் மீதான உறவுக்காக மட்டுமே திருச்சூலவேளைக்காரர் போன்ற பணி யாளர் தங்கள் உயிரையே கொடுத்திருக்கமாட்டார்கள். கோயில் நிலத்தில் பயிரிடும் உரிமை மட்டும் பறிபோயிருந்தால், அதைப் பெறுவதற்கு மாற்று வழிகளை நாடியிருப்பார்கள்; அல்லது வேறு நிலத்தைத் தேடியிருப்பார்கள். மாறாக, உயிர்விடும் இறுதி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டார்கள் என்பது உறுதி. ஆகவே, முதல் வகையினதான உணர்வு முறை உரிமை உறவுதான் அவர்களை இறப்புநிலைக்குக் கொண்டு சென்றிருக்கவேண்டும்.

அன்றைய கட்டத்தில், வழிவழியாகப் பல காலம் நிலங் களைப் பயிரிட்டுவந்த உழுகுடிகளிடமிருந்து, குடிநீக்கியும்

குடிநீக்காமலும் நிலங்கள் வலுவில் எடுக்கப்பட்டு–பறிக்கப் பட்டு ஆதிக்கம் கொண்ட அரச இல்லத்தினர், அதிகாரிகள், கோயில்கள், பிராமணர், வேளாளர் போன்ற பகுதியினருக்கு வழங்கப்பட்டுவந்தமை முன்னரே விவரிக்கப்பட்டுள்ளது. இதற்கொப்ப, மேலே காட்டப்பட்ட திருச்சூலவேளைக்காரர் போன்ற பணியாளர்கள் பயிரிட்டுவந்த நிலங்கள் பறிக்கப் பட்டுக் கோயில்களுக்குக் குடிநீக்கிய முறையிலோ, குடிநீக்கா முறையிலோ வழங்கப்பட்டிருக்கலாம். ஏதாவதொரு முறையில் இப்படி நிலங்களைக் கைக்கொண்டு கோயில்களுக்கு வழங்கிய பின்னர், அந்த நிலங்களில் முள்பு பயிரிட்டு வந்தவர் களைக் கோயிலில் திருச்சூலவேளைக்காரர் போன்ற பணிகளில் அமர்த்தியிருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

குடிநீக்கிய முறையில் நிலங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தால், அவர்கள் தொடர்ந்து அந்த நிலங்களைப் பயன் படுத்தியிருக்க இயலாது. ஆகவே, அவர்களுக்கு உரியவாறு வேறு ஊதியம்தான் வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

கோயில் ஊழியர்களுக்குக் கோயில் நிலங்கள் பயிரிட வழங்கப்பட்டிருக்கின்றன எனப் பல ஆவணங்கள் குறிப்பதைக் கொண்டு, இதை வேறு வகையிலும் பார்க்கலாம். நிலங்கள் குடிநீக்கா முறையில் எடுத்துக்கொள்ளப்பட்டுக் கோயில் களுக்குத் தரப்பட்டிருக்கும் நிலையில், அவர்கள் கோயில் ஊழியர்களாக அமர்த்தப்பட்டு, அதற்கு ஊதியமாகத் தொடர்ந்து அந்த நிலங்களில் பயிர் செய்யவும் வாய்ப்பளித் திருக்கலாம்.

### நில உரிமையை நிலைநாட்டத் தீப்புகுதல் ஒரு போராட்ட முறை

புஞ்சை, அன்பில் கல்வெட்டுகளிலோ அல்லது கிடைத் திருக்கின்ற இது போன்ற வேறு கல்வெட்டுகளிலோ இத்தகைய விரிவான விளக்கங்கள் இடம்பெறவில்லை. என்றாலும், கிடைத்திருக்கின்ற செய்திகள், நிகழ்வுகளை மிகத் தெளி வாகவே புரியவைத்துவிடுகின்றன என்று கூறுவது மிகையன்று. ஆனால், இங்கு கோயில் நிலங்களாகக் கூறப்படுபவை, முன்பு பயிரிட்டுவந்தவர்களின்–திருச்சூலவேளைக்காரர் போன்றவர் களின் கைகளில் இருக்கவில்லை என்பதும் அவர்கள் அந்நிலங் களில் பயிரிட்டுவரவில்லை என்பதும் தெரிகிறது. இதனால் இவை குடிநீக்கிய வகையினதாக இருக்கவும் வாய்ப்புகளுண்டு.

இந்த நிலையில், தங்களிடமிருந்து பெறப்பட்டு–பறிக்கப் பட்டுக் கோயிலுக்குக் கொடையளிக்கப்பட்ட நிலங்கள், கோயில்களின் பொறுப்பிலும் இல்லாமல், தங்கள் கட்டுப் பாட்டிலும் இல்லாமல், புஞ்சைக் கல்வெட்டில் உள்ளது போன்று தனிப்பட்ட நால்வர் பயிரிடுதலிலோ, அன்பில் கல்வெட்டில் காட்டப்பட்டது போன்று பிராமணர் சபையின் பயன்பாட்டிலோ இருந்ததை இவர்களால் ஏற்றுக்கொண் டிருக்க இயலாதுதான். இதனால்தான் இவர்கள் வெகுண் டெழுந்து, அந்தக் கோயில் நிலங்களின் மேல் தங்களுக்கிருந்த முழு உரிமைகளை அல்லது பயன்பாட்டு உரிமைகளை வேண்டியிருக்கிறார்கள். கோயில் நிலங்களின் மேல் தங்களுக் குள்ள உரிமையை நிலைநாட்டத் தீப்பாய்தல் என்பது ஒரு போராட்ட வடிவமாகவே இங்கு அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.



கோயிலுக்கென்று பறித்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் கோயிலுக்கும் போகாமல், தங்களுக்கும் பயன்படாமல், அவற்றைத் தனிப்பட்டவர்களோ, சபையோ தொடர்ந்து பயன் கொண்டிருந்தபோது, அந்த நிலங்கள் தங்களுக்கே திரும்பக் கிடைக்கவேண்டுமென்று அவர்கள் விழைந்ததிலும் வியப் பில்லை. ஆனால், அவர்கள் உயிரினை நீக்கிக்கொள்ளும் வரை இந்த நிலங்கள் அவர்களுக்கும் கிடைக்கவில்லை; கோயில் களையும் சென்றடையவில்லை. இதைத்தான் கூர்ந்து பார்க்க வேண்டும். அவர்கள் உயிர் நீத்த பிறகுதான் கோயில்களின் பொறுப்பில் அந்நிலங்கள் வந்திருக்கின்றன.

### தீப்புகுந்தாருக்குச் செப்புத்திருமேனி ஏன்?

இத்தகைய நிலை, சிலரின் உயிரைப் பறிக்குமளவுக்குச் சென்றுவிட்டதால், எதிர்வினைகளை எதிர்நோக்காமல் இருக்க முடியாது. இது போன்று நிலங்களைப் பறிகொடுத்த பலர் இவர்களைத் தொடர்ந்து உயிர்விட முன்வரலாம்; அல்லது தங்களுடைய நில உரிமைகளை நிலைநாட்டவும் முற்படலாம். அதனால்தான், அவர்களது நினைவுகளைப் போற்றும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தந்தக் கோயில்களிலேயே அவர்களது திருமேனிகள் நிறுவப்பட்டு வழிபாடுகளுக்கும் சாற்றுதல்களுக்கும் வாய்ப்புகளேற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவை அறச்செயல்களாகவே நிலைநிறுத்தப் பட்டமையும் நடந்திருக்கிறது.

நிலவுடைமையாளர்கள் வலுவுடன் இருந்த அன்றைய சூழலில், திருச்சூலவேளைக்காரர் போன்றவர்களின் உரிமை களையும் உணர்வுகளையும் மதித்து, இது போன்ற திருமேனி களாக நிறுத்தவேண்டிய இன்றியமையாமை யாது? அதுவும், எந்தப் பிரிவினர் அந்தக் கோயில் வழிபாடுகளில்கூட நாட்டம் கொண்டவர்களாக இருந்திருக்கமாட்டார்கள் என்று எண்ணப்படுகிறதோ, அதே பிரிவினரைச் சார்ந்தோரின்

திருமேனிகள், அதே கோயிலில் நிறுவப்படவேண்டிய அளவுக்கு நிலைமைகள் கடுமையாக இருந்திருக்குமா?

பொதுவாக, உயிரை விடுதல் என்பது மிக உச்சமான துறத்தலாகும். அத்தகைய முழுமையான துறத்தலை மேற்கொண்டமையே அதற்குக் காரணியாக இருந்த பின்னணியின் நியாயத் தன்மையை எடுத்துக்காட்டுவதாக அமையும். இது போன்ற எதிர்ப்புகளால், பெரும் சமூகக் கொந்தளிப்பு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில் நிலவுடைமையாளர்கள் செயல்பட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. அதே போன்று, தாங்கள் உண்மையாகவும் முறையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்வதாகக் காட்டிக்கொள்ள முயற்சித்திருப்பார்கள் என்றும் கூறிவிடமுடியாது. மாறாக, கோயிலுக்கான செயல்பாடுகளில் இப்படி ஏற்படுகின்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைக்கூடத் தாங்கள் புறக்கணித்துவிடவில்லை என்று காட்டிக்கொள்ள நினைத்திருக்கலாம். இதனால், கோயில் நலனுக்காக நில உரிமைகளை விட்டுக்கொடுத்து, உயிரும் துறந்து, கோயிலிலேயே திருமேனிகளாக ஆக்கப்பட்டதனால், அவர்களது உரிமை இழப்பும் உயிர் துறப்பும் இறைவன் இல்லத்தில் இடம்பெறச்செய்துவிட்டது என்று காட்ட முனைந்திருக்கலாம். இதனால், கோயிலுக்காக அல்லது பொது நலனுக்காக—அதாவது மறைமுகமாக நிலவுடைமையாளர் நலனுக்காக, நில உரிமைகளை இழப்பது, இறைவனுக்கு இணையான இடத்திற்கு இட்டுச்செல்லும் என்ற உள்கருத்தை உலவவிடப் பயன்பட்டிருக்கலாம்.

உடைமைப் பிரிவினரின் வழிபாட்டு முறைகளில் ஈடுபாடு இல்லையெனினும், தங்களது குடிகளைக் காக்க உயிர்விட்டவர்களின் உருவங்களை வீரக்கற்களாக, நடுகற்களாக நிறுத்தியிருக்கக்கூடிய பண்பாட்டு வரலாற்றைக்கொண்ட மக்கள் திரளில், கோயிலில் திருமேனிகளாக நிறுவப்படும் நிலை, உடைமையற்ற பிரிவினராலும்கூட உயர்வாகவும் பெருமையாகவும் கொள்ளப்பட்டிருக்கும் என்பதில் வியப்பில்லை. மேலும், கொலையுண்ட அல்லது தற்கொலை செய்துகொண்டவர்களின் உருவங்களைக் கடவுளர்களாக ஏற்று வழிபடும் வழமை, அன்றைய உடைமையற்ற பிரிவினரிடம்—அடிநிலை மக்களிடம் இருந்துவந்திருக்கிறது. இந்த உணர்வுகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இதனால் அவர்களது நம்பிக்கையைப் பெறுவது எளிதாகும் என்றுகூடக் கனவு கண்டிருக்கலாம்.

வழிமுறையாகப் பயிரிட்டு வந்தவர்களிடமிருந்து நிலங்களைத் தட்டிப்பறிக்க இத்தகைய அணுகுமுறைகள் உதவியாக இருந்திருக்கும். திருச்சூலவேளைக்காரர் போன்றவர்களின்



உயிர் துறப்பால், நிலவுடைமையாளர்கள் அஞ்சித் தங்கள் நிலையிலிருந்து இறங்கிவந்துவிட்டார்கள் என்றோ அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது என்றோ அவர்களின் அன்றைய நிலையைக் குறைத்தும் எண்ணிவிடக்கூடாது. நிலப் பறிப்பு முனைப்புகளின், நிலவுடைமை நலன்களைப் பேணுவதன் ஒரு பகுதியாகவே இவற்றையெல்லாம் நோக்க வேண்டும். பல முயற்சிகளில் இதுவும் ஒன்று; பல சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. அவ்வளவுதான்.

கோயில்களுக்காகத் தங்கள் நிலங்களை இழந்தவர்கள்—அது நிலவுரிமையாகவும் இருக்கலாம், பயிரிடும் உரிமையாகவும் இருக்கலாம்—பலரும் இத்தகைய செயல்களில் இறங்கிவிடக்கூடாது என்பதாலேயே எச்சரிக்கையுடனான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன எனலாம். நில உரிமையை இழந்த எளியவர்கள்கூட, திருமேனிகளாக ஏற்றம் பெற்றுக் கோயில்களிலேயே குடிபுக முடிந்திருப்பதற்கு இதுதான் அடிப்படையாகும். நிலவுடைமையாளர்கள் மீதான நல்லெண்ணங்கள் மட்டுமன்றி, கோயில்களின் மேலான நம்பிக்கைகளும் தளர்ந்துவிடக்கூடாது என்பதற்கான முயற்சிகளே இவை என்பதை மறுத்துவிட முடியாது.

**நிலவுடைமைப் பண்புகள் மாறவில்லை**

மேலே காட்டப்பட்ட புஞ்சைக் கல்வெட்டில் கிடாரங்கொண்ட சோழநல்லூர் என்ற வேளாளர்களது ஊரும், அன்பில் கல்வெட்டில் பெருங்குறி மகாசபை என்ற பிராமணர்களது சபையும் காட்டப்படுவதிலிருந்து, நிலவுடைமையாளர் எப்பிரிவினராக இருந்தாலும், செயல்பாடுகளில் பெருத்த வேறுபாடுகள் இருக்கவில்லை என்பது புலப்படுகிறது. வேளாளர்களது ஊரில் நான்கு தனிப்பட்டவர்கள் குறிப்பிட்ட நிலத்தைப் பயிரிட்டு வந்ததை ஊரார் கண்டித்துக்கொண்டிருந்தார்களேயன்றிக் கடுமையாக நடந்துகொள்ளவேயில்லை; அந்த நிலத்திற்கான எல்லைக்கற்களை மீண்டும் வைக்கவோ நிலத்தினைக் கைப்பற்றவோ எத்தகைய முயற்சியும் மேற்கொள்ளவில்லை. 'கற்றறிந்த' பிராமணர்களது குடியிருப்பிலோ, அந்தச் சபையினர் எல்லோருமாகக் கூட்டுச் சேர்ந்து கோயில் நிலத்தைக் கொள்ளை கொண்டிருந்தார்களேயன்றி, 'தர்ம'த்தை நிலைநாட்ட யாருமே முன்வரவில்லை. வேளாளர்களது ஊரில் தனிப்பட்ட சிலரின் கயமை, 'சதுர் வேதம் ஓதிய' பிராமணர்களது ஊரிலே அனைவரும் ஒன்று சேர்ந்த கயமை; இது மட்டுமே இரு பிரிவினருக்குமான வேறுபாடு போலும்.

செங்கற்பட்டு மாவட்டம் வாயலூரில் கிடைத்திருக்கின்ற சடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியனின் எட்டாம் ஆட்சி

யாண்டுக் கல்வெட்டு (கிபி 1259), வாயலூர் என்ற ஊர் மக்கள், கோயிலுக்கு உரிமையுள்ள நிலங்களை விலைக்கு வாங்குவதோ, ஒற்றி வைப்பதோ (அடமானம் வைப்பதோ) கூடாது என்று தங்களுக்குள் முடிவு செய்துகொண்டதைக் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.[11] இக்கல்வெட்டு பாண்டியர் ஆட்சியில் பதியப்பட்டது என்றாலும் சோழப் பேரரசு வீழ்ச்சி யடைதற்கு (கிபி 1279) முன்னையது என்பதால் அக்காலப் பகுதியின் நிலைமைகளை அறியத் துணையாக அமைந்திருக் கிறது. கோயில் உடைமைகள், புனிதத் தன்மை கொண்டன வாகக் கொள்ளப்பட்டதால், அவற்றுக்கு எத்தகைய தீங்கும் நேரிடக்கூடாது என்ற எண்ணம் வேரூன்றியிருந்தது அல்லது அத்தகைய உணர்வு ஊட்டப்பட்டது.

மூன்றாம் ராசராசனின் 17ஆம் ஆட்சியாண்டைய (கிபி 1233) திருமெய்ஞானம் கல்வெட்டுத் தரும் விவரங்களும் இங்கு நோக்கத்தக்கன.[12] ஊருக்கோ, ஊரில் உள்ள திருமயானம் கோயிலுக்கோ அல்லது இது போன்ற அமைப்புகளுக்கோ எதிராக மக்கள் எச்செயலும் செய்யக்கூடாது என்றும் அப்படிச் செய்தால் ‘கிராமதுரோகி’யாகக் கொள்ளப்பட்டு அவர்கள் தொல்லைகளுக்குட்படுவர் என்றும் அத்தகை யோருக்குக் கோயிலில் கிடைக்கின்ற பல உரிமைகள் மறுக்கப் படும் என்றும் நாலூர் என்ற ஊரில் உள்ள அவையினர் முடிவெடுத்திருக்கின்றனர். கோயில் உடைமைகளைக் காத்தற் கான முயற்சியாகவே இதை எடுத்துக்கொள்ளவேண்டும். கோயிலுக்கும் ஊரில் உள்ள நிலவுடைமையாளர்களுக்கும் சேரவேண்டிய நில உற்பத்தியின் பங்கு, முறைப்படி தரப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலே இத்தகைய முடிவாகவும் இருந்திருக்கலாம். நிலவுரிமையாளர்களையோ கோயில் களையோ எதிர்த்தோர் சிவதுரோகி, ராசதுரோகி என்றில் லாமல் கிராமதுரோகியாகவும் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

மக்களைத் தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க உடைமையாளர்கள் மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாக இருந்திருக்கவேண்டும். கோயிலின் பெயரால் போடப்படும் கட்டுப்பாடுகள் இறைமைத் தன்மை பெற்று விடுவதால், நடைமுறைப்படுத்துதலும் எளிதாக இருந்திருக்க லாம்.

கோயில்கள் அமைந்திருந்த இடங்களில், அவற்றை மையப்படுத்தி, அன்றைய உற்பத்தியின் அடிப்படையான நிலங்கள் கோயில்களுக்கு உரிமையுடையனவாக இருந்தன. இத்தகைய கோயில் என்ற நிலவுடைமை நிறுவன அமைப்பு எவ்வகையிலும் சிதைவுறக்கூடாது–எல்லா வகையிலும் வலுப் பெறவேண்டும் என்ற நோக்கோடு அனைத்து முயற்சிகளும்



எடுக்கப்பட்டன என்பதையே மேலே காட்டப்பட்ட செய்தி கள் யாவும் உறுதிப்படுத்துகின்றன.

இவற்றுக்கு அரசு எந்திரமும் பயன்பட்டது. இதனால், நிலவுடைமை அமைப்பின் சார்பில் ஆட்சியிலிருந்த அரசன் நிலவுடைமை நிறுவனமான கோயிலின் செயல்பாடுகள், பணிகள், உற்பத்தி, உற்பத்திப் பங்கீடு என்று அனைத்தையும் முறைப்படுத்தி ஒழுங்கு செய்ய எடுத்த நடவடிக்கைகளும் செய்த மேற்பார்வைகளும் நடத்திய விசாரணைகளும் விதித்த கட்டுப் பாடுகளும் பிறப்பித்த ஆணைகளும் இயற்கையான செயல் களேயாகும்.

நில உற்பத்திமுறை மேலோங்கி நின்ற ஓர் அமைப்பில், அந்த உற்பத்திக்கு அடித்தளமாக அமைந்திருந்த நிலம் என்னும் கருவியினைத் தன்னகத்தே கொண்டிருந்த உடைமையாளர் களின் நலன்களை முன்னிறுத்தவேண்டிய பொறுப்பையும் கடமையையுமே அதற்கென உருவாக்கிவைக்கப்பட்டிருந்த ஆட்சி அமைப்பு செயல்படுத்த வேண்டியிருந்திருக்கும். கோயிலை முன்னிறுத்திச் செய்யப்பட்ட அனைத்து வகையான ஆட்சியமைப்பு நடைமுறைகளும், நிலவுடைமையாளர்களின் நலன்களை நிலைநாட்டுவதன் பகுதியாகவே அன்றைய கால கட்டித்தில் அமைந்திருந்தமையை நாம் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிகிறது.

## இயல் 7

# நிலவுடைமையாளர் பொறுப்பில் கோயில்

கோயிலின் உடைமைகளைப் பேணுகின்ற பொறுப்பில் இருந்தவர்கள்கூட நிலம் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்ற நிலை இருந்தது. நிலவுடைமைப் பகுதியினரின் நிறுவன மாகவே உருப்பெற்றிருந்த கோயில்களில், அவர்களுக்கென்று அவர்களாலேயே உருவாக்கிக்கொண்டிருந்த கோயில்களில் இத்தகையதொரு நிலை இருந்தது வியப்புக்குரியதன்று; மிக இயல்பானதேயாம்.

முதலாம் ராசராசனின் 29ஆம் ஆட்சி ஆண்டைய (கிபி 1014) தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் பண்டாரிகள், பரிசாரகர்கள், கணக்கெழுதுவோர் போன்ற பணியிடங்களுக்கான தகுதிகள் கீழ்வருமாறு குறிக்கப்பெறு கின்றன:[1]

> ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குச் சோழ மண்டலத்தும் பாண்டி நாடான ராஜராஜ மண்டலத்தும் தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழ மண்டலத்தும் பிரம்ம தேயங்களிலாரே அவ்வவ பிரம்மதேயங்களில் பூமி சம்பத்தும் பந்து சம்பத்தும் அர்த்த சம்பத்தும் உடைய ராயிருப்பாரை ஸ்ரீபண்டாரஞ் செய்ய பிராமணரையும் திருப்பரிகாரகஞ் செய்ய மாணிகளையும் கணக்கெழுத கரணத்தார்களையும் சந்திராதித்தவல் இடக்கடவார் களாக உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந் தருள

நில உரிமை கொண்ட பிராமணர்களே கோயில் பண்டாரிகள் பொறுப்பில் இருக்க முடியும் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. இதேபோன்று, கோயில்களில் இறைமைப் பணி களிலும் வேறு சில பணிகளிலும் ஈடுபட்டிருந்த பிராமணர்கள் பலரும், ஏதாவதொரு வகையில் நில உரிமை கொண்டவர் களாகவோ அல்லது நில உற்பத்தி விளையில் பங்கு பெற்றவர் களாகவோதான் இருந்தார்கள்.

சபை, வாரியம் போன்ற உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர் களுக்குத் தகுதிகளும் கட்டுப்பாடுகளும் வரையறுக்கப்பட்



டிருந்தன. இவற்றை, மடல் வழியான ஆணையாக முதல் பராந்தகன் வெளியிட்டதை உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இதனை இங்கு ஒப்பிட்டு நோக்குவது இன்றியமை யாததாகும்:[2]

> கானிலத்துக்கு மேல் இறைநிலம் உடையான் தன்
> மனையிலே அ
> கம் எடுத்துக்கொண்டு இருப்பானை

மட்டுமே வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று இந்த ஆணை குறிப்பிடுகின்றது. இது முதல் பராந்தகனின் 12ஆம் ஆட்சியாண்டில் (கிபி 919) வெளியிடப் பட்ட ஆணையாகும். மீண்டும் 14ஆம் ஆட்சியாண்டில் (கிபி 921) மற்றோர் ஆணையினை முதல் பராந்தகன் வெளியிட் டான்:[3]

> கானிலத்துக்கு மேல் இறைநிலமுடையான் தன் மனை யிலே அகம் எடுத்துக் கொண்டிருப்பானை எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் மந்த்ரப் பிராமணம் வல்லான் ஓதுவித்து அறிவானை குடவோலை இடுவதாகவும் அரைக்காநிலமேயுடையா னாயினும் ஒரு வேதம் வல்லனாய் நாலு பாஷ்யத்திலும் ஒருபா
> ஷ்யம் வக்காணித்தறிவான் அவனையுங் குடவோலை எழுதிப்புக இடுவதாகவும்

என இந்த ஆணை கூறுகிறது. இவ்விரண்டு ஆணைகளிலும் உள்ளாட்சி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற அடிப் படைத் தகுதிகளில் ஒன்றாக–இன்றியமையாத் தேவைகளில் ஒன்றாக நிலம் உடையாராக இருக்கவேண்டும், உரிமை இடத்தில் இல்லம் அமைத்துக்கொண்டவராக இருக்கவேண்டும் என்பன வலியுறுத்தப்பட்டுள்ளன.

அரசனது ஆணைக்கேற்பவே சபை இந்த முடிவுகளை மேற்கொண்டதாக இந்த இரண்டு கல்வெட்டுக்களும் தெளிவாகக் குறிக்கின்றன:

> இப்பரிசேயிவ்வாண்டு முதல் சந்த்ராதித்தவத் என்றும் குடவோலை வாரியமேய் இடுவதாக தேவேந்த்ரன் சக்ரவர்த்தி ஸ்ரீவீரநாராயணன் ஸ்ரீபராந்தகதேவராகிய பரகேசரிவர்மர் ஸ்ரீமுகம் அருளிச்செய்து வரக்காட்ட
> ஸ்ரீஆஞ்ஞையினால் தத்தனூர் மூவேந்தவேளானு டனிருக்க நம் கிராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்

திடுவாராக வியவஸ்தை செய்தோம் உத்ரமேரு சதுர்வேதி மங்கலத்து சபையோம்

என்று கிபி 919 ஆம் ஆண்டைய கல்வெட்டும்,

ஸ்ரீபரகேசரிபன்மர்கள் ஸ்ரீமுகம் அருளிச் செய்து வரக் காட்ட ஸ்ரீ ஆஜ்ஞையால்

என்று கிபி 921ஆம் ஆண்டின் கல்வெட்டும், இறுதியில் சுட்டுகின்றன.

**அனைவரும் நிலவுடைமையாளர்களே**

உள்ளாட்சி அமைப்புகளாக இருந்தாலும், நிலவுரிமை கொண்டவர்களின் கட்டுப்பாட்டிலேயே அவை இருந்தன. அன்றைய ஆட்சி நிறுவனங்கள் யாவும் நிலவுடைமை நலன் களையே சார்ந்திருந்ததால்–நில உற்பத்தி, நீர் மேலாண்மை போன்ற பணிகளையே நிறைவேற்றி வந்ததால் இத்தகைய நிலை புகுத்தப்பட்டது.

ஏரி குளங்கள் பெரும்பான்மையாக ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையில், நீர்ப்பாசன முறை பரவலாக்கப்பட்ட பின்னணி யில், வேளாண் உற்பத்தி விரிவாக்கப்பட்ட காலகட்டத்தில் ஊர், சபை, வாரியம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும் கோயில் பணியாளர்கள் சிலருக்கும் தகுதி வரையறுக்கப் பட்டதும், அவர்களுக்கு நிலவுரிமை கொண்டிருந்ததே அடிப் படைத் தேவையாக்கப்பட்டிருந்ததும் ஆழ்ந்த ஆய்வுக்குரியன வாகும்.

இதேபோன்று, ஊர்ப் பொருளியத்தோடும் நில உற்பத்தி யோடும் நேரிடையான உறவுகொண்டிருந்த கோயில்களை மேலாண்மை செய்யும் அவையினரும் நிலவுடைமைப் பகுதி யினராகவே இருந்திருக்கமுடியும் என்பதில் யாதொரு ஐயமு மில்லை. பெருமளவு நிலவுரிமை கொண்ட கோயில் பணிகளை, நிலவுடைமை கொண்டவர்கள் மட்டுமே பொறுப்பேற்று நிறைவேற்றினார்கள் என்பதற்கான சான்றுகளும் இவர்களின் பெயர்களைக் கொண்டு அறியத்தக்க வகையில் கல்வெட்டு களில் மிகுந்து காணக் கிடைக்கின்றன.

அத்துடன், கோயில் அதிகாரிகளும் நிலவுடைமைப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். கோயில்களை மேற்பார்வையிட வந்த மேலதிகாரிகளும் அரசனுக்கடுத்த அதிகாரம் கொண்ட ‘பெருந்தரம்’ போன்ற அதிகாரிகளும் பெருமளவில் நிலம் கொண்டிருந்த வேளாள நிலவுடைமை யாளர்களாகவே இருந்தார்கள். இதனை, நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களில் இவர்களது பெயர்களுடன் மூவேந்த



வேளான், நாடாள்வான் போன்ற பட்டங்களும் சேர்த்துப் பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்து அறியலாம்.[4] மூவேந்த வேளான் பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலானோர், நிலங் களை உரிமையாகக் கொண்டவர்களைக் குறிக்கும் உடையான், கிழான், கிழவன் என்பன போன்ற பட்டங்களையும் சேர்த்துப் பெற்றிருந்தார்கள் என்பது இதனை மேலும் உறுதிப்படுத்து கின்றது.[5]

**உடையார் – நிலம் உடையார்**

உடையான் என்ற சொல் உடைமைப் பொருளைச் சுட்டி னாலும், நிலம் உடையவன் என்ற அளவிலேயே கல்வெட்டுக் களில் நிலவுரிமையாளரின் ஊரோடும் பெயரோடும் இணைந்து பயின்றுவருகிறது. வீரராசேந்திரனது கிபி 1065இல் பதியப் பட்ட குன்னத்தூர்க் கல்வெட்டு, ஒரு கிராமத்தை சீவிதமாகப் பயன்கொண்டு வந்தவனை ‘உழந்தை உடையான் வடுகநாதன்’ என்று குறிப்பிடுகிறது.[6] இங்கு உடையான் என்ற சொல் நிலம் உடையவன் என்ற பொருளிலேயே வரக் காண்கிறோம். சில கல்வெட்டுக்கள், “காணி உடைய சுத்தமலன் செயங்கொண்ட சோழ வன்னாட்டுடையானேன்” (முதல் குலோத்துங்கன், கிபி 1099),[7] “காணி உடைய சுருதிமான் ஊரன் நம்பியான விரமேதாவிப் பேரையன்” (மூன்றாம் ராசராசன், கிபி 1232)[8] என்பன போன்று வெளிப்படையாகவே உடையான் என்ற சொல், காணியை உரிமையாகக் கொண்டவர்களையே குறிப் பதைத் தெளிவுபடுத்துகின்றன.

கோயில்களில் குடிகொண்டிருக்கும் தெய்வங்களும் உடையார் என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்றிருந்தமையையும் அக்காலத்திய கல்வெட்டுக்களில் காணலாம்.

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்குடுத்த

என்று முதலாம் ராசராசனின் (கிபி 1014) தஞ்சைக் கல்வெட்டும்,[9]

வாலிகண்டபுரத்து உடையார் திருவாலீச்வரமுடைய நாயனாற்கு

என்று முதலாம் குலோத்துங்கனின் (கிபி 1090) வாலிகண்டபுரம் கல்வெட்டும்,[10]

இவ்வூரில் எழுந்தருளிவித்த உடையார் அழகிய சொக்க னாயநாற்கும் தம்பிராட்டியாற்கும் பூசைக்கும் திருப் பணிக்கும்

என்று மூன்றாம் ராசராசனின் (கிபி 1242) பெரிய கொருக்கைக் கல்வெட்டும்[11] குறிப்பிடுகின்றன.

அரசர்களும் தங்களை ‘உடையார்’ என்ற சிறப்புப் பெயராலேயே அழைத்துக்கொண்டமை நிலவுடைமை அமைப்பு வலுவடைந்து, நிலவுடைமைப் பகுதியின் தலைவனாக–முதல்வனாக மன்னர்கள் விளங்கியதை உறுதிப்படுத்துகின்றன. முதலாம் ராசராசன் காலத்தில் தொடங்கி, முதல் குலோத்துங்கன் ஈறாக அரசாண்ட அனைத்து அரசர்களும் ‘உடையார்’ என்ற மொழியைப் பெயருக்கு முன்னர் பயன்படுத்தியுள்ளனர். முதல் குலோத்துங்கன் தன்னைச் சில கல்வெட்டுக்களில் ‘திரிபுவனச் சக்கரவர்த்தி’ என்று கூறிக்கொண்டதையடுத்து அவனுக்குப் பின்னர் அரசாண்டவர்களும் இதனையே பின்பற்றினர். அத்துடன், உடையார் என்ற அடைமொழியையும் அவர்கள் தொடர்ந்தனர்.

சோழர் ஆட்சியில் நிலவுடைமையாளர்களே சிறப்பிடம் பெற்றிருந்தனர். இரண்டாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் ஒரு வேளாளன் மரண தண்டனை பெறக்கூடிய தவற்றைச் செய்துவிட்டான். அவனுக்குத் தரவேண்டிய தண்டனை குறித்துக் கோயில் பட்டரிடம் அரசன் ஆலோசனை கேட்டபோது, வேளாளனுக்கு மரண தண்டனை தருதல் கூடாது என்று கூறியதை அறிகிறோம்.[12]

இங்கு, செய்த குற்றத்துக்கு என்ன தண்டனை என்பதை விட, நிலஉடைமையாளர்களுக்கு எத்தகைய தண்டனை தரப் படக்கூடாது அல்லது தரப்படவேண்டும் என்ற பார்வை யிலேயே நோக்கப்பட்டிருக்கிறது என்பதை மனங்கொளல் வேண்டும்.

இதே போன்று, வேளாளரையும் பிராமணரையும் கோயிலையும் எதிர்த்துக் கலகம் செய்தமைக்காக, மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் (கிபி 1208) இருவருக்கு ஆயிரம் காசு தண்டமிடப்பட்டது. யாரும் இவர்களுக்கு உதவ முன்வராத தால் இவர்களுடைய நிலம் கோயிலுக்கு 1060 காசுகளுக்கு விற்கப்பட்டு, தண்டம் 1000 காசுகளுடன், எஞ்சிய 60 காசுகளும் தண்டத்தைச் செலுத்தத் தவறியதற்கான அபராதமாக எடுத்துக் கொள்ளப்பட்டன.[13] இதனைத் தொடர்ந்து வேளாளர், பிராமணர், கோயில்களை எதிர்த்துக் கலகம் செய்வோருக்கு இருபது ஆயிரம் காசுகள் வரை தண்டம் போடப்படும் என்ற ஆணையும் அரசனால் பிறப்பிக்கப்பட்டது. சோழர் காலத்தில் கோயில்களை மட்டுமின்றி, உயர் வேளாளர், பிராமணர்களைப் போல உழுவித்து உண்ணும் நிலவுடைமையாளர்களாக இருந்த அனைவரையும் பாதுகாக்கும் காவலராக மன்னர்கள் இருந் தனர் என்பதை மூன்றாம் குலோத்துங்கனின் ஆணை உறுதிப் படுத்துகிறது.



> அரசு என்பது உடைமை வர்க்கத்தின் அமைப்பு, உடைமையமைப்பு வர்க்கத்திடமிருந்து அதனைப் பாது காக்கவே அது செயல்படுகிறது

என்று பிரடெரிக் எங்கெல்ஸ் குறிப்பது இங்கு மிகவும் பொருந்துவதைக் காணலாம்.[14]

**மன்னரையும் இறையாக்குதல்**

இதனைச் செம்மையாகச் செயல்படுத்த, சோழ அரசர் களை மக்களுக்கு அப்பாற்பட்ட இறை அவதாரங்களாக்கி யிருந்த நிலையையும் காண்கிறோம். சோழ மன்னர்கள், திருமால் அவதாரமாகவே போற்றப்பட்டனர் என்று கருதும் பேராசிரியர் பேரறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:[15]

> பண்டைக்காலத் தமிழ் மக்கள் அரசர்களைக் காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமாகக் கருதிப் போற்றி வந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அங்ஙனமே சோழ மன்னர்களையும் அவர்களது ஆட்சிக்கு உட்பட்ட சோழ இராச்சியத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் எல்லோரும் திருமாலின் அவதாரமாகவே எண்ணிப் பேரன்பு பூண்டு ஒழுகிவந்தனர் என்று தெரி கிறது.

இதனையே எடுத்துக்காட்டி, ஆய்வறிஞர் கலாநிதி க. கைலாசபதி அவர்கள் மேலும் விளக்கங்களைத் தருகிறார்:[16]

> நிலப்பிரபுத்துவத்தின் ஒரு முக்கியமான பண்பு அச்சமூகத் தின் தலைவர்கள் சமய அங்கீகாரத்துடன் நிலைபேறுடை யவராய், இயல்பாகவே தலைவர் எனக் கொள்ளப் படுவராக இருத்தல். “தலைவர் அவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே” என்று கம்பன் தனது காப்பியத்திலே கடவுள் வணக்கத்திற் கூறியுள்ளது அலகிலாவிளையாட் டுடைய திருமாலை மட்டுமின்றி, அக்காலத் தலைவரை– வேளாளரையும் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. முதலிலே மன்னரை எடுத்துப் பார்ப்போம். சோழர் காலத்திற்கு முன்னதாகவே அரும்பத் தொடங்கிய ‘அரச உரிமை தெய்வாம்சமானது’ என்னுங் கொள்கை சோழர் காலத்திலே பூரணத்துவம் பெற்ற ஆட்சிக்கோட்பாடாக அமைந்தது.......உலகமெங்கும் நிலமானிய அமைப்பிலே காணப்படும் ஓர் அம்சம் இது என்பதனை நாம் மனங் கொள்ளல் தகும். “திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டேனே என்னும்” என்று பாடிய

> நம்மாழ்வார் திருவாய்மொழியிலும் “அரிமாசுமந்த அமளியோனைத் திருமாவளவன் எனத் தேறேன்– திருமார்பின் மானமால் என்றே தொழுதேன்” என்ற பழம் பாடலிலும் அரசரின் கடவுட்டன்மை சுட்டிக்காட்டப் படுகின்றது. ஆனால் சோழர் காலத்தில் அதுவே பெரு நம்பிக்கையாக உருப்பெற்றிருந்தது.

இறைவனோடு மன்னர்கள் இணைத்துக் கூறப்பட்டதோடு நின்றுவிடாமல், அவர்களில் பலருடைய உருவங்களும் கோயில் களில் வைக்கப்பட்டன. சுந்தரசோழனின் சிலை தஞ்சைக் கோயிலில் அமைக்கப்பட்டு, வழிபாட்டிற்கும் அவனது மகள் குந்தவையால் ஏற்பாடு செய்யப்பட்டது.[17] இதே கோயிலில் குந்தவை, தன்னுடைய அல்லது தன் தாயாருடைய சிலை யினையும் அமைத்துள்ளது நோக்கத்தக்கது. முதலாம் ராச ராசன் மற்றும் அவனது பட்டதரசி லோகமகாதேவி உருவங் களும் கோயிலில் அமைக்கப்பட்டன.[18] கண்டராதித்தனது தேவியான செம்பியன் மகாதேவியின் பெயரில் நிறுவப்பட்ட ஊரில் உள்ள கோயிலில் அவரது சிலை இருந்ததுடன் அதற்கு வழிபாடும் நடைபெற்றது.[19] இதேபோன்று, முதலாம் ராசேந்திரன் மற்றும் அவனது அரசியான சோழமாதேவி ஆகியோரது சிலைகள் தஞ்சையில் உள்ள கோயிலில் நிறுவப் பட்டன எனத் தெரிகிறது.[20]

வழிபாட்டுக்குரிய கோயில்களில், வழிபடும் இறைவன் உருவங்களாகவே மன்னர்கள் ஆக்கப்பட்டிருந்ததைப் புறக் கணித்துவிட முடியாது.

> பொருளாதாரச் சுரண்டல், அரசியல் ஒடுக்குமுறை ஆகிய வற்றின் வழியாக மட்டுமே உழைப்பாளி மக்கள்மீது தனக்குள்ள அதிகாரத்தை நிலவுடைமை வர்க்கம் அதிகரித்துக் கொள்ளவில்லை. தத்துவமும் இதற்காகப் பெருமளவில் பயன்கொள்ளப்பட்டது. நிலவுடைமைத் தத்துவத்தின் உண்மையான சக்தியாகத் திகழ்ந்தவை சமயமும் மதச் சபையுமேயாகும். இவ்வுலக இன்னல் களுக்கு ஈடாகப் பேரின்ப வீடு அடையலாம் என்று அவை உறுதிமொழியளித்தன. நிலவுடைமை ஆளும் வர்க்கத்துக் கெதிரான போராட்டங்களிலிருந்து உழைக்கும் மக்க ளுடைய கவனத்தைத் திருப்பி அவர்களுக்கு என்றும் அடிமைகளாக இருக்கும்படி செய்வதே இதன் அடிப் படை நோக்கமாகும். அன்று, மக்கள் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் சமயம் வலிமையுடன் ஊடுருவியிருந்தது. தனது அதிகாரத்தின் வழியாக அன்றைய நிலவுடைமை அமைப்பைப் புனிதத் தன்மையாக்குவதற்கு மதச்சபை பயன்படுத்தப்பட்டது.



இவ்வாறு சமுதாய வரலாற்று வல்லுநர்கள் அக்காலகட்டத்தில் இருந்த சமயங்களின் பங்கினை வரையறுத்துக் கூறுகிறார்கள்.[21] இது சோழர் காலத்துக்கும் மிகப் பொருத்தமாக அமைவதைக் காணலாம்.

இருந்தாலும், தமிழ்நாட்டுச் சூழலில்–இந்தியச் சூழலில் என்றும் வைத்துக்கொள்ளலாம்–ஏற்பட்டிருந்த சில முரண்கள், இது எந்த அளவுக்கு எடுபட்டது–ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை இப்போது மதிப்பிடமுடியாமல் செய்துவிட்டன. ஆனால், ஆளும் அமைப்பினரும் அறிவு சார்ந்தோரும் உடைமைப் பகுதியினரும் தங்களுக்குச் சார்பாக–துணையாக அனைத்து மட்டங்களிலும் பணியாற்றி வந்த மன்னர் என்னும் ஆட்சி நிறுவனத்தை–தனி மனிதர் இங்கு பொருட்டல்ல–ஏற்றி வைப்பதிலும் போற்றி நிற்பதிலும் முனைப்புக் காட்டினார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. மன்னர்களின் எதிர்பார்ப்பு களுக்கு அவர்கள் துணையாகவும் இவர்களின் நோக்கங்களுக்கு மன்னர்கள் உதவியாகவும் இருந்ததெல்லாம், இந்த இரு பகுதியினரின் நலன்கள் வேறுவேறானவையல்ல என்பதையும் தங்களது பொது நலன் எண்ணியே இவர்கள் அனைவரும் தத்தமது கடமைகளையாற்றினர் என்பதையும் தெளிவுபடுத்து கின்றன.

**உழுகுடிகளின் உரிமை காக்க முயற்சிகளில்லை**

முன்னர் காட்டப்பட்ட குத்தகை அளவு தொடர்பான கல்வெட்டுகளில்கூட, கோயில் நிலங்களன்றி, தனியார் நிலங் களில் பயிரிட்டு வந்தவர்களும் குறிப்பிட்ட அளவு குத்தகை யினை உடைமையாளர்களுக்குத் தருவதை ஒப்புக்கொள்ளா விட்டால் அவர்கள் வெளியேறிவிடவேண்டுமென்றே ஆணை யிடப்பட்டுள்ளது. இங்கு தனியார் நிலவுடைமையாளர் களுக்குச் சார்பாகவே அரச ஆணை அமைந்துள்ளது. ஆனால், எந்த ஆணையும் நிலத்தில் உழுகுடிகளாக இருந்தவர்களுடைய உரிமைகளைக் காக்கும் தன்மை கொண்டதாக இருக்கவில்லை என்பதும் குறிக்கத்தக்கது. தனியார் நிலங்களுக்கான உரிமை களைக் கூறும் கல்வெட்டுக்கள் கோயில்களில் இருக்க வாய்ப்பு கள் மிகக் குறைவுதான். ஆனால், கோயில் நிலங்களுக்கான உழுகுடிகளின் உரிமைகளை நிலைநாட்டும் ஆவணங்கள் ஒன்றுகூடக் கோயில் பதிவுகளாகக் கல்வெட்டுகளில் காணப் படவில்லை.

இறை அவதாரமாகவன்றி, இறைவனாகவேகூட மன்னன் காட்டப்பட்டாலும், அவன் தன் செயல்களால் நடுநிலைமையைக் கடைப்பிடிப்பவனாகவும் காட்டிக்கொள்ளவேண்டியிருந்தது. பரந்த நிலப்பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து பேண இது வேண்டப்பட்டது. மக்கள் மனத்தில் ஒரு வகையான நம்பகத் தன்மையை உருவாக்க மட்டுமல்லாது, நிலவுடைமைச் சார்பில்கூட சில வரன்முறையற்ற போக்குகள் தோன்றாமல் தடுக்கவும் ஓர் ஒழுங்குமுறைக்குட்பட்ட அளவில் அந்த நிலவுடைமைச் சார்புத் தன்மையை மறைபொருளாக வெளிப்படுத்தவும் இது பயன்பட்டது எனலாம்.

**நிலவுடைமை நீதி**

பல தலைமுறைகளாகப் பயன்படுத்திவந்த நிலத்திலிருந்து உழவர்கள் வெளியேற்றப்பட்டபோது அல்லது அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு வெறும் பயிரிடுவோராக மட்டுமே மாற்றப்பட்டபோது, அதில் துணைநின்ற மன்னர்கள், உழைப்பில் எந்தப் பங்கையும் செலுத்தாத பிராமணர்களுக்கும் அதிகாரிகளுக்கும் படைத்தலைவர்களுக்கும் (இந்த அதிகாரிகளும் படைத்தலைவர்களும் பெரும்பாலும் வேளாளர் பிரிவிலிருந்து சென்றவர்கள்தாம்), வளமும் வளர்ச்சியும் நிறைந்த விளைநிலங்கள் சென்றடைய வாய்ப்பேற்படுத்திய மன்னர்கள், கடுமையான வரைமுறைகளாலும் கொடுமையான நடைமுறைகளாலும் கண்டிப்புமிக்க செயல்முறைகளாலும் பயிரிடுவோரை–உழைக்கும் மக்களை மேலும்மேலும் கசக்கிப் பிழிந்த உடைமையாளர்களுக்கு உதவும்படியான ஆணைகளை அவ்வப்போது வெளியிட்டு வந்த மன்னர்கள், நடுநிலையாளர்களாகவும் தோன்றியிருக்கிறார்கள்.

இத்தகையதொரு செயல்பாட்டினை ராசகேசரிவர்மன் என்ற பெயரில் வெளியிடப்பட்ட திருப்பூந்துருத்தியிலுள்ள கல்வெட்டொன்றினால் அறியலாம்.[22] கோயில் நிலங்களைக் கொண்டிருந்த நாராயணன் மாதவன் என்பவன் உள்ளூர் அமைப்புப் போட்டிருந்த தண்டத்தினைச் செலுத்தாமல் ஊரைவிட்டு ஓடிவிட்டான். இதனால், அவனுடைய உடன் பிறந்தாரான நாராயணன் துருத்தி, நாராயணன் நக்கன் ஆகியோர், அவர்களுக்கு உடைமையாக இருந்த நிலங்களின் உரிமைகள் யாவற்றையும் விற்று அதில் கிடைத்ததைக் கொண்டு அண்ணனுடைய தண்டத்தைச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டார்கள். தண்டம் செலுத்தாமல் ஓடிச் சென்றவனுடைய உறுதியின் பெயரில் பெறப்பட்ட நிலங்களும் இவற்றுள் அடங்கும். இந்த முறையற்ற வற்புறுத்தலை எதிர்த்து அவர்கள் மன்னனிடம் முறையிட்டார்கள். இதனையடுத்து,



அந்த இருவரும் இழந்த நிலங்கள் அவர்களுக்கே கிடைக்க மன்னன் ஆணையிட்டிருக்கிறான்.

கோயில் நிலங்களைக் கொண்டிருந்தவன் தண்டம் செலுத்தவேண்டியிருந்தது என்பதிலிருந்தும், அத்தண்டத்தை முடிவுசெய்தது உள்ளூர் அமைப்பு என்பதிலிருந்தும் குற்றத்தின் தன்மையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், கோயில் நிலம் தொடர்பான ஏதாவது குற்றமாகவே இருக்க வாய்ப்புண்டு. பெயர்களைக் கொண்டு இவர்கள் பிராமணர்களாகத் தெரிந்தாலும், கோயில் நிலங்களைப் பிராமணர்கள் உழுதுவந்தார்களா அல்லது அவர்கள் உற்பத்தியில் மட்டும் பங்கு கொண்டிருந்தார்களா என்பது விளங்கவில்லை.

நிலத்தினைப் பண்படுத்திப் பல தலைமுறைகள் பயிரிட்டுப் பயன்படுத்தி வந்ததால் பெற்ற, வழிமுறை உறவு கொண்டாடக் கூடிய வகையினராகப் பிராமணர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், எந்த நிலத்தையும் தங்கள் உழைப்பால் உற்பத்திக்குக் கொண்டுவந்த இயல்பினர் அல்லர் அவர்கள். உற்பத்தித் திறமிக்கதாக மாறிய பின்னரே எந்தவொரு நிலமும் அவர்களிடம் வந்திருக்கின்றது. அதே போன்று மேல்வாரம் கொடுத்துவந்த குத்தகையாளராகவும் அவர்கள் இருந்திருக்க முடியாது. ஏனென்றால், குத்தகையாளராக இருந்தவர்கள் அனைவரும் தாங்களாகவே நிலத்தில் உழைப்பைச் செலுத்தி உற்பத்தியைப் பெற்றவர்கள். எனவே, இங்குக் குறிப்பிடப் பெறும் பிராமணர்கள், நிலத்திலிருந்து ஏதோவொரு வகையில் உற்பத்தியைக் கொடையாகப் பெற்றவர்களாக இருக்கக்கூடும். இப்படி, உற்பத்தியைக் கொடையாகப் பெறும் உரிமையினையே அவர்கள் விடவேண்டியிருந்திருக்கலாம். இங்குகூட, ஊரை விட்டு ஓடியவன் செய்த குற்றம் புலப்படவில்லையெனினும், அவன் செய்த குற்றம், பயிரிட்டு வந்தவர்களுக்குச் சார்பானதாகவோ, நிலவுடைமை நலன்களுக்கு எதிரானதாகவோ இருந்ததாகத் தெரியவில்லை. இதனால்கூட, அரச நீதி உடன் கிடைத்திருக்கலாம். இவை மேலும் ஆய்வு செய்யப்பட்டால் தெளிவு கிடைக்கக்கூடும்.

ஆனால், பொதுவாக நில உற்பத்தியில் மேல்வாரம், கடமை போன்றவற்றை முறையாகச் செலுத்தாதவர்கள் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் நிலங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், தவறியவர்களின் இல்லத்தினரும் உறவினரும் தாங்கள் நேரிடையாகச் செய்யாத குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படவில்லை. பெரும் அமைதியின்மை, குழப்பம், பிராமணர்–

வேளாளருக்கு மாறான செயல்கள், அரசனுக்கெதிரான சதி போன்றவற்றில் மட்டுமே குற்றவாளிகளின் இல்லத்தினர் மற்றும் உறவினர்களது உடைமைகளும் பறிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், உள்ளூர் அல்லது கோயில் அவையினர் எடுத்த எல்லை மீறிய செயல்பாட்டைக் கட்டுப்படுத்தவேண்டிய கடமை அரசனுக்கு இருந்திருக்கும். தவறிழைத்தவனின் உடன் பிறந்தார் தண்டிக்கப்பட்டதில் அரசனின் தலையீட்டையும் நீதி வழங்கியமையையும் இந்தப் பின்னணியில்தான் பார்க்க வேண்டும்.

சோழப் பேராட்சி வலுவிழந்துகொண்டிருந்த நிலையில் கூட மன்னர்கள் இது போன்ற நடுநிலைக்கு மாறான சில செயல்பாடுகளை மாற்றுவதில் ஈடுபாடு காட்டியிருக்கிறார்கள். மூன்றாம் ராசராசனது இருபதாம் ஆட்சியாண்டின் (கிபி 1236) நன்னிலம் வட்டம் அச்சுதமங்கலக் கல்வெட்டு ஒரு நிகழ்வினை விவரிக்கிறது.[23] ஓமநாதமங்கலம் மற்றும் சோமநாத சதுர்வேதி மங்கலம் ஆகிய குடியிருப்புகள் ஒருபுறமாகவும் சீதக்கமங்கலம் மறுபுறமாகவும் நின்று, முடிகொண்டசோழப் பேராற்றி லிருந்து வயல்களுக்கு நீர்பாய்ச்சுவது தொடர்பாக மனவேறு பட்டுப் பூசலிட்டுக்கொண்டன. இதில் ராசராசப் பேரரையன் என்பவனைக் குற்றவாளி எனத் தவறாகக் கொண்டு தண்டித்து விட்டார்கள். இந்தத் தவறுக்கான இழப்பீடாக உதிரப்பட்டி (குருதி கொட்டியதற்கு இழப்பீடு) நிலம் தரப்பட்டது. இது நடந்தது மூன்றாம் குலோத்துங்கனின் முப்பதாம் ஆட்சி யாண்டிலாகும் (கிபி 1208). இந்த உதிரப்பட்டி நிலம் உற்பத்திக்கேற்றதாக இல்லாததால், ராசராசப் பேரரையனின் மகனுக்குப் பயன்படாமல் இருந்தது. இருபத்தெட்டு ஆண்டு களுக்குப் பின்னர், மூன்றாம் ராசராசனின் இருபதாம் ஆட்சி யாண்டில் (கிபி 1236), இந்தக் குறையைத் தீர்த்து, மாற்று நிலம் வழங்க ஏற்பாடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு கோயிலோடு தொடர்பற்றது என்றாலும், மக்கள் உணர்வுகளுக்கேற்பச் சில செயல்களை நிறைவேற்ற மன்னர்கள் தவறவில்லை என்பதைப் புரியவைத்துவிடுகிறது. ஏற்பட்டுவிட்ட ஒரு குறையைத் தீர்க்க இருபத்தெட்டு ஆண்டுகள் தள்ளிப்போனது ஏன் என்பது வினாவாக முன் நிற்கிறது என்பது உண்மைதான். குறையை மன்னனிடம் முறையிட்டது தள்ளிப் போனதாலோ, வேறு சூழல்களாலோ தாமதம் ஏற்பட்டிருக்க லாம். ஆனால், காலம் கடந்த பின்னரும் தயக்கமின்றித் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதைப் புறக்கணித்துவிடக்கூடாது. ஆட்சி முறை, ஆவணக் காப்பு, சிக்கல்களைத் தீர்க்கும் வகை,



நீதியமைப்பு எனப் பல முனைகளிலும் சோழராட்சியின் செயல் பாடுகளுக்கு எடுத்துக்காட்டாகவே இந்நிகழ்வு விளங்குகிறது என்று கூறமுடியும்.

அத்துடன், இரண்டு தீர்வுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தவறாகத் தண்டனையளித்துவிட்டதை அறிந்ததும் அதைத் திருத்திக்கொண்டு, அதனால் கேடுற்றவர் மகனுக்கு நிலம் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இது உடனடியாக நடந் திருக்குமென்றே தெரிகின்றது. இது இன்றைய நீதி நடைமுறை களிலிருந்து வேறுபட்டதாகவே உள்ளது. பொதுவாக, நுட்ப அளவில் எடுத்துவைக்கப்பட்ட விவரங்களைக் கொண்டுதான் தவறுகளுக்குத் தண்டனை தரப்படுகிறது என்பதால், தவறாகத் தந்த தண்டனைக்கு நடுவர்கள் பொறுப்பேற்க முடியாது என்றாலும், இந்தப் பிழையினால் கேடுற்றவருக்கு இழப்பீடு வழங்க இன்றைய நீதிமன்ற நடைமுறைகளில் இடமேயில்லை; வேண்டுமெனில், இத்தகைய இழப்பீட்டினை நீதிமன்ற நடை முறைக்கு அப்பாற்பட்டு, அரசு அலுவல் முடிவாகத்தான் செய்யவேண்டியிருக்கும். ஆனால், மேற்கண்ட நிகழ்வில், தீங்குற்றவருக்கு இழப்பீடு தருவது நீதி செலுத்துவதன் பகுதியாக அமைந்திருந்ததைப் பார்க்கலாம். அடுத்து, இந்த நிலம் உற்பத்திக்கு வாய்ப்பாக இல்லை என்பது தெரிந்தவுடன்–அது இருபத்தெட்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் என்றாலும்– மாற்றித் தரப்பட்டுள்ளது.

குறிப்பாகச் சொல்லுவதென்றால், நிலம், நிலவரி, நில உற்பத்தி, நிலம் பயிரிடுதல், நில உரிமை தொடர்பானவற்றில் நிலவுடைமை நலன்களை–அவை கோயில்களுடையனவாகவும் இருக்கலாம், தனியார் போன்ற பிறவாகவும் இருக்கலாம்– முழுமையாகக் காப்பதன்றிப் பிறவற்றில் மன்னர்கள், நடுநிலையோடும் நாட்டு மக்களின் நலனறிந்தும் செயல்படவே முயற்சித்திருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

இது ஆட்சி முறையின் பொது இயல்பு என்பதையும் பார்க்கத் தவறிவிடக்கூடாது. ஓர் அரசு எந்தப் பகுதியினரின்– வர்க்கத்தினரின் சார்புக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ, அந்தப் பகுதியினரின் – வர்க்கத்தினரின் நலன்களுக்கு எத்தகைய கேடும் ஏற்படாமல் அரணாக நின்று காத்துக்கொண்டு, அத னுடைய முழுமையான நலன்களுக்காகவே ஆட்சி அமைப்பின் அனைத்து உறுப்புகளையும் உருவாக்கிப் பேணி வருவதுதான் இயல்பு. தனது நலன்களுக்கு முரண்படாத நிலையில், மக்கள் திரளுக்கு மனநிறைவு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதிலும் தடைகள் இருக்கமுடியாதுதான். ஏனெனில், ஆளும் உடைமைப் பிரிவினரின் நலன்களைக் காக்கவே, இத்தகைய

செயல்பாடுகளும் இயல்புத் தன்மைபோல் காட்சி தரக்கூடிய போர்வைகளும் வேண்டியிருக்கின்றன. இதனால், மக்கள் நலனுக்காகச் செயல்படுவதாகவே, வெவ்வேறு சமூக-பொருளியக் கட்டமைப்புகளில் தோன்றுகின்ற அனைத்து வகை அரசுகளும் காட்டிக் கொள்ள முற்படுகின்றன.

ஆனால், ஒரு அரசு சார்ந்திருக்கின்ற பகுதியினரின் நலன் களுக்கும் பிற மக்களது நலன்களுக்கும் இடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகளே, அந்த அரசின் சார்புத் தன்மையை வெளிப்படுத்திவிடுகின்றன.

இது பிற்காலச் சோழர் காலத்துக்கும் பொருந்திநிற்கிறது என்பதில் ஐயமில்லை.



## இயல் 8

# நிலவுடைமையாளர் கையில் நீர் வளங்கள்

தொடக்க கால வேளாண்மை மழையை எதிர்நோக்கிய தாகவே இருந்தது. 'வித்தி வான் நோக்கும் புன்நில'த்தில்[1] செய்யப்பட்ட வேளாண்மையில் உற்பத்தி நிலையானதாக இருக்கவில்லை. ஆகவே, ஆறு மற்றும் இயற்கையாகத் தேங்கும் நீர்நிலைகளிலிருந்து நீரை இறைத்துப் பாய்ச்சும் வளர்ச்சி ஏற்பட்டது. இதனை 'நீர்த் தெவ்வு'தல் என்று *மதுரைக்காஞ்சி* குறிப்பிடுகிறது.[2]

இத்தகைய நில உற்பத்தி முறைகளில், நீர் வளங்கள் யாருடைய கட்டுப்பாட்டிலும் இருக்கவில்லை. இயற்கையாகக் கிடைத்த நீரினைப் பெறும் வாய்ப்புக்கொண்ட அண்மை நிலங் களுக்கு நீர் பாய்ச்சி உழவர்கள் உற்பத்தியை மேற்கொண்டனர். ஆறுகளுக்கும் நீர்நிலைகளுக்கும் அண்மையில் இல்லாத நிலங்களை நன்செய் விளைச்சலுக்கு ஏற்றதாகப் பண்படுத்தும் வாய்ப்பு அப்போது கிடைக்கவில்லை.

உணவு தேடும் நிலையில் இருந்து உணவு உற்பத்தி செய்யும் கட்டத்துக்கு வந்திருந்த மனித இனம், உணவுத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டுப் புதிய நிலங்களைத் தேடி, பண்படுத்தி வேளாண்மைக்குக் கொண்டுவர முயன்றது.

### புதிய தொழில்நுட்பம்

இந்த முயற்சிகளுக்கு அடிப்படையாக நீர் வேண்டப் பட்டது. இதன் விளைவாக அறிமுகம் பெற்ற புதிய தொழில் நுட்பம்தான், நீர்வளம் பெருக்கும் ஏரி, குளங்களை அமைத்து, அதன்வழி உற்பத்தி நிலங்களுக்கு நீர் பாய்ச்சல் செய்யப்பட்ட தாகும்.

ஆனால், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் புதிய ஏரி, குளங்களை அமைப்பது சிறு குழுக்களாக வாழ்ந்து கொண்டிருந்த குடிகளால் இயலவில்லை. இதற்குப் பலருடைய கூட்டு முயற்சியும் வேண்டப்பட்டது. ஆகவே, இம்முயற்சிகளை மேற்கொள்ளப் பலருடைய ஒத்துழைப்பினையும் இணைத்துச் செயல்படுத்தக்கூடிய தலைவன், மன்னன் அல்லது பெரிய

குடியினரின் பங்களிப்பு வேண்டியதாயிற்று. இதனால், இம் முயற்சிகளை நிறைவேற்ற மன்னர்கள் வற்புறுத்தப்பட்டனர்.

நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்குத வாதே ஆனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்மஇவண் தட்டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே[3]

நீரையும் நிலனையும் ஒன்றுகூட்டவேண்டுமென்ற விழைவு இப்*புறநானூற்*றுப் பாடலில் எதிரொலிப்பதைக் காணலாம். இதனைச் செயல்படுத்தும் வகையில் சோழ மன்னன் கரிகாலன், நிலங்களைப் பண்படுத்தியும் குளங்களை அமைத்தும் உற்பத்திக்கான வாய்ப்புகளை மிகுவித்தான்.[4]

காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி

என்று இதனைப் *பட்டினப்பாலை* கூறும். இதனால்,

மன்உயிர் புரைஇய வலன்ஏர்பு இரங்கும்
கொண்டல் தண்தளிக் கமஞ்சூல் மாமழை
கார்எதிர் பருவம் மறப்பினும்
பேரா யாணர்த்தால் வாழ்கநின் வளனே[5]

என்று *பதிற்றுப்பத்து* கூறுமாறு, மாமழை பொய்ப்பினும் காரெதிர் பருவம் மறப்பினும் உற்பத்தி வழங்கும் புதிய வருவாயைத் தரும் விளைநிலங்கள் கிடைக்கப்பெற்றன. “குளக்கீழ் விளைந்த களக்கொள் வேண்ணெல்”[6] உற்பத்தி மிகுந்தது.

மழை அல்லது இயற்கையாகக் கிடைத்த நீரைப் பயன் படுத்திச் செய்த வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் எளிய குடி கள். தங்களது உழைப்பின் வழியாகக் காடுகளாகக் கிடந்த அல்லது உற்பத்திக்குக் கொண்டுவரப்படாத நிலங்களைப் பண்படுத்தி வேளாண்மை செய்வதற்குத் தகுதிப்படுத்தியவர்கள்



இவர்கள். இப்படிப் பண்படுத்தியவர்களின் வழிமுறையினரும் தொடர்ந்து பல தலைமுறைகளாக நில உற்பத்தியினைத் தொடர்ந்து வந்தார்கள்.

நிலத்தினை இப்படிப் பண்படுத்தியவர்கள்கூடத் தனி மனிதர்கள் என்று கூறிவிட முடியாது. கூட்டு வாழ்க்கை முறை–குழு வாழ்க்கை முறையின் பகுதியாக, உழைப்பில் கூட்டு முயற்சி கள் தொடர்ந்துகொண்டிருந்தன. காடுகளைக் கொன்று உற்பத்தி நிலங்களாக்கும் பணியும் கூட்டு முயற்சிகளாலேயே நடைபெற்றுவந்தன. ஆனால், இது தொடர் முயற்சியாக இருந் திருக்கவேண்டும். இவ்வாறு உற்பத்திக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்கள் கூட்டு முறையில் உற்பத்தி செய்யப்பட்டு, பின்னர் காலப்போக்கில் அவர்களுக்குள் பிரித்துக்கொள்ளப்பட்டிருக் கலாம். முதலாம் குலோத்துங்கனுடைய நாற்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் (கிபி 1117) பதியப்பட்ட தென்னார்க்காடு மாவட்டம் திருவடிக் கல்வெட்டு, அதிராசமங்கலபுரத்தில் இருந்த அனைத்து மக்களும் ஒன்றுசேர்ந்து 4800 குழி நிலத்தைப் பண்படுத்தி நன்செய் நிலமாக மாற்றியதை விவரிக்கிறது.[7] நன்செய் நிலமாக மாற்றப்பட்ட பின்னர், அவர்கள் கூட்டு முயற்சியில் உற்பத்தியில் ஈடுபட்டார்களா அல்லது தங்களுக் குள் பங்கு பிரித்துக்கொண்டார்களா என்பது தெரியவில்லை. இது சற்றுக் காலத்தால் பிற்பட்டது எனினும், நிலப் பண்படுத்த லில் நிலவிய கூட்டு முயற்சிகள் வெளிப்படுகின்றன.

**ஏரி–குளங்கள் அமைக்கப் பெருமுயற்சி**

நீர் பாய்ச்சலில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில் நுட்பத்தின் பகுதிகளாக, ஏரி-குளங்கள் உருவாக்குவதும், அவற்றிலிருந்து வயல்களுக்கு வாய்க்கால்வழி நீர் எடுத்துச் செல்வதும், வாய்க்கால்களுக்கு நீர் திறந்துவிட மதகு போன்ற கால்வழிகளை அமைப்பதும் நடைமுறைக்கு வந்தன. அன்றைய கட்டத்தில், இந்தத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி, நீர் பாய்ச்சல் செய்யும் முழுமையான கட்டமைப்பினை உருவாக்கு தற்கான முயற்சிகளை எளிய உழவர்களால் மேற்கொண்டிருக்க இயலாது. பெருமளவிலான மனித உழைப்பும் முயற்சிகளும் செல்வமும் இதற்கு வேண்டியிருந்ததால், சிறுகுடித் தலைவர் களன்றி, மன்னர்களோ, பெரிய குடிகளின் தலைவர்களோ, இயலக்கூடிய குறிப்பிட்ட சில குழுவினரோதாம் இவற்றை மேற்கொள்ள முடிந்திருக்கவேண்டும். அத்துடன், உழைப்பும் முயற்சியும் எண்ணமும் மட்டும் இதற்குப் போதுமானவை யல்ல.

மழை நீரையோ ஆற்று நீரையோ ஓரிடத்தில் திரட்டி, அது பல நாள்களுக்குப் பயன்படுமாறு காத்து, இயற்கையாகப்

பாயக்கூடிய பள்ளப் பகுதிகளுக்கு வேண்டியவாறு பங்கீடு செய்தல் என்பது, நில அமைப்பு குறித்த முழுமையான அறிதலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய தொழில்நுட்ப முனைப்பாகும். இத்தகைய தொழில்நுட்ப அறிதல் என்பது அன்றைய தொடக்கநிலையில் அரிதாகவே இருந்திருக்கும். அதனால்தான், இப்பணிகளை மேற்கொண்டவர்களாக மன்னர், பெரிய குடிகளின் தலைவர்கள் போன்றோரே அமைந்தனர். அடுத்து, இத்தகைய தொழில்நுட்ப அறிதல் பரவியவுடன், ஊர் அவையினர் போன்றோரும் தொடர்ந்தனர்.

பல மன்னர்கள் இவ்வாறு ஏரி, குளங்கள் அமைத்தமையைப் பெருமளவில் கல்வெட்டுக்கள் பதிந்திருக்கின்றன.[8] பல ஏரிகளை உருவாக்கிய ராசேந்திர சோழ சம்புகராயன் பற்றி வடார்க்காடு மாவட்டம் வாயலூரில் வெட்டப்பட்ட விக்கிரம சோழனின் பதினொன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் (கிபி 1128) கூறுகிறது.[9] இடைக் காலத்தில் நிலத்தில் முதலீடு செய்து, நிலவுடைமையாளர்களாகவே மாறியிருந்த வணிகர்களும் ஏரி-குளங்களைக் கொண்டிருந்ததால், அவற்றைச் செப்பமிடும் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.[10] ஊர் அவையினர் ஏரி-குளங்கள் அமைத்ததையும் அறிகிறோம்.[11] கோயில்கள் தமது நிலங்களைப் பயிர் செய்வதற்கென்றே தனியாக ஏரி-குளங்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றன.[12] அத்துடன், ஊர் அவையினரும் கோயிலுக்கு ஏரி-குளங்களை அமைத்துக் கொடுத்திருக்கின்றனர்.

**கோயில்வழி நீர் வளங்களைக் கைக்கொள்ளுதல்**

பல்லவராயன்பேட்டையைச் சார்ந்த இரண்டாம் ராசராசனின் பதினாறாம் ஆட்சியாண்டு (கிபி 1161) ஆவணம் ஒன்று, சற்று மாறுபட்ட நிகழ்வைப் பதிந்திருக்கிறது.[13] ஊர் அவையினர் வாய்க்கால் வெட்டக் கோயிலுக்குரிய நிலத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு மாற்றாக வேறு ஒரு நிலத்தைக் கோயிலுக்குக் கொடுத்தனர். ஆனால், கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட அந்த நிலத்திலேயே, கோயிலின் ஒப்புதல் பெற்று, அந்த ஊர் அவையினரால் ஒரு ஏரி அமைக்கப்பட்டது. ஊர் நிலம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட பின்னர், அந்த நிலத்தில், நிலத்தைக் கொடுத்தவர்களாலேயே ஏரி அமைக்கப்படுகின்றது. நிலவியல் அடிப்படையில் ஏரி அமைக்கத் தகுதியான ஊருக்கு உரிமையுள்ள இடம் கோயிலுக்கு உடைமையாக்கப்பட்ட பிறகு, அந்த இடத்திலேயே ஏரியை உண்டாக்குவது என்பது, கோயில் வழியாக நீர் வளத்தைக் கைக்கொள்ளும் முயற்சியாகவே அமைகின்றது எனலாம். ஊர்ப் பொதுவாக இருந்தபோது அந்த நிலம், அந்த ஊரில் வாழும் நிலவுடைமைப் பகுதி



யினர், நிலவுடைமையற்ற உழைக்கும் பகுதியினர், பிறர் என அனைவருக்கும் நடைமுறையில் பங்குரிமை கொண்டதாக இருந்தது. ஆனால், கோயில் நிலமாக மாறிய பிறகு, கோயிலோடு நேரிடையான தொடர்புடைய நிலவுடைமைப் பகுதியினருக்கே உரியதாகிவிட்டது. அந்த நிலத்தில் அமைக்கப்பெறும் ஏரியும் கோயிலுக்கு உரியதாகி, கோயில்வழி நிலவுடைமைப் பகுதியினருக்குப் பயன்படுவதாகிவிட்டது. ஊர்ப் பொது நிலமாக இருந்தபொதே ஏரி வெட்டப்பட்டிருந்தால், அதைக் கொண்டு அந்த ஊரிலிருந்த சிறு உழவர்கள் உள்ளிட்ட பலரும் பயன் பெற்றிருப்பர். இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டு, ஏரி வெட்ட உகந்த இடம் கோயிலுக்கு வழங்கப்பட்டு, அதன் பயன்கள் யாவும் நிலவுடைமையாளருக்கு மட்டுமே உரிய கோயிலுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. கோயில் வழியாக நிலவுடைமையாளர் பயனை அடைந்ததற்கு இது ஒரு சிறந்த சான்றாகும்.

இவ்வாறு, புதிதாகப் புகுத்தப்பட்ட இந்தத் தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்பெற்ற நீர் வள வாய்ப்புகள், பெருமளவில் இவற்றை உருவாக்கிய மன்னர்கள், குடித்தலைவர்கள், கோயில்கள், நிலவுடைமையாளர் ஆகியோர் பிடிக்குள் சென்றுவிட்டன.

**நீர் வளம் கொண்டு நிலங்களைக் கைப்பற்றுதல்**

உடைமைப் பகுதியினர், நீர் வள வாய்ப்புகளைத் தங்களிடம் வைத்திருந்ததால், நிலத்தைக் கையகப்படுத்துதற்கு அதனையே ஒரு காரணியாகப் பயன்படுத்திக்கொண்டனர். முன்னர் குறிப்பிடப்பட்ட, விருத்தாசலத்தில் உள்ள பரகேசரி வர்மனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நெற்குப்பை என்னும் ஊரில் இருந்த குடிகள் கோயிலுக்குக் கொடுத்த புன்செய் நிலம், உடனடியாகப் பண்படுத்தப்பட்டு உற்பத்திக்கு ஏற்றதாக மாற்றப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[14] மழையை எதிர்நோக்கிப் பயிரிடப்பட்டுவந்த புன்செய் நிலம், கோயிலைச் சார்ந்தவுடன் நன்செய்யாக மாறிவிடுவது, கோயிலிடமிருந்த ஏரி அல்லது குளத்தின் வழியாக நீர் பாய்ச்சப் பெற்றதால்தான் என்பதை விவரிக்கத் தேவையில்லை. இந்தப் புன்செய் நிலத்தைக் கோயிலுக்குத் தரவேண்டிய சூழ்நிலைக்கு ஊர் மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கோயில் தன்னிடமிருந்த ஏரி அல்லது குளத்து நீரை, ஊர் மக்களிடமிருந்த அந்த நிலத்துக்கு வழங்க முன்வரவில்லை. அதாவது, கோயிலில் உரிமை கொண்டிருந்த நிலவுடைமையாளர் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த கோயிலின் ஏரி நீரினைத் தங்கள் ஊர்ப் பொதுநிலத்துக்குக் கொடுக்க முன்வரவில்லை. ஏனெனில்,

ஊர்ப் பொதுநிலமாக இருந்தால் கிடைக்கக்கூடிய பயனைவிட, கோயில் பொதுநிலமாக இருந்தால் கிடைக்கக்கூடிய பயன் உடைமையாளர்களைப் பொருத்த அளவில் கூடுதலாகும். நன்செய் வேளாண்மை பரவலாக வந்துவிட்ட பிறகு, புன்செய் உற்பத்தியில் உரிய வருவாய் இருந்திருக்காது. ஆகையால், வருவாய் குறைந்த புன்செய் உற்பத்தியைத் தொடர்ந்து செய்துவர முடிந்திருக்காது. ஆகவே, வருவாய் பெறமுடியாத நிலத்தை ஊர் மக்கள் கோயிலுக்கே கொடையாகக் கொடுத்து விட்டார்கள் போலும். அல்லது, ஊர் அவையிலும் செல்வாக்குக் கொண்டிருந்த உடைமைப் பகுதியினர் தங்களது நலனுக்காக இந்த மாற்றத்தைச் செயல்படுத்தியிருக்கலாம். ராசராசனின் ஆறாம் ஆட்சியாண்டுக்குரிய ஆக்கூர் கல்வெட்டு, கொடையாக நிலம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டவுடன், கோயிலுக்குரிய நீர் வள வாய்க்கால் கொண்டு பயிர் செய்யப் பட்டதை விவரிக்கிறது என்பதையும் முன்னர் பார்த்தோம்.[15]

இது போன்று, ஊர்ப் பொதுநிலங்களும் சிறுஅளவில் உற்பத்தி செய்யப்பட்டுவந்த நிலங்களும் வேறு நிலங்களும், மறைமுகமாகக் கோயில் என்ற பெயரிலோ அல்லது நேரடி யாக, குடிநீக்கி–குடிநீக்காமலோ உடைமைப் பகுதியினரால் திட்டமிட்டுக் கைக்கொள்ளப்பட்டன.

புதிய தொழில்நுட்பத்தினால் அறிமுகமான நீர் வள வாய்ப்புகளைப் பயன்படுத்துதற்கு முன்னர், உழவர்கள் தாங்கள் உற்பத்தி செய்துவந்த நிலங்களிலிருந்து கிடைத்த விளைவில், குடித்தலைவன் அல்லது மன்னன் போன்றவர்களுக்கு ஆறில் ஒரு பங்கு என்று கூறப்படும் அளவில் ஏதோவொரு வகையி லான இறை மட்டுமே செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், ஏரி, குளம் போன்றவற்றின் வழியாகப் பாய்ச்சல் முறை ஏற்பட்ட பின்னர், நிலைமைகள் மாறின. வேறொரு வருக்கு உரிமையாக இருந்த ஏரி, குளம் ஆகியவற்றிலிருந்த நீரைப் பயன்படுத்துவதற்குத் தனியாக உற்பத்தியிலிருந்து பங்கு கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். நீருக்கான இந்த உற்பத்திப் பங்கு எப்படிப் பெறப்பட்டது, எவ்வளவு பெறப்பட்டது என்பன போன்ற விவரங்கள் பண்டைய இலக்கியங்களிலோ, தொடக்கக் காலக் கல்வெட்டுக்களிலோ தெளிவாகக் காணப் படவில்லை. எனினும், இவை குறித்த ஆய்வுகளை மேலும் தொடர்ந்தால், உரிய சான்றுகள் கிடைக்கக்கூடும்.

தொடக்கத்தில்–பண்டைக் காலத்தில் வெற்றி பெற்றவர் கள், தோல்வியுற்றவர்களின் உற்பத்தி வாய்ப்புகளை அழிவுக் குள்ளாக்கினார்கள் என்றாலும், உணவு உற்பத்தி விரிவாக்கம் பெற்ற பின்னர் இந்த நிலை மறைந்தது.[16] பின்னர் போரில் ஈடுபட்டவர்கள், போர் வெற்றியினால் கிடைத்த செல்வங்களை யும் நிலங்களையும் பகிர்ந்துகொள்ளத் தொடங்கினார்கள்.[17] இதற்கு ஒப்ப, குளம்-ஏரிகளிலிருந்து நீர் வழங்கியமைக்காக உற்பத்தி நிலங்களைப் பங்கிட்டுக்கொள்ளும் நடைமுறை ஏற்பட்டதற்கான வாய்ப்புகள் மிகுதியாகவே இருக்கின்றன. உற்பத்திக்கான நீரைப் பயன்படுத்துவதற்கு ஈடாக, உற்பத்தி நிலங்களின் ஒரு பகுதியையோ, நிலத்தில் ஏதாவதொரு அளவினையோ பெற்றிருக்க முடியும். அல்லது, நீருக்கான விலையாக, நிலத்தின் உற்பத்தியில் பங்கு பெற்றிருக்கலாம். இந்த நீருக்கான விலை, வாடகை–வாரம் போன்று இருந்திருக்கலாம். நீருக்கான விலைக்காகக் கொடுக்கப்பட்ட வாடகை–வாரம் என்பதே பிற்காலத்தில் நிலத்திற்கான வாடகை–வாரம் என்று மாறியிருக்கலாம். இவையெல்லாம் மேலும் ஆய்வுக்குரியன என்றாலும், நீர் வள வாய்ப்புகளைக் கொண்டிருந்தவர்கள், ஏதோவொரு வகையில் நில உற்பத்தியில் பங்கு பெற்றார்கள் என்பதை மறுக்கவியலாது. நீர்வள வாய்ப்புகள் மன்னன், உள்ளாட்சி, கோயில், பெரும் நிலவுடைமையாளர் போன்ற சிலரின் கட்டுப்பாட்டில் இருந்ததால், அவர்கள் நிலத்தின் உற்பத்திப் பயனையும் எடுத்துக்கொண்டதில் வியப்பெதுவு மில்லை. இதனால், உழவர்கள்–நிலத்தினை உழுதுவந்தவர்கள் தங்கள் உற்பத்தி உரிமைகளைச் சிறிதுசிறிதாக இழக்க வேண்டியதாகிவிட்டது. இது நாளடைவில், அவர்களது நிலத்தி லேயே அவர்கள் உழுகுடிகளாக–குத்தகையாளராக மாறும் நிலைக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டது. சில வேளைகளில், கூலி உழைப்பாளர்களாகவும் அவர்கள் நிலைகுறைய வேண்டியதாகிவிட்டது.



நில உற்பத்தியாளர்களின் பயன்பாட்டில் இருந்து வந்த விளைநிலங்கள் ‘குடிநீக்கி’யும் ‘குடிநீக்கா’மலும் கோயிலுக்கும் வேறு வகைகளுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டமை இங்கு நோக்கத்தக்கது.

**நீர் வளத்தினால் பயன்பெற்ற உடைமைப் பகுதியினர்**

ஏரி, குளம் போன்ற நீர் வள வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்ததனால், நில உற்பத்தி மிகுந்து, மிகு உற்பத்தியினால் வளமும் வாழ்வும் ஏற்பட்டது உண்மைதான் என்றாலும், இதன்வழிப் பெற்ற பயன்கள் யாவும் நில உற்பத்தியிலும் உழைப்பிலும் நேரடியாக ஈடுபட்டிருந்தவர்களைச் சென்றுசேர வில்லை. மாறாக, நீர் வள வாய்ப்புகளைத் தங்கள் பிடிக்குள் கொண்டிருந்த, உற்பத்தியிலோ உழைப்பிலோ நேரடியாக ஈடுபடாத நிலவுடைமைப் பிரிவினருக்கே பயன்கள் யாவும் சென்றுசேர்ந்தன.

இவை யாவற்றுக்கும் மேலாக, வேறு ஒரு வகையான உழைப்புப் பறிப்பும்–சுரண்டலும் நடைபெற்றது. கோயில் அல்லது ஊர்ப் பொது நிலங்களில் செப்பனிடும் செயலோ, ஏரி-குளங்களை அமைக்கும் பணியோ, ஏரி-குளங்களைச் சீராக்கும் தேவையோ ஏற்பட்டபோது, ஊர் மக்களிடம் வெட்டி எனப் படும் கூலியில்லா உழைப்பும் வலுவில் பெற்றுக்கொள்ளப் பட்டது. பொது நிலங்களின், குறிப்பாகக் கோயில் நிலங்களின் பயன்களைப் பெரும்பாலும் உடைமைப் பகுதியினரே துய்த்து வந்தாலும், இத்தகைய 'வெட்டி வேலை'களை, உழைக்கும் ஊர்ப் பொதுமக்கள்தாம் செய்தார்களேயன்றி நில உடைமைப் பகுதியினர் செய்ததாகத் தெரியவில்லை. உழைக்கும் மக்களின் 'வெட்டி வேலை'களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இத்தகைய நிலைமுதலீட்டு வடிவங்கள்–கட்டமைப்புக்கள் எவையுமே, இந்த உழைக்கும் மக்களுக்கு உரியதாகாதது மட்டு மன்றி, அவர்களுக்குப் பயனாகவுமிருக்கவில்லை. மாறாக, அவர்களது உரிமைகளை மேலும் பறிக்கவும், அவர்களைக் கூடுதலாகச் சுரண்டவுமே அந்த நிலைமுதலீடுகள் துணை நின்றன.

இந்த முரண் கொண்ட நிலைமைகள்–மாறுதல்கள், உற்பத்தி உறவுகளில் பல புதிய சிக்கல்களையும் நெருடல் களையும் பிணக்குகளையும் பூசல்களையும் கொண்டுவந்தன. ஆயினும், நீர் வளத்தையும் நில வளத்தையும், ஆட்சியதிகாரம் என்ற வல்லாண்மையுடன் பெற்றிருந்த உடைமைப் பகுதியினர் யாவற்றையும் தங்களது நலனுக்கு ஏற்றதாகத் திருப்பிக்கொள் வதில்–மாற்றிக்கொள்வதில் முழுமையான வெற்றி பெற்று வந்தார்கள் என்றுதான் கூறவேண்டும்.

இடைக் காலத்தில் நிலவுடைமை மற்றும் நில உற்பத்தி முறைமைகளில் இத்தகைய புதிய போக்குகள் நிறுவப் பட்டமைக்கும் நிலைபெற்றமைக்கும் வேளாண் தொழில் நுட்ப வளர்ச்சியே ஒரு காரணியாகிவிட்டது.

அதே போன்று, இதன் மறுபக்கமாக, புதிய பாய்ச்சல் முறைகளும் புதிய விளைபொருள்களும், காட்டு நிலங்களை மனித உழைப்பினால் மட்டும் பண்படுத்தி உற்பத்திக் கேற்றவையாக மாற்றுவதையும் சிக்கலாக்கிவிட்டன. ஏனெ னில், பரவலான நெல் விளைவுகளால் மக்களின் உணவுப் பழக்கம் மாறியிருந்தது ஒரு புறம்; புதிதான நெல் போன்ற பயிர்களின் விளைச்சலுக்கு நீர் வளம் மிகுதியாக வேண்டப் பட்டது மறுபுறம். இதற்கேற்ற வகையில் புதிய நிலங்களைப் பண்படுத்தி உற்பத்திக்குக் கொண்டுவர மனித உழைப்பு மட்டுமே போதுமானதாக இருக்கவில்லை. அத்தகைய



நிலங்களுக்கு நீர் பெறவேண்டுமெனில், நீர் வள வாய்ப்புகளைத் தங்களிடம் கொண்டிருந்த நிலவுடைமைப் பகுதியினரின் ஒத்துழைப்பினையும் பெறவேண்டியதாகவிருந்தது. பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில், நிலங்களை உற்பத்திக்குக் கொண்டுவருவதில் மன்னர்களும் உடைமைப் பகுதியினருமே பெரிதும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர் என்பதைப் பார்த்தோம். நீர் வள வாய்ப்புகளைக் கைக்கொண் டிருந்தவர்களின் முழுமையான ஒத்துழைப்புடன்தான், புதிய நிலங்களைப் பண்படுத்தி உற்பத்திக்கு ஏற்றவையாக மாற்ற முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு அப்போது முறைமை பெற்றுவிட்டது என்பதையே இவை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**நீர் வளத்தினால் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகள்**

சிறியதொரு குடி அல்லது குலத்தின் தலைவனால் செய்ய இயலாத முயற்சிகளையும் பணிகளையும் வேண்டி நின்ற இந்த நிலத்தொடு நீரை இணைக்கும் உற்பத்தி முயற்சிகள் தொடர்ந்த போது, இவை காலப்போக்கில் நான்கு வகையான வளர்ச்சி நிலைகளுக்கு இட்டுச்சென்றன.

முதலாவது, நில உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்ட வெவ் வேறு சிறு குலங்களும் குடிகளும் 'செம்புலப் பெயல் நீர் போல' ஒன்று கலந்தமையாகும்.

இரண்டாவது, இதுவரை நில உற்பத்திக்குப் பயன்பட்டு வந்த இயற்கையாகக் கிடைத்த மழை நீரும் இயல்பாக ஓடிய ஆற்று நீரும் கட்டுப்பாடுகளின்றிக் கிடைத்துவந்த நிலை மாறி, புதிய நீர் வளங்களான ஏரிகளும் குளங்களும் பெருமளவு மன்னனுக்கோ, தனிப்பட்ட தலைவர்களுக்கோ, ஒரு சில குழுக் களுக்கோ உரிமையுள்ளவையாக மாறிவிட்டதால், கட்டுப்பாடு கள் ஏற்படுத்தப்பட்டமை.

மூன்றாவது, நீர் வளங்கள் மன்னர்களுக்கும் பிறருக்கும் உரிமையுள்ளனவாக மாறிய நிலையில், நீர் வளத்தொடு நிலங்களையும் கைக்கொண்டு, நேரடியான உற்பத்தியாளராக இல்லாமல், உழுவிப்போராக மட்டுமேயிருந்து விளைபயனைப் பெற்றுக்கொண்ட ஒரு நிலவுடைமைப் பிரிவினர் தோன்றி யமை.

நான்காவது, நில உற்பத்தியில் கிடைத்த பயன்கள் யாவற்றையும் முழுமையாகத் துய்த்துக்கொண்டிருந்த வாய்ப்பு களையும் தடையற்ற உரிமைகளையும் ஒரு சேர இழந்து, விளைச்சலின் பெரும் பகுதியினை, உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாதவர்களுக்குக் கொடுத்துவிட்டு, எஞ்சியதை மட்டும்

எடுத்துக்கொள்ளும் நிலையில் உழைப்புக் குடிகள் என்ற தனிப் பிரிவினர் உருவானமை.

இந்த நான்கு நிலைமைகளும், அன்றைய கட்டத்தில் பல்வேறு சமூக-பொருளிய அசைவியக்கங்களுக்கும் மாறுதல் களுக்கும் வளர்ச்சிகளுக்கும் வழியமைத்தன.

இந்த இடத்தில், *புறநானூற்*றுப் பாடல் ஒன்றினை ஒப்பீட் டுக்காக எடுத்துக்காட்டுவது பொருத்தமாக அமையும்.[18]

கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணாவு மில்லை
துடியன் பாணன் பறையன் கடம்பனென்று
இந்நான் கல்லது குடியும் இல்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தென
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே.

புதிய வளர்ச்சி நிலைகளில் ஏற்பட்ட உடன்விளைவாக, உற்பத்தி நிலங்கள் பறிபோவதைக் காட்டிலும், முன்னைய நிலையே நீடித்திருக்கலாம் என்ற மனப்போக்கில் இப்பாடல் எழுந்திருக்கக்கூடும். வளர்ச்சிக்கு முன்பு, புதிய தொழில்நுட்ப அறிமுகத்துக்கு முன்பு, இயற்கையை எதிர்நோக்கிய உழவாக இருப்பினும் உள்ளம் நிறைவாக இருந்திருக்கும். யாருக்கும் கட்டுப்பட்ட–அடிமைப்பட்ட வாழ்க்கையன்று அது. ஆனால், புதிய நிலைமைகளில், அவர்களது நிலத்திலேயே அடிமை உழைப்புச் செய்து, உழைப்பில் ஈடுபடாதவர்களுக்கு உற்பத்தியை அள்ளித் தரவேண்டிய நிலை ஏற்படுத்திய வெறுப்பில் வெம்பிப் பாடியிருக்கலாம்.

இந்த வளர்ச்சியின் உடன்வரவாக ஏற்பட்ட குடிகளின் இணைப்பைக்கூட இப்பாடல் மறுக்கிறது. ‘பழைய குடி களாகவே இருப்போம், புதிய கலத்தல் வேண்டாம்; பழைய புன்செய் உணவு முறையையே கொள்வோம், அடிமைத் தளை யில் இருந்துகொண்டு உற்பத்தி செய்துதரும் புதிய நெல்லுணவு வேண்டாம்; பழைய நடுகல் வழிபாடே போதும், உடைமைத் தேவைகளுக்கேற்ப உருவான புதிய கடவுளர்கள் வேண்டாம்’ என்று தெளிவான குரலோடு இப்பாடல் ஒலிக்கிறது. புதிய உற்பத்தி வாய்ப்புகளினால் அப்போது உருவாகிக்கொண் டிருந்த நாட்டார் வழிபாட்டுக்கு மாறான கடவுளர்களையும் விட்டுவிடவில்லை. இப்பாடல் காலத்தால் முன்னையது என்றா லும், தோற்றநிலையிலேயே–மிகத் தொடக்கநிலையிலேயே



ஏற்பட்டுவிட்ட மாறுதல்களின்–வளர்நிலைகளின், முரண் களை–குறைகளை–ஏற்றத்தாழ்வுகளைப் புரிதலுணர்வோடு உணர்த்த முயலுகிறதோ என்று தோன்றுகிறது.

இத்தகைய பல முரண்கள் இருந்தபோதிலும், இந்தப் புதிய தொழில்நுட்பம் பல முனைகளில் முன்னேற்றம் கொண்டதாக அமைந்திருந்தது. இது நீரை நேரடியாக நிலத்துக்கே கொண்டு வந்து தந்தது; நீர் இருப்பின் நிலை தெரியுமாதலால் திட்டத் துடன் வேண்டியவாறு வேளாண்மை செய்யமுடிந்தது; நெல், கரும்பு போன்ற நீரின் பயன் மிகுந்த பயிர்களை விளைவிக்க முடிந்தது; இயற்கைக் காரணிகளால் இடையில் உற்பத்திச் சீரழிவு ஏற்படுவது தடுக்கப்பட்டது; இவ்வாறான நல்வாய்ப்பு களால் விளைநிலங்களின் விரிவு மிகுந்து பரந்த அளவில் பயிர் செய்ய முடிந்ததாலும், வேளாண் உற்பத்தி முறை எளிதான தாலும், உள்ளூர் உணவுத் தேவையைவிட மிகுஅளவில் விளைச்சல் பெறமுடிந்தது; இதனால் கிடைத்த எஞ்சிய–உபரி உற்பத்தி விற்பனைப் பண்டமாக மாற முடிந்தது. இதனால் கிடைத்த பயன்கள்தாம் விளைநிலங்களை நோக்கிப் பலரையும் ஈர்த்தன. முரண்களுக்கிடையிலும் உற்பத்திப் பெருக்கம் தொடர்ந்து நீடித்தது. கோயில்களையொட்டிய பொருளிய

மையமும் வளர்ந்து வலுத்தது.

## இயல் 9

# கோயில் என்ற பொருளியல் மையம் ஏன்?

இங்கு இரண்டு அடிப்படையான வினாக்கள் எழுவதைப் புறக்கணித்துவிட முடியாதுதான்.

தனி நிலவுடைமையாளர்கள் பலராக விரவிக் கிடந்தும், கோயில் என்ற மற்றோர் அமைப்பு பொது நிறுவனமாக அவர்களாலேயே நிலைநிறுத்தப்பட்டது ஏன்?

குடியுரிமையாக ஆட்சியதிகாரத்தைப் பெற்று, மரபு வழியாக மாண்புகளையுற்று, இறை வடிவாக உயர்வினை யடைந்து, அமைப்பென்னும் ஆற்றலால் நிலைத்து நின்று, படை வலிமையால் வல்லாண்மை கொண்டு அனைத்து மக்களின் ஏற்பினை எட்டியிருந்தும், அன்றைய மாமன்னர்கள் ஒரு சார்பாக நிலவுடைமை நலன்களைக் காக்கும்படியாக ஏன் நடந்துகொண்டார்கள்?

இந்த இரு வினாக்களுக்குமான விளக்கங்கள் கோயில் அமைப்பினைப் பற்றிய ஆய்வுகளுக்கு இன்றியமையாதன.

கோயில் என்ற நிறுவனத்தின் உயர்வினையும் அதன் செயல்பாடுகளின் செம்மையினையும் செல்வத்தின் சிறப் பினையும் செல்வாக்கின் வீச்சினையும் பயன்பாட்டின் மேன்மையினையும் பங்களிப்பின் பரவலினையும் கலை நுணுக்கக் காட்சியினையும் விரித்தெழுதிப் பெருமை பாராட்டிய வரலாற்றாளர்கள், அதனுடைய தோற்றத்துக்கான காரணி களை ஓரளவு விவரித்திருந்தாலும், நிறுவன மாற்றத்துக்கான பின்னணியினை முழு அளவில் வெளிக்கொண்டுவர முயல வில்லை என்றே கொள்ளவேண்டும். புரிதலுக்காக, இதனைச் சற்று விரிவாகவே பார்க்க வேண்டியுள்ளது.

### பழங்கால நம்பிக்கைகள்

இயற்கையைப் புரிந்துகொள்வதிலும் அறிந்துகொள்வ திலும் முழு அறிவு பெறாதிருந்த பழங்கால மனிதன், சில நம்பிக்கைகளைக் கொண்டு, அவற்றினடியாகப் பிறந்த மந்திரங் களையும் சடங்குகளையும் பின்பற்றி வந்தான்.[1] கடவுள், சமயம் என்ற மனிதக் கண்டுபிடிப்புகள் தோன்றுதற்கு முன்னரே இந்த



வழக்காறுகள் இருந்துவந்துள்ளன. பின்னர், கடவுள் நம்பிக்கையும் சமயமும் தோற்றம் பெற்றன. இந்த வளர்ச்சி நிலைகளையும் வேறுபாடுகளையும் நாட்டார் வழக்காற்றியல் அறிஞர் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள் கீழ்க் கண்டவாறு விளக்குவார்:[2]

> ஒரு விருப்பத்தை நிறைவேற்ற, வேண்டுதலையும் வழிபாட்டையும் அடிப்படையாகக் கொண்டது சமய மென்றும், பாவனைச் செயல்களையும் (mimetic acts) கட்டளையிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது மந்திரமென்றும் இதனைச் சுருக்கமாகக் கூறலாம். சமயங்கள் தோன்றிய பின்னர் மந்திரம் சமயத்துடன் இணைந்து சில சடங்குகள் வடிவில் காட்சியளித்தது.

வீரச்செயல் புரிந்து குடியினரைக் காத்த முன்னோரைப் போற்றும் நடுகல் வாழ்த்தாகத் தொடங்கிய உருவ வழிபாடு, தொன்மைக் காலச் சடங்குகள்–நம்பிக்கைகள், மரம்–இயற்கை யைத் தொழுதல் போன்றனவற்றோடு இணைந்து இறைவணக்க மாக வளர்ந்து, சங்கம் மருவிய காலத்தில் சமய நிலையை அடைந்தது. இதையடுத்து, இறந்தோரைப் புதைத்த இடங் களில் எழுப்பப்பட்ட அவர்தம் நினைவிடங்கள் கோயில் களாகக் கொள்ளப்பட்டன.[3] மக்கள் கூடும் மையங்களாக அமைந்திருந்த இவ்விடங்களையொட்டியே வளர்ந்த சிற்பக் கலை வளர்ச்சி, இவற்றுக்கு மேலும் மெருகூட்டியது. பின்னர், வேளாண் பெருக்கத்தினால் வீச்சுப் பெற்ற பக்தி இயக்கம் கோயில்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தியது–வலுப்படுத்தி யது–வளப்படுத்தியது.

### தொடக்கத்தில் இறைபணியாளர் இல்லை

தொடக்கக் கட்டத்தில், வெறியாடும் வேலனாக இருந் தாலும் வேறு வகையினராக இருந்தாலும் நம்பிக்கைகளோடு தொடர்புகொண்டிருந்த இடங்களில், முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றியோராக–இறைமைப் பணி களை முழுநேரக் கடமையாக ஏற்றுக்கொண்டிருந்தோராகத் தமிழகத்தில் பிராமணர்கள் போன்றவர்கள் அல்லது பிற பிரிவினர் யாரும் இருக்கவில்லை. கோயில் என்ற வழிபாட்டுக் கூடம் மக்கள் வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாக வளர்ந்த பிறகுகூட, பிராமணர்கள் பூசாரிகளாக மாறிவிடவில்லை. சங்க காலத்தில் மூவேந்தர்களில் மிகச் சிலர் நடத்திய வேள்வி போன்ற வேண்டுதல் சடங்குகள், பிராமணர்களைக் கொண்டு நடத்தப் பட்டிருக்கின்றன என்றாலும், இவை மக்கள் வழக்காறுகளாக

இல்லாமல் மிகமிக அருகியே காணப்படுகின்றன. வேந்தர் சிலர் தமக்காக நடத்திக்கொண்ட தனி நிகழ்வுகளாகவே இவை கூறப்படுகின்றன. இவற்றில் மக்கள் பங்கு கொண்டதாகவும் தெரியவில்லை. இந்த வேள்விகள், தமிழ் மக்களது மட்டு மல்லாது, அவற்றை நடத்திய வேந்தர்களின் நம்பிக்கை களோடும் இறைவழிபாட்டு உணர்வுகளோடும்கூடத் தொடர் பினைப் பெற்றிருக்கவில்லை. இந்நிகழ்வுகள் மக்களின் அல்லது மன்னர்களின் அன்றைய வழிபாட்டு முறைமைகளோடும் இயைபு கொண்டிருக்கவில்லை. ஒவ்வாத மேல் மட்டச் சடங்கு களாகவே அவை நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

வழிபடும் இடங்களையொட்டி ஓவியம் போன்ற நுண் கலைகள் பேணப்பட்டு, கோயில் விரிவடைந்த தளமாக உயர்நிலை எய்திய பிறகும்கூட இறைவனுக்கும் மக்களுக்கு மிடையே யாரும் தோன்றியதாகத் தெரியவில்லை. *பரிபாடல்* காட்டும் திருப்பரங்குன்றத்தின் கோயிலில் ஓவிய மண்டபங் களும்[4] ஆடல்-பாடல் போன்ற போட்டிகள் நடைபெறும் களங்களும்[5] இருந்துள்ளன என்றாலும், இறை பணியாளர்கள் யாரும் காணப்படவில்லை. வடவர் வரவினால், வேத, புராணக் கதைகள்–கற்பனைகள் சில தமிழ்க் கடவுளர்களுடன் இணைக் கப்பட்டன.[6] இவையே *பரிபாடல்*, *திருமுருகாற்றுப்படை* போன்ற இலக்கியங்களில் இயம்பப்படுகின்றன. இவற்றில் இடம்பெறும் அந்தணர் பற்றிய சில குறிப்புகள், அவர்கள் மறை வல்லுநர்களாக இருந்தமையையும் வழிபடுவோராகக் கோயி லுக்கு வந்தமையையும் கூறுகின்றன. ஆனால், மக்களுக்காகக் கோயில் வழிபாட்டினை நடத்தித் தருகின்ற பூசாரிகளாக அந்தணர்கள் இனம் காணப்படவில்லை; காட்டப்படவு மில்லை. வழிபாட்டு முறைகளில் எவ்வகையிலும் ஆரியச் செல்வாக்கு ஏற்பட்டுவிடவில்லை.

கோயிலுக்கு வழிபட வந்த மக்கள், தத்தம் நம்பிக்கைகளுக் கேற்பத் தாமே இறை தொடர்பான பணிகளை–சடங்குகளை ஆற்றிக்கொண்டனர்.[7] அதேபோன்று, அந்தணர்களும் தாங்கள் வழிபடும் வேளைகளில் தமக்குரிய சில வழிபாட்டு முறை களைப் பின்பற்றினரேயன்றி, வழிபாடுகளைப் பிறருக்காக நடத்தித் தந்தவர்களல்லர்.[8] இதனைப் *பரிபாடலும்* *திருமுரு காற்றுப்படையும்* தெளிவுபடுத்துவன. இதனால்தான், கிபி நான்காம் நூற்றாண்டுக்கு முன்னர், ஆரியவயப்பட்ட கோயில் கள் எதுவும் தமிழ் மண்ணில் அமைந்திருக்கவில்லை என்று பி.டி. சீனிவாச அய்யங்கார் போன்றவர்கள் முடிவுக்கு வந்தார் கள்.[9] இன்னும் சொல்லப்போனால், கிபி ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இந்நிலையே நீடித்தது என்று கூறமுடியும்.



எனவே, இக்காலம் வரை தமிழகக் கோயில்களில் அந்தணர்–பிராமணர் அர்ச்சகர்களாக இருந்திருக்க முடியாது. தமிழ் நாட்டைப் பொருத்த வரை, பிராமணர்கள் உள்ளிட்ட வேறு யாருமே, தொழில் அடிப்படையில் வழிபாட்டினைப் பிறருக் காக நடத்தித் தரும் பணியினை மேற்கொண்டிருக்கவில்லை. முழுமைக் கால அச்சகர்களாக அக்காலத்தில் யாரும் இருக்கவு மில்லை. மக்கள், தாம் பின்பற்றிய ஒழுகலாறுகளைக் கொண்டு தாமே தமக்கு வேண்டியவாறுதான் வழிபாடுகளை நடத்தி வந்தனர்.

**தொடக்கத்தில் கோயிலுக்கு உடைமையும் இல்லை**

இக்காலகட்டத்தில், வழிபடுமிடங்களாக இருந்த கோயில் கள் கொடைகளைப் பெற்றோ வேறு வகையிலோ உற்பத்தி தரும் உடைமைகள் அல்லது வேறு வகையான சொத்துக்கள் எதையும் உரிமையாகக் கொண்டிருக்கவில்லை என்பதனையும் இங்கு பார்க்கத் தவறிவிடக்கூடாது. *எட்டுத்தொகை*, *பத்துப்பாட்டு* இலக்கியங்களன்றி, பின்னர் வந்துற்றனவும்கூட, வழிபடும் இடங்களை அல்லது கோயில்களை உடைமைகள் கொண்ட அமைப்புகளாகக் குறிப்பிடவில்லை. அதேபோன்று, வடக்கிலிருந்து வந்துற்ற பௌத்தமும் சமணமும்கூட அன்றைய நிலையில் நிலம் போன்ற உடைமைகளை உடைத்திருக்க வில்லை.

சங்க காலத்தையடுத்த காலப் பகுதியில் வேளாண் வளர்ச்சி யினால் வளம் பெற்ற பகுதிகளின் தேவைகளையொட்டிப் பல கோயில்கள் எழுந்தன. புதிதாக உருவாகி நிலைபெற்று, நிலவுரிமை பெற்ற பிரிவினருக்கு, அவர்களது வளர்ச்சிக்கேற்ற வகையிலான புதிய கடவுளர்கள் வேண்டியிருந்ததால், அதற் கேற்ற வடிவிலான கோயில்களாகவே இவை அமைந்தன. இதற்கு வாய்ப்பாகத் தோன்றிய சிவ வழிபாட்டின் செல்வாக்கும் சைவத்தின் வளர்ச்சியும் கோயில்களின் பெருக்கத்திற்கு ஊற்றுக் கண்களாகத் திகழ்ந்தன.

ஆனால், அப்போது தோன்றிய கோயில்கள் யாவும் மரம், செங்கல் போன்ற நீடித்து நிற்காத பொருள்களால் கட்டப் பட்டன. பாறைகளைக் குடைந்து அழியாத கோயில்களை உருவாக்கும் கலையைப் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மன் (கிபி 590-629) தொடக்கி வைத்தான். தொடர்ந்து, பல்லவர் காலப் பிற்பகுதியிலும் சோழர் காலத்திலும் செங்கற் களால் கட்டப்பட்டிருந்த கோயில்கள் பலவும் கற்களால் கட்டப்பட்ட கோயில்களாக–கற்றளிகளாக மாற்றம் பெற்றன; புதிய பல கற்கோயில்களும் எழுந்தன. ஆனாலும், நிலங்களில்

பணிபுரிந்து வந்த உடல் உழைப்பாளர் போன்றோர் தொடர்ந்து தங்களுடைய முன்னைய வழிபாட்டு முறைகளிலேயே நீடித்து வந்தனர். புதிய கடவுளர்களின் அறிமுகமும் புதிய வழிபாட்டு முறைகளும் புதிய கோயில்களின் வரவும் அவர்களிடையே பெரும்பாலும் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்திவிட வில்லை என்றே கூறலாம்.

கோயில்களில் விளக்குகளுக்கான நெய், வழிபாட்டுக்குரிய பால் ஆகியவற்றுக்காகவும் பிற வகையான பணிகளுக்காகவும் பயன்படுதற்காக ஆடு, மாடு போன்ற நிலையான கொடைகள் தரப்படுவதில் தொடங்கிய வழக்காறு, கோயிலின் இறைமைப் பணிகளுக்காக விளைநிலங்களைக் கொடுப்பதாக மாறியது. கோயில்கள் கற்றளிகளாக மாறியமையும், கொடைப் பொருள் கள் நிலங்களாக மாற்றம் பெற்றமையும் அந்தந்தப் பகுதிகளின் வேளாண் வளர்ச்சியின் வளத்துக்கேற்பவும் எஞ்சிய மிகை உற்பத்திக்கேற்பவும் அமைந்திருந்தமையை நன்றாக அறிய முடியும்.

தமிழ்நாட்டில், கோயில்களின் வளர்ச்சி, வளம் நிறைந்த உற்பத்திப் பகுதிகளையொட்டியே ஏற்பட்டிருக்கின்றது. அதே போன்று, நிலக்கொடை தரப்படுவதும் பல்லவர் காலப் பகுதி யில் தொடங்கி, சோழர் காலத்தின் முற்பகுதியில் சற்று வளர்ந்து, பிற்பகுதியில் மிகுந்திருப்பதைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.[10] இது வேளாண் வளர்ச்சியினை அடியொற்றியே நடந்திருக்கிறது. தமிழகத்தில் சமணம் செல் வாக்குப் பெற்றிருந்ததாகக் கொள்ளப்படும் காலகட்டத்தில் கூட, சமணப் படுக்கைகள் போன்றனவே இருந்திருக்கின்றன. வேளாண் வளர்ச்சிக் கட்டத்தையடுத்தே சமணக் குடைவரைக் கோயில்கள், கற்றளிகள் என உருவாகி, நிலம் போன்ற கொடை களையும் பெற்றுள்ளன.[11] இது சைவம் காலூன்றிய காலப்பகுதி யாகும். கோயில்களின் வளர்ச்சியும் அவற்றின் உடைமை யுரிமையும், வேளாண் வளர்ச்சியோடு முழுமையாகத் தொடர் புடையன.

இடைக் காலத்தில் தோன்றிய கோயில்கள் இப்படி வள மான நிலங்களைப் பெற்றுவந்தமையே, அவை நிலவுடைமை யாளர்களின் அமைப்புகளாக உருவாகி வளர்ந்து வந்தமையை உணர்த்துகின்றது. படிப்படியாகவும் நுகர்வுக் கேற்றவாறும் இத்தகைய கொடைகளைக் கொண்டு இக்காலத்திய கோயில் கள் கட்டமைப்பு வாய்ப்புகளைப் பெற்று வந்ததைக் காண முடியும். இதனையொட்டியே, நிலவுரிமையாளர்களின் தேவை களுக்கேற்பக் கோயில்கள் பன்முகத் தன்மைகளைக் கொண்ட நிறுவனங்களாகவும் வளர்த்தெடுக்கப்பட்டன.[12] இதே காலப்



பகுதியில்தான் பிராமணர்களும், விளைநிலங்களைக் 'கொடை' களாகப் பெற்று நாட்டின் வேறுவேறு இடங்களில் குடியேறி னார்கள்.

**உடைமை ஏற்பட்ட பின்னரே பிராமணர் நுழைந்தனர்**

இவ்வாறு கோயில்கள் உற்பத்திக்கு வாய்ப்பான உடைமை களை–சொத்துக்களைப் பெற்ற அமைப்புகளாக மாறிய பிறகு தான், அக்கோயில்களின் இறைமைப் பணிகளை மேற் கொள்ளும் பொறுப்புகளைப் பிராமணர்கள் கையகப்படுத்தத் தொடங்கினார்கள். அதாவது, கோயில்கள் உடைமைகளை– சொத்துக்களைக் கொண்டவுடன்தான், தமிழ்நாட்டில் இருந்த பிராமணர்கள் கோயில்களில் தொழில் அடிப்படையில் முழுவேளை அர்ச்சகர்களாக மாறினார்கள். இந்த இரண்டு நிகழ்வுகளையும் பிரித்துப் பார்க்கமுடியாது.

வழிபடும் மையங்களாக இருந்த இடங்கள் உடைமைகளை– சொத்துக்களைப் பெறுகின்ற வரை அவற்றில் முழுவேளை இறைமைப் பணியாளர்கள்–அர்ச்சகர்கள் யாரும் இருக்க வில்லை. தமிழ்நாட்டில், கோயில்களையொட்டி வளமும் வருவாயும் வந்த பின்னர்தான், இவற்றின் பயனைப் பெறுகின்ற வகையில் பிராமணர்கள் இதில் ஈடுபடத்தொடங்கினார்கள். இப்படி, அக்காலகட்டத்தில் வளமும் வருவாயும் பெறாத கோயில்களில் பிராமணர் அல்லாத பூசாரிகள்தாம் இருந்தார் களேயன்றி, பிராமணர் யாரும் இருக்கவில்லை என்பதையும் பார்க்கவேண்டும். பெரும்பாலும், இந்த நிலைதான் இன்றுகூட இருக்கிறது. பி.டி. சீனிவாச அய்யங்கார் இந்தக் கண்ணோட்டத் தில் கூறவில்லை என்றாலும், கோயில்களில் பிராமணர் முழுமை யான இறைபணியாளராக மாறும் முன், அவற்றுக்குப் பெருமள வில் உடைமைகளும் இருக்கவில்லை; அப்போது யாரும் அவற்றைக் கண்டுகொள்ளவுமில்லை; கைக்கொள்ளவும் முனையவில்லை; கோயில்கள் உடைமைகளை–சொத்துக்களை மிகுதியாகக்கொண்டு வளமும் வருவாயும் பெற்றதும், பிரா மணர் நுழைந்ததும், தமிழ்நாட்டில் இணைந்தும் அடுத்தடுத் தும் நிகழ்ந்து வந்திருக்கின்றன.

அன்று வளர்ச்சி பெற்று நின்ற கோயில்களில் அர்ச்சகர் போன்ற பொறுப்புகளைப் பிராமணர்கள் ஏற்றுக்கொண் டமைக்குப் பல்வேறு காரணிகள் கூறப்பட்டாலும்,[13] கோயில் கள் உடைமைகளைப் பெற்ற பிறகே இது நிகழ்ந்திருக்கிறது என்பதை மறுத்துவிடமுடியாது. அதே போன்று, தமிழகமெங் கும் விரவிக்கிடக்கின்ற உடைமைகள் ஏதுமில்லாத பிற கோயில் களைப் பிராமணர்கள் ஏறிட்டும் பார்க்கவில்லை என்பதையும் இங்கு மீண்டும் நினைவில் கொண்டு பொருத்திப் பார்க்க

வேண்டும். அத்தகைய கோயில்கள் இன்றுவரை, பிராமணரல்லாத பூசாரிகளாலேயே பேணப்பட்டு வருகின்றன. இந்தப் பின்னணி, வரலாற்றாசிரியர்களால் வெளிக்கொணரப்படாமல் முழுமையாக மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டுமே வந்திருக்கிறது.

பிராமணர்கள் மட்டுமே கோயில்களில் இறைமைப் பணிகளை மேற்கொள்ளும் அர்ச்சகர்களாக இருந்தார்கள் என்று மீனாட்சி போன்ற வரலாற்றாசிரியர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள்.[14] இருந்தாலும், திருவல்லிக்கேணியில் உள்ள எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளப்படும் ஒரு பல்லவர் கல்வெட்டு,[15] அர்ச்சகர் மற்றும் கோயிலின் உரிமை குறித்த பல ஐயங்களை எழுப்புகின்றது. இதில் கோயிலுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் 'குலங்கிழார்கள்' என்று குறிக்கப்படுகிறார்கள். இதனை ஆராய்ந்த கல்வெட்டு அறிஞர் வி. வெங்கையா, குலங்கிழார்கள் என்பவர்கள் கோயில் உரிமை கொண்டவர்களாகவோ அல்லது அர்ச்சகர்களாகவோ இருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கிறார்.[16] இக்கல்வெட்டுப் பதிவில் நிலங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

பொதுவாகக் 'கிழார்' என்ற சொல் நிலம் கொண்டவர்களைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது. வேள்விகுடிச் செப்பேடுகள் போன்றவற்றில் பிராமணர்களும் கிழார்களாகக் கூறப்பட்டிருந்தாலும்[17] பெரும்பாலும் நில உரிமை கொண்ட வேளாளர்களே கிழார்கள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றனர். இக்கல்வெட்டின் வரிகளைக் கொண்டு வேறு விவரங்கள் தெரிந்துகொள்ள முடியவில்லையாயினும், கோயிலின் உரிமை கொண்டவராக அல்லது அர்ச்சகராக நிலத்தோடு தொடர்புடையவர்களே இருந்திருக்கிறார்கள் என்பது நோக்கத்தக்கது. இவர்கள் பிராமணர் அல்லாதவராகவும் அமையலாம் என்று கொள்வதற்கும் இடம் தெளிவாகவே இருக்கிறது. இதேபோன்று, கோயிலின் 'குலங்கிழார்' பற்றி விழுப்புரம் அருகிலுள்ள திருவாக்கரைக் கல்வெட்டும் (கிபி 897) குறித்திருக்கிறது.[18] கோயில் உரிமையாளராக இருந்தாலும் அர்ச்சகராக இருந்தாலும் அவர்கள் நிலவுரிமைகொண்ட பிரிவினர்தாம். குலங்கிழாரைப் பிராமணரல்லாத அர்ச்சகராக எடுத்துக்கொண்டாலும், அடுத்து வளங்கள் மிகுந்த பின்னர், திருவல்லிக்கேணி கோயிலும் பிராமண அர்ச்சகரின் கைகளுக்குச் சென்றுவிட்டதைப் பார்க்கிறோம்.

சங்க காலத்தையடுத்த காலப்பகுதியிலும், அதற்குப் பின்னரும் தமிழ்நாட்டில் பிராமணர்களின் குடியேற்றங்களும் குடியிருப்புகளும் வளமான நீர் நிலப் பகுதிகளையும் உடைமையுரிமை கொண்ட கோயில்களையும் ஒட்டியே அமைந்திருந்தன. அதேபோன்று, நீர் வளமற்ற பகுதிகளில் இருந்த கோயில்கள் பலவும், நிலம் போன்ற உடைமைகளைத் தமக்கெனக் கொண்டிராததால், பிராமணர் குடியேற்றங்களும் அங்கு ஏற்படவில்லை.[19]



தமிழகத்திற்கு வந்து குடியேறிய பின்னர், வேதப் *பாராயண*ங்கள் போன்ற உற்பத்தியல்லாத பணிகளில் மட்டுமே ஈடுபட்டிருந்த பிராமணர்களின் ஈர்ப்பு நிலங்களின்பால் திருப்பப்பட்டது, கோயில்கள் இவ்வாறு சொத்துக்களைப் பெற்றதிலிருந்துதான் தொடங்குகிறதா அல்லது தனியுடைமை தோன்றிய பின் சொத்தாக மாறிய விளைநிலங்களை வேறு வேறு வகைகளில் மன்னர்களிடமிருந்து கொடையாகக் கொண்டதுடன், கோயில் நிலங்களின் பயனை அடையவும் பிராமணர்கள் இத்தகைய இறைமைப் பணிகளை மேற்கொண்டார்களா என்பனவெல்லாம் தனியான–விரிவான ஆய்வுக்குரியனவாகும்.

**கோயில் பயன்களை வேளாளர் விட்டுவிடவில்லை**

இவை ஒருபுறமிருக்க, பிராமணர்கள் நிலக்கொடை கொண்டிருந்தாலும் இறைமைப் பணிகளை ஏற்றிருந்தாலும் அவர்தம் நலன்கள் யாவும் நிலவுடைமைப் பிரிவினரின் நலன்களோடு எவ்வகையிலும் முரண்பட்டிருக்கவில்லை; மாறாக, முழுமையாக ஒத்திருந்தன. அன்றைய கோயில், நிலவுரிமைப் பிரிவினருக்காகவே இருந்தது என்பதால், இறைமைப் பணிகளில் ஈடுபட்டிருந்த பிராமணர்களுக்கான பயன்கள்கூட, அந்த உடைமைப் பிரிவினரின் வளர்ச்சியிலும் வாழ்விலுமே நிலைபெற்றிருந்தன.

வேளாளர்களும் தாங்கள் உருவாக்கிய கோயில் என்ற அமைப்பு, உடைமைகளை–சொத்துக்களைக் கொண்டதாக மாறிய பிறகு, அதனைப் பிராமணர்களின் பயன்பாட்டுக்கென்று மட்டும் ஒதுக்கிக்கொடுத்துவிட்டு முற்றாக விலகிச் சென்றுவிடவில்லை. வருவாய், பயன்பாடு என்ற அளவில் பல சலுகைகளைப் பிராமணர்களுக்கு விட்டுக்கொடுத்திருந்தாலும், கோயில் மேலாண்மையை வேளாளர்கள் தங்கள் கைகளிலேயே வைத்துக்கொண்டிருந்தார்கள். உடைமைகளின் பிடியையும் முழுமையாக விட்டுவிடவில்லை. மறைகளை அறிந்தவர்களாகவே இனம் காணப்பட்ட, உடல் உழைப்பில் ஈடுபடாத பிரிவினராக இருந்த பிராமணர்கள், கோயில் பணிகளில் தங்களை முழு நேரமும் ஈடுபடுத்திக்கொண்டது இயல்பாக–இயைபாக இருந்ததால், அவர்களிடம் அப்பணிகளை வேளாளர்கள் விட்டுவிட்டனர். இருந்தாலும், தங்கள் நலன்கள்

கெடுகின்றவாறு, கோயில் என்ற அமைப்பையே பிராமணர்களிடம் வேளாளர்கள் ஒப்படைத்துவிடவில்லை. அத்துடன், கோயில்வழிக் கிடைத்துக்கொண்டிருந்த பயன்பாட்டு வாய்ப்புகளையும் அவர்கள் எந்த நிலையிலும் விட்டுக்கொடுத்துவிடவில்லை.

மேலும், நில உற்பத்திப் பகுதிகளை விரிவாக்குதலிலும் அவற்றைக் கொள்வதிலும் குறிக்கோள் கொண்டு முழு ஈடுபாடு காட்டி வந்த வேளாளர்களால், கோயில் இறைமைப் பணிகளை ஏற்று முடங்கிக் கிடக்க முடியவில்லை; அன்றைய சூழலில் அதற்கு அவர்கள் முனையவுமில்லை. ஆதலால், வேறு உடல் உழைப்புப் பணிகளில்லாமல் இருந்த பிராமணர்களுக்கு இறைமைப் பணிகளை ஏற்பது எளிதாகவும் ஏற்றதாகவும் இருந்தது. அத்தோடு, தங்களுக்கே உரிய முறைகளில் இந்த நிலச் சொத்துக்களை வேறு வகைகளில்–உழைப்பாலன்றிக் கொடைகளாகப் பெறுவதிலும் பிராமணர்கள் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

**வேளாளர்–பிராமணர் முரண் இல்லை**

தமிழ்க் கடவுளர்களின் ஆரியவயவாக்கம், அதைத் தொடர்ந்து நிலவுடைமைப் பகுதியினரின் தத்துவ உருவாக்கம் என யாவற்றுக்கும் உறுதுணையாக அமைந்திருந்ததால், பிராமணர்களையும் இதில் ஒரு பகுதியாக அரவணைத்துச் செல்லவே வேளாளர்களும் விழைந்திருக்கவேண்டும். சுருக்கமாக, வேளாளர்களும் பிராமணர்களும் அப்போது கோயில் என்ற மாபெரும் அமைப்பைத் தங்கள்தங்கள் தேவைகளுக்கேற்ப–நலன்களுக்கேற்ப–நோக்கங்களுக்கேற்ப வேண்டியவாறெல்லாம் பயன்படுத்திக்கொண்டார்கள் என்றுதான் கூறுதல் வேண்டும். கோயிலின் நிலவுடைமை நலன்களை வேளாளரும் பிராமணரும் பங்குபோட்டுக்கொண்டனர். பிராமணர் எண்ணிக்கையில் மிகமிகக் குறைவானவராக இருந்ததாலும், அவர்கள் வேளாளர் நலனுக்கு ஒத்தூதியதாலும், இதில் வேளாளருக்கும் பிராமணருக்கும் பங்கீட்டுச் சிக்கல் எதுவும் ஏற்படவில்லை. மேலும், வேளாளர் விழைந்து கொடுப்பதை வாங்கிக்கொள்கின்றவர்களாகவே பிராமணர் இருந்த நிலையில், இவர்களுக்கிடையே இடையூறுகள் தோன்ற வாய்ப்பு மேற்படவில்லை. தங்கள் நலன்களுக்குப் பயன்படுபவர்களாகவும் தங்களைப் பகைத்துக்கொள்கின்ற நிலையில் இல்லாதவர்களாகவும் இருந்ததால், பிராமணரைப் பகையாகவே வேளாளர் கொள்ளவில்லை.

பலவாறு வளர்த்தெடுக்கப்பட்ட கோயில் என்ற பொது நிறுவனம் யாருடைய நலன்களை நிறைவு செய்வதற்குப் பயன்பட்டிருக்கும் என்பதனை விவரிக்கவேண்டுவதில்லை. கோயில்களுக்கான நிலங்கள் நிலவுடைமையாளர்களால் வழங்கப்பட்டிருப்பினும், அன்றைய மன்னர்களும் பல்வேறு வழிகளில் நிலங்களாகவும் வரிகளாகவும் வேறு வகைகளிலும் கோயில்களின் பொருளடிப்படை வலுப்பட வாய்ப்புகளேற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இவற்றுடன், ‘குடிநீக்கி’யும் ‘குடிநீக்கா’மலும் உற்பத்தியாளர்களாக இருந்த உழுகுடிகளிடமிருந்தும் நிலங்கள் பலவாறு பறிக்கப்பட்டன. இருந்தாலும், தமது உழைப்பின் வழியாக உழுகுடிகளே–நில உற்பத்தி உழைப்பாளர்களே கோயில்களுக்கு வருவாய் நிலையாகக் கிடைக்கத் தங்கள் பங்களிப்பினைச் செலுத்தினார்கள். ஆனால், கோயில் என்ற பொது நிறுவனத்தினால் கிடைத்த பயன்கள் யாவும் நிலவுடைமையாளர்களாக இருந்த வேளாளர், பிராமணர் போன்றோரையும் கோயில் இறைமைப் பணிகளிலிருந்த பிராமணர்களையுமே சென்றடைந்தன. உழைத்தவர்களுக்குக் கோயிலின் வளத்தில் பயன் எதுவும் கிடைக்கவில்லை. இறைவன் பெயரைக்கொண்டு அவர்களிடம் உற்பத்திப் பங்கு மிகுதியாகப் பெறப்பட்டதால், கோயிலின் செல்வம் பெருகியதேயன்றி, அதனால் கிடைத்த நன்மைகளை உழுகுடிகளால் பெற முடியவில்லை.



**பயன்கள் யாவும் உடைமைப் பகுதியினருக்கே**

கோயிலின் பன்முகத் தன்மைகளாக எதிரொலித்த எல்லா வகையான சிறப்புகளும் நிலவுடைமையாளர்கள் மற்றும் பிராமணர்களுக்கே துணையாக நின்றன; அவர்களின் நுகர்வுகளுக்கென்றே யாவும் அமைந்திருந்தன; அவர்தம் பயன்பாடுகளுக்கென்றே அனைத்தும் செயல்பட்டன. கோயிலில் வழிபடுவோர் யாவரும் காணக்கூடிய கலையாக இருந்தாலும், நடனம் போன்றன நிலவுடைமையாளர்களுக்கென்றே நடத்தப்பட்டன. கோயிலில் நுழைய முடியாதவர்களுக்கு, சிற்பங்களும் நடனங்களும் எட்டாக் கனியாகவே இருந்தன. எண்ணும் எழுத்தும் என்ற அளவில் கல்வி வாய்ப்புகள் வேளாளர்களுக்கு மட்டுமே கிடைத்து வந்தன. பிராமணரைப் பொருத்தவரை, கல்வி என்பது வேத-உபநிடதப் படிப்பாக மட்டுமே அமைந்திருந்தது. நூலகம், மருத்துவம் போன்ற பிறவும் வேளாளர், பிராமணர்களுக்கென்றே செயல்பட்டன. வங்கி என்ற நிலையில் கொடுக்கப்பட்ட கடன், உற்பத்தியாளர்களிடம் பெற்ற மிகு வட்டியினால் கோயிலுக்கான வருவாயாக வந்தது. மேலும், வேலையில்லாத பிராமணர்களுக்கு ஒவ்வொரு நாளும் உணவு வழங்கப்பட்டது. இவையன்றி, கோயில்களிருந்த இடங்கள் பலவற்றில், அவற்றின் வழியாக நில உற்பத்திக்கு வேண்டியதான ஏரி, குளம், வாய்க்கால் போன்ற கட்டமைப்புகளை உருவாக்க

முடிந்ததால் நிலவுடைமையாளர்களே உடனடியாகப் பயனுற்றார்கள். இவ்வாறு நேரிடையாகவும் மறைமுகமாகவும் கண்ணுக்குத் தெரியாதவாறும் நிலவுடைமையாளர்களான வேளாளர்-பிராமணர்களுக்குப் பயன்கள் பலவாக இருந்ததாலேயே கோயில் என்ற பொது நிறுவனம் பேணப்பட்டது. பிற பகுதியினருக்குக் கோயிலின் செல்வச் செழிப்பில் பங்களிப்பு இருந்ததேயன்றிப் பயன்பாடு எதுவும் இருக்கவில்லை.

அன்றைய சமூகம் பல முனைகளிலும் பெற்றிருந்த அனைத்து வளர்ச்சி வசதிகளையும் வள வாய்ப்புகளையும், தனியொரு நிலவுடைமையாளர் தனக்கெனத் தனித்தனியாக உருவாக்கிக்கொள்வதற்கு மாறாக, பொது நிலையில் பெறுவதற்கு வாய்ப்பாக, நிலவுடைமையாளர்களின் கூட்டு அமைப்பாகக் கோயில் என்ற பொது நிறுவனம் அவர்களாலேயே ஒன்றுபட்டு உருவாக்கப்பட்டது. அன்றைய சமூக-பொருளிய-பண்பாட்டு வளர்ச்சி நிலையின் முழுமையையும் எதிரொலிக்கும் அமைப்பாக–நிறுவனமாகக் கோயில் விளங்கியமைக்கு இதுவே காரணியாகும். நிலவுடைமையாளர்கள் என்ற வகையில் வேளாளர், பிராமணர், வணிகர், அதிகாரிகள் போன்ற பலரும் தங்களுக்கென்று வைத்திருந்த இந்தப் பொது நிறுவனத்தில், இறைமைப் பணிகளைக் கைக்கொண்டதன் வழியாக நிலவுரிமை கொண்டிராத சில பிராமணர்களும் சிறுசிறு பயன்களைப் பெற்றார்கள். இருப்பினும், இப்பயன்கள் கட்டுக்குட்பட்டவையாகவே இருந்தன.

### உடைமைப் பகுதியினரின் கூட்டமைப்பு

உள்ளாட்சி அமைப்புகளைப் போலவே, கோயில்களும் நிலவுடைமையாளர்களின் அமைப்புகளாகவே இருந்து அவர்களது நலன்களைக் காத்துவந்தன. கோயில் தானே தனியொரு நிலவுடைமை நிறுவனம் என்பதோடு நின்றுவிடாமல், நிலவுரிமையாளர்களின் பொது–கூட்டு நிறுவனமாகவும் அமைந்து தனது பங்கினை நிறைவேற்றி வந்தது. இன்றைய அளவுகோள்களின்படி, இதனை நிலவுடைமையாளர்களின் கூட்டமைப்பு என்றோ பேரவை என்றோ தயக்கமின்றிக் கூறிவிடமுடியும். மேலும், பல மட்டங்களில் ஊர், சபை, நகரம், நாடு என இருந்தது போன்றே, கோயில் என்பதும் தனது எல்லைக்குட்பட்ட வகையிலானதோர் ஆட்சி அமைப்பாகவும் இருந்தது. கொள்கை முடிவுகள் எடுப்பது போன்ற சில கூட்டுப் பணிகளை மேற்கொண்டதாக நாடு இருந்தது என்றால், நிலம்–நீர் தொடர்பான சில அன்றாட அலுவல் முடிவுகளை மேற்கொள்ளும் வல்லமையினை ஊர், சபை, நகரம் ஆகியன



கொண்டிருந்தன. அதேபோன்று, கோயிலும் தனக்கெனப் பல்வேறு அலுவல் அதிகாரங்களைக் கொண்டிருந்தது. இவையன்றி, கோயில் நிலங்களை உழுவதற்குத் தருகின்ற உரிமையிருந்ததால் உள்ளூர் உழுகுடியினரின் மேலான பிடிப்பு இருந்தது. வளமான பகுதிகளில் இருந்த கோயில்கள் ஊர், சபை போன்ற உள்ளாட்சி அமைப்புகளைவிட மிகுதியான வேலை வாய்ப்புகளைத் தரத்தக்கதான மேன்மைகளைக் கொண்டிருந்தமையாலும் பணிகள் பலவற்றை மேற்பார்வை செய்கின்ற வல்லமை பெற்றிருந்தமையாலும் நில உற்பத்தி போன்ற வருவாய் வரவுகளைப் பயன்படுத்திக்கொள்கின்ற மேலாண் அதிகாரங்களை ஏற்றிருந்தாலும் இயற்கையாகவே அவை வலிமையுடையதாயிருந்தன.

ஆட்சி அமைப்பாக இருந்ததுடன், நிலவுடைமையாளர்களின் கூட்டமைப்பாகவும் கோயில் விளங்கியது. அதனால் தான், தங்களுக்கு வேண்டிய பல பணிகளை நிலவுடைமையாளர்கள் கோயில்கள் வழியாக நிறைவேற்றிக்கொண்டு நிறைவு கண்டார்கள். தனிப்பட்ட சிக்கல்கள் உள்ளிட்ட யாவற்றையும், பொது அமைப்பு என்ற பெயரில் இருந்த கோயில் வழியாகச் செயல்படுத்தியதால், குழப்பமோ, தடையோ, தடுமாற்றமோ, சங்கடமோ இல்லாமல் பலப்பல ஆதாயங்களை அடைய முடிந்தது.

### உடைமையாளர் நலனுக்கு முன்காட்டு கோயில்

மேலும், கோயில்களே நிலங்களைக் கொண்டிருந்தன வாதலால், அவை நிலம் தொடர்பான பல முடிவுகளை மேற்கொள்ள முன்காட்டுகளாக–எடுத்துக்காட்டுகளாக அமைந்திருந்தன. கோயில் நிலங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் தனித்தும் சிறப்பித்தும் நோக்கப்பட்டன என்றாலும், ஊரில் இருந்த பிற வகையான–பிரம்மதேயம், வெள்ளான்வகை போன்ற நிலங்களுக்கும் அவை ஏற்புடையதாயின. நில உற்பத்தியாளர்களான குத்தகையாளர்கள் தொடர்பான பல விதிகளும் கட்டுப்பாடுகளும் கோயில் என்ற பொது அமைப்பின் பெயரில் எடுக்கப்பட்ட பிறகு, அவையே பிறர் மேலும் திணிக்கப்பட்டன. மேல்வார அளவு, இதைக் கொடுக்காதவர் நிலத்தை விட்டு வெளியேறவேண்டும் என்ற நடைமுறை போன்றன இதற்கான எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. கோயில் நிலங்களை உழுபவர்களால், சில கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியும் என்றால், தனியார் நிலங்களின் உழுகுடிகளும் இவற்றைப் பின்பற்ற முடியும் என்ற உணர்வினை ஊட்ட இத்தகைய முறை துணைபுரிந்திருக்கலாம்.

**பொது நிறுவனமாகக் காட்டப்பட்ட கோயில்**

நிலங்களைப் பண்படுத்தித் தலைமுறைகளாகப் பயன் படுத்திவந்த உழவர்கள், அவர்தம் நிலங்களிலிருந்து வெளி யேற்றப்பட்டு, பிராமணர், படைத்தலைவர், அதிகாரிகள் போன்றோர் அவற்றைக் கைக்கொண்டபோது,[20] பரவலான எதிர்ப்புக் குரல்கள் வெளிப்படையாக எழுதற்கான வாய்ப்புகள் அக்காலத்தில் குறைவாக இருந்தாலும், பகையுணர்வுகள் உள் மனத்தின் ஆழத்தில் எழாமல் இருந்திருக்க முடியாது. இவை வெடிப்புகளாகச் சில சூழல்களில் வெளிப்பட்டிருக்கின்றன. இத்தகைய நிலைமைகளில், கோயில்களும், இதேபோன்ற பின்னணியுடன் குடிநீக்கியோ குடிநீக்காமலோ உழுகுடிகளிட மிருந்து நிலங்களைக் கொண்டிருந்தன. ஆனால், கோயில்கள் பொது நன்மைக்கென நிலங்களைக் கொண்டதாகக் காட்டப் பட்டது. கோயில்கள் நிலங்களைக் கொண்டமை எப்படிப் பொது நன்மையினை முன்னிட்டு அமைந்ததோ, அதே போன்று பிராமணர்களும் படைத்தலைவர்களும் அதிகாரி களும் நிலங்களைப் பெற்றதும் மக்கள் நலனைப் பேணுதற்குத் தான் என்பது போன்ற எண்ணம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

கோயிலில் இருந்த இறைவன் மக்களைக் காப்பாற்றுவான் என்பது போன்று, நாட்டைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றி மன்னன் நலம் புரிவான் என்பது போன்று, இறைமைப் பணிகளையும் அரசுப் பணிகளையும் செய்கின்ற பிராமணர், வேளாளர் போன்றோர் மக்கள் நன்மைக்கே இருக்கிறார்கள் என்ற தோற்றத்தை–நம்பிக்கையைக் கோயில் வழியாகக் காட்ட முயன்றிருக்கவேண்டும். அத்துடன், இவ்வாறான நிலப்பறிப்பு களால் ஏற்பட்ட எதிர்ப்புணர்வுகளுக்கு ஈடுகொடுக்க ஒன்று பட்ட செயல்பாடுகளும் வேண்டப்பட்டிருக்கலாம். இதற்கும் கோயில் மையமாக நின்றிருக்கலாம். அத்துடன், முன்னர் காட்டப்பட்டது போன்று, நிலப் பறிப்புக்கு எதிரான உணர்வு கள், தற்கொலை போன்ற எதிர்பாராத நிலைமைகளை உண்டாக்கிவிட்டால், அக்கோயிலிலேயே நினைவுச் சிலை களை ஏற்படுத்திக் கொந்தளிப்புகளை மட்டுப்படுத்தவும் முடிந்தது.[21]

இவற்றுக்கு நேரிடையாகத் தொடர்பில்லாத, ஆனால் சிறப்பாகக் கொள்ளவேண்டிய ஒரு நிகழ்வையும் இங்குக் குறிப்பிட்டாகவேண்டும். சோழர் காலத்தது அல்ல எனினும், வீரபாண்டியனது பத்தாம் ஆட்சியாண்டைச் சார்ந்த (கிபி 1264) திருவடந்தையில் உள்ள கல்வெட்டுக் கூறும் இந்நிகழ்வு அக்கால நிலைமைகளைத் தெளிவாக்குகின்றது.[22] தேவரடியார் ஒருவருக்குப் போடப்பட்ட தண்டத்தைச் செலுத்தாததால், அவருடைய நிலத்தைப் பறிமுதல் செய்து ஏலம் விடுமாறு ஆணையிடப்பட்டது. ஆனால், அந்த நிலத்தை ஏலத்தில் எடுக்க ஊர் மக்களோ உள்ளூர் அமைப்போ விழையவில்லை. கோயிலும் அந்நிலத்துக்கு ஏலம் கூற முதலில் முன்வராமல் தயக்கம் காட்டியது. இதற்கான பின்னணி என்னவென்று விளக்கமாகத் தெரியவில்லை. ஆனால், வற்புறுத்தலினால் வேறு வழியின்றிக் கோயில் தானத்தார் அந்த நிலத்தை வாங்க வேண்டியதாயிற்று.



ஊர் மக்கள் மட்டுமன்றி, உள்ளூர் அமைப்பும் கோயிலும் இந்த நிலத்தை ஏலத்தில் எடுக்க முதலில் தயக்கம் காட்டியமை ஏன் என்பது புதிராக இருந்தாலும், உள்ளூர் நிலைமை களுக்கேற்பச் சில தடைகள் இருந்திருக்கலாம். உள்ளூரிலேயே வாழ்ந்துகொண்டிருந்த நிலவுடைமையாளர்களுக்கு, மக்க ளுடைய மன உணர்வுகளுக்கு மாறான செயல்களை நேரிடை யாக–வெளிப்படையாக மேற்கொள்வதில் ஏற்பட்ட இத் தகைய தயக்கம் இயற்கையானதுதான். இருந்தாலும், இறுதியில் இது கோயிலின் பெயரில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மக்களுக்குத் தரப்படும் தண்டனையாக அவர்களது நிலம் ஏலத்துக்கு விடப்பட்டால், அந்த நிலத்தை எடுப்பதில்– வாங்குவதில் தவறில்லை என்ற எண்ணத்தை உருவாக்கக் கோயில் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கோயில் ஓர் எடுத்துக்காட்டாகச் சமூகத்தில் நிலவக்கூடிய வகையில் இது போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இதே போன்று, இரண்டாம் ராசராசனது ஆட்சியில் (கிபி 1149), வடபனங்காட்டு நாட்டினுடைய நாட்டார் எடுத்த முடிவும் அமைந்திருப்பதைக் காணலாம்.[23] அம்பனவர்நல்வயலூர் என்ற ஊரில் உள்ள நிலங்களுக்கோ அல்லது பிறருக்கோ எதிராக ஏதாவது தவறு செய்தால், அவர்களது குறிப்பிட்ட அளவு நிலம் பறிக்கப்பட்டுக் கோயிலுக்குத் தண்டமாகக் கொள்ளப்படும் என்று அது தெரிவிக்கிறது. "வயலில் வழியில் அழிபிழை செய்யில் குன்றப் பெருமாளுக்குப் பெரும்படி ஒரு மாச்செய் தண்டமாகக்கொண்டு" என்று கல்வெட்டு இதைத் தெளிவாகவே குறித்திருக்கிறது. பிற ஊர்களை உள்ளடக்காமல் ஒரு குறிப் பிட்ட ஊரினை மட்டும் குறித்திருப்பதால் அங்கு அதற்கேற்ற சூழல் நிலவியிருக்கவேண்டும். ஆனால், அது என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை. அத்துடன், ஓர் ஊர் தொடர் பான இம்முடிவு, அந்த ஊராரால் மட்டும் எடுக்கப்படாமல், அந்த ஊராரும் பங்குகொண்ட நாட்டாரால் ஏன் மேற் கொள்ளப்பட்டது என்பதும் அறியக் கிடைக்கவில்லை.

நிலம் தண்டமாகக் கொள்ளப்படும் என்றிருப்பதால், நிலமுடையவர்களே ‘அழிபிழை’ செய்யக்கூடியவர்களாகக் கருதப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆனால், நிலம் கொண்டவர்கள், பிறருடைய சொத்துக்களுக்கு அல்லது பிறருக்கு எத்தகைய தீங்கு விளைவித்தார்கள் என்பதை இதில் உய்த்துணர முடியவில்லை. அல்லது இத்தகையோர் உழுகுடி களாகவும் இருந்திருக்கலாம். இருப்பினும், ஊராரைவிட மேலான ஓர் அமைப்பு தலையிடவேண்டிய நிலை இருந் திருக்கிறது. நில உரிமையோடு தொடர்புடைய சிக்கல்–பூசல் ஏதாவது இருந்திருக்கவேண்டும். எப்படியிருப்பினும், பறிக்கப் பட்ட நிலம் கோயிலுக்குத் தரப்படுவதாக முடிவெடுத் திருந்ததைத்தான் குறிப்பாக நோக்கவேண்டும். கோயிலோடு தொடர்புபடுத்திவிட்டால், அது பொதுநலன் கொண்டதாக– பொது உடைமையாக மாறிவிடுகிறது. இதன் பயன்கள் மறுபுறத்தில் நிலவுடைமைப் பிரிவினருக்கே சென்றாலும், கோயிலை முன்னிலைப்படுத்தியிருந்ததால், பொதுமைப் படுத்தியது மிக எளிதாயிற்று எனலாம்.

மேற்கூறியனவற்றைக் கொண்டு நோக்கும்போது, தனி நிலவுடைமையாளர்கள் பலராக விரவிக்கிடந்தும், கோயில் என்ற பிறிதொரு அமைப்பு பொது நிறுவனமாக அவர் களாலேயே நிலைநிறுத்தப்பட்டது ஏன் என்பது தெளிவாகப் புலப்படும்.

**உடைமைப் பகுதியினரின் வெற்றி**

இந்த இடத்தில் ஓர் உண்மையினையும் மறந்துவிடக்கூடாது. நிலவுடைமையாளர்களின் கூட்டமைப்பு அல்லது ஒன்றியம் என்பது இன்றைய பொருளில் கொள்ளத்தக்கவாறு அமைந் திருந்தாலும், இது இன்றுள்ளவாறே திட்டமிட்டுக் கூட்டமைப் பாக ஒருங்கிணைக்கப்பட்டது என்றும் கூறிவிடமுடியாது. நிலவுரிமையாளர் ஒன்று கூடுதற்குக் கிடைத்த வாய்ப்பினாலும், இதில் பிறர் பங்குகொள்ள முடியாததாலும், இது அவர்கள் கூட்டமைப்பாகவே உருவெடுத்துவிட்டது. இந்த உருவாக் கத்தைப் பயன்படுத்திக்கொண்டதுடன், இதனை மேலும் நலன் தரும் நிறுவனமாக வளர்த்தெடுத்ததில் நிலவுடைமையாளர்கள் பெரிதும் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்றே கொள்ள வேண்டும். அதேபோன்று, இத்தகையதான பங்களிப்பினையே உள்ளாட்சி அமைப்புகளும் நிறைவேற்றி வந்துள்ளன என்பதை யும் காணவேண்டும். இருப்பினும், பெரும்பாலும் இந்த இரண்டு அமைப்புகளுமே பல்வேறு காரணிகளுக்காகத் தனித்தனியே தொடர்ந்தன.



இறை நம்பிக்கையினை வெளிப்படுத்துகின்ற மையமாக உருவெடுத்து, பின்னர் கலாச்சாரத் தளமாக வார்த்தெடுக்கப் பட்ட கோயில், காலப்போக்கில் உடைமைகள்–சொத்துக் களைக் கொண்டவுடன் நடைமுறை நிலைமைகளையொட்டி நிறுவனமாக உருவெடுத்தது–உருவாக்கப்பட்டது. இதில், பண் பாட்டுத் தளமாக வளர்த்தெடுக்கப்பட்டதுதான் திட்டமிட்டுச் செய்யப்பட்டது எனலாம். ஏனெனில், உடனடிப் பொருள் வகையினாலான நலன்களுக்கு அப்பாற்பட்டது இது. இருப்பினும், அன்று உடைமைகள் கொண்டு செல்வக் குடியாக உயர்வு பெற்றிருந்த நிலவுடைமையாளரின் கல்வி, மருத்துவம், கலை உள்ளிட்ட பிற இயைபுகொண்ட அனைத்துத் தேவை களையும் நிறைவுசெய்யும் வகையில் கோயிலின் கட்டமைப்பு விரிந்தது. இத்தகையதொரு களத்தை–தளத்தைத் தங்களது நலன் காக்கும் முழு நிறுவனமாக உருவெடுக்கச்செய்து பயன் படுத்திக்கொண்டது நிலவுடைமையாளர்களின் பெரும் வெற்றி யென்றே கூறமுடியும்.

புதிதாகத் தோன்றிய நிலவுரிமைகொண்ட செல்வ வளம் பெற்ற உயர்குடியினரின் தேவைகளுக்காக மட்டுமே கோயில் எழுந்ததாலும், அவர்களுடைய நுகர்வுகளுக்காகவே கலை-பண்பாட்டு மையமாக அது வளர்த்தெடுக்கப்பட்டதாலும், உடைமையாளர்களின் சமூக ஆளுமைக்கும் இவை அடித்தள மாக அமைந்திருந்ததாலும், கோயிலைப் பொருளியத் தளமாக வும் மாற்றி, தங்கள் நலன்களைக் காக்கும் களமாக்கிக் கொண்டதில் நிலவுடைமைப் பகுதியினருக்கு எவ்வகைச் சிக்க லும் இடையூறாக இருக்கவில்லை. அதனைத் தங்களது கட்டுக்குள் வைத்திருந்தாலும், அதை ஒரு பொது நிறுவனமாக நம்பவைத்து, அதைக் கொண்டே பல ஆதாயங்களைப் பெற்றார்கள்; பிறரை அடக்கியாளும் கருவியாகவும் மாற்றிக் கொண்டார்கள். இந்த வலிமை கொண்ட அமைப்பினைக் கொண்டு, கீழ்த்தட்டு உழைக்கும் மக்கள் மீது சமூக-பொருளிய-பண்பாட்டு ஆளுமையைச் செலுத்தவும் முடிந்தது.

இவ்வாறு, வழிபடும் இடங்களாகத் தோன்றிய கோயில்கள், வர்க்க நலன் காக்கும் களங்களாக–கருவிகளாக உருவெடுத்தன– மாற்றம் பெற்றன.

**கோயில் வழியாகச் சுரண்டல்**

அத்துடன், ஊரின் நலனைவிடக் கோயிலின் நலன் மேலானது என்ற எண்ணத்தினை உருவாக்கும் முயற்சியும் நடை பெற்றுவந்தது. இது பிற பகுதியினரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றதா, இல்லையா என்பது ஒரு புறமிருக்க, இதன் அடிப்

படையில் நடத்தப்பெற்ற செயல்பாடுகள் தொடர்ந்தன. இதனால் பல வகையான சார்பு நிலைகள் நிலவுடைமைப் பகுதியினருக்கு அமைந்தன. முன்னரே சுட்டிக்காட்டியிருப் பினும், ஒரு சில குறிக்கத்தக்கன. ஊர் அவையில் நிலவுடைமைப் பகுதியினரே இருந்தாலும், அந்த அவை ஊரில் குடியிருந்த அனைவருக்கும் பொதுவானதாகும். ஊர் உடைமைகளில் நிலவுடைமைப் பகுதியினரே பெரும் பயன் பெற்றாலும், அவற்றின் பயன்களில் உடைமையற்ற பகுதியினருக்கும் பங்குண்டு. ஆனால், கோயில் நிலவுடைமைப் பகுதியினருக்கு மட்டுமான அமைப்பு. அதில் உடைமையற்றவர்களுக்குப் பங்கு இல்லை. இதனால் ஊர் உடைமைகளைக் கோயில்களுக்கு மாற்றிப் பயனுற்றனர். அதுவன்றி, நிலவுடைமைப் பகுதியினரது தனித்த உரிமையாகக் கோயில் இருந்தாலும் இந்தக் கோயிலுக்குத் தாங்கள் தனிப்பட்ட முறையில் செய்யவேண்டிய பணிகளை, ஊரினர் அனைவருடைய உழைப்பின் பயனையும் பறித்து நிறைவேற்றிக்கொண்டனர்.

கோயில்களில் வழிபட்டு வந்தவர்கள், நிலவுடைமைப் பிரிவினர் மட்டுமே. இதற்கான வழிபாடுகளை நடத்தவும் வழிபாடுகளை நடத்திவைப்பவர்களைப் பேணவும், வழிபாடு தொடர்பான பிற பணிகளைச் செய்யவும் நிலவுடைமையாளர் தாம் செலவுகளை ஏற்கவேண்டும். ஆனால், பொது நிறுவன மாகக் காட்டப்பட்ட கோயிலிடம் இருந்த நிலங்களின் வருவாயிலிருந்து இச்செலவுகள் செய்யப்பட்டன. உழவர்களிட மிருந்து பறித்துக் கோயில் பெற்ற நிலங்களிலிருந்தும், உழுகுடி களிடமிருந்து பெற்ற மேல்வாரத்திலிருந்தும் மக்களிடமிருந்து வரிகளாகப் பெற்ற பயன்களிலிருந்தும் கோயிலுக்குக் கிடைத்த வருவாய், உடைமையாளரின் தனி வழிபாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதைப் போன்றே, கலை, கல்வி, மருத்துவம் போன்று நிலவுடைமையாளர்கள் மட்டுமே துய்த்த வசதிகளுக்கும் கோயில் வருவாயிலிருந்தே செலவுகள் செய்யப்பட்டன. பிற உழைக்கும் மக்கள் பிரிவினர் கோயில் வருவாயில் பெரும் பங்களிப்புச் செய்திருந்தும், அவர்கள் கோயில் வழியாகக் கிடைத்த வசதிகள் எதையுமே துய்க்க முடியவில்லை.

இதே போன்று, நீர் வள வாய்ப்புகள் பெரிதும் கோயில்கள் வழியே நிலவுடைமையாளர்களின் கட்டுக்குள் கொண்டுவரப் பட்டிருந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக, கோயில் நிலவுடைமையாளர் களின் தனித்த கட்டுப்பாட்டிலும் பயன்பாட்டிலும் இருந்த தால், அந்தப் பொது நிறுவனத்திற்கான நிலங்களிலிருந்து கிடைத்த வருவாய் முழுதும் அவர்களின் கைகளுக்கே வந்து சேர்ந்தது. இதில் கோயிலின் செலவுகளுக்குப் பயன்கொண்டது போக எஞ்சிய உற்பத்தி அனைத்தும் நிலவுடைமையாளரிடமே குவிந்திருந்தன. கோயிலின் செலவினங்கள் என்றிருந்த யாவுமே ஏதோவொரு வகையில் நிலவுடைமைப் பகுதியினருக்காகச் செய்யப்பட்டவையே என்பதையும் மறந்துவிடலாகாது. இது போன்றே எஞ்சிய உற்பத்தியும் மறைமுகமாகவும் நேரிடை யாகவும் இவர்களையே சென்றுசேர்ந்தது. எஞ்சிய உற்பத்தி எவ்வாறு நிலவுடைமைப் பகுதியினரால் பிரித்தெடுத்துக் கொள்ளப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை யெனினும், இது வேறெங்கும் போய்விடவில்லை என்பது மட்டும் புரிகிறது.

இத்துடன், கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்த வரி போன்ற வரவுகள் என்பனவும், பல வகையான வரிவிலக்குகளும், மன்னனால் நிலவுடைமைப் பகுதியினருக்கு மறைமுகமாகக் கொடுக்கப்பட்ட ஆதாயங்களாகவே அமைந்திருந்தன.

கோயிலுக்குக் கிடைத்த பொது வருவாயிலிருந்து, மற்ற மக்களுக்குப் பயன்படுத்தாமல், நிலவுடைமையாளர்கள் தாங்கள் மட்டுமே துய்ப்பதற்காகப் பல செலவுகளைச் செய்து வந்தனர். இந்தச் செலவுகள் கீழ்க்கண்ட மூன்று வகைகளில் அமைந்தன:

1 கோயில் வழிபாட்டுச் செலவுகள்.
2 கலை போன்ற பொது நிகழ்வுகளுக்கும், கல்வி, மருத்து வம் போன்ற பொதுவகைப் பயன்களுக்கும் செய்து கொண்ட செலவுகள்.
3 வழிபாட்டுச் செலவுகள், பொதுச் செலவுகள் போக எஞ்சியிருந்த வருவாயை நேரிடையாகவும் மறைமுக மாகவும் எடுத்துக்கொண்டது.

கோயில் வழியிலான சுரண்டல் என்றே இவற்றைக் கூறவேண்டும். இத்தகைய சுரண்டலின் பயன்கள் நிலவுடைமை யாளர்களுக்கு மட்டுமேதான் கிடைத்து வந்தன என்பது நோக்கத் தக்கது.

**கோயில் என்ற நிலவுடைமை அமைப்பு ஏன்?**

இவை யாவற்றையும் தொகுத்து, கோயில் என்ற நில வுடைமை அமைப்பு ஏன் பேணப்பட்டது என்பதனைக் கீழ்க் கண்டவாறு காணலாம்:

1 பொதுநிறுவனம் என்ற அளவில் நில உரிமை, குத்தகையளவு போன்ற உற்பத்தி உறவுகளுக்கான

நெறிமுறைகள்–விதிவகைகளைக் கோயிலின் பெயரில் உருவாக்கிக்கொண்டு, அவற்றைத் தங்களுக்கும் ஏற்பப் பயன் கொள்ள முடிந்தமை.

2 நீர் வள வாய்ப்புக்களைக் கோயிலின் பெயரில் கைக் கொண்டு பயன்பெற இயன்றமை.

3 கோயில் என்ற வலிமை கொண்ட அமைப்பினைக் கொண்டு சமூக-பொருளிய-பண்பாட்டு ஆளுமையைச் செலுத்த முடிந்தமை.

4 நிலவுடைமைப் பகுதியினரின் கூட்டமைப்பு போலக் கொண்டு தங்களது பிற சமூகத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ள வழியமைந்தமை.

5 கோயிலின் எஞ்சிய உற்பத்தியை–உபரி உற்பத்தியை மறைமுகமாகவும் நேரிடையாகவும் நிலவுடைமைப் பகுதியினர் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தமை.

6 கோயில் என்ற பெயரில் மன்னரிடமிருந்து பெருமளவு சலுகைகளும் கிடைத்து வந்தமை.

இவை போன்ற தெளிவான காரணிகளால், நிலவுடைமைப் பகுதியினருடைய நலன்கள் பலவாறு போற்றப்பட்டதால், கோயில் என்ற அமைப்புத் தனியாகப் பேணப்பட்டதில் வியப்பொன்றும் இல்லை.

**பேரரசின் பங்களிப்பு ஏன்?**

அடுத்து, ஒரு பேரரசின் மாமன்னர்களாக இருந்தவர்கள், நிலவுடைமையின் சார்பாக நின்று கோயில்களுக்கும் பிறருக்கும் துணைபுரிந்தது ஏன் என்பதை ஆராயலாம்.

முன்னரே குறிப்பிட்டதுபோன்று, உற்பத்திக்கு ஏற்ற நிலங்கள் யாவும் வேளாளர், பிராமணர், பெரும்பான்மையும் வேளாளர்களாகவே இருந்த படைத்தலைவர்கள்–அதிகாரிகள்,[24] நிலவுடைமை பெற்றுவிட்ட வணிகர்கள்[25] போன்றோரிடம் இருந்தன. இவர்களுள், தங்கள் முயற்சிகளால் நிலங்களை அடைந்த வேளாளரில் ஒரு பகுதியினர், தமது வணிக வருவாயைக் கொண்டு நிலங்களை விலைக்கு வாங்கியிருந்த வணிகர்கள் என்ற இரு வகையினர் அன்றிப் பிற பகுதியினர்–பிராமணர், படைத்தலைவர்கள், அதிகாரிகள் போன்றோர் அரசனது ஆணைகளாலேயே நிலங்களைப் பெற்றிருந்தனர். அத்துடன், நிலம் கொண்டிருந்த உடைமையாளர்களாக இருந்தமையாலேயே பெரும்பாலானோர் படைத்தலைவர்களாகவும் அதிகாரிகளாகவும் உயர்நிலை பெற்றவர்கள். இவர்கள் பல்வேறு வகைகளில் அன்றைய அரசமைப்பின் பகுதிகளாக இருந்தவர்கள். அத்துடன், அதிகாரிகளுக்கு ஊதியமாக நிலங்களே அவரவர்தம் தகுதிக்கேற்பக் குறிப்பிட்ட அளவு கொடுக்கப்பட்டதால், நிலத்தோடு அவர்களுக்கிருந்த நேரடித் தொடர்பு நீடித்தது.[26] மேலும், அரச குடும்பத்தினரே நிலங்களை உடையவர்களாக இருந்தார்கள். செம்பியன்மாதேவி, குந்தவைப் பிராட்டியார் போன்ற பலர் தங்களிடமிருந்த நிலங்களைக் கோயில்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். உத்தம சோழனின் (கிபி 971-987) மகனான மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன் முதலாம் ராசராசனுடைய உயர் அதிகாரிகளில் ஒருவனாக வீற்றிருந்தான். எனவே, அரசர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஆட்சி அமைப்பினரும் படைத்தலைவர்களும் என அனைவருமே நிலவுரிமை கொண்டிருந்தவர்கள்தாம்; நிலத்தோடு ஏதாவதொரு வகையில் தொடர்புகொண்டிருந்தவர்கள் தாம்.

அத்துடன், நாட்டின் அன்றைய வளமும் வரி வருவாயும் வேளாண் உற்பத்திப் பெருக்கத்தினையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்த வளத்தினை உருவாக்கிக் கொடுத்தவர்களாக நிலவுரிமை கொண்டவர்கள் மட்டுமே மதிக்கப்பட்டார்களேயன்றி, இங்கு நிலத்தில் உழைப்பைச் செலுத்தியவர்களின் பங்கு கணக்கில் கொள்ளப்படவேயில்லை. மேலும், அன்று பொருள்நிலை இயக்கத்துக்கு வாய்ப்பாக நின்ற வணிகர்களும் நிலங்களில் முதலீடு செய்து, நிலவுடைமை கொண்டிருந்தவர்களாகவே இருந்தார்கள். இவர்களுடன், நிலவுரிமையில்லாத பிராமணர்களும் தங்கள் ‘தர்ம’க் கோட்பாடுகளை முன்னிறுத்தி, உடைமை கொண்டிருந்தவர்களுக்குத் துணை நின்று, அதனாலேயே நில உற்பத்தியில் பங்கு என்பன போன்ற பல சலுகைகள் பெற்று, நிலவுடைமைப் பகுதியினரின் ஒரு உறுப்பாக மாறி நின்றார்கள்.

இவ்வாறு, ஆட்சியமைப்பின் ஒவ்வொரு பகுதியினரும், ஆதிக்கச் சக்திகளின் ஒவ்வொரு பிரிவினரும் நிலவுடைமை கொண்டவர்களாக இருந்த நிலையில், மன்னனது செயல்பாடுகள் இவர்களுக்கு எதிரானதாக–மாறானதாக இருக்குமென்று எதிர்பார்த்தல் கூடாது. மன்னன் என்பவனும் இந்த ஆட்சியமைப்பின்–ஆதிக்க சக்தியின் சார்பாளனாகவே இருந்திருக்கமுடியும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

**நிலவுடைமை அமைப்பின் ஒரு பகுதியே பேரரசு**

இவர்களெல்லாம் ஆட்சியமைப்பின் பகுதிகளாக இருந்தார்கள் என்பதுடன், அந்த ஆட்சியினை நடத்துதற்கு வேண்டிய அடிப்படைகளை– உற்பத்தி வளம், வணிக வாய்ப்பு,

சமூக அமைதி போன்றவற்றை அமைத்துக் கொடுத்தவர்களாக வும் நிலைபெற்றிருந்தார்கள்.

போர்களிலும் பிற ஆட்சிப் பணிகளிலும் மூழ்கிக்கிடந்த மன்னர்கள், ஒரு வலுவான படையினை உருவாக்கி, எல்லை களைக் காத்ததுடன், புதிய வளப் பகுதிகளைத் தமது எல்லை களுக்குள் கொண்டுவரவேண்டிய செயல்களிலும் ஈடுபட்டிருந் தனர். கொள்கை தொடர்பான முடிவுகள் மட்டுமன்றி, பல அலுவல் முடிவுகளும் மன்னரால் மேற்கொள்ளப்பட்டன என்றாலும், உள்நாட்டில் அன்றாடப் பணிகளை நிறைவேற்றக் கூடிய வலுப்பெற்ற மேலாண்மை எந்திரம் அன்று இருக்க வில்லை. அதனால், தத்தமது இருப்பிடங்களில் நாட்டார், ஊரார், சபையார், நகரத்தார் எனப்பட்ட, பெரும்பாலும் வேளாளர்களைக் கொண்ட, பிராமணர், வணிகர் போன் றோரையும் உள்ளடக்கியோரே இப்பணிகளை முழுமையாகக் கண்காணித்து வந்தார்கள். மன்னர்கள் இவர்களைப் பகைத்துக் கொள்ளக்கூடிய அளவில், இந்த நிலவுடைமையாளர்கள் வலுவற்ற நிலையில் இருக்கவில்லை; மன்னர்களும் இதை எதிர்கொள்ளக்கூடிய மாற்று மேலாண்மை அமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கவில்லை.

மாறாக, மன்னரும் நிலவுடைமைப் பிரிவினரும் இணைந்து தங்கள்தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் முனைப்புக் காட்டினார்களேயன்றி, தங்களால் ஈடுகொடுக்க முடியாத எதையும் எடுத்துக்கொள்ள அந்தக் கட்டத்தில் ஒருவருக்கொருவர் முயற்சி செய்யவில்லை. அன்றைய நடை முறைச் சூழ்நிலை அதற்கெல்லாம் இடமும் கொடுக்கவில்லை. இவர்களுக்குள் முரண்கள் ஏதுமில்லாத நிலையில், அவரவர்தம் நோக்கங்கள் இயல்பாகத் தொடர்ந்தன. இதனால், மன்னர்கள் உடைமைப் பிரிவினரைத் தங்களுடைய பொது நலனுக்காக அரவணைத்துச் செல்லவேண்டியதாயிருந்தது. இவை யாவற் றுக்கும் மேலாக, அன்றைய ஆட்சியமைப்பு என்பதே நில வுடைமை–நிலவுற்பத்தித் தேவைகளையொட்டித் தோன்றியது தான். ஆகவே, அதன் செயல்பாடுகளும் அதற்கேற்பவேதான் இருந்திருக்கமுடியும்.

சோழ மன்னன் வீரராசேந்திரன் (கிபி 1063-1070) மறைவை யடுத்து அதிராசேந்திரன் (1067-1070) ஆட்சியைப் பெற்ற போதும், அதிராசேந்திரனின் இறப்பை அல்லது கொலையை யொட்டி முதல் குலோத்துங்கன் (1070-1122) ஆளுமையைக் கொண்டபோதும் உள்நாட்டுச் சிக்கல்கள் மட்டுமன்றி, அரண்மனைப் பூசல்களும் இருந்தனவென்றே சில வரலாற்றா



சிரியர்கள் மதிப்பிடுகிறார்கள்.[27] ஆனாலும், ஆட்சியைப் பிடிக் கின்ற இந்தப் போராட்டங்களில், அரச குடும்பங்களே முனைப்புக் காட்டியிருந்தன. அப்போது, மிக்க வளமும் வல்லமையும் கொண்டிருந்த வேளாளர்களும் குறுநிலத் தலைவர்களும் இதில் தலையிட்டதாகக் குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. வரலாற்றாசிரியர்களும் எதுவும் கூறவில்லை.

ஆனால், இரண்டாம் ராசராசன் (கிபி 1146-1173) ஆட்சியின் இறுதிக் கட்டத்தில், அடுத்துப் பதவியேற்கும் நிலையில் யாரும் இல்லாததால், இச்சிக்கலைத் தீர்க்கும் பொறுப்பினைக் குறுநிலத் தலைவர்களுள் ஒருவரான பல்லவராயர் ஏற்றார். அப்போது குழப்பம் ஏற்படும் நிலையும் இருந்ததாகவே பல்லவ ராயன்பேட்டைக் கல்வெட்டும் காட்டுகிறது. அந்தப்புர மகளிரையும் இளம் மக்கள் இருவரையும் பரிவாரங்களுடன் ஆயிரத்தளி என்ற படைவீட்டிலிருந்து காவல் நிறைந்த வேறோரிடமான ராசராசபுரத்துக்குக் கொண்டுசென்று காக்க வேண்டியதுமாயிற்று. அந்நிலையில் அடுத்த ஆட்சியாளனாக, விக்கிரம சோழனுடைய பெயரன் என்று எண்ணப்படும் இரண்டாம் ராசாதிராசன் (1166-1182)[28] பொறுப்பேற்றபோது, உடன்கூட்டம், நாடு ஆகியவற்றின் ஏற்பும் பெறப்பட்டுள்ளது.[29] ஒரு பேரரசின் அடுத்த ஆட்சியாளரை உறுதி செய்ததில் பல்லவராயரின் பங்கும் உடன்கூட்டம், நாட்டார் ஆகியோரின் உதவியும் வேண்டியிருந்தது என்பதே புதிய வளர்ச்சிநிலை என்றுதான் கூறவேண்டும். நூறு ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்களை இங்குக் காணலாம். நில உடைமைப் பகுதியினர் தங்களுடைய பிடியை மேலும்மேலும், இறுக்கிக்கொண்டிருந் தார்கள் என்பதுடன், அவர்களுடைய அரசாகவே சோழராட்சி அமைந்திருந்தது என்பதும் உறுதிப்படுகின்றது.

**ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு**

மன்னனுக்கு, அவனது ஆதிக்கத்தை–ஆட்சியதிகாரத்தைச் செலுத்தத் தக்கவாறான படை வலிமை, அலுவல் அமைப்பு, பொருளிய வளம் போன்றவற்றை உருவாக்கிக்கொள்ள முடி கின்றவரை, இவற்றையெல்லாம் முனைப்பாக வைத்திருந்து அல்லது திரட்டித் தந்து உதவுகின்ற கட்டமைப்பு, அவனுடைய இருத்தலுக்கே இன்றியமையாததாகவிருந்தது. இதனை உடைமைப் பகுதியினரான உள்ளூர்த் தலைவர்கள் தங்கள் நலன் கருதியே கொடுத்து வந்தார்கள்.

உள்ளூர்த் தலைவர்களுக்கும், அவர்களது ஆதிக்கத்தை– ஆட்சியைச் செயல்படுத்தக்கூடிய வகையில் திடப்படுத்திக் கொள்ள முடிகின்றவரை, அவர்களது நலன்களைப் பாது

காத்துக்கொள்ளவும் அவர்தம் மேலாண்மையைத் தொடரவும், அவர்களுக்கு மேம்பட்ட வல்லமை–துணை–மாற்றுச் சக்தி ஒன்று தேவைப்பட்டது. இதனை அரச அமைப்பு–மையப் பேரரசு தாராளமாகக் கொடுத்து வந்தது.

தங்களது நலன்கள் கெடாதவாறு, எஞ்சிய உற்பத்தியினால் கிடைத்துவந்த முழுமையான பயன்களைப் பங்கிட்டுக்கொள்வதில் இடையூறோ, சிக்கலோ, தடையோ ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் இருவருமே எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டுவந்திருக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில், இந்த உள்ளூர்த் தலைவர்கள் தாங்களே அந்த வல்லமையாக–மாற்றுச் சக்தியாக உருவெடுத்தார்கள். நில உற்பத்தி வளத்தை–எஞ்சிய உற்பத்திப் பயன் அளவைப் பிரித்தெடுத்துக்கொள்வதற்கான முயற்சிகளாகவே இவை அமைந்திருந்தன.

இதன் படிநிலை வளர்ச்சியாக, அடுத்த கட்டத்தில் பேரரசர்கள் மேலும் வலிமை குன்றியமையும், உள்ளூர்த் தலைவர்கள் மிகு வல்லாண்மை பெற்றமையும் நிகழ்ந்தன என்றாலும், பொதுவாக உடைமைப் பகுதியினர் இதனால் எத்தகைய இடையூறும் அடையவில்லை என்பதையும் மறந்துவிடக்கூடாது. இதனால், மேலும்மேலும் பல இன்னல்களை இடையறாது ஏற்றவர்கள் எளிய மக்கள்தாம் என்பதைப் பல கல்வெட்டுச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. அவர்கள் இன்னும் மிகுதியாகப் பிழியப்பட்டு அல்லலுற்றார்கள்.

இப்படி இவர்கள் அனைவரும்–ஆட்சி அமைப்பின் ஒவ்வொரு பகுதியினரும், உற்பத்தி மூலங்களைக் கையில் கொண்டிருந்தவர்களும், பொருள் இயக்கத்தைத் தாங்கி நின்றவர்களும், 'ஆன்மீக'த் தளைகளால் தாக்குதல் தொடுத்து வந்தவர்களும் என அனைவரும் நிலவுடைமையாளர்களாக நீடித்திருந்தபோது, இவர்களுடைய செயல்பாடுகள் யாவும் அவர்களது உடைமை அமைப்புகளைக் கட்டிக்காப்பதற்காகவே செயல்பட்டதில் வியப்பொன்றுமில்லை. இவர்கள் அவ்வப்போது தனித்தும், வேண்டியபோது ஒன்றிணைந்தும் சமூக ஆளுமையை எளிதாக–மிக எளிதாக அன்று செலுத்த முடிந்தது. இவ்வாறு, அரசியல்-சமூக-பொருளிய-பண்பாட்டு வாழ்க்கையில் இவர்களின் செல்வாக்கும் ஆளுமையும் ஆதிக்கமும் மிக ஆழமாக வேரூன்றியிருந்தன.

நிலவுரிமை கொண்டவர்கள் தங்கள் பொது நுகர்வுக்காகவும் பொது நலன்களுக்காகவும் கோயில் என்ற தனி நிறுவனத்தை உருவாக்கினார்கள் என்பதும், அரசர்கள் தங்கள் ஆட்சி அமைப்பின் நோக்கங்களுக்காக நிலவுடைமைப்



பகுதியினரைத் தாங்கி நின்றார்கள் என்பதும் இயற்கையாகவே நிகழ்ந்தன என்றுதான் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**நிலவுடைமைப் பகுதியினர் வரவேற்ற பேரரசின் தலையீடு**

அன்றைய நிலையில், கோயில்களும் உள்ளாட்சி அமைப்புகளும் நிலங்களைக் கொண்டிருந்த பகுதியினரின் பொறுப்பில்தான் இருந்திருக்கின்றன. வரி பெறுதல், அன்றாடப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற யாவற்றையும் இவர்களே மன்னர்களின் சார்பாளர்களாக நின்று நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். அதிகாரிகளாக, படைத்தலைவர்களாக இருந்தவர்கள்கூட இந்த நிலவுடைமைப் பகுதியைச் சார்ந்தவர்கள்தாம். கோயில்களின் வழியாகக் கிடைத்த பயன்கள் பெரும்பாலும் உள்ளூரில் நிலம் கொண்டவர்களுக்குத்தான் கிடைத்தது.

இந்த நிலையிலும், பல்வேறு ஆட்சிப் பொறுப்புகளையும் கடமைகளையும் கொண்டிருந்த மாமன்னர்கள் கோயில்களின் செயல்பாடுகளில் தலையிட்டு வந்தது ஏன் என்பதற்கான விளக்கத்தையும் பெறவேண்டும். அதாவது, ஆட்சியமைப்பின் பகுதியாகவே இருந்த இந்த நிலவுடைமையாளர்கள், தங்களுடைய அமைப்பான கோயில் தொடர்பான செயல்பாடுகளில் தலையிட, மன்னர்களை ஏன் அனுமதித்தார்கள் என்று பார்க்கவேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமெனில், இந்த நிலவுடைமையாளர்கள், தங்கள் செயல்பாடுகளில் மன்னர்களின் தலையீட்டை ஏன் வரவேற்றார்கள்–மன்னர்களது பெயர்களை ஏன் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதை அறிவதே இன்றியமையாததாகும்.

முன்னர் விவரித்தவாறு, பயிர்த்தொழில் செய்துவந்த உழுகுடிகளிடமிருந்து கோயில்கள் நிலவுரிமைகளை ஏற்றன; நில உற்பத்தியின் பயன்களைப் பெற்றன. மன்னர்தம் ஒப்புதல்களைப் பெற்ற பின்னரே இத்தகைய உரிமை மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்றதோர் எண்ணத்தை–மாயையை மக்களிடையே ஏற்படுத்த இவ்வகைத் தலையீடுகள் துணை புரிந்திருக்கலாம்.

இத்தகைய நில உரிமை மாற்றங்கள் பிராமணர், வேளாளர், படைத்தலைவர், அதிகாரிகள், கோயில் என்று யார் சார்பில் நிகழ்ந்திருந்த போதிலும், கிளர்ச்சியாக அவை வெடிக்காவிட்டாலும், எதிர்ப்புணர்வுகள் அல்லது கசப்புணர்வுகள் மக்கள் மனத்தில் தோன்றியிருப்பதே இயற்கை. ஆனால், மன்னர்கள் இதில் தலையிட்டிருக்கிறார்கள் என்பது இருவகையான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்க வாய்ப்புகள் உண்டு. முதலாவது, இது ஏதோ பொது நன்மைக்காக நடைபெற்றுள்ளது என்ற நம்பிக்கையைத் தருவது; மற்றொன்று, மன்னனே

தலையிட்டிருப்பதால், இதற்கு உடன்படாமல் இருப்பது தங்களுடைய எதிர்ப்பு வலுவுக்கு அப்பாற்பட்டது என்ற அச்ச உணர்வை இழப்படைந்தவர்களுக்கு ஊட்டியதாகும். உள்ளூரில் இருந்த பிராமணர், வேளாளர் என்றால் எதிர்ப்பைப் பற்றி நினைத்தாவது பார்த்திருக்கலாம்; ஆனால், மன்னனை எதிர்ப்பது என்பதை எளிய மக்களால் அக்காலத்தில் எண்ணிக் கூடப் பார்த்திருக்க முடியாது.

அத்துடன், பயன்படுத்தி வந்தவர்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டன என்பது ஒரே ஒரு முறை மட்டும் நடைபெற்ற நிகழ்ச்சியாக இருந்துவிடவில்லை. ‘குடிநீக்கி’க் கொடுத்த வகையில் முன்னர் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகச் சான்று எதுவும் இது வரை கிடைக்கப் பெறவில்லை. இவர்கள் புதிய நிலங்களைத் தேடிச் சென்றவர்களாகவோ, வேறு நிலங்களில் குத்தகை உழவை மேற்கொண்டவர்களாகவோ அல்லது கூலி உடல் உழைப்பாளர்களாகவோதான் மாறியிருக்கவேண்டும். ‘குடி நீக்கா’ வகையிலும், பலர் தங்கள் நிலங்களிலேயே குத்தகையாளர்களாகத் தகுதி குறைக்கப்பட்டார்கள்.

இவற்றோடு இவர்களது துயரநிலை நின்றுவிடவில்லை. தாங்கள் செய்துவந்த உற்பத்தியில் புதிய உடைமையாளர்களான கோயில், பிராமணர் போன்றவர்களுக்குத் தொடர்ந்து பங்கு கொடுத்துவர வேண்டியிருந்தது. உழைப்பில் கிடைத்த எஞ்சிய உற்பத்தி–உபரி உற்பத்தி யாவும் இவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்டது. குத்தகை அளவு மிகுதியானபோது, மேலும் மேலும் உயர்ந்துவிட்ட உற்பத்திப் பங்கைக் கொடுக்க முடியாத அவலம் ஏற்பட்டபோது, பயிர் செய்ய முடியாதுபோதல், ஊரைவிட்டு ஓடுதல் என்பன போன்ற நிலைமைகளுக்குத் தள்ளப்பட்டார்கள். உழைப்பில் கிடைத்த எஞ்சிய உற்பத்தியை மட்டும் எடுத்துக்கொள்ளாமல், அதைவிட உயர் அளவாக உற்பத்தியின் பெரும் பங்கினையே நிலவுடைமையாளர்கள் கொண்டபோதுதான் இத்தகைய நிலை ஏற்பட்டது.

உழுகுடிகளைப் போன்றே கைவினைஞர் போன்றவர்களுக்கும் பல கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி, அவர்களது உழைப்பும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

நிலப்பறிப்பு என்ற ஒரு நிகழ்வோடு நின்றுவிடாமல், இதன் இழிவுகள் தொடர்ந்து நீடித்துவந்தன. அதனுடைய விளைவுகள் தொடர்ந்து மக்களின் வாழ்வில் நிலைத்த இன்னல்களை நிகழ்த்தி வந்தன. இவற்றை விரிவாகக் கல்வெட்டுக்கள் குறிக்கவில்லையென்றாலும், இவற்றைப் பதிவு செய்வதற்கான இடமாகக் கல்வெட்டுக்கள் அமையாவிட்டாலும், உழைக்கும்



மக்களின் அன்றாட வாழ்வில் நிலவி வந்த நிறைவற்ற நிலைமைகளை முழுமையாக மறைக்க முடியவில்லை. ஒரு சில ஆவணங்களில் விலக்காக இவை வெளிப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைமைகளிலெல்லாம், துயருற்ற உழுகுடிகள்–மக்கள், தம் இன்னல்களை மன்னர்களிடமே முறையிட்டு வந்தார்கள். மன்னர் என்ற ஆட்சியமைப்பிடம் அச்சமும் அடக்கமும் கொண்ட மதிப்பு இருந்து வந்ததுடன், பெரும் நம்பிக்கையையும் அவர்கள் வைத்திருந்தார்கள். அத்துடன், வேறு மாற்று இல்லாத நிலையில், தங்கள் சிக்கல்களைத் தீர்க்கும் மேல்முறையீட்டு மன்றமாகவும் மன்னர்களையே மக்கள் பார்க்கவேண்டியிருந்தது. ஒரு வகையில், தாங்கள் எடுத்த நிலக்கொடை என்ற நடைமுறையினால் ஏற்பட்ட தீய விளைவுகளின் சீரழிவுகளைச் சீர்தூக்கித் தீர்ப்புக் கூறும் நிலையில் அந்த மன்னர்களே வீற்றிருந்தார்கள். ஆனால், மன்னர்களது தீர்வு உடைமையாளருக்கு உதவுவதாகவே இருந்திருக்க முடியும்.

இந்த நிலையில்தான், மன்னர்களின் தலையீடும் அவர்களது பெயர்களைப் பயன்படுத்திக்கொள்வதும் உடைமைப் பகுதியினருக்கு வேண்டியதாகவிருந்தது. அதனாலேயே, மன்னர்களின் தலையீடும் வரவேற்கப்பட்டது; ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**பிராமணர்கள் வரவேற்கப்பட்டார்களா?**

உண்மை இவ்வாறிருக்க, பிராமணர்களின் வழிகாட்டுதலையும் தலைமையையும் பெறுதற்காக, குடியேற்றப்பட்ட இடங்களில் அவர்கள் விரும்பி வரவேற்கப்பட்டார்கள் என்று நீலகண்ட சாத்திரியர் கூறுவது,[30] உலக நடைமுறைகளுக்கும், உள்ள உணர்வுகளுக்கும், கிடைக்கின்ற சான்றுகளுக்கும் எவ்வகையிலும் பொருந்துவதாக இல்லை.

நிலங்கள் கோயிலுக்கென்று எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் பிராமணர்களுக்கென்று பறிக்கப்பட்டிருந்தாலும், இதனால் இழப்படைந்த பகுதியினர், நடைமுறையில் வேறு பயன்களை எவ்வகையிலும் பெறாதபோது, இவற்றையெல்லாம் அவர்கள்–அதுவும் நேரிடையாகத் தாக்கத்திற்குள்ளான மக்கள் விருப்புடன் ஏற்றுக்கொண்டார்கள் என்பதோடு வரவேற்கவும் செய்தார்கள் என்று கொள்வது மனித இயல்புகளுக்கே முரணானதாகும். மன்னனுடைய துணையுடன் நடைபெற்றதால் அவனுக்கு அஞ்சியோ, அவனை நம்பியோ, அவனது முடிவை மதித்தோ அல்லது வேறு வழியின்றியோதான் மக்கள் இவற்றை ஏற்றுக்கொண்டார்கள்.

மேலும், கோயில்களில் அவ்வப்போது ஊழல்களும் ஒழுக்கக்கேடுகளும் களவுகளும் தொடர்ந்து நடந்துவந்திருக்

கின்றன. இவற்றுக்குக் கோயில் பொறுப்புகளில் இருந்த பிராமணர்களே பெரும்பாலும் காரணிகளாக இருந்திருக் கிறார்கள். கோயில் நிலங்களின் உற்பத்தியைக் கொள்ளை கொண்டவர்களாகப் பிராமணர்களும் வேளாளர்களும் இருந் திருக்கிறார்கள். ஏற்கெனவே விரிவாகவும் விளக்கமாகவும் கண்டபடி, நடைபெற்ற தவறுகளைக் கண்காணிக்க மன்னர் கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தைக் கொடுக்க மன்னர் களின் தலையீடு பயன்பட்டிருக்கலாம். கோயில்களின் மீதான நம்பிக்கைகள் சிதையாமல் காக்கவும் இது வேண்டியிருந்திருக் கலாம்.

கோயிலுக்கு எதிரான குற்றங்களைச் செய்தவர்கள் வேளா ளராக இருந்தாலும், பிராமணராக இருந்தாலும் தண்டிக்கப் பட்டார்கள். இதனால், கோயில் என்ற நிறுவனத்தில் தவறு செய்பவர் யாராக இருப்பினும் தண்டிக்கப்படுவார்கள் என்ற எண்ணம் உருவாக்கப்பட்டு, அதன் பொதுநிலை நிறுவப்பட முயற்சிக்கப்பட்டது.

இதன்றி, மற்றொன்றையும் பார்க்கவேண்டும். கோயில் என்ற அமைப்பின் வழியாக நிலவுடைமையாளர் கூட்டு நலன் பேணப்பட்ட அதே வேளையில், தனியொருவர், அவர் வேளாளராகவே இருப்பினும் தவறு செய்வது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முதலாவதாக, அவர் பிற நிலவுடைமை யாளர்களின் உரிமைகளைத் தட்டிப் பறிக்க முயல்கிறார்; அடுத்ததாக, அவர் அந்த அமைப்பின் நம்பகத்தன்மையைச் சீர்குலைக்கிறார். இதில் உடைமையாளர்களின் தலைவனான மன்னன் மட்டுமல்லாது, பிற உடைமையாளர்களும் காப்புணர் வுடனேயே செயல்பட்டிருக்கின்றனர். இந்த நிலையில், தங்க ளுடைய மேல்முறையீட்டாளராக மன்னனை நிலவுடைமை யாளரும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்றே தோன்றுகிறது.

கோயிலுக்குரிய மரங்களை வெட்டி விற்றதில் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்ட கோயில் பணியாளனைத் தண்டிக்க ஊரார் தயங்கியபோது, அரசன் தலையிட்டதை அறிகிறோம்.[31] இதில் குற்றமிழைத்தவன் நிலவுரிமை கொண்ட வனாக இருந்த நிலையில், அவனை உடைமையாளர் நிறைந் துள்ள ஊரார் தண்டிக்கத் தயங்கியதால், மற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவேண்டும் என்பதாலேயே அரசன் தலை யிடவேண்டியதாயிற்று.

இதேபோன்று, கோயில்களின் அன்றாட நடைமுறை அலுவல்களுக்குக்கூட அரசனது ஒப்புதல் பெறப்பட்டதாகக் கல்வெட்டுகளில் பதியப்பட்டுள்ளன. கோயில்களின் நிலங்களை வேறு சிலருடைய நிலங்களுக்காக மாற்றிக் கொடுப்பதற்கு



(தலைமாறு என்று கல்வெட்டு இதைக் குறிக்கிறது) வீரராசேந்திரன் ஒப்புதல் கொடுத்ததை நன்னிலம் அருகிலுள்ள அச்சுதமங்கலக் கல்வெட்டுக் (கிபி 1070) காட்டுகிறது.[32] அதே ஊரில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு (கிபி 1207), கடவுள் சிலைகளை ஊர்வலமாகக் கொண்டு செல்லக் கூடிய வகையில் தெரு அகலமாக இல்லாததால், அதற்குத் தடையாக இருந்த குடியிருப்புகளை இடித்து வழியமைக்கவும், மாற்றாக வேறு புதிய குடியிருப்புகளைக் கட்டுதற்கு உதவி வழங்கவும் அரசன் ஆணையிட்டதைக் கூறுகிறது.[33]

இவை போன்ற அன்றாட நடைமுறைகளுக்குக்கூட மன்ன னது ஒப்புதல் பெறவேண்டியிருந்தது என்று எடுத்துக்கொள் வதைவிட, அரசனது பெயரில் ஆணையிடப்படுவது மரபாகப் பேணப்பட்டது என்றும் கொள்ள வாய்ப்புண்டு. இன்றுகூட, அமைச்சர்கள்–அதிகாரிகள் மேற்கொள்ளும் பெரும்பாலான அரசின் அலுவல்கள், குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநர் பெயரிலே நடைபெறுவதாகக் குறிக்கப்படுவதைப் பார்க் கலாம். ஆனாலும், அன்று ஆணை பெறப்பட்ட முறை எப்படி என்பது தெளிவாகத் தெரியவில்லை. அரசனது உயர்நிலையை ஏற்பதற்கு அடையாளமாகவும் அரசனது ஒப்புதல் பெறப்பட் டிருப்பதாக மக்களை நம்பச் செய்யவும் இத்தகைய நடைமுறை கள் சில இடங்களில் பயன்பட்டிருக்கலாம்.

ஆனால், இரண்டு கோயில்களுக்கிடையே ஏற்பட்ட சிக்கலைத் தீர்ப்பதில்கூடச் சோழ மன்னன் ராசராசன் தலை யிடாததையும் காணமுடிகிறது. மாயவரம் அண்மையில் உள்ள ஆக்கூர் கோயிலில் இருந்த ராசராச விண்ணகர் எம்பெருமா னுடைய சிலையை, விழாக் காலங்களில் வேறொரு கோயிலான திருத்தோன்றிமாடமுடையார் கோயில் குளத்தில் நீராட்டுவது வழக்கம். வழக்கமான அனுமதியை அக்கோயில் அறங்காவலர் கள் தராததால், ஆக்கூர் ‘கிராம கார்ய’த்துக்குப் பொறுப்பேற் றிருந்த கூத்தப் பெருமக்கள், காவிரியாற்றுக்குக் கொண்டு சென்று நீராட்டும் வகையில் வழியேற்படுத்த, வரியில்லாத வேறு ஒரு நிலம் ஒதுக்கி ஏற்பாடு செய்யவேண்டியதாகிவிட்டது.[34] எனவே, வேண்டிய இடங்களில், தேவையான குறிப்பிட்ட சில பணிகளுக்கு மட்டும், மன்னனது பெயரில் ஆணைகள் வெளி யிடப்பட்டிருக்கவும்கூடும். எது எப்படியிருப்பினும், கோயில் ஒரு பொது நிறுவனம் என்ற நம்பிக்கையினை ஊட்டியதில் மன்னர்களது செயல்பாடுகள் துணைபுரிந்திருக்கின்றன.

### பிராமணருக்கான கொடைகள் மேற்பார்வை செய்யப்படல்

இங்கு பேராசிரியர் ஒய். சுப்பராயலு வெளியிட்டிருக்கும் ஆய்வு முடிவுகள் சிலவற்றை எடுத்துக்காட்டுவது பொருத்த

மாக அமையும்.[35] நாடு வகை செய்வார் (நாடு கூறு செய்வார்), நாடு கண்காணி நாயகம் (நாடு கண்காட்சி) ஆகிய அதிகாரி களின் செயல்பாடுகள் யாவும் கோயில், தேவதானம் போன்ற பொது அமைப்புகள் தொடர்பானவையாகவே இருந்திருக் கின்றன என்று அவர் நிறுவுகிறார். அத்துடன், பிராமணர்களின் பிரமதேயச் சபைக் கூட்டத்திலும் நாடுவகை அதிகாரி வீற்றிருந் ததை அவர் குறிப்பிடுகிறார்.[36] இது தனித்து நோக்கப்பட வேண்டியதாகும்.

பிரமதேயச் சபையில் உறுப்பினராக இருப்பதற்கும் வாரியம் போன்ற பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படவும் தகுதிகளை இறுதி செய்து அரசனே நேரிடையாக ஆணை வெளியிட்டது முன்னர் குறிக்கப்பட்டுள்ளது. சபையின் செயல் முறைகளும் விரிவாக வகுத்தளிக்கப்பட்டன. உத்தரமேரூர்ச் சபையின் இந்தக் கூட்டங்களில் அரசன் சார்பில் ‘தத்தனூர் மூவேந்த வேளான் உடன் இருக்க’வும் ‘சோமாசிப் பெருமாள் உடன் இருந்து’ம் விதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பிராமணர் சபையின் உறுப்பினர் தகுதி, செயல்முறைகள் ஆகியவை அரசர்களது ஆணைகளுக்குட் பட்டோ அல்லது அரச அதிகாரிகளின் வழிகாட்டுதலிலோ தாம் நடத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான பெரும் பாலான ஆவணங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.[37] இருந் தாலும், வழக்கம் போலவே தனக்கேயுரிய நுணுக்கத்துடன் நீலகண்ட சாத்திரியார், பிராமணச் சபைகளின் இத்தகைய நிலைமைகளை வேறு வகையாகத் திரித்துக் காட்ட முயற்சிக் கிறார்.[38] இந்த விதிமுறைகளைச் சபைகள் தாமே வகுத்துக் கொண்டு, பின்னர் அரசனது ஒப்புதலுக்கு அனுப்பியிருக்க வாய்ப்பிருப்பதாகக் கூறும் அவர், அரசனது ஒப்புதல் மட்டுமே பதிவாகியிருப்பதாகவும், சபையினர் அரசனுக்கு அனுப்பிய கருத்துருக்கள் பதிவாகவில்லை என்றும் கூறியுள்ளார். அடுத்து, வேறுவழியின்றி, இது தெளிவாகத் தெரியவில்லை என ஏற்றுக் கொள்ளும்படியான நிலையும் சாத்திரியாருக்கு ஏற்பட்டு விட்டது. பிராமணர்களின் உயர்வையும் சிறப்பையும் மேன்மை யையும் தனித் தன்மைகளையும் வாய்ப்புக் கிடைத்தபோதெல் லாம் பெருமைப்படுத்தியிருந்த அவருக்கு, பிராமணச் சபைகள் மன்னர்களது ஆணைக்கிணங்கியே விதிகளை வகுத்துக் கொண்டிருந்தன என்ற உண்மையை நேரிடையாக ஏற்றுக் கொள்ள மனம் வரவில்லை.

சிறப்புக் கொண்ட முடிவுகளைப் பிராமணர்களது சபை எடுத்தபோதெல்லாம், அரசனது அதிகாரிகள் அத்தகைய கூட்டங்களில் பங்கு கொண்டு, மேற்பார்வை செய்திருக்



கிறார்கள்; வழிகாட்டியிருக்கிறார்கள். இதில் வேளாள அதிகாரிகளே மிகுதியும் இருந்தார்கள் என்பதும் குறிக்கத் தக்கது.[39]

சதுர்வேதிமங்கலம் அல்லது பிரமதேயங்கள் பொதுச் சொத்துக்களாக இல்லாவிட்டாலும், அரசனால் கொடை யாகக் கொடுக்கப்பட்டவையாகும். உழைக்கும் உழுகுடிகளிட மிருந்து பறித்துத் தரப்பட்ட நிலங்களையும், மக்கள் வரியாகத் தந்த பணத்திலிருந்து பெற்ற சலுகைகளையும் பிராமணர்கள் கொண்டிருந்ததால், இவர்களது பணிகள் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. இதனாலேயே பிரமதேயச் சபையின் பயன் மிகுந்த சில கூட்டங்களில் அரச அதிகாரிகள் வீற்றிருந்து மேற்பார்வை செய்துவந்தார்கள்.

ஆனால், வேளாளர்களாக இருந்த ஊராருக்கோ, நாட்டாருக்கோ அவர்களது உள்ளாட்சிக் கூட்டங்களில் பங்கு பெறுவதற்காக இதுபோன்ற தகுதிகள் எதையும் மன்னர்கள் முடிவு செய்யவில்லை; அதேபோன்று வணிகர்களின் நகரத் திலும் தலையிடவில்லை. இவர்கள் தங்கள் கூட்டங்களுக்கான செயல்முறைகளைத் தாங்களே உருவாக்கிக்கொண்டார்கள். இந்த அமைப்புகளின் கூட்டங்களில் அரச அதிகாரிகள் வீற்றிருந்து மேற்பார்வை செய்ததாகவும் தெரியவில்லை. இவர் கள் கொண்டிருந்த நிலங்கள் தனியார் நிலவுரிமை என்ற வகையில் இருந்ததால் இவற்றில் தணிக்கையோ அல்லது மேற் பார்வையோ வேண்டியிருக்கவில்லை.

ஆனால், ஆட்சி முறையின் ஒரு பகுதியாக இருந்த வரி வருவாய் தொடர்பான அளவீடுகள், மதிப்பீடுகள், தணிக்கை போன்றன அனைத்து வகை நிலங்களுக்கும் இருந்தன என்பதை யும் இங்கு பார்க்காமல் விட்டுவிடக்கூடாது. ஆயினும், பொது வாக அன்றாடச் செயல்பாடுகளில் தணிக்கையும் மேற்பார்வை யும் கோயில், தேவதானம், பிரமதேயம் போன்ற பொது அமைப்புகள் என்று கருதத்தக்கனவற்றுக்கே இருந்திருக் கின்றன. தனியுரிமை நிலங்களுக்கோ தனியாருக்கோ இத்தகைய தணிக்கையும் மேற்பார்வையும் நேரடியாக இருந்திருக்க வாய்ப்புகளில்லை; அப்படி இருக்கவுமில்லை.

வேளாளர்களாக இருந்த அதிகாரிகளும் படைத்தலைவர் களும்கூட அரசனிடமிருந்து நிலங்களைப் பெற்றிருந்தார்கள் என்றாலும், அவர்கள் செய்த பணிகளுக்காகவே இவ்வாறு தரப்பட்டன. ஆகவே, இவற்றில் மேற்பார்வை வேண்டியிருந் திருக்காது. அதுபோலவே, அதிகாரிகள் மற்றும் படைத் தலைவர்களாகவிருந்த பிராமணர்களுக்கு அவர்தம் பணிகளுக் காக நிலங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இதுவே பொருந்

தும். ஆனால், பணிகளுக்காகவோ அல்லது வேறு வகையான ஊழியத்துக்காகவோ, உழைப்புக்காகவோ பிராமணர்கள் நிலம் பெறாது, வெறும் கொடைகளாக அல்லது நேரடிப் பயனில்லாத வேதப் பயிற்சி போன்றவற்றுக்காக மட்டுமே பெற்றிருப்பின், அவற்றை முறைப்படுத்தவேண்டிய தேவை மன்னர்களுக்கு இருந்தது. அல்லது அப்படியொரு வெளித் தோற்றத்தைக் காட்டவேண்டிய சூழ்நிலைகூட இருந்திருக் கலாம்.

இங்கு மற்றொரு வகையான நிலப் பறிப்புப் பற்றியும் பார்த்தாகவேண்டும். பிராமணர்களைப் போன்று நேரிடை யான 'கொடை' என்னும் கொள்ளையன்றி, வேறு முறைகளில் வேளாளர்கள், ஏன் பிராமணர்கள்கூட, பயிரிடுவோரிடமிருந்து நிலங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஊதியத்துக்காக அல்லாதும், அதிகாரிகளுக்கும் படைத்தலைவர்களுக்கும் நிலங்கள் கைமாறியிருக்கின்றன. இவற்றுக்கும் மன்னர்களின் துணை பெருமளவு இருந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது, இத்தகைய நிலங்களைக் கொண்டிருந்தவர்களும், மேலே காட்டியவாறு மன்னர்களின் மேற்பார்வைக்கும் கண்காணிப் பிற்கும் தணிக்கைக்கும் உள்படுத்தப்பட்டார்களா?

**வேளாளர் உள்ளூரினர்,**
**பிராமணர் உற்பத்தித் தொடர்பில்லா அயலவர்**

நிலங்களைக் கைக்கொண்டிருந்ததில் வேளாளருக்கும் பிராமணருக்குமுள்ள ஓர் அடிப்படை வேறுபாட்டை இங்கு குறித்தாக வேண்டும். பிராமணரையன்றி, வேளாளராக இருந் தாலும் வேறு யாராக இருந்தாலும், அவர்கள் பெற்ற நிலங்கள் யாவும் பெரிதும் உள்ளூரைச் சார்ந்தவையாகவே இருந்தன. தாங்கள் வாழ்ந்த ஊர்களிலேயே இவர்கள் நிலங்களைப் பெற்று, பின்னர் அங்கேயே தொடர்ந்து வாழ்ந்து வந்தார்கள். பயிரிடுவோரிடமிருந்து நிலப் பறிப்புச் செய்திருந்தாலும், இவர் கள் யாவரும் மண்ணின் மைந்தர்களாகவே இருந்தார்கள். ஆனால், பிராமணர் அனைவருமே பெரிதும் வடக்கிலிருந்து வந்து இங்கு குடியேறியோர் அல்லது குடியேற்றப்பட்டோர். அவர்கள் எங்கு நிலங்களைக் கொண்டிருந்தாலும், மண்ணின் மைந்தர்களாக இருந்தவர்களல்லர். இந்த வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாமல், அன்றைய ஆட்சி முறையின் ஆழமான நுட்பங்களை வெளிக்கொண்டுவர இயலாது.

வேளாளரது அவையான ஊர், உள்ளூரிலேயே இருந்தவர் கள்–அவர்கள் உடைமையாளராக மட்டுமே இருப்பினும்– இடம் பெற்றிருந்த உள்ளாட்சி அமைப்பு; இனக்குழு அமைப்



பில் அனைவரும் கூடி முடிவெடுக்கும் மன்றம் அல்லது நான்மகி ழிருக்கையினது வளர்நிலை மாற்றத்தின் ஒரு பகுதி இது. ஆகையினால், ஊர் அவையினர் எடுத்த முடிவுகளைச் செயல் படுத்துவதில் ஏதாவது எதிர்ப்பு அல்லது தடை இருந்திருந் தாலும், அதனைச் சமாளிக்கும் முழுத் திறனும் வலிமையும் உள்ளூரைப் புரிந்து வைத்திருக்கின்ற அதன் வேளாளர்களுக்கு இருந்திருக்கும். தலைமுறைகளாகப் பயிரிட்டு வந்த குடிகளை வலுவில் வெளியேற்றி நிலங்களைப் பறித்ததால் ஏற்பட்டிருந்த பூசல் உணர்வுகள் நீடித்திருந்திருக்கும் என்றாலும், உள்ளூர் உடைமையாளர்கள் பலதரப்பட்டவர்களாக இருந்திருப்பர். குடிகளை வெளியேற்றி நிலப் பறிப்பில் ஈடுபடாத சிறு அளவில் உடைமை கொண்ட வேளாளர்களும் ஊர் அவையில் இருந் திருப்பர். இது ஒரு வகையான இணை–சமன் நிலையை உருவாக்கப் பயன்பட்டிருக்கலாம்.

ஆனால், பிராமணர் அவையான சதுர்வேதிமங்கலத்துச் சபையோ, முற்றிலும் அந்த ஊருக்கு ஒவ்வாதவர்களின்–முன் தொடர்பில்லாதவர்களின் அமைப்பு. இதனால்தான், மன்னர் கள் இவற்றை வேறுபடுத்திப் பார்க்கவேண்டியிருந்தது. அத் துடன், முழுக்க முன்பின் தெரியாத–ஒவ்வாத பகுதியினரான சபையினரை உள்ளூர் மக்களுடன் ஒத்தியையச் செய்யவேண்டி யிருந்தது. அந்தச் சபையினர் எடுக்கின்ற முடிவுகளுக்கு அந்தப் பகுதியினர் எதிர்ப்புத் தெரிவிக்கும்போது, அதைச் செயல் படுத்தவும் வேளாள அதிகாரிகளின் இருப்புத் துணைபுரிந் திருக்கும். அத்துடன், அந்தச் சதுர்வேதிமங்கலத்துச் சபையின் நடைமுறைகள், செயல்முறைகள் போன்றவற்றைச் சட்டமுறை யானதாக்கவும் வேளாள அதிகாரிகளின் இருப்பே பயன்பட் டிருக்கும். இவை யாவற்றுக்கும் மேலாக, பிராமணர்களின் குடியமர்த்தல்கள் அனைத்துமே, பல தலைமுறைகளாக வேளாண் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குடிகளை வலுவில் வெளியேற்றிப் பறித்த நிலக் கொடைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதனால், உள்ளூர்க் குடிகளின் ஒத்துழைப் பின்மை மட்டுமல்லாது, எதிர்ப்புணர்வினையும் பிராமணர்கள் நோக்கிநின்றனர். பிரமதேய ஊர்களில், உற்பத்தியாளர்-பிரா மணர் உறவுகள் மிகக் கீழ்நிலையில் இருந்ததும் இங்கு நினைக் கத்தக்கது. குடியமர்த்தப்பட்ட ஊர்களில் பிராமணருடைய இருப்புக்கே, காவலும் உதவியும் துணையும் வேண்டப்பட்ட நிலை நீடித்திருந்தபோது, பிராமணர்தம் ஆளுமைக்குட்பட்ட மேலாண்மையை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு உள்ளூரை அறிந்திருந்த வலிமைகொண்ட வேளாள அதிகாரிகள் பயன் பட்டிருப்பார்கள்.

**பிராமணர்க்கான கொடைகள் முழு உரிமையற்றவை**

இவை யாவற்றுக்கும் மேலாக, நிலங்கள் பிராமணர்களுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், சோழர் காலத்தில், அந்நிலங்கள் முழு உரிமைகளுடன் அவர்களுக்கு வழங்கப்பெறவில்லை. பெரும்பாலும் உற்பத்திப் பயனைத் துய்க்குமாறுதாம் அவை தரப்பட்டிருந்தன. அதனால், பிராமணர்களுக்கான அத்தகைய நிலங்கள் அவர்கள் முழு உரிமை கொள்ள முடியாதவையாயும் பொதுநிலங்கள்போல் எண்ணத் தக்கனவாயுமே இருந்தன. அதாவது, அவர்களது 'பணி'களுக்குத் தரப்பட்டனவாகவே காட்டப்பட்டிருந்தன. இதனை உறுதிப் படுத்தும் வகையில் முதலாம் ராசேந்திரனின் பாகூர்க் கல்வெட்டு அமைந்துள்ளது. சோழச்சதுர்வேதிமங்கலம் எனும் ஊரில் இருந்த நிலங்கள் தனித்தனியாக ஒவ்வொரு பிராமணருக்கும் பிரித்துத் தரப்படாமல் பொதுவாகவே வழங்கப்பட்டிருப்பது தெரிகிறது.[40] பொதுவகையான் உற்பத்தி மேற்கொள்ளப்படும் ஊர்ப்பொது நிலங்களும், குத்தகைக்கு விடப்படும் கோயில் நிலங்களும் பெரும்பாலும் நிலையாக உழுகுடிகளுக்கு ஒதுக்கித்தரப்படமாட்டா. மாறாக, சில ஆண்டுகளுக்கு ஒரு முறை 'கரையோலை' முறையில் இடம் மாற்றி, வேறு நிலம் ஒதுக்கிப் பிரித்துத் தரப்படும். அதாவது, அவ்வப்போது குடவோலை முறையில் நிலங்களும் மாற்றி ஒதுக்கீடு செய்யப் பெறும். நிலத்தில் உற்பத்தி செய்பவர், ஒரு குறிப்பிட்ட நிலத்தை நிலையாக வைத்துக்கொண்டிருக்க முடியாது. அந்த நிலத்தில் முழு உரிமை இல்லை என்பதை நிறுவ இம்முறை பின்பற்றப்பட்டது. உற்பத்தியில் உழைப்பைச் செலுத்திய உழுகுடிகளுக்கு அந்நிலத்தில் பழைய உரிமை ஏதாவது இருப்பின் அதை அவர்கள் நிலைநாட்டிவிடக்கூடாது என்பதற்காகவும் அந் நிலத்தின் மேல் உணர்வுப் பிடிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் இம்முறை பயன்படுத்தப்பட்டது.

இந்த முறையிலேயே பிராமணர்களுக்கும் நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. கொடையாக நிலம் பெற்றிருந்த பிராமணர்களுக்குப் பழைய உழும் உரிமை இருந்திருக்க முடியாது; உற்பத்தி உழைப்பில் ஈடுபட்டிராத இவர்கள் நிலத்தின்பால் உணர்வுப் பிடிப்பையும் கொண்டிருக்கமாட்டார்கள். இருந்தாலும், பிராமணர்களுக்கு நிலையான நிலம் கொடையளிக்காது, அடிக்கடி மாற்றிக்கொள்ளும் முறையிலேயே நிலம் தரப்பட்டுள்ளது. "சோழச் சருப்பேதிமங்கலம் ஆயிரம் பிராமணர்க்கு பங்கெழுதி கூறிட்டுக்கொள்கவென்று திருமுகப் பிரசாதஞ்செய்தருளி சம்கரித்து கூறிட்டமையில்.........இவ்வூர் பங்கெழுதி கரை பறித்து கையோலை வாங்கின" விவரம் பாகூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[41]



இத்தகைய நிலைகளில், மன்னனது மேற்பார்வை ஒழுங்கு படுத்தலுக்குத் தேவையானதாகவும் இருந்திருக்கலாம்.

அத்துடன், பிராமணர்களது சதுர்வேதிமங்கலத்துச் சபையில் இடம்பெற்றிருந்த அனைவருமே எத்தகைய உழைப்பையும் செலுத்தாமல் உழுவித்துண்ணும் வகையினர். அந்தச் சபையில் உழுகுடிகள் எவருமே இடம்பெற்றிருக்கவில்லை. இதனால், உழுதுண்போருக்கும் உழுவித்துண்போருக்கும் இடையில் இணக்கமும் பிணைப்பும் ஏற்படுத்தவேண்டிய பணியினைச் செய்ய யாராவது தேவைப்பட்டிருப்பர். இவர்கள் மிகச் சில வேளைகளில் பிராமண அதிகாரிகளாகக்கூட இருந்திருக்கலாம். மன்னரது சார்பாளராக அவர்கள் இருந்தார்கள் என்பது தான் இதில் இன்றியமையாதது. சில காலம் கழித்து, இயல்பு நிலை ஏற்பட்ட பின்னரும்கூட, யாவும் முறையாக நடந்தேறி வருகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளக் கண்காணித்தல் தொடர்ந்திருக்கலாம். எவ்வாறிருப்பினும், பல காரணிகளால், பிராமணர்களுக்கான கொடைகளும் பிறவும், பெரிதும் வேளாள அதிகாரிகளைக்கொண்டு மன்னர்களால் மேற்பார்வையிடப்பட்டன. பொதுச் சொத்துக்கள் ஏதாவதொரு வகையில் மேற்பார்வையிடப்பட்டன என்பதுதான் இதில் நோக்கவேண்டியதாகும்.

இத்தகைய மேற்பார்வையின் விளைவுகளைத் தெளிவுபடுத்தும் பல விவரங்கள் கிடைத்துள்ளன. கிபி 892இல் கோயிலுக்குக் கொடுத்த கொடையை கிபி 911 வரை பிராமணர்களது புதுப்பாக்கத்துச் சபையினர் பதிவேடுகளில் எழுதவில்லை என்பது கண்டறியப்பட்டு முறைப்படுத்தப்பட்டமையைத் திருமால்புரக் கல்வெட்டுக் கூறுவதை முன்னரே பார்த்தோம்.[42] அதே போன்று, கிபி 943இல் கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்த காணி வருவாய் கிபி 985 வரை கோயிலுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்தக் காணி வருவாயைக் கோயிலுக்குத் தரவேண்டிய பொறுப்பையேற்றிருந்த அதே புதுப்பாக்கத்துப் பிராமணச் சபையினர், தொடர்ந்து 42 ஆண்டுகளாக ஏமாற்றி வந்தனர். கோயில் அறங்காவலர்கள், மன்னனிடம் முறையிட்டுக் கோயிலுக்குச் சேரவேண்டிய நெல், பொன் போன்ற கொடைகள் முறைப்படி கிடைக்க வழி செய்தனர். புதுப்பாக்கத்துச் சபையினர், தவறுகளுக்குத் தண்டம் செலுத்தவேண்டியதாயிற்று. பொதுச் சொத்துக்கள், சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளானாலும் காக்கப்பட்டிருக்கின்றன என்ற நம்பிக்கை ஏற்பட இந்த

மேற்பார்வை முறை உதவியது. நிலவுடைமை நலனுக்கு எதிராக இல்லாத வரை, அறக்கொடைகள் முறையாகப் பேணப்பட்டிருக் கின்றன என்பதையும் மறுத்துவிட முடியாது.

அத்துடன், பிராமணர் சபை செய்த தவறுகளைக் கோயில் அறங்காவலர்களே சுட்டிக்காட்டித் திருத்தியிருப்பதும் நோக்கத் தக்கது. கோயில் மேலாண்மைப் பொறுப்பில் இருந்தவர்கள் பெரிதும் வேளாளர்களாகவே இருந்தனர். இவர்கள் பிராமணர் களின் தவறுகளைத் தட்டிக்கேட்கும் நிலையிலேயே இருந்திருக் கிறார்கள். புதுப்பாக்கத்துச் சபையினர், கொடைகளைப் பதிவு செய்யாமலேயே இருந்ததால்தான், பல ஆண்டுகள் வெளியில் தெரியவில்லை. ஒரு முறை செய்த தவறு கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும், மீண்டும் சில ஆண்டுகள் சென்ற பின் வேறொரு முறைகேட்டினை அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆனால், இதுவும் வெளியில் தெரிந்தவுடன் திருத்தப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புக்கும் கோயிலுக்கும் ஏற்பட்ட முரணாக இதைக் கொள்ளமுடியாது. கொடைகள் காக்கப் படாதபோது, அது நிலவுடைமை அமைப்பின் நம்பகத் தன்மைக்குக் கேடு விளைத்துவிடும். அத்துடன், கோயிலின் பொறுப்பில் இருக்கின்ற நிலவுடைமையாளர் நலன்களுக்கும் தீங்காக அமையும். அதனால்தான், இது போன்ற தவறுகள் ஏற்படாமல் இருக்க முனைப்புக் காட்டினர்.

இதுபோன்ற சில நிகழ்வுகளால்தான், பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகளும் பிராமணர்களது சபை அலுவல் களும் கண்காணிக்கப்பட்டன போலும்!

இவற்றுக்கு மாறாக, பெரிதும் வேளாளர்களின் கட்டுப் பாட்டில் இருந்த ஒரு சில கோயில்களிலும் மன்னர்களது மேற்பார்வை அவ்வப்போது இருந்தமை, நம்பகத்தன்மையை நிலைநாட்டப் பயன்பட்டது. 'பொது'ச் சொத்துக்கள் மன்னர் களால் சீராகக் கண்காணிக்கப்படுகின்றன என்ற எண்ணத் தினை உருவாக்கவும் இது உதவியிருக்கலாம்.

பொதுவாகச் சில வரலாற்றாசிரியர்கள் வற்புறுத்திக் கூறியிருப்பதுபோன்று, 'அறிவுப் பரவ'லைப் பணியாகக் கொண்டிருந்தமைக்காகப் பிராமணர்களுக்கு நிலங்களை வழங்கிவிட்டு மன்னர்கள் ஒதுங்கிவிடவில்லை. மக்களுடைய அன்றாடத் தேவைகளுக்கேற்ற அறிவுப் பயிற்சியையும் ஆக்கப் பணிகளையும் இந்தப் பிராமணர்கள் எவ்வகையிலும் மேற் கொண்டிருக்கவுமில்லை. கோயில் பணிகளோடும் சிலவகைக் கோட்பாடுகளை–உடைமைப் பிரிவினருக்குச் சார்பான கோட் பாடுகளை உருவாக்குகிற பணிகளோடும் மட்டுமே அவர் களுடைய சேவையும் தேவையும் முடங்கிக் கிடந்தன. இதனால்,



தமக்கு வேண்டியவாறான கருத்துருவாக்கங்களைப் பெறு தற்குப் பயன்படுத்திக்கொள்ளத் தக்கவாறு அவர்களைத் தங்க ளுடைய கட்டுப்பாட்டுக்குள்ளேயே அரசர்களும் வேளாளர் களும் வைத்திருந்தனர். வேளாளருக்கு மரண தண்டனை தரக் கூடாது என வேண்டியபோது வேண்டியவாறு 'தர்ம' நீதி விளக்கம் கொடுத்த கோயில் பட்டரை முன்னர் பார்த்தோம்.[43] இதற்காகவும்கூட இத்தகைய மேற்பார்வைகள் வேண்டப் பட்டிருக்கலாம். அதாவது, அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடக் கண்காணிப்புகள் இருந்திருக்கலாம்.

வேளாளர் போல் தனித்துச் செயல்படக்கூடியவாறான வலுவோ வல்லாண்மையோ பிராமணர்களிடம் இல்லாத தாலும், தங்கள் நிலைபாட்டிற்கு மன்னர்களின்–வேளாளர் களின் துணை வேண்டப்பட்டதாலும் அவர்கள் அதற்கேற் பவே நடந்துகொண்டார்கள். ஆனாலும், தாங்கள் இருந்த இடங்களில் பிராமணர்கள் நில உற்பத்தி வளத்தை வாரி யெடுத்துக்கொண்டிருந்ததால், அதை நியாயப்படுத்தமுடியா விட்டாலும், ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாகக் கூறத்தக்கவாறு மன்னர்கள் நடந்துகொண்டிருக்கலாம்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, பிரா மணர்களின் நிலக் குடியேற்றங்களிலும் சரி, கோயில் குடியமர் விலும் சரி, ஏற்பட்ட தடைகளைப் போக்கவும், வேளாளர் உள்ளிட்ட உடைமைப் பகுதியினரின் அமைப்பாக இருந்த கோயிலைப் பொது நிறுவனமாகக் காட்டவும்தான் அரசர்கள் பல அலுவல்களுக்கிடையிலும் கோயில் செயல்பாடுகளில் தலையிட்டு வந்தார்கள் என்பதைத் தெளியலாம். இதில் தங்க ளுடைய நோக்கங்கள் நிறைவேறி வந்ததாலும், அரசனது தலையீடு, தங்களது ஆதிக்கத்தை நிலைப்படுத்தவே பயன் பட்டது என்பதாலும் நிலவுடைமைப் பகுதியினரும் இதைத் தடுக்காது வரவேற்று, அனுமதித்து வந்தார்கள். பேரரசு வலிமை குன்றிய காலங்களில்கூட அரசனது பெயர் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

வெளிப்படையாகவும் விளக்கமாகவும், அதேபொழுதில் ஒரு சில வரிகளில் சுருக்கமாகவும் இவற்றைக் கூறவேண்டு மெனில், நிலவுடைமையாளர் தொடர்பான தலையீடுகளும் மேற்பார்வைகளும் கண்காணிப்புகளும், அரசன் சார்பில் நில வுடைமையாளர்களான அதிகாரிகளைக் கொண்டே நடத்தப் பட்டிருக்கின்றன.

### வேளாளர் மேல்நிலையைக் காட்டும் மன்னர்தம் மேற்பார்வை

ஒரு வகையில், கோயில்களிலும் பிராமணரின் சதுர்வேதி மங்கலச் சபைகளிலும் பிராமணர் தொடர்பான கொடைகளி

லும் மன்னர்களின் மேற்பார்வை என்பதே வேளாளர்களின் மேல்நிலையையும் ஆதிக்கத்தையும் காட்டுவதாக அமைகின் றன. நிலவுடைமை கொண்ட வேளாளர், உழைக்கும் மக்களை ஒரு வகையில் கட்டுக்குள் வைத்திருந்ததைப் போலவே, வேறு ஒரு வகையில் பிராமணரைத் தம் கட்டுக்குள் வைத்திருந்தனர் என்பதையே இவை வெளிப்படுத்துகின்றன. இதற்கு மன்னன் என்ற அமைப்பும் காலத்தின் கட்டளையால் துணை நின்றது.

கோயில் என்பது நில உடைமைப் பிரிவினரின் அமைப்பு தான் என்றாலும், இதில் நடைபெற்ற செயல்களுக்கு, உழைப்பைத் தருவதன்றி வேறு எவ்வகையிலும் இதோடு தொடர்பில்லாத பிற பிரிவினரின் நம்பிக்கையினையும் பெற வேண்டிய இன்றியமையாமையை அன்றைய சமூக-பொரு ளியச் சூழ்நிலை ஏற்படுத்தியிருந்தது. அதற்கேற்பவே மன்னர் களும் வேளாளர்களும் பிராமணர்களும் பிற உடைமைப் பகுதியினரும் நடந்துகொண்டிருந்தார்கள்.

> அரசு என்பது எவ்வகையிலும் வெளியிலிருந்து சமூகத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு வல்லமையல்ல.........குறிப்பிட்ட தொரு வளர்ச்சிக் கட்டத்தில் உள்ள சமூகத்தின் விளைவு அது.........பகைமையும் எதிரான பொருளாதார நலன் களும் கொண்டுள்ள வர்க்கங்கள், வீணான சண்டையில் தம்மையும் சமூகத்தையும் அழித்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக, சமூகத்துக்கு மேலாக இருப்பதாகக் காட்டிக் கொள்கின்ற, சண்டையின் கடுமையைத் தணித்து, 'ஒழுங்கு' என்னும் வரையறைக்குள் அதைக் கட்டுப் படுத்தக்கூடிய ஒரு வல்லமை வேண்டியிருந்தது. சமூகத்தி லிருந்து தோன்றிய, ஆனால் சமூகத்துக்கு மேலாகத் தன்னை வைத்துக்கொண்டு, சமூகத்திலிருந்து மேன் மேலும் தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளும் இந்த வல்லமையே அரசு ஆகும்.
>
> ............இந்தச் சமூக வல்லமை ஒவ்வோர் அரசிலும் உண்டு. அது ஆயுதமேந்திய மக்களை மட்டும் கொண்டதல்ல; அத்துடன் பொருள்வயப்பட்ட துணைக் கருவிகளையும் கூட, அதாவது சிறைகள், பல்வேறு முறைகளில் வன்முறை யைப் பயன்படுத்துகின்ற அமைப்புகள் ஆகியவற்றையும் கொண்டது.
>
> ..........சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட வல்லமை யாளர்களாக இருப்பதால், பல இயல்பு கடந்த சட்டங் களின் வழியாக அவர்களை மதிக்கப்பெறும் நிலை வற்புறுத்தப்படுகிறது. இதனால், இவர்கள் சிறப்பான புனிதத் தன்மையையும் மீறக்கூடாத தனி உயர்வையும் பெற்றிருக்கிறார்கள்



என்று அரசு எந்திரத்தின் அடிப்படையினை, பிரெடெரிக் எங்கெல்ஸ் விளக்கிக் கூறுவதன் பொருத்தப்பாடு மனங் கொளத்தக்கது.[44]

## இயல் 10

# நிலவுடைமைக்குச் சார்பான கருத்துநிலை உருவாக்கம்

இவ்வளவு விரிவான விளக்கங்களுக்கிடையிலேயேகூட, மேலும் சில வினாக்கள் எழுவதையும் இங்கு விட்டுவிட முடியாது.

தங்கள் செயல்பாடுகளிலெல்லாம், உடைமைப் பகுதியினருக்கு வெளியே இருந்த உழைக்கும் மக்கள் நம்பிக்கைகொள்ள வேண்டும், யாவும் பொதுநலனுக்காகவே நடைபெறுகின்றன என்று ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அன்றைய நிலவுடைமையாளர்கள் எதிர்பார்த்தார்களா?

வலிமையும் வல்லாண்மையும் அதிகாரமும் ஆதிக்கமும் செல்வமும் செல்வாக்கும் மேன்மையும் மேலாண்மையும் படைபலமும் பாதுகாப்பும் கொண்ட தன்னேரில்லாத் தகைமையாளர்களாகத் திகழ்ந்த நிலவுடைமையாளர்கள்—குறிப்பாக வேளாளர்கள், தங்களை அண்டிக்கிடந்த—சார்ந்து கிடந்த உழைக்கும் மக்களின் உணர்வுகளைக்கூடக் கணக்கிலெடுத்துக் கொள்ள முற்பட்டார்களா?

### உடைமை நலன்களைக் காக்கவே விட்டுக்கொடுத்தல்

அன்றைய அமைப்பு நில உற்பத்தியை அடித்தளமாகக் கொண்டிருந்தது. இந்த உற்பத்திக்கு வேண்டிய உழுகுடிகள், உழுகருவிகளைச் செய்து கொடுத்தோர், உடல் உழைப்பை நல்கியோர், நில உடைமையாளர்களின் அன்றாட வாழ்க்கை முறையில் துணி வெளுத்தல் போன்ற இல்லப் பணிகளை மேற்கொண்டிருந்தோர் எனப் பல்வேறு பிரிவினரையும் உள்ளடக்கியதாக அன்றைய உற்பத்தி அலகான ஊர் விளங்கியது. இவர்களில் ஏதாவதொரு பிரிவினரின் இல்லாமையோ பற்றாக் குறையோ, நில உற்பத்தியில் தடைகளை ஏற்படுத்த வாய்ப்புகள் மிகுதி. மிகு குத்தகை அளவால் ஊரைவிட்டு ஓடிய உழுகுடிகள் இருந்தார்கள்; அதே போன்று கருவிகளைச் செய்துகொடுத்த கைவினைஞர்களுக்கான தேவை தொடர்ந்து இருந்து கொண்டேயிருந்தது. ஆகவே, இவர்களுடன் அவ்வப்போது, தங்களது நலன் கெடாதவாறு விட்டுக்கொடுத்தும் போக வேண்டியிருந்தது.



மேலும், உழுகுடிகளில் பெரும்பான்மையோர், நிலங்களைக் கொண்டிருந்து, பின்னர், 'குடிநீக்கி' நிலங்களைப் பறித்ததால் நிலம் இழந்தவர்கள். இவர்களுடைய உணர்வுகளும் புறக்கணிக்கக்கூடியவையல்ல. நிலவுரிமையில்லாத பிரிவினர் அமைப்பு முறையில் ஒன்று திரளாத பகுதியினராக இருந்தமை தாம் அவர்களுடைய வலுவின்மைக்கு முதற் காரணியாக இருந்தது. சாதிப் பிரிவுகளும் பிற சமூகக் கட்டுக்களும் அன்றைய சமூக-பொருளிய-பண்பாட்டுப் பின்னணியும் இதற்கு இடம் தரக்கூடிய நிலைமைகளை அன்று ஏற்படுத்தவில்லை.

முன்னர் காட்டியவாறு, தங்கள் உற்பத்தி நலன்களுக்குக் கேடு ஏற்படுகின்றபோதெல்லாம் உடைமைப் பகுதியினர் விட்டுக் கொடுத்துச் செயல்பட்டிருக்கின்றனர். குத்தகை அளவைக்கூடக் குறைத்திருக்கின்றனர். அது போன்றே, உற்பத்தி நலன்களுக்காகவே உடைமையாளர்கள், பிற பகுதியினரையும் இயைபுடன் இணைத்துச் செல்ல விழைந்தனர். இது எல்லா அமைப்புகளிலும் உடைமைப் பிரிவினர் கையாளுகின்ற தந்திரம்தான். இதனாலேயே, உடைமைப் பகுதியினர் தங்கள் நலன்களையெல்லாம் புறக்கணித்து, விட்டுக்கொடுத்தார்கள் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இன்னும் சொல்லப் போனால், தங்கள் நலன்களைக் காத்துக்கொள்ளவே இந்த விட்டுக் கொடுத்தல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில் வெற்றி பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், உடைமைப் பகுதியினர் வல்லாண்மை என்ற வலிமை மிக்க கருவியைக் கைக்கொள்வார்கள் என்பதையும் வரலாறு தெளிவாகவே காட்டியிருக்கிறது.

### பக்தி இயக்கம் என்ற மாயை

அடுத்து, பழைய முறையில் ஊரில் உள்ள கடவுளர்களை—நாட்டார் கடவுளர்களைத் தொடர்ந்து வழிபட்டுவந்த பிற மக்கள் பகுதியினர், தாங்கள் நாட்டம் செலுத்தாத ஆரிய வயப்பட்ட உடைமைப் பகுதியினருக்கான கடவுளர்களின் கோயில்களை மையமாகக்கொண்டு எழுப்பப்பட்ட மாயைகளில் மயங்கினார்களா? இந்தக் கோயில்களினடியாக எழுந்த அமைப்புகளை ஏற்றுக்கொண்டார்களா? பக்தி இயக்கத்தின் தத்துவ நுட்பமும் தார்மீகத் தாக்கமும் இந்த ஏழை மக்களையும் எளிதில் ஈர்த்துக்கொள்ள முடிந்தனவா?

பொதுவாகப் பக்தி இயக்கத்தின் வீச்சினைக் குறித்து, மிகைப்படுத்தப்பட்ட, தவறான, உண்மை நிலைக்கு மாறுபட்ட மதிப்பீடுகளே வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, கீழ்த் தட்டு உழைக்கும் மக்கள் பிரிவினர் இந்தப் பக்தி இயக்கத்தால்

பெரிதும் ஈர்க்கப்பட்டதாகவும், அதனால் அந்த மக்கள் பிரிவினரை எளிதில் ஆளுமைப்படுத்த முடிந்தது என்றும், சமூகத்தை ஒருமைப்படுத்தும் பணியினைப் பக்தி இயக்கம் நிறைவேற்றி வந்தது என்றும், அனைவரும் இணை என்ற மாயையை உருவாக்கியதில் பக்தி இயக்கம் வெற்றி பெற்றது என்றும் பலவாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்குகொண்ட ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகவே பக்தி இயக்கம் விவரிக்கப் பட்டு வருகின்றது. இது பரவலாக ஆய்வாளர்களால் ஏற்கப் பட்டிருப்பது வியப்பாகவே உள்ளது. ஆனால், உண்மைநிலை அவ்வாறு அமைந்திருந்ததாகத் தெரியவில்லை. பக்தி இயக்கத் தின் தாக்கம் கீழ்த்தட்டு உழைக்கும் மக்களையும் எட்டியிருந் தது என்ற இந்தத் தவறான கருதுகோள், பல சமூக அசைவியக் கங்களை வரையறுப்பதிலும் மதிப்பிடுவதிலும் தவறான வழியைக் காட்டிவிட்டது. இந்தத் திரித்தல் முதலில் திருத்தப் படவேண்டும்.

பக்தி இயக்கமும் கோயில்களும் பிராமணர்களுக்கான பிரமதேயக் குடியமர்வுகளும், சாதிய ஏற்றத் தாழ்வுகளின் வலுவான பின்னணியுடன், நிலவுடைமை உற்பத்தி அமைப் பினைத் திடப்படுத்த உதவின என்பது உண்மைதான். நிலவுடைமைப் பகுதியினரின் முழுமையான துணையுடன் பெரும் இயக்கமாகப் பக்தி இயக்கம் வீச்சுடன் விரிந்து பரந்து நின்றது. பக்தி இயக்கத்தின் இந்த எழுச்சி, அன்றைய சமூகத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது என்பதையும் மறுக்க முடியாது. ஆனால், இத்தகைய தாக்கம்—வீச்சு, பெருமளவு நிலவுடைமைப் பகுதியினரோடு மட்டும் நின்றுவிட்டதை—முடங்கிவிட்டதைப் பார்க்கத் தவறிவிடக்கூடாது. ஏனெனில், மேல்நிலைப்படுத்தப்பட்ட தன்மைகளைப் பெற்று, பெரும் பாலும் நிலவுடைமைப் பகுதியினர் பங்குகொண்டதாகவே பக்தி இயக்கம் அன்று இருந்துவந்தது.

சைவ நாயன்மார்களிலும் வைணவ ஆழ்வார்களிலும் கீழ்த்தட்டு மக்கள் உள்ளிட்ட சில சாதியினர் இருந்திருக் கிறார்கள் என்பதை யாரும் மறுக்கவில்லை. இதைக்கொண்டு பக்தி இயக்கத்தின் தாக்கம் அனைத்துச் சாதியினரையும்—அனைத்துப் பகுதியினரையும் அடைந்திருந்தது—எட்டியிருந் தது என்ற முடிவுக்கு வந்துவிடமுடியாது. வேறுபட்ட பல்வேறு சாதியினரைக் கொண்ட மக்கள் திரளில், சமூக-பொருளிய நிலையில் கீழ்ப்பட்டிருந்த சில சாதியினரைச் சார்ந்த ஓரிரு தனி மனிதர்களையும் பக்தி இயக்கம் ஈர்த்திருந்தது என்று வேண்டு மானால் இதனைக் கொள்ளலாம். அதாவது, அடியார்களில்



ஒரு சிலர், அன்றைய சமூக-பொருளிய அமைப்பின் கீழ்நிலைப் பட்ட சாதிகளைச் சார்ந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அத்தகைய சாதியினர், பக்தி இயக்கத்தின் பகுதியாக இருந்த தாலேயே, அவர்களை அவர்களது சாதியால் பார்க்கப்படுகின்ற பார்வை அகன்றுவிட்டது என்றோ அல்லது உயர் சாதியின ரான பிற பக்தியாளர்களோடு சமூக அளவில்—பக்தி அளவில் மட்டும் அல்ல—அவர்களும் இணையாக வைத்து எண்ணப் பட்டனர்—ஏற்கப்பட்டனர் என்றோ கொள்ளுமாறு சான்று கள் எதுவும் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை.

இதைக் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சைவமும் வைணவமும் பக்தி இயக்கத்தின் வழியாகச் சாதிய ஏற்றத் தாழ்வுகளைச் சமூகத்திலிருந்து அப்புறப்படுத்திவிடவில்லை. சைவ அல்லது வைணவ அடியார்களாக மதிக்கப்பட்டவர் கள்கூட, அவரவர்தம் சாதிகளுக்கு மேம்பட்டவர்களாகக் கொள்ளப்படவில்லை. அதாவது, அடியார்கள்கூட, சாதி களுக்கு அப்பாற்பட்டவர்களாகப் பார்க்கப்படவில்லை.

சாதிய முறைகளுக்கு அப்பாற்பட்டே அடியார்கள் பார்க்கப்பட்டார்கள் என்று *பெரியபுராணமும்* கூறவில்லை. அடியார்களின் வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறுவதில் மிகைப் படுத்தலே இல்லை என்று வைத்துக்கொண்டாலும்கூட, பெருமைப்படுத்துதற்காக ஓரளவேனும் ஏற்றிப்போற்றிப் பாட வேண்டிய நிலையில் இருந்த *பெரியபுராணத்தில்* கிடைக்கின்ற விவரங்களும்கூட, சாதிய வேறுபாடுகளை வெளிப்படை யாகவே காட்டுவனவாகத்தான் அமைந்திருக்கின்றன என்றால், உண்மை வாழ்வில் இது எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கும் எனக் கூறவேண்டியதில்லை.

**தொடர்ந்த நாட்டார் வழிபாட்டு முறைகள்**

மேலும், உழைக்கும் சாதிகளைச் சார்ந்த ஒரு சிலர்—ஓரிருவர் பக்தி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு பங்கு பெற்றிருந் தாலும், அவர்களது சாதிகளில் இருந்த அனைவரும் சைவ-வைணவ வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலைமை அன்றைய சமூக-பொருளியப் பின்னணியில் ஏற்படவேயில்லை. அவர்கள் தமது வழிமுறைப் படியான—மரபுப்படியான நாட்டார் கடவுளர்களையே நம்பிக்கையுடனும் ஈடுபாட்டுடனும் தொடர்ந்து வழிபட்டு வந்தார்கள். சைவமும் வைணவமும் இவர்களை ஈர்க்கவில்லை என்பது இதனாலும் உறுதிப்படுகின்றது.

போக்குவரவு வழிகளும் தொலைத்தொடர்பு வாய்ப்பு களும் எழுத்தறிவு வளர்ச்சியும் தொலைக்காட்சி போன்ற ஊடக விரிவாக்கமும் மிகுந்துள்ள இன்றைய நிலையில்கூட, இன்று

செல்வாக்குப் பெற்றிருக்கும் மேல்மட்ட, நடுத்தர வர்க்கத் தினரின் வழிபாட்டுப் போக்குகளோடு, கீழ்த்தட்டு மக்கள்– குறிப்பாகக் கல்வியறிவு குறைவாகப் பெற்ற பகுதியினரின் வழிபாட்டு முறைகள் ஒன்றவில்லை என்பதை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இன்றைய இத்தகைய நிலைமைகளை இடைக் காலச் சமூகச் சூழல்களோடு பொருத்திப் பார்த்தால் தெளிவான போக்குப் புரியும்.

நாட்டார் தெய்வ வழிபாடு, பயன்பாடு கருதியது. இந்தப் பயன்பாடு, தீமையை விலக்கலும் நன்மையை எதிர்பார்த்தலும் ஆகும். உயர் சாதியினரின் வழிபாட்டுக் கருத்துக்களான ஆன்மிக விழிப்பு, ஆன்மிக விடுதலை ஆகியன இதில் இல்லை.[1] எனவே, தங்கள் கடவுளர்களிடம் எளிய மக்களின் எதிர் பார்ப்புகள் மிகக் குறைந்தவை. அதற்கேற்ப, நாட்டார் கடவுளர் கள், அனைத்து வரங்களையும் அருளக்கூடிய முழுச் சக்தி கொண்டிருப்பதாகக் கொள்ளப்படவுமில்லை. ஆனால், ஆரிய வயப்பட்ட கடவுளர்கள் எல்லா வரங்களையும் அருளக்கூடிய– அனைத்து வல்லமையும் பெற்றிருக்கக்கூடிய தன்மையன. அதனாலேயே, எல்லாச் சக்திகளையும் கொண்ட அக்கடவுளர் களை வழிபடுவோரும் எல்லா வரங்களையும் எதிர்பார்த்து நின்றனர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் நடத்திக் காட்டியதாக நம்பவைத்த–நம்பவைக்க முயன்ற அருஞ்செயல்கள், சைவ- வைணவத் தெய்வங்களின் மேலேற்றப்பட்ட பெருமைகள், உள்ளூர்க் கடவுளர்களின்பால் எழுப்பப்பட்டிருந்த அருள் தன்மைகள் ஆகியனவற்றை வைத்து, இவற்றையும் ஏதோ ஒரு வகைச் சக்தியாக எளிய மக்கள் பகுதியினர் ஏற்றுக்கொண் டிருக்கலாம். ஆனால், இந்தச் சக்தி மிக்க கடவுளர்களிடம் எதையாவது கேட்டுப் பெறக்கூடிய தேவை, அவற்றை வழிபட வேண்டிய வளர்ச்சி, அன்றைய நிலையில் எளிய மக்களுக்கு ஏற்பட்டுவிடவில்லை. ஆகையால்தான், அக்காலகட்டத்தில் சைவ-வைணவ வழிபாட்டு முறைகளில் கீழ்த்தட்டு மக்கள்– உடைமைப் பகுதியினர் அல்லாதவர் ஈர்க்கப்படவில்லை.

இங்கு அடிப்படையில் புரிந்துகொள்ளவேண்டிய ஒன்று உள்ளது. நில உடைமை கொண்டிராத பிற மக்கள் பகுதியினர், தாங்கள் ஏற்றுக்கொண்டபடியான தத்தமது மரபுவழிப்பட்ட நாட்டார் கடவுளர்களை வழிபட்டு வந்தவர்களேயன்றி, கடவுள் நம்பிக்கையே அற்றவர்கள் அல்லர். ஆரியவயப்பட்ட வளர்ச்சி பெற்ற கடவுளர்கள், இவர்களுக்குத் தொடர்பில்லா தனவாகவும் அப்பாற்பட்டனவாகவும் எட்டாதனவாகவும்



இருந்தன என்பது உண்மைதான். இப்படியிருந்தாலும், ஆரிய வயப்பட்ட கடவுளர்களும் ஏதோ சக்தி கொண்டவை என்ற எண்ணம் அவர்களுக்கும் இருந்திருக்கவே வாய்ப்புகள் மிகுதி. இத்தகைய எண்ணத்தை உருவாக்கவும் ஊட்டவும் செய்யப் பட்ட முயற்சிகளுக்குத்தான் சைவமும் வைணவமும் பயன் பட்டன. ஆயினும், எளிய மக்களைத் தங்கள் வயப்படுத்திக் கொள்ள அவற்றால் முடியவில்லை. இதனால், எளிய மக்கள் அந்தக் கடவுளர்களை நாடியோ, தேடியோ செல்லவில்லை.

மக்கள் வழிபட்டு வந்த சில நாட்டார் கடவுளர்களை வளர்ச்சி பெற்ற கடவுளர்களோடு இணைக்கும் முயற்சிகளும் நடைபெற்றன. எடுத்துக்காட்டாக, அம்மன் வழிபாடு, சக்தி வழிபாடு ஆக்கப்பட்டது. ஆனாலும், எளிய மக்கள் தங்கள் வழக்கமான வழிபாட்டு முறைகளைக் கைவிட்டு ஆரியவழிப் பட்டனவற்றைப் பின்பற்றவில்லை. இங்கு, ஆரியவயப்பட்ட கடவுளர்களையும் வழிபாட்டு முறைகளையும் பின்பற்ற வில்லை என்பதும், அந்தக் கடவுளர்களை ஏதோ சக்தியாக நம்பியிருக்கலாம் என்பதும் தனித்தனியான இரு வேறு தன்மை கள் என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டும்.

**உழைக்கும் மக்களை ஈர்க்காத பக்தி இயக்கம்**

ஆகவே, உழைக்கும் கீழ்ப்பகுதி மக்களை ஈர்க்கமுடியாத நம்பிக்கைகளாக இருந்த சைவத்தையும் வைணவத்தையும் அடியொற்றி எழுந்த பக்தி இயக்கத்தினைக் கொண்டு, இந்த மக்களை ஆளுமைப்படுத்த முடிந்தது என்பதும் இதனால் சமூகத்தை ஒருமைப்படுத்த இயன்றது என்பதும் பொருந்து வதாகவே தெரியவில்லை. அதேபோன்று, நடைமுறை வாழ்வில் பல்வேறு வகையான ஏற்றத்தாழ்வுகளுடன் கூடிய அடுக்கு நிலைகளைக் கொண்டிருந்த சமூகத்தில்–இறைவனை வழிபடு வதில்கூட வேறுபாடுகள் காட்டிய அமைப்பில்–இறைவழி பாட்டு முறைகளே இயைபின்றிக் கிடந்த காலகட்டத்தில், ஆதிக்க சக்திகள்–அனைத்தையும் அனுபவித்துவந்த சக்திகள் முன்னிலைப்படுத்திய ‘அனைவரும் இறைவன் முன் இணை’ என்ற மாயையில்–மயக்கத்தில், இதனால் முற்றிலும் முழுமை யாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்களே விழுந்துவிட்டார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகத் தோன்றவில்லை.

இவை யாவற்றையும் வைத்துக்கொண்டு பார்க்கும்போது, உடைமைப் பகுதியினர் அல்லாத கீழ்த்தட்டு உழைக்கும் மக்கள், பக்தி இயக்கத்தினால் சிறிதும் ஈர்க்கப்படவில்லை என்பதை உறுதியாக அறியமுடியும். அதேபோன்று, உடைமைப் பகுதி யினரின் சைவ-வைணவக் கோயில்களில் உழைக்கும் மக்கள்

நுழையக்கூட முடியாத நிலை தொடர்ந்திருந்தபோது, அந்த வழிபாட்டு முறைகளைக் கொண்டே அவர்களை ஆளுமைப் படுத்த முடிந்தது என்பதும் பொருந்துவதாக இல்லை.

நிலவுடைமைப் பகுதியினரின் கோயில்களில் மற்றவர்கள் நுழைவது தடுக்கப்பட்டதாலேயே, வழிபாட்டுரிமையும் மறுக்கப்பட்டு, இதனால் பண்பாட்டுக் கலப்பும் புறக்கணிக்கப் பட்டது. கோயில்களிலிருந்த உள்ளரங்குகளான ஆயிரங்கால் மண்டபம் போன்றவற்றில் நடத்தப்பெற்ற இசை, நடனம் போன்ற நுண்கலை நிகழ்வுகளைப் பிறர் பார்க்கமுடியாத நிலை உண்டாயிற்று. பிற இணைவுகள் ஏற்படமுடியாத நிலையில், பண்பாட்டுக் கலப்பு இயலாதெனினும், சமூக முரண்கள் தொடர்ந்தமையை இது வெளிப்படுத்துகிறது. வழிபாட்டு முறைகளில் நாட்டார் கடவுளரைப் போன்று, உழைக்கும் மக்களுக்கான நாட்டார் கலைகள் நீடித்திருந்தன. மன்னனைப் பற்றியதாகக் கொள்ளப்படுவதாயினும், *ராசராச நாடகம்* மக்களுக்கான தனிக் கலை நிகழ்வாகக் கோயிலுக்கு வெளியிலேயே நடத்தப்பட்டிருக்கிறது.

சமூக-பொருளிய ஏற்றத்தாழ்வுகள் அப்படியே நீடித்திருந்த நிலையில், அதனாலேயே பண்பாட்டுத் தளத்திலும் ஒருங்கிணைவு ஏற்பட முடியாத சூழலில், உடைமை முரண்களால் வெவ்வேறாகப் பிரிந்து கிடந்த மக்கள் திரளினைச் சைவமும் வைணவமும் பக்தி இயக்கத்தின் வாயிலாக ஒருமைப் படுத்தியிருந்தன என்பது கற்பனையளவில்கூட ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

இணைச்சீரற்ற ஒரு மக்கள் திரளில், அந்த வேறுவேறு பகுதியினர், வழிபடுதற்குக்கூட இறைவன் முன் இணைந்து நிற்க முடியாதபோது, அந்த இணைச்சீரற்ற மக்களிடையே அனைவரும் இணை என்ற மாயை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? அல்லது எப்படி ஏற்படுத்தப்பட்டிருக்க முடியும்?

மக்களிடையே ஆழமாக வேரூன்றியிருந்த கடவுள் நம்பிக்கையை வைத்து அல்லது மூடநம்பிக்கைகள் ஏதேனுமிருப்பின் அவற்றைக் கொண்டு, அவர்களைச் சமாளிக்க உடைமைப் பிரிவினர் முயற்சித்து வந்தனர் என்று வேண்டுமானால் கூறலாம்.

எந்தவொரு அமைப்பாக இருந்தாலும், ஆளும் பிரிவினரும் ஆதிக்கச் சக்திகளும் எத்தகைய வல்லாண்மையோடு தங்கள் நலன்களைக் காத்துக்கொள்வதற்கான செயல்பாடுகளை மேற்கொண்டிருந்தாலும், அவை யாவும் சட்டப்படியும் நியாயப்படியும் மக்களின் நன்மைகளுக்காகவே நடத்தப்படுகின்றன என்ற வெளித்தோற்றத்தை ஏற்படுத்துவதற்கான



முயற்சிகளில் ஈடுபடும். அத்துடன், தங்கள் செயல்பாடுகளை நியாயப்படுத்த ஏதாவதொரு பொருத்தமான தத்துவ–தார்மீக மேற்பூச்சினையும் துணைக்கிழுத்துக்கொள்ளும். பாதிக்கப் பட்ட மக்கள் பகுதியினர் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைவிட, தங்கள் செயல்பாடுகள் யாவும் நியாயத்திற்குப் புறம்பானவையல்ல என்று சொல்லிக்கொள்வதற்காகவாவது இவற்றைச் செய்யும். எதிர்காலம் தங்களைக் குற்றவாளியாக்கிவிடக்கூடாது என்பதற்காகக் காரணிகளைக் கற்பித்துக்கொள்ளும். இந்த வகையில் சைவமும் வைணவமும் பின்னணித் தத்துவங்களாக விளங்கி உதவின என்பதில் ஐயமில்லை.

**பக்தி இயக்கம் உடைமையாளரையே வலுப்படுத்தியது**

மக்களுக்கு வேண்டிய உரிமைகளைத் தராது, மண்ணக வாழ்வின் சமூக-பொருளிய ஏற்றத்தாழ்வுகளை நிலைப்படுத்தி, விண்ணக வாழ்வின் உயர்நிலையினை வலியுறுத்துவதில் சைவமும் வைணவமும் பக்தி இயக்கத்தினால் பெற்ற வெற்றி, நில உடைமைப் பகுதியினரின் ஒருங்கிணைவுக்கு வாய்ப்பாக அமைந்து, அவர்களுடைய வலுப்படுதலுக்கும் திடப்படுதலுக்கும் வழியேற்படுத்திக் கொடுத்தது என்பதைப் புறக்கணித்து விடமுடியாது.

மக்கள் பகுதியினரும் சைவ-வைணவ மாயைகளில் மயங்கினார்கள் என்பதைவிட, குறிப்பிட்ட சமூக-பொருளிய-பண்பாட்டுக் கட்டமைவுக்குள் வாழ்ந்துகொண்டிருந்த அவர்களால், அன்றைய நிலையில் அதற்கு அடங்கியே இருக்க வேண்டியிருந்தது. விழைந்தோ விழைவின்றியோ அதற்கு அவர்கள் உட்பட்டுக் கிடந்தார்கள்.

உடைமைப் பகுதியினரும் கடவுள் நம்பிக்கை, கோயில் போன்ற மாயைகளையும் பயன்படுத்திக்கொள்ள முயன்றார்களேயன்றி, இவற்றை மட்டுமே தங்கள் ஆதிக்கச் செயல்பாடுகளுக்கு அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. கோயில் என்ற நிறுவனத்தின் கட்டமைப்பிற்குள், உடைமைப் பகுதியினருக்கு வெளியில் இருந்த மக்கள் திரளினைச் சேர்த்துக் கொள்வதில் இவர்கள் நாட்டம் கொள்ளாதிருந்ததே இதை உறுதிப்படுத்துகின்றது.

உடைமைகளைக் கொண்டிருந்ததாகக் கோயில் அமைந்திருந்ததால், அதன் செயல்பாடுகளில் பிறரைப் பங்குபெறச் செய்யாமல், தாங்கள் மட்டுமே கோயில் வருவாயை–நலன்களை நுகரவேண்டும் என்ற எண்ணம் வேளாளர், பிராமணர் போன்றவர்களுக்கு இருந்திருக்கலாம். என்றாலும், இந்தக் கோயில்களில் உள்ள கடவுளர்களை–எல்லாம் வல்ல சக்தியை

வழிபடக்கூட மற்றவர்களுக்கு இவர்கள் வாய்ப்புத் தரவில்லை. இந்த நம்பிக்கை மாயைகளை மட்டுமே ஆதிக்கப் போக்கு களுக்கு இவர்கள் முழுமையாகச் சார்ந்திருக்கவில்லை என்ப தாலேயே இத்தகைய போக்குகள் தொடர்ந்தன.

**பக்தி இயக்கத்தின் முரண்கள்**

உடைமைகளற்ற உழைக்கும் மக்களும் அடித்தட்டு மக்களும் நாட்டார் கடவுளர்களையே தொடர்ந்து வழிபட்டு வந்த நிலையில், இந்த நம்பிக்கைகளைப் பயன்படுத்திக்கொள்ள விழைந்த உடைமைப் பகுதியினர் வேறு சில தந்திரங்களையும் கையாண்டனர். இவற்றின் ஒரு பகுதியாக, நாட்டார் கடவுளர் களை மேனிலைப்படுத்தும்–ஆரியவயப்படுத்தும் முயற்சிகள் முனைப்புடன் தொடர்ந்தாலும், மேனிலைப்படுத்தப்பட்ட– ஆரியவயப்படுத்தப்பட்ட கடவுளர்களுக்கான கோயில்களில் வழிபட, உழைக்கும் பகுதியினருக்கு, மக்கள் தொகையில் பெரும்பான்மையோருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்ற முரண்பாட்டு நிலையினை மறந்துவிடக்கூடாது. அதாவது, நாட்டார் கடவுளரும் மேனிலைப்படுத்தப்பட்ட ஆரியக் கடவுளரும் வேறுவேறு அல்லர் என்று காட்ட முனைந்தவர் கள், இந்த இரு வகையான கடவுளரை வழிபடுவோரும் வேறு வேறு அல்லர் என்று ஏற்றுக்கொள்ள முனையவில்லை; முன்வர வில்லை.

இந்த முரண்பாடுகளிலும்கூட உடைமை நலன்களைக் காத்துக்கொள்ளும் நோக்கே முன் நின்றிருக்கவேண்டும் என்ப தில் ஐயமில்லை.

**பிராமணிய ஆளுமை இருந்ததா?**

கோயில்களின் பெருவளர்ச்சியும் சமய அமைப்புகளும் கோயில்களை மையப்படுத்திய பக்தி இயக்கமும் பிராமணிய ஆளுமையைச் செயல்படுத்தப் பயன்பட்டதுடன் நில்லாமல், 'நிலவுடைமை முடியாட்சி' எனக் கூறப்படுவதை முறைமைப் படுத்தவும் முயன்றன என்று டி.என். ஜா போன்றவர்களே குறிக்கின்றனர்.[2] கோயில்களையும் சமயத்தையும் வைத்துக் கொண்டு பிராமணர்களால் ஆதிக்கம் செலுத்த முடிந்தது– ஆளுமை செலுத்த முடிந்தது என்ற கருத்தும் பரவலாகக் கூறப் படுகின்றது.

பிரம்மதேயச் சபைகள் பண்பாட்டுத் தாக்கம் செய்யக் கூடிய சூழ்நிலை இருந்ததெனவும் வெள்ளான்வகை ஊர் மக்களிடையே பிராமணியக் கருத்துக்களைப் பரப்பி, சமூக அமைதியைக் கொண்டு செலுத்த அவை பங்காற்றின எனவும் கராஷிமா கருதுகிறார்.[3] இவர், கோயிலை முன்னிலைப்படுத்



தாமல், தர்மசாத்திரங்களிலும் வேதங்களிலும் பெற்றிருந்த பயிற்சியால் பிராமணர்களால் இதைச் செய்யும் சூழ்நிலை இருந்ததாகக் கொள்கிறார்.

விசயநகர ஆட்சிக் காலத்திற்கு முன்னரே தமிழ்நாட்டில் இருந்த கடவுளர்களும் வழிபாட்டு முறைகளும் ஓரளவு ஆரிய வயவாக்கப்பட்டிருந்தன என்றாலும், பிராமணியம் இங்கு வேரூன்றியிருக்கவில்லை. சைவ-வைணவங்களின் பக்தி இயக்கத் தில் பிராமணர்களும் பங்குகொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களைவிட வேளாளர்களும் பிறருமே மிகுந்திருந்தனர். பக்தி இயக்கத்தில் அந்தணரான திருஞான சம்பந்தருடைய பங்கும் பணியும் சிறப்பாகக் குறித்துக் கூறக்கூடிய வகையில் இருந்தது என்றாலும், அவர் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்த'னாகவும் 'நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்த'னாகவும் விளங்கியமையைத் தனித்துப் பார்க்க முடியாது. இருப்பினும்,

> வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
> நாதன் நாமம் நமச்சி வாயவே

என்று சம்பந்தர் வேதத்தையே சைவமாக வலியுறுத்த,

> வேதம் ஓதில்என் வேள்விகள் செய்யில் என்
> நீதி நூல்பல நித்தம் பயிற்றில் என்
> ஓதி அங்கம் ஓர் ஆறும் உணரில்என்
> ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே

என்று பிராமணரல்லாத திருநாவுக்கரசர், சைவத்தை வேதமாக் கும் முயற்சிகளை மறுக்கிறார்.

> வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
> வேறுரைக்கும் நூல் இவற்றின் விரித்த நூல்கள்

என்று சைவ சித்தாந்த நூலும் வேதத்தையும் சைவத்தையும் பிரித்துப் பேசுகிறது.

இதனால், பக்தி இயக்கத்தின் உயிரோட்டத்தில் வேத வழிகளும் பிராமணியமும் இயல்பாகவே ஒத்திருக்கவுமில்லை– ஒன்றிப் போகவுமில்லை. இன்னும் சொல்லப்போனால், இரண்டு வழிமுறைகளும் ஒன்றையொன்று ஏற்றுக்கொள்ளவு மில்லை; இணைந்து செல்லவுமில்லை. முரண்பாடுகள் முற்றி யிருந்தாலும் அவை பூசலாகவோ மோதலாகவோ உருவெடுக் கவுமில்லை. சமணர்களைக் கழுவிலேற்றிப் பழி தீர்த்துக் கொண்ட நிகழ்வுகளை நடத்திக் காட்டியதில் வேளாளர் களுக்குத் துணையிருந்த பிராமணர்கள், இந்த வரலாற்றினை

மறந்துவிடாமல் மிகு எச்சரிக்கையுடனேயே இருந்திருக்கிறார்கள் போலும். பக்தி இயக்கத்தைத் தம் வழிப்படுத்தப் பிராமணர்கள் பெரு முயற்சிகள் செய்தும், வேளாளர்களிடம் விட்டுக் கொடுக்க வேண்டியதாகிவிட்டது. மேலும், சமணத்துக்கும் சைவத்துக்கும் இருந்ததைப் போன்ற உரிமை–உடைமை நல முரண்கள் வேளாளருக்கும் பிராமணருக்கும் இருக்கவில்லை. அத்துடன் தமிழகச் சூழலில், வேளாளர்களைப் பகைத்துக் கொள்ளுமளவிற்குப் பிராமணர்கள் வலிமையும் திறனும் பெற்றிருக்கவில்லை. அதனால் அவர்கள், தங்கள் இருப்புக்கு இழுக்கு வருமாறு எதனையும் செய்ய முற்படவேயில்லை.

வைணவத்தைப் பொருத்து, அவர்கள் ஆழ்வார் திருமொழிகளையே வேதமாக ஏற்றுக்கொண்டுவிட்டதைப் புறக்கணித்துவிடமுடியாது. என்றாலும், இது தனியாக ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியதாகும்.

இந்தத் தோல்விக்குப் பிராமணர்களின் சில பிடிவாதப் போக்குகளும் காரணிகளாக இருந்திருக்கலாம். மக்களுக்குப் புரியாதபோதும்–மக்கள் ஏற்காதபோதும் விடாப்பிடியாகக் வேதங்களையே அவர்கள் பற்றிக்கொண்டிருந்தார்கள். கோயில்களுக்கு வெளியே தமிழைப் பாடியவர்கள்கூட, கோயில்களுக்குள் நுழைந்தவுடன் வடமொழிக்குத் தாவ முயன்றார்கள். கோயில்களுக்குள் இறைவழிபாட்டுக்காகத் தமிழைப் பயன்படுத்துவதில் பிராமணர்களின் தயக்கம் தொடர்ந்து நீடித்தது. இதனால், *தேவாரம்* போன்றவற்றைக் கோயில்களில் பாடுவதற்கு வேளாளர்கள் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. இதற்காக, முதலாம் ராசராசன் காலம் முதல் ஓதுவார்கள் பலர் பொறுப்பேற்றார்கள்.[4] பிராமணர்கள் தமிழை விட்டுவிட்டு, வடமொழியை மட்டுமே கோயில்களில் கொண்டாடினார்கள் என்பது இதற்குப் பொருளல்ல. அன்றைய சூழ்நிலையில் அவர்களால் தமிழை முழுமையாகப் புறக்கணித்திருக்கவும் முடியாது. ஏனெனில், அன்றைய கட்டத்தில் பிராமணர்கள் தங்கள் வாழ்வுக்கும் வளத்துக்கும் மட்டுமன்றி, இருத்தலுக்குக்கூட வேளாளர்களையே சார்ந்திருந்ததாலும் சோழ அரசர்களுக்கு மக்கள் மொழியான தமிழைப் புறக்கணிக்கும் நோக்கம் எள்ளளவும் இல்லாதிருந்ததாலும், கோயில்களில் தமிழைப் பயன்படுத்துவதற்கு அவர்களால் தடைபோட முடியவில்லை; தடைபோடும் உயர்நிலையிலோ ஆளுமை நிலையிலோ அவர்கள் இருக்கவுமில்லை.

சோழர் காலத்தில், சைவக் கோயில்களில் வழிபாடுகளுக்கு வடமொழி மட்டும்தான் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை. *தேவாரம்* போன்றவற்றின்



பயன்பாடு தெளிவாகவே தெரிகின்றது. வைணவக் கோயில்களில் தமிழின் பயன்பாடு இன்றும் தொடர்வதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். வேளாளர்கள் கோயில்களுக்கு வரும் போதும், பொது வழிபாடுகளிலும் தமிழைப் பயன்படுத்திவிட்டு, பிராமணர்கள் தங்கள் மனநிறைவுக்காக அவ்வப்போது வடமொழியினைப் பயன்படுத்தியிருக்கலாம்.

தங்களது தனி வழிபாட்டு முறைகளைத் தங்களுக்காகப் பிராமணர்கள் பயன்கொண்டதைத் *திருமுருகாற்றுப்படை*, *பரிபாடல்* போன்றனவும் காட்டுகின்றன. ஒரே கோயிலில், தமிழ் மக்கள் தங்கள் மரபுகளை அடியொற்றித் தமிழிலும், பிராமணர்கள் தங்கள் முறைகளையொட்டி வடமொழியிலும் தனித்தனியே வழிபட்டிருக்கிறார்கள். இது போன்று இடைக் காலத்திலும், பிராமணர்கள் தங்களுக்கென்று தங்களது வடமொழி வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றிக்கொண்டு, தமிழர்களுக்கென்று அவர்தம் தமிழ் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியிருக்கவும் வாய்ப்புகளுண்டு. இரண்டுக்கும் ஒரே ஒரு வேறுபாடுதான் உள்ளது. *திருமுருகாற்றுப்படை* காலத்திய மக்கள், அவரவர்களே வழிபாடுகளை நடத்திக்கொண்டனர். ஆனால், சோழர் காலத்திலோ, வழிபாட்டினை நடத்திவைக்க ஒரு பிரிவினர்–பிராமணர் வந்துவிட்டனர். ஆயினும், அந்தத் தொடக்கக் கட்டத்தில், வடமொழியில்தான் வழிபாடு என்று வலியுறுத்தக்கூடிய நிலையில் பிராமணர்கள் இருந்திருக்க முடியாது.

தமிழரல்லாத விசயநகர மன்னர்களின் காலத்தில் ஏற்பட்ட சூழல்களினாலேயே, கோயில்களுக்குள் வடமொழியின் நுழைவு முற்றிலுமாக வலுவில் நிலைபெற்றிருக்கவேண்டும். வழிபாட்டு முறைமைகளை நடத்துகின்றவர்களாகப் பிராமணரல்லாத பூசாரிகள் இருந்துவந்த பழனி போன்ற கோயில்கள், பிராமணர்களின் கைப்பிடிக்குள் சென்றதும் தமிழரல்லாத விசயநகர ஆட்சியின் வல்லாண்மைக் காலத்திலேயே என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இடைக் காலத்தில், ஆரியமும் பக்தி இயக்கமும் இவ்வாறு வேறுபட்டே நின்றுகொண்டிருந்தன. தமிழ்நாட்டில் இந்த நிலைதான் வ.வே.சு. அய்யரின் சேரன்மாதேவிக் குருகுலம் வரை தொடர்ந்தது.[5] இன்னும் தொடர்கிறது.[6]

**வேளாளரின் முதன்மை நிலை**

வழிபாட்டு முறைகளில் கருத்தையோ, காலத்தையோ செலுத்த–செலவிட முடியாத நிலையிலிருந்த வேளாளர்கள், இந்த வேலைப் பிரிவினையைத் தாங்களாகவே உருவாக்கிக்

கொண்டார்கள். தங்களது பங்களிப்புக்கொண்ட பக்தி இயக்கமும் தங்களின் தனி மேலாண்மையில் தொடர்ந்த கோயில் நிறுவனங்களும் தங்களுடைய ஆளுமைக்குட்பட் டிருந்த ஆட்சி அமைப்புகளும் தங்களை மீறமுடியாத பிராமணச் சாதியும் தங்களால் சுரண்டப்படுகின்ற உழைக்கும் மக்கள் பகுதியும் தொடர்ந்து தங்கள் முழுக் கட்டுப் பாட்டிலேயே இருக்கின்றன என்ற எண்ணத்தில்–நம்பிக்கையில், கோயில் வழிபாட்டு முறைகள் சிறிதுசிறிதாக ஆரியவயப்பட்டு வந்ததை வேளாளர்கள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. இதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை என்பதுடன், கருதத்தக்கதாகவும் நினைக்கவில்லை என்றே தோன்றுகிறது. இதனால், இது வேளாளரது கருத்தினைக் கவராமல், தேவையற்ற ஒன்றாகவே (non-issue) இருந்துவிட்டது போலத் தெரிகிறது. ஆனால், உடைமை நலன்களைக் காப்பதில் மட்டும் அவர்கள் கவனக்குறைவாக இருக்கவில்லை.

இங்கு மற்றொன்றையும் பார்க்கவேண்டும். வேளாளர்கள், மரபுவழியிலான நாட்டார் கடவுளரையும் இணையாகத் தொடர்ந்து தொழுதுவந்தார்கள் என்பதுதான் அது. அத் துடன், நிலவுடைமைப் பகுதியின் கருத்தமைவுகளையும் தேவைகளையும் உள்ளடக்கியதாக இருந்ததாலேயே ஆரிய வயப்பட்ட–மேல்நிலைப்படுத்தப்பட்ட கடவுளர்கள், தமிழ் நாட்டு வேளாளர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டன–ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதனாலேயே, வேளாளர்கள் முழுமையாக ஆரியமா தலை–பிராமணியத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்றோ, அதற்குக் கீழ்ப்படிந்து கிடந்தார்கள் என்றோ குறைத்துக் கணக்கிட்டுவிடக்கூடாது. தங்களுடைய நலன்களுக்கும் ஆதிக் கத்திற்கும் ஆளுமைக்கும் எதிராக அவர்கள் எதையும் விட்டுவைக்கவில்லை. அப்படி எங்கேனும் எதிலேனும் எவருக் கேனும்–பிராமணர் போன்றவர்களுக்கு–வேளாளர்கள் விட்டுக் கொடுத்திருந்தால், அது தங்களுடைய நலன்களை உறுதிப் படுத்திக்கொள்ளவும் வலிமைப்படுத்திக்கொள்ளவும் வளப் படுத்திக்கொள்ளவும் திடப்படுத்திக்கொள்ளவும்தான் இருந் திருக்க முடியும் என்பதை இந்த இடத்தில் புறக்கணித்துவிடக் கூடாது.

அன்றைய அமைப்பில், சமூக-பொருளிய-அரசியல்-பண்பாட்டு ஆதிக்கச் சக்தியாக வேளாளர்களே மேலோங்கி நின்றனர். அவர்களுடைய நலன்களைப் புறந்தள்ளக்கூடிய வகையில், வலிமையோ, செல்வாக்கோ, செயல்பாட்டுத் திறனோ பிராமணியம் உள்ளிட்ட வேறு எந்தச் சமூக-பொரு



ளிய-அரசியல்-பண்பாட்டுச் சக்தியிடமும் இருக்கவில்லை. அப்படியொரு சக்தி உருப்பெறுவதற்கு, அந்தக் கட்டமைப்பில் இடமுமில்லை. அப்படித் தோன்றுவதற்கான வாய்ப்பு ஏற்பட் டாலும், அதனை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடக்கூடிய உயர் நிலையிலேயே–வலிமை நிலையிலேயே வேளாளர்கள் இருந்தனர்.

**மேனிலையாக்கம்**

மேனிலையாக்கம் என்ற கருத்துநிலை குறித்து வரலாற் றாளர் மற்றும் ஆய்வாளர்கள் விரிவாக ஆராய்ந்து பல்வேறு விளக்கங்களை வெளியிட்டிருக்கின்றனர். பெரும்பாலும், இந்த விளக்கங்கள் யாவும் பொது உடன்பாட்டுடன்கூடிய ஒத்த கருத்துக்களைக் கொண்டனவாகவே அமைந்துள்ளன. மேனிலையாக்கம் என்று இன்று பொதுவாக வழங்கப்படுகின்ற இந்தக் கருத்துநிலை, சமக்கிருதவயவாக்கம் (Sanskritisation) என்ற பெயரிலேயே எம். என். சீனிவாஸ் என்கிற சமூகவியலாள ரால் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. சமக்கிருத வயவாக்கம், வடமொழிவயவாக்கம், ஆரியவயவாக்கம் என்ற கலைச் சொல்லாக்கங்கள், உண்மைநிலைகளைத் திரிக்க உள்நோக்கத்துடன் திட்டமிட்டுக் குறிக்கப்பட்டனவாகவே தெரிகிறது. அத்தகைய நோக்கங்கள் நிறைவேறும் வகை யிலேயே அதற்கான பொருள்கொள்ளுதலும் விளக்கங்களும் இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இது இன்று, மேனிலையாக்கம் என்னும் பெயர் மாற்றம் பெற்றுள்ளது என்றாலும், பெயர்தான் மாறியுள்ளதேயன்றி, இது குறித்த கண்ணோட்டம், அறிதல், புரிதல், தெளிதல் என்று எதுவுமே யாரிடமும் சற்றும் மாறிவிடவில்லை. இதில் வியக்கத்தக்கதோர் ஒற்றுமையும் உள்ளது. மேனிலையாக்கம் என்ற இந்த உண்மைக்கு ஒவ்வாத கொள்கைநிலை அல்லது கருத்துரு வினைத் தமிழ்ச் சூழலிலும் திறமையுடன் பயன்படுத்திய வருணப் போக்குக் கொண்டவர்களின் தவறான பார்வை யினையே, சிறிதும் மாற்றமின்றி முற்போக்காளர் உள்ளிட்ட பிறரும் உடன்பாடுகொண்டு பிடித்துக்கொண்டிருப்பதுதான் அது. ஆனால் தமிழ்நாட்டில், மேனிலையாக்கத்துக்கு மாறாகத் தமிழ்நிலையாக்கமே நடந்தேறியுள்ளது என்ற உண்மை, முற்போக்காளருடைய பார்வையிலும் படாதுபோய்விட்டது எதிர்பாராததுதான்.

தங்கள் மொழியினை முற்றாகப் புறக்கணித்துவிட்டு, புதி தாகக் குடியேறிய இடத்தின் மொழியினை முழுமையாக அப்படியே ஏற்று, அனைத்து வகையானும் புகுந்த இடத்துடன் பிணைக்கப்பட்டவர்களாகப் பிராமணர்கள் மாறிய பின்னணி

யில்தான் தமிழ்நாட்டில் மேனிலையாக்கத்தினை ஆராய வேண்டியுள்ளது.

ஆரியச் செல்வாக்கின் முதலாவதான பதிவுகளாகச் சங்க இலக்கியங்களில் சில குறிப்புகள் காணப்பெறுகின்றன. "வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி"யமையும் (*புறம்* 15 : 20), "மன்னிய வேள்வி முற்றி"யமையும் (*புறம்* 26 : 14-15), "வேத வேள்வி தொழில் முடித்த"தும் (*புறம்* 224 : 9) கூறப்படுகின்றன. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று ஒரு பாண்டியனும் ராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று ஒரு சோழனும் அவர்கள் செய்த வேள்விகளையொட்டி அறியப்படுகின்றனர். "அந்தி அந்தணர் அருங்கட னிறுக்கும் முத்தீ விளக்கு" (*புறம்* 2 : 22, 23), "ஆன் இயற் பார்ப்பன மாக்கள்" (*புறம்* 9 : 1), "அழல் புறந்தரூஉம் அந்தணர்" (*புறம்* 122 : 3), "கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்" (*புறம்* 361 : 4) போன்றோர் குறிக்கப்படுகின்றனர். "பார்ப்பார் தப்பிய கொடுமையோர்" (*புறம்* 34 : 3), "பார்ப்பார் நோவன செய்யலர்" (*புறம்* 23 : 14), "அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி" (*பதிற்*. 24 : 8), "பார்ப்பார்க் கல்லது பணிபு அறியலையே" (பதிற். 63 : 1) என்றெல்லாம் கூறுவதன் வழி, பார்ப்பனர் சிறப்புப் பெற்றிருந்தமையும் வெளிப்படுகிறது. ஆனாலும், வேள்வி செய்வதறியாத "வேளாப் பார்ப்பான்" (*அகம்* 24 : 1) இருந்தமை, பார்ப்பனர் அனைவரும் பெற்றிருந்த தாக நம்பப்படும் ஒரு வகை அறிதலை உண்மையில் அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதைப் புலப்படுத்திவிடுகிறது. இருப்பினும், "குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளி"யில் (*மது*. 474), "சிறந்த வேதம் விளங்கப் பாடி" (*மது*. 468) அந்தணர் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை மறுக்க வும் முடியாது. தமிழ்நாட்டில், "கேள்வி அந்தணர்"களாகப் (*பெரும்*. 315) பலர் இருந்தார்கள் என்றாலும், அந்தக் கேள்வி எனப்பட்டது என்ன என்பது புரியப்படவேண்டும். ஏனெனில், தமிழ் மண்ணில், "ஓதல் அந்தணர் வேதம் பாட" (*மது*. 656) இருந்தாலும், "பரிசிலன் மன்னும் அந்தணன்" (*புறம்* 200-13) என்றும் "அந்தணன் புலவன்" (*புறம்* 201-7) என்றும் குறிப்பிடுவதற்கு ஏற்பக் கபிலரைப் போன்று அவர்கள் தமிழ் பாடியே வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

சங்கத் தமிழ்நாட்டில், அந்தணர்கள் ஒரு புறம் வடமொழி யில் வேதம் ஓதிக்கொண்டிருந்தாலும், அவர்கள் பேசிய மொழி யாக அது இருக்கவில்லை; வேறு வகையில் பயன்படுத்திய மொழியாகவும் இருக்கவில்லை. பார்ப்பனப் புலவர்கள் பாடிய தமிழ்ப் பாடல்கள் கிடைத்திருக்கின்றனவேயன்றி, அவர்கள் சமக்கிருதத்தில் பாடிய பாடல்கள் கிடைக்கவில்லை; பாடிய தற்குச் சான்றுகளும் இல்லை. "மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப் புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்" (*பட்டின*. 216-7) புகார்ப்பட்டினம் கூறப்படுகிறது. ஆனால், பார்ப்பனர்கள் வேறு மொழி பேசியவர்களாகவும் குறிப்பிடப் படவில்லை; புலம்பெயர் மக்களாகவும் கூறப்படவில்லை. வேதம் ஓதியதால் வேறுபட்டு நின்றாலும், தமிழ் பேசியதால் தமிழ்வயமாக முயன்றிருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில், பார்ப்பனர்களைப் பார்த்துத் தமிழர்கள் சமக்கிருதம் படிக்க வேண்டும் என்று நினைத்துவிடவில்லை.



ஆரிய அளவுகோள்களைக் கொண்டு "நோக்கார் புலை" (*ஆசாரக்கோவை* 13), "புலைக்கு எச்சில் நீட்டார்" (*ஆசா*. 90), "புலையர்வாய் நாள் கேட்டுச் செய்யார்" (*ஆசா*. 92) என்றெல் லாம் தங்கள் போக்குகளைப் பார்ப்பனர், தமிழ்நாட்டில் புகுத்த முனைந்தபோது, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" (*குறள்* 972) என்ற குரல் ஓங்கி ஒலித்து அவற்றை ஒடுக்கியது. இதைப் போன்றே, அன்றைய மக்களது பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்வு களிலும் ஆரியச் சடங்குகள் இடம்பெற்றுவிடவில்லை.

அன்றைய தமிழ்நாட்டில், வாழ்க்கைப் போக்கிலோ, வழி பாட்டு முறையிலோ, பண்பாட்டு நிலையிலோ, மொழி அளவிலோ ஆரியத் தாக்கம் எவ்வகையிலும் ஏற்பட்டுவிட வில்லை. இந்தத் தளநிலையை அடியொற்றித்தான் மேனிலை யாக்கத்தினை ஆயவேண்டும்; அடுத்தடுத்த காலகட்டங்களின் வளர்ச்சிப் போக்குகளை மதிப்பிடவேண்டும்.

### மேனிலையாக்கமா? தமிழ்நிலையாக்கமா?

வேளாளர்களின்–உடைமைப் பகுதியினரின் நலன்களுக்கு உதவும் வகையில் பிராமணர்களின் பங்களிப்பு சிறிதேனும் இருந்ததால்தான், சோழர் காலத்தில் ஓரளவுக்கேனும் அவர் களுக்கு இடம் தரப்பட்டுள்ளது. ஆனாலும், பிராமணர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றபடி எதுவும் நடைபெறவில்லை. சமூக-பொருளிய-அரசியல் நிலையில் பெருமளவுக்கான தாக்கத்தை, அவர்களால் அன்று ஏற்படுத்த முடியவில்லை என்பது மட்டுமல்ல, பண்பாட்டு அளவிலும் உண்டாக்க இயலவில்லை என்பதுதான் நடைமுறை உண்மையாகும்.

சற்றுப் பிற்பட்ட, விசயநகர காலத்திய நிலைமைகளின் பின்னணியில், சோழர் காலத்தையும் அதற்கு முன்னுள்ள பிற காலப் பகுதிகளையும் பல வரலாற்றாளர்கள் நோக்கியதின் விளைவாகவே, சில தவறான கருத்தோட்டங்களும் உண்மை

நிலைக்கு மாறுபட்ட மதிப்பீடுகளும் வரலாற்றுக்குப் பொருந் தாத வரையறைகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

கோயில்களுக்கு ஈர்க்கப்பட்ட மக்கள் யாராக இருப் பினும், அவர்கள் பிராமணர்களின் கோயில் பணிகளால் தூண்டப்பட்டு வரவில்லை. ஆரிய வழிமுறைகள் உடைமைப் பிரிவினரின் தேவைக்குப் பயன்கொள்ளப்பட்டனவேயன்றி, வாழ்க்கை முறைகளாக ஏற்கத் தக்கவாறு என்றும் இருக்க வில்லை. வடமொழியைக்கொண்டு பிராமணர்களால் செய்ய முடியாததையெல்லாம், சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் தமிழ்வழியாகப் பக்தி இயக்கத்தை வைத்து நடத்திக் காட்டினார்கள். முன்னர் குறிப்பிட்டதுபோல, பக்தி இயக்கம் உடைமைப் பகுதியினரோடு நின்றுவிட்டது எனினும், இதில் சில பிராமணர்களும் பங்கு கொண்டார்கள் எனினும், பிராமணர் அல்லாதவர்களின் பெரும் பங்களிப்பினாலேயே இதனை நடத்திக் காட்ட முடிந்திருக்கிறது.

இந்த நிலையில் பிராமணர்களின் இருப்பினாலோ, பக்தி இயக்கத்தின் தாக்கத்தினாலோ சமூகத்தில் ஆன்மீகக் கட்டுப் பாடு எதுவும் ஏற்பட வழியமையவில்லை. இவற்றின் வீச்சு எளிய மக்களிடம் செல்லவுமில்லை. இதனாலேயே, சமூகத்தை இணைத்து ஒருமைப்படுத்தும் பணிகளும் அனைவரும் இணை என்ற மாயையை உருவாக்கும் முனைப்புகளும் முயற்சி களாகவே நின்றுவிட்டன என்றுதான் கூறவேண்டும்.

நாட்டார் கடவுளர்கள் சிலவற்றை ஆரியக் கடவுளர் களோடு இணைத்தமையும், வழிபாட்டு முறைகளில் ஒரு சில ஆரியப் போக்குகள் நுழைந்தமையும் மட்டுமே மேனிலை யாக்கமாகிவிடாது. இவைகூட, உடைமைப் பகுதியினரோடு நின்றுவிட்டனவேயன்றி, பரவலான மக்கள் திரளிடம் நுழைய முடியவில்லை. வேறு வகையினாலான ஆரிய ஊடுறுவல்கள் எவையும் அன்று ஏற்படவில்லை; ஏற்கப்படவில்லை. எனவே, இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு மேனிலையாக்கம் ஏற்பட் டிருந்தது என்று மதிப்பிடுவது முழு மதிப்பீடாக இருக்காது. மேனிலையாக்கமென்பது, சமூக-பொருளிய-பண்பாட்டு அளவில் ஏற்படுகின்ற ஒரு பொதுப் போக்காக அமைய வேண்டும்.

சில நாட்டார் கடவுளர்களுடன் ஆரியக் கடவுளர்களின் இணைப்பும் சில வழிபாட்டு முறை மாறுதல்களும் அன்றைய உடைமைப் பகுதியினரால் ஏன் ஏற்றுக்கொள்ளப்பட்டன– எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும் பார்க்கவேண்டும். தங்களுடைய புதிய வளர்ச்சிக்கேற்ற–தேவைகளுக்கேற்ற கட வுளர்கள் உடைமைப் பகுதியினருக்கு வேண்டப்பட்டன. அப்



போது, இந்த உடைமைப் பகுதியினரின் நம்பிக்கைகளுக் கேற்றனவாக ஆரியக் கடவுளர்கள் இருந்தன. ஆனாலும், அந்த ஆரியக் கடவுளர்களை, ஆரியக் கடவுளர்களாகவே வேளாளர் களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால்தான், தமது மரபினடியாக முன்னரேயிருந்த தமிழ்க் கடவுளர்களை ஆரியக் கடவுளரோடு இணைத்தனர். இவை, ஆரியக் கடவுளராக இல்லாமல், சைவ-வைணவக் கடவுளராகவே அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது, ஆரியமாக நுழைய முடியாமல், சைவமாகவும் வைணவமாகவும்தான் தமிழ்நாட் டில் நுழைய முடிந்திருக்கிறது. இதுவும்கூட, ஆரியக் கடவுளர் களை அப்படியே எடுத்துக்கொண்டதன்று; தங்களுக்கு வேண்டியதை மட்டுமே வேண்டியவாறு எடுத்துக் கொண்டதுதாம். ஆரியக் கடவுளரில் உடைமை சார்பான சில நம்பிக்கைகளைக் கொண்ட–சக்தியுள்ளதாக ஏற்றுக்கொள்ளப் பட்ட தெய்வங்கள் இருந்தன; இவை தங்களுக்கு இயைபாக இருந்தமையால் வேளாளர்களால் சேர்த்துக்கொள்ளப் பட்டன.

**நாட்டார் கடவுளர் மேனிலைப்படுத்தலுக்கான காரணிகள்**

அத்துடன், இவற்றின் பல்வேறு தன்மைகளையும் பார்க்க வேண்டும். நாட்டார் கடவுளர்களை மேனிலைப்படுத்துதல், ஆரியவயப்படுத்துதல், நாட்டார் கடவுளரையும் ஆரியக் கடவுளரையும் இணைத்தல் என்பன போன்ற செயல்பாடுகள் நடந்தேறியதற்கு வேறு பல காரணிகளும் இருந்திருக்கலாம். ஒரு புறம், இவை திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகவும் இருக்க லாம்; மறுபுறம், சமூக அசைவியக்கத்தின் இயற்கையான காரணியால் ஏற்பட்டதாகவும் இருக்கலாம். புதிதாக உடைமைப் பிரிவினர் தோன்றுவதும் உற்பத்தியாளர் வேளாள ராக மேனிலை எய்துவதும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தோடு நின்றுவிடவில்லை. உடைமை நிலைமை அடைவதும், வேளாளர் என்ற பெயர் பெறுவதும் சமூக அசைவியக்கங் களால் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்த வளர்ச்சி யாகும். நிலம் பண்படுத்தப்படுதல், நீர்வள வாய்ப்புகள், உற்பத்திப் பெருக்கம் என்ற பல நில அமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக் கூறுகளால், இந்தப் படிநிலை வளர்ச்சி இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்பத் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. இப்படிப் புதிதாக வந்த உடைமைப் பிரிவினரான வேளாளர்கள், தங்கள் புதிய மேனிலையை யொட்டிப் புதிய நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளை யும் கைக்கொள்ள முயன்றிருப்பார்கள் என்றாலும், முன்னைய நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் ஒரே நாளில்

அல்லது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் கைவிட்டிருக்கமாட்டார்கள். இதனால், புதிதாக மேனிலை பெற்ற உடைமையாளர்களான வேளாளர்கள் முன்னைய நம்பிக்கைகளோடு, புதிய நம்பிக்கைகளையும் இணைக்க முயன்றிருக்கலாம்; முன்னைய வழிபாட்டு முறைகளையும் புதிய வழிபாட்டு முறைகளையும் இணைத்துக் கடைப்பிடித்திருக்கலாம். இதுகூட, நாட்டார் கடவுளர்களின் மேனிலையாக்கத்துக்குக் காரணியாக இருந்திருக்கும்.

இன்று, வளமும் வாழ்வும் பெற்ற பிற்படுத்தப்பட்ட இன மக்கள், நாட்டார் கடவுளர்களையும் ஆரியவயப்பட்ட கடவுளர்களையும் இணையாக வழிபட்டு வருவதைக் காணமுடிகிறது. ஆரியவயப்பட்ட கோயில்களுக்குச் சென்று வழிபடுவதோடு நில்லாமல், அவர்களது இல்ல விழாக்களான மொட்டை போடுதல், காது குத்துதல், பெயர் வைத்தல், மணவிழா நடத்துதல், ஆண்டுத் திருவிழா கொண்டாடுதல் போன்றவற்றுக்கு, அவர்கள் குல தெய்வங்களாகக் கொண்டிருக்கும் நாட்டார் கடவுளரின் கோயில்களையே நாடுகின்றனர்.

இந்தக் கண்கொண்டு இடைக் கால நிலைமைகளைப் பார்த்தால், இது எளிதாகப் புலப்படும்.

எனவே, இந்த இணைப்பு அல்லது சேர்ப்பு முயற்சிகள், உடைமை சார்ந்த இயல்பான படிநிலை வளர்ச்சியேயன்றி, மேனிலையாக்கமோ, சமக்கிருதவயவாக்கமோ அன்று.

**இன்றும் ஆரியச் சடங்குகள், பிராமணர் பங்கேற்பு இல்லை**

இதற்கு இயைபாக மற்றொன்றையும் இந்த இடத்தில் குறிப்பிட்டுவிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும். தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக உள்ள சாதிகளின் திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளில்கூட ஆரியம் சார்ந்த சடங்குகளோ, பிராமணர்களின் பங்களிப்போ அண்மைக் காலம் வரை இடம்பெற்றிருக்கவில்லை. கொங்கு வேளாளர், வன்னியர், முக்குலத்தோர், நாடார், ஆதிதிராவிடர், தேவேந்திர குல வேளாளர் போன்ற அனைத்து வகையினருக்கும் இது பொருந்தும். இப்போதும்கூட ஊர்ப்புறங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் ஆரிய ஊடுறுவலின்றியும் பிராமணர் பங்கேற்பின்றியுமே நடைபெற்றுவருகின்றன. செல்வமும் மேனிலையும் பெற்றுவிட்ட மிகச் சிறு பகுதியினரே சில இடங்களில் புதிய சடங்குகளுக்குள் வந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, கொங்கு வேளாளர் நிகழ்வுகளில் ஆரியச் சடங்குகளோ, பிராமணர்களோ இடம்பெறுவதில்லை என்றே கூறிவிடமுடியும். செல்வமும் மேனிலையும் பெற்றவர்கள்கூட இதில் உறுதியாகவும் நிலையாகவும் இருக்கிறார்கள். அப்படி ஒன்றிரண்டு இப்போது இடம்பெறுவதை விரல்விட்டு எண்ணிவிடமுடியும். மேலும், இப்படிப் பிராமணர் பங்கெடுப்போடும் ஆரியச் சடங்குகளோடும் ஒன்றிரண்டு கொங்குவேளாளர் திருமண நிகழ்வுகள் நடைபெற்றாலும், அந்த மண விழா நிகழ்வுகளின் பகுதியாக, ஆரியச் சடங்குகளும் பிராமணர் பங்கேற்பும் அமைந்திருக்கமாட்டா. பிராமணர்கள் தனியாக இருந்து தங்கள் சடங்குகளை மேற்கொள்வார்களேயன்றி, திருமண நடைமுறைகளோடு அவை இயைந்தோ, இணைந்தோ, ஒன்றியோ அமைய விடுவதில்லை. கொங்கு வேளாளர் இனத்தைச் சார்ந்த ‘அருமைக்காரர்’ என்று அழைக்கப்படும் பெரியவர், மங்கல வாழ்த்தை வழங்கும் ‘சக்கரைக்கத்தி’ என உயர்வுடன் அழைக்கப்படும் ‘நாவிதர்’ துணையுடன்தான் நிகழ்வுகளை நடத்தி வைப்பார். மங்கல நாணை எடுத்து மணமகனிடம் தருபவரும் அவரே. அடுத்து, சக்கரைக்கத்தி மங்கல வாழ்த்தைப் பாடுவார். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமென்றால், திருமணத்தின் ஒவ்வொரு நடைமுறையும் சக்கரைக்கத்தியின் வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே நிறைவேறும்.[7] சற்றேறக்குறைய, இது போன்ற நடைமுறைகளே, நடத்துவோர் வேறுபாடுகளுடன் பிற இன மக்களிடமும் அமைந்திருக்கின்றன.

பிராமணர் செல்வாக்குக் கொண்டிருந்த விசயநகர காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்குதலுக்குப் பிறகுகூட, தமிழ்நாட்டுப் பெரும்பான்மை மக்களிடையே இல்ல விழாக்களில்–நிகழ்வுகளில் ஆரியம் புகுந்துவிடவில்லை என்றால், சோழர் காலத்தைப் பற்றிக் கூறவே வேண்டாம்.

**இன்றும் தொடரும் நாட்டார் மரபுகள்**

அனைத்துப் பகுதியினரையும் உள்ளடக்கிய தமிழ் மக்களின் மண விழாக்களில் ஆரியச் சடங்குகளும் பிராமணர்களின் பங்கேற்பும் நுழைய முடியவில்லை என்பதோடு இந்த விளக்கங்களை நிறுத்திக்கொண்டால், முழுமையான புரிதல்கள் கிடைக்காமல் போய்விடலாம். எனவே, தமிழ் மக்களின் மண விழாச் சடங்குகளின் தன்மைகளையும் நுணுகிப் பார்க்க வேண்டும். பெரும்பாலும் அனைத்துப் பகுதிகளையும், அனைத்துச் சாதியினரையும் சார்ந்த தமிழ் மக்களுடைய மண விழா நிகழ்வுகளில், இன்றும் நாட்டார் வழிபாட்டுக் கூறுகளும் இனக்குழு மரபுச் சடங்குகளின் தொடர்ச்சியும் காணப்படுகின்றன. இவை எதைக் காட்டுகின்றன? சமூக அசைவியக்கங்களினால், பல பிரிவினர் மேனிலை பெற்று வேளாளர்களாகவும் வேறு பல தொழில்களைக் கொண்டவர்களாகவும் மேம்பட்டிருந்தாலும்,

புதிய நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவர்கள் நாட்டார் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் முற்றிலுமாகத் துறந்துவிடவில்லை–புறக்கணித்துவிடவில்லை என்பதையே இவை தெளிவுபடுத்துகின்றன.

இதனால்தான், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நாட்டார் கடவுளர்களையும் ஆரியக் கடவுளர்களையும் இணைத்தமை, ஆரியவயப்பாட்டுடன் நிகழாமல், தமிழ்நிலைப்பாட்டுடன் நிகழ்ந்திருக்கிறது. சைவமும் வைணவமும் தமிழ் நெறிகளாகவே தழைத்தோங்கியமைக்கும் சிவனும் திருமாலும் தமிழ்க் கடவுளர்களாகவே காணப்பட்டமைக்கும் இவையே அடிப்படைகளாகும். பக்தி இயக்கம், தமிழியக்கத்தின் விரிவாகவே வேரூன்றியது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

சமூக அசைவியக்கங்களின் ஒரு பகுதியாக நடந்துவந்த இத்தகைய போக்குகளுக்குப் பின்புலமான சமூக-பொருளிய-பண்பாட்டுக் காரணிகளை முழுமையாக ஆய்வது இந்த இடத்தில் இயலாது என்றாலும், இது மேலும் ஆழமான, விரிவான புரிதல்களை எதிர்பார்த்து நிற்கிறது என்பதுதான் உண்மை நிலையாகும்.

மேலும், ஆரியப் புராணங்களைக்கூட, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். அதனால்தான், ராமகதையைத் தமிழ் மரபுகளையொட்டியே கம்பன் படைத்தளித்தான்; ஆரியக் கதையாக வழங்க முன்வரவில்லை. *கம்பராமாயணத்*தின் ஏற்பு நிலை ராமாயணக் கதை என்பதால் உண்டாகவில்லை; கம்பன் காவியம் என்பதாலேயே போற்றப்பட்டது. இலக்கிய நுகர்வு கொண்ட மேனிலை மக்களிடமும் இந்த நிலைதான் நீடித்திருந்திருக்கிறது. சமக்கிருத மொழியில் எழுதப்பட்ட பாரதக் கதைகள் பல வடிவங்களில் நிலவுகின்றன. இவை எழுதப்பட்ட முறைமைகளில் வட்டாரத் தன்மைகள் மேலோங்கியிருந்ததாக சமக்கிருத அறிஞர்களே ஒப்புக்கொள்கிறார்கள். தமிழ்நாட்டுப் பிராமணர்களால் எழுதப்பட்ட பாரதக் கதையின் பல வடிவங்களில் தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கம் நிறைந்திருக்கிறது. தமிழ்நாட்டுக்கு வந்த பிராமணர்கள் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள் என்பதை இது உறுதி செய்கிறது. குறிப்பாக, துரியோதனன் அவையில் திரௌபதி துயிலுரியப்பட்டபோது, கண்ணன் ஆடை வழங்கும் நிகழ்வு வட இந்தியாவில் எழுதப்பட்ட வடிவங்களில் இல்லை. இது தமிழ்நாட்டின் சேர்க்கையாகும்; தமிழ்ப் பண்பாட்டின் பங்களிப்பாகும்.



இவற்றுடன், பிற வகையான பண்பாட்டுப் போக்குகளின் நுழைவு–கலப்பு எதுவும் தமிழ்நாட்டைப் பொறுத்து அப்போது ஏற்பட்டுவிடவில்லை என்பதையும் இந்த இடத்தில் நுணுகி நோக்கவேண்டும்.

கோயில் அமைப்புக்கூட, இங்கு வேறுபட்டதாக–தமிழ் நிலைப்பட்டதாகவே தொடர்ந்து இருந்துவருகிறது.

சோழர் காலத்திலேயே வழிபாட்டு முறையும் சமக்கிருதத்துக்கு மாறிவிட்டதா என்பது ஐயத்திற்கிடமானதாகவே தொடர்ந்துவருகிறது. ஆனாலும், தமிழ் வழிபாட்டு முறைகள் இருந்தமையைக் கல்வெட்டுச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. பக்தி இயக்கத்தின் வீச்சும் இதையே உறுதிப்படுத்துகின்றது. இதன்றி, சமக்கிருதம்தான் உடைமைப் பகுதியினரின் கோயில்களில் வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கூறுவது, பக்தி இயக்கத்தின் பங்களிப்பினையே மறுப்பதாக ஆகிவிடும். கல்வெட்டுச் சான்றுகளும் சமக்கிருதப் பயன்பாட்டைத் தெரிவிக்கவில்லை. இது ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது.

முன்னர் விவரித்தவாறு, நிலப்பறிப்பு போன்ற சமூக-பொருளியக் காரணிகளால், பிராமணர்களின் சபைகளால் வேறு எவ்வகையான பண்பாட்டுத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாமலிருந்தது. வேளாளர்களோ, தங்களுக்குத் தேவையான சில 'தர்ம'க் கருத்துக்களை மட்டும் தங்களுக்கு ஏற்றவாறு அவ்வப்போது பிராமணர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, பண்பாட்டளவில் ஒதுங்கியே நின்றனர்.

**அறிவுசார் மொழி தமிழே**

ஒப்பீட்டளவில் கொள்ளவேண்டுமெனில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் நிலைமைகளை எடுத்துக்கொள்ளலாம். கத்தோலிக்கச் சமயச் செல்வாக்கால், பல ஐரோப்பிய நாடுகளில் லத்தீன் மொழி ஆட்சியிலும் நீதிமன்றங்களிலும் கல்விக்கூடங்களிலும் பயின்று வந்ததன்றி, மேல்குடிமக்களின் பயன்படு மொழியாகவும் நிலவியது. மேல்குடிச் செல்வாக்கில் இங்கிலாந்தில் லத்தீனுடன் பிரெஞ்சு மொழியும் சேர்ந்துகொண்டது. இந்த நிலை 18ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. கிபி. 1362இல் ஆங்கிலமே நீதிமன்ற மொழி என்று இங்கிலாந்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆங்கிலேயர்கள், இந்தியா போன்ற பல காலனி நாடுகளில் ஆங்கிலத்தைப் புகுத்தியபோதுகூட, இங்கிலாந்தில் நீதிமன்ற மொழியாக ஆங்கிலம் நீண்ட காலம் ஏற்கப்படவில்லை.

இங்கிலாந்து மக்களில் மேல்குடியினர் தங்கள் அன்றாட உரையாடல்களில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்துவதையே பெருமை தருவதாகக் கொண்டனர். மேல்குடியல்லாதவர்கள்கூட, சில பிரெஞ்சு மொழிச் சொற்களையாவது உச்சரித்தால், அது தங்களது தகுதியை மேம்படுத்திக் காட்டும் என்று நம்பினர். அதனால், அன்றாடப் பயன்பாட்டிலும் பல பிரெஞ்சுச் சொற்கள் இடம் பெறலாயின. அச்சொற்கள் தொடர்ந்து இன்று வரை ஆங்கில மொழிச் சொற்களாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இத்தகையதொரு நிலை எந்தக் காலகட்டத்திலும் ஏற்பட்டுவிடவில்லை. ஆங்கிலேயர் காலம் வரை ஆட்சி, நீதி, நிர்வாகம், கல்வி என யாவும் தமிழிலேயே நடைபெற்றன. ஒரு சில கல்வெட்டுகளில் வேற்று மொழி பயன்படுத்தப்பட்டுள்ளபோதும், அவை பெரும்பாலும் மன்னர் புகழ் பாடுகிற கற்பனைகள் நிறைந்தும் அடுத்தவர்களுக்கு அறம் கூறும் பகுதிகள் மிகுந்துமே காணப்படுகின்றன. கல்வெட்டுக்களின் செயல்பாடு அல்லது விவரங்களை உள்ளடக்கிய பகுதிகள் தமிழிலேயே அமைந்துள்ளன. அதாவது, மக்களுக்குத் தெரியவேண்டிய, அலுவல்களுக்குப் பயன்படக்கூடிய பகுதிகள் எதுவும் கிரந்த எழுத்திலோ, வேற்று மொழியிலோ கொடுக்கப்படவில்லை. மாறாக, அவை யாவும் தமிழ் எழுத்தில், தமிழ் நடையில் புரியத்தக்கவாறு இருக்கின்றன.

வடமொழியில் பேசுவதிலோ, அதைத் தெரிந்து வைத்திருப்பதிலோ, வேத இலக்கியங்களைக் கற்பதிலோ அம்மொழியில் இலக்கியம் படைப்பதிலோ மேல்குடியினரான வேளாளர்களும் பிறரும் எப்பொழுதும் எத்தகைய ஆர்வமும் அக்கறையும் கொள்ளவில்லை. வணிகர்கள்கூட இதற்கு விலக்கல்லர். தங்கள் தகுதியை மேம்படுத்திக் காட்டும் வகையில் தமிழர்கள் பெருமைக்காகவோ, உயர்வுக்காகவோ, ஒரு சில வடமொழிச் சொற்களைக்கூடப் பயன்படுத்திக் காட்டுவதற்கும் முயற்சிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், குறைத்துக் காட்டும் கேலிச் சொற்களாகவே, தெரிந்த சில வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. அதாவது, வடமொழிச் சொற்கள், 'இழி' சொற்கள் போலவே எடுத்துக்கொள்ளப்பட்டன.

மாறாக, பிராமணர்கள்தாம் தமிழில் பேசுவதை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. சிலர் இலக்கிய முயற்சிகளும் மேற்கொண்டனர். தண்ணீரை *ஜலம்* என்று கூறுவது போன்று, தங்கள் தாய்மொழியில் ஒரு சில சொற்களை மனநிறைவுக்காகப் பேசிக்கொண்டதையன்றி, மற்ற வகையில் அந்த மொழியை, பிராமணர்கள் தங்களது அன்றாட சமூக-பொருளிய வாழ்க்கைக்குப் பயன்படுத்தவில்லை; பயன்படுத்தவும் முடியவில்லை; அதற்கான தேவையும் ஏற்படவில்லை. அவர்களுக்குள்ளான உரையாடல்களிலும்கூட பிராமணர்களால் வடமொழி பயன்படுத்தப்படவில்லை. பிராமணர்களாலேயே வடமொழி அவர்தம் நடைமுறை வாழ்க்கையில் இருந்து புறக்கணிக்கப்பட்டுவிட்டது; ஒதுக்கப்பட்டுவிட்டது. அதாவது, தமிழ்நாட்டில் தங்களது அன்றாட சமூக-பொருளிய வாழ்வுக்கு உதவாத வடமொழியை அவர்களே அப்புறப்படுத்திவிட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும், தங்களை வேறானவர்கள் என்று காட்டிக்கொள்ளவும் தங்கள் பிறப்பின் உயர்நிலையை நிலைநாட்ட உதவும் என்று நம்பியும், எழுதப் பேசத் தெரியாமலேயே அவர்கள் சமக்கிருத மொழியைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஆழமான அறிவு நுட்பம் கொண்ட ஒரு சில சமக்கிருத அறிஞர்கள் மதிக்கத் தக்கவாறு அன்று இருந்தார்கள் என்பது உண்மைதான் என்றாலும், மற்றவர்கள் அந்த மொழியினை எழுதப் படிக்க முடியாதவர்களாகவே இருந்தார்கள். அது மட்டுமன்றிப் பேசவும்கூடத் தெரியாதவர்களாகவே இருந்தார்கள்.



அறிவுசார் மொழியெனக் கூறி, இன்று ஆங்கிலத்தைப் பாட மொழியாக மட்டுமன்றிப் பயிற்சி மொழியாகவும் நீடிக்கவேண்டும் என்று வலிவுறுத்தும்–வற்புறுத்தும் பிரிவினர் அன்று 'அறிவுசார்மொழி'யாக அவர்கள் கொண்டாடியதாகக் கொள்ளப்படும் சமக்கிருதத்தைப் படிக்கவும் இல்லை, படிக்க முயற்சிக்கவுமில்லை. இதிலிருந்து அன்று அறிவுசார் மொழியாகச் சமக்கிருதம் விளங்கவில்லை என்று தெரிகிறது. இதனை மேலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் சொல்ல வேண்டுமென்றால், சமக்கிருத மொழியைவிட மிகுதியான அளவு அறிவுசார் மற்றும் பயன்தரு மொழியாகத் தமிழ் அமைந்திருந்தது என்றுதான் கூறவேண்டும்.

வேதங்கள், உபநிடதங்கள், தர்ம சாத்திரங்கள் போன்றவற்றைப் பிராமணர்கள் அனைவரும் படிக்கவில்லை என்பதனை, இத்தகைய கல்விக்கான பள்ளிகள் பரவலாக அமையாமல், ஆங்காங்கே குறித்துச் சொல்லுமாறு சில இடங்களில் மட்டுமே அமைந்திருந்தன என்பதிலிருந்து அறியலாம். அத்துடன், இந்த வேதக் கல்வி மையங்கள், தங்கியிருந்து பயிலும் உணவுடன் கூடிய உறைவிடப் பள்ளிகளாகவே இருந்திருப்பதால், உள்ளூரில் இந்த வாய்ப்புகள் இல்லாதவர்களே தொலைவாக வெளியூர் வந்து கல்வி பெற்றிருக்கிறார்கள் என அறியலாம். மேலும், பிரமதேயச் சபைகளில் உறுப்பினராக வேண்டப்பட்ட அடிப்படைத் தகுதிகூட, மந்திரப் பிராமணங்

களைக் காதில் கேட்டு அறியும் அறிவாக மட்டுமே உள்ளதைப் பார்க்கிறோம். அதைப் படித்தறியத் தெரியாதவர்களாகவே பிராமணர்களில் பலர் இருந்திருக்கிறார்கள்.

மாறாக, தமிழ்க் கல்விக்காக ஒவ்வோர் ஊரிலும் பள்ளிகள் இருந்தன. சிறுத்தொண்டரின் மகன் திருச்செங்காட்டங் குடியில் இருந்த உள்ளூர்ப் பள்ளியிலேயே சேர்க்கப்பட் டிருந்ததைப் *பெரியபுராணம்* காட்டுகிறது.[8] ஒவ்வொரு ஊரிலும் தமிழ்ப் பள்ளிகள் இருந்தமையால்தான், தமிழுக்கு உறைவிடப் பள்ளியே வேண்டப்படவில்லை.

நமக்குக் கிடைத்திருக்கின்ற இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது, பிராமணர் அல்லாத பிரிவினர் கல்வி, ஆட்சியமைப்பு, கலை, இலக்கியம், தத்துவம், வணிகம், அறிவியல், தொழில்நுட்பம் எனப் பல்வேறு துறைகளில் தேர்ந்தவர்களாகவும் வல்லுநர் களாகவும் இருந்திருக்கிறார்கள். அன்றைய சமூக உற்பத்தியில் பிராமணர் பங்களிப்பு சிறிதும் இருக்கவில்லை. அப்படி யிருக்கும்போது, பிராமணர் அல்லாதாரை, குறிப்பாக வேளாளரை மீறிய எத்தகைய பண்பாட்டுத் தாக்கத்தைப் பிராமணர்கள் ஏற்படுத்தியிருக்க முடியும்–கொண்டுவந்திருக்க முடியும் என்பதை யாரும் தெளிவுபடுத்தவில்லை. கல்வியாளர் களாகவும் ஆட்சியாளர்களாகவும் படைப்பாளர்களாகவும் நுட்ப வல்லுநர்களாகவும் உற்பத்தியாளராகவும் பிராமணர் களைவிட எண்ணிக்கையிலும் பங்களிப்பிலும், வேளாளர் களும் பிறருமே விஞ்சி நின்றபோது, பிராமணர்களது பண் பாட்டுத் தாக்கத்தின் வீச்சும் விளைவும் குறிக்கத்தக்க அளவுக்கு இருந்திருக்க முடியுமா என்ற வினா எழாமல் இருக்காது. அதுவும் தங்கள் பண்பாட்டு வேர்களையே இழந்து கிடந்த பகுதியினரான பிராமணர்கள், வேர்விட்டு வளர்ந்திருந்த சமூகத்தில் எந்தப் பண்பாட்டுத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருப் பார்கள்?

தொடக்கக் கட்டத்தில், உடைமைப் பகுதியினருக்கான 'நீதி நெறி'களை உருவாக்கிக் கொடுப்பதிலும் அறிமுகப்படுத்து வதிலும் பரப்புவதிலும் பிராமணர்களின் பங்களிப்பு இருந் திருக்கலாம். அந்தத் தொடக்க நிலையில்கூட, அன்றைய சமூக- பொருளியக் கட்டமைப்பிற்கு ஏற்ற வாழ்வு நெறிகளை உருவாக்கிக் கொடுக்கும் அறிவுத் துறையினர், அந்தச் சமூகத் திலிருந்தே தோன்றியிருக்கமாட்டார்கள் என்று கூறுவது பொருத்தமாக இருக்காது. சங்கப் புலவர்களில், போர்களைப் போற்றியவர்களும் இருந்தார்கள்; கால மாற்றத்தையடுத்து, நில



உற்பத்தி வளர்ச்சியை வரவேற்றவர்களும் இருந்தார்கள். அவ்வக்காலத் தேவைகளுக்கேற்பவே இவை யாவும் அந்தந்தச் சமூகத்துக்கு உள்ளிருந்தே வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. இதற்கு, சமக்கிருதத்துடன் பிராமணர் வேண்டப்பட்டனர் என்பது பொருந்தவில்லை. அதேபோன்று, தங்களது நலன் களைக் காத்துக்கொள்ளவும் ஆதிக்க அமைப்பினை நீடித்துக் கொள்ளவும், தங்களுக்கேற்ற கருத்தியல்களை உருவாக்கிக் கொடுக்க, வேளாளர் போன்ற உடைமைப் பகுதியினரிட மிருந்தே தோன்றியிருந்த அறிவுசார் பிரிவினர் முன்வந்திருப் பார்கள் என்பதையும் புறக்கணித்துவிடக்கூடாது. தங்களுக்கு இருந்த வலிமையாலும் வளத்தாலும் இத்தகைய கருத்திய லாளர்களைத் தங்களுக்குள்ளிருந்தே உருவாக்கிக்கொள்வதில் நிலவுடைமைப் பகுதியினர் முன்நின்றார்கள் என்பதையே வேளாளர்களிடையே தோன்றியிருந்த அறிவுத் துறையினர் உறுதிப்படுத்துகின்றனர்.

அன்றைய அளவில், தமிழ் மக்கள் பேச்சு வழக்கில் சில வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தி வந்தார்களென்றாலும், அவை பயன்பாடு கருதியேயன்றிப் பெருமையை முன்னிட்டு அன்று. பின்னர், ஆங்கில ஆட்சியிலும்கூட, ஆங்கில மொழியைக் கற்பதிலும் பயன்படுத்துவதிலும் எழுதுவதிலும் ஈடுபாடு ஏற்பட்டது. நிர்வாக, நீதிமன்ற, கல்வி மொழியாக ஆங்கிலம் அமைந்தது இதற்குக் காரணியாக இருக்கலாம். ஆனால், இந்த நிலை, இடைக் காலத்தில் பிராமணர்களது மொழிக்கு ஏற்படவேயில்லை. ஏனெனில், சமக்கிருதம் நிர்வாக, நீதிமன்ற, கல்வி மற்றும் அறிவுசார் மொழியாக எப்போதும் இருக்கவில்லை.

ஆகவே, பண்பாட்டுத் தாக்கம் பெறவோ, பல தட்டு மக்களை ஒருமைப்படுத்தவோ பக்தி இயக்கம் எப்படிப் பயன் படவில்லையோ அது போன்று பிராமணியமும் உதவவில்லை; வடமொழியாக்கமும் நடைபெறவில்லை.

இங்கு மற்றொரு பொது வரையறையையும் மறந்துவிடக் கூடாது. மேனிலையாக்கம் எத்தகைய சமூகத்தில் நடைபெறும் என்பதைப் பார்க்கவேண்டும். சமூக-பொருளிய-பண்பாட்டுத் தளத்தில் வளர்ச்சியும் முன்னேற்றமும் பெறாது கீழ்நிலையில் இருக்கும் ஒரு மக்கள் திரள், தம்மைவிட மேம்பட்ட சமூக- பொருளிய-பண்பாட்டு நிலையில் இருக்கும் வேறொரு மக்கள் திரளிடமிருந்து பெற்றுக்கொள்வதுதான் மேனிலையாக்கம். பிரெஞ்சுப் பண்பாட்டிலிருந்து ஆங்கிலேயர் பெற்றனர்; ஐரோப்பியரிடமிருந்து பழங்குடி நிலையிலிருந்த ஆப்பிரிக்கர் பெற்றனர்.

மாறாக, தமிழர்களின் சமூக-பொருளிய-பண்பாட்டு வேர்களைப் பிடித்துக்கொண்டு, தங்களுடைய மொழியுள் ளிட்ட பெரும்பாலான அடித்தளங்களுடனான தொடர்பு களைத் துண்டித்துக்கொண்டிருந்த பிராமணர்களிடமிருந்து பெறும் நிலையில் தமிழ்ச் சமூகம் இருக்கவில்லை.

**தலைமை நிலையில் பிராமணர் இருந்தனரா?**

கல்வி, கலாச்சாரம், பண்பாடு, குணநலன்கள், அறிவாற்றல், திறமை, நுட்பம் ஆகியவற்றில் அன்றைய பிராமணர்களின் தனித்துவத்தையும் உயர்வையும் சிறப்பையும் பெருமையையும் மேன்மையையும் மிகைப்படுத்திய சில வரலாற்றாசிரியர்கள் தவறான கருதுகோள்களைத் திட்டமிட்டு உருவாக்கியிருக் கிறார்கள்.[9]

கல்வி, பண்பாடு, குணநலன்கள் போன்றவற்றுடன், அன்றைய கட்டத்தில் சிறந்த–உயர்ந்த கலாச்சாரத்தைக் கொண்டிருந்த பிராமணர்கள், சிக்கல் ஏற்படும்போது அறி வுரையும் வழிகாட்டுதலும் தரத்தக்கவாறு இயற்கையாகவே பிற பகுதியினருக்குத் தலைவர்களாக விளங்கக்கூடிய தன்மை கொண்டவர்களாதலால், அவர்கள் விரும்பி வரவேற்கப் பட்டார்கள் என்று பிராமணர்களின் நிலையினை நீலகண்ட சாத்திரியார் பெருமையுடன், ஆனால் மிகைப்படுத்திக் குறிப் பிடுகிறார்.[10]

எந்த இடமாக இருந்தாலும், பிராமணர்களின் குடியேற்றமே நியாயத்துக்கும் தர்மத்துக்கும் நேர்மைக்கும் மாறாகவே நடத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் எந்த ஊரில் குடியேற்றப்பட்டார்களோ, அந்த ஊருக்கும் அவர்களுக்கும் எத்தகைய முன் தொடர்பும் இருக்கவில்லை. அவர்களுக்கெனத் தரப்பட்ட நிலங்களில் அவர்களுக்கு அதற்கு முன்னர் எந்த உறவும் இருந்தது கிடையாது. அங்கு வாழ்ந்துகொண்டிருந்த மக்களோடும் அவர்கள் இயைபு கொண்டவர்கள் அல்லர். வந்து குடியேறிய பிராமணர்களுக்கும் வாழ்ந்துகொண்டிருந்த பிறருக்கும் கலாச்சார-பண்பாட்டு-குணநலன்களில் முழுமையான முரண்பாடுகளே இருந்தன. பிராமணர்களுக்கு இருந்ததாகக் கூறப்பட்ட அறிவு, ஆற்றல், திறமை, நுட்பம் ஆகிய எதுவுமே அன்றைய தேவைகளான நில உற்பத்திப் பணிகளுக்கோ, அதில் ஈடுபட்டிருந்த மக்களுக்கோ எவ்வகையிலும் பயன்படக் கூடியவையல்ல. புதிதாக வந்து குடியேறிய பிராமணர்கள் நில உற்பத்தியில் எத்தகைய பட்டறிவும் இல்லாதவர்கள். அவர்கள் நில உற்பத்தி நுட்பம் அறிந்திருந்ததாலேயே குடியேற்றப் பட்டார்கள் என்று எந்த ஆவணமும் குறிப்பிடவில்லை. ஆனால், பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களில்



உற்பத்தி செய்துகொண்டிருந்த குடியினரோ, பல தலைமுறை களாக நில உற்பத்தியில் ஈடுபட்டுப் பட்டறிவும் பயன்பாட் டறிவும் மிக்கவராக விளங்கியவர்கள். மேலும், ஏற்கெனவே உழு தொழில் செய்துகொண்டிருந்தவர்களின் உரிமைகள் பறிக்கப் பட்டுத்தான் அந்த நிலங்கள் பிராமணர்களுக்குத் தரப்பட்டன. பெரும்பாலும், நில உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தாலும், அந்த நிலங்களில் முன்னர் உழைப்புச் செலுத்தியவர்களே தொடர்ந்து உழுகுடிகளாக நீடிக்க, உழைப்புப் பயன்களை மட்டும் பிராமணர்கள் எடுத்துக்கொண்டார்கள். இதனால், உள்ளூர் மக்களின் முற்றான பகைமையை முதலாகக் கொண்டே பிராமணர்களின் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன என்பது தெளிவு.

பிராமணர்களின் வருகையால், உள்ளூர் நிலங்களுக்கு நல்ல விலை கிடைத்ததால், மக்கள் நிறைவுகொண்டார்கள் என்று சாத்திரியார் சப்பைக்கட்டுக் கட்டுகிறார்.[11] இந்த நிலங்களைப் பிராமணர்கள் பணம் கொடுத்து வாங்கியதாக எந்தச் சான்றும் கூறவில்லை; பறித்துக் கொடுக்கப்பட்ட தாகவே பல சான்றுகள் பறைசாற்றுகின்றன. கிபி. 1002ஆம் ஆண்டு முதலாம் ராசராசன் வெளியிட்ட ஓர் ஆணை, பிராமணர் ஊர்களில் உள்ள பிற சாதியினர் தங்கள் நிலங்களை விற்றுவிடவேண்டும் என்று வற்புறுத்துகிறது.[12] இந்த நிலங் களை அரசனது உடன்பிறந்தாளான குந்தவைப் பிராட்டி யார்தான் வாங்கிக் கோயிலுக்கு வழங்கியுள்ளார். இவர் நடைமுறை விலைக்கு மேலாகக் கொடுத்துதான் வாங்கினார் என்பதை யார் நம்புவது?

**பிராமணரின் கல்வி நிலை**

சதுர்வேதிமங்கலத்துப் பிராமணர் சபைகளின் விவாதங் களில்–செயல்பாடுகளில் கலந்துகொள்ள உயர்கல்வித் தகுதி வேண்டியிருந்த நிலையில், இதை எளிதில் பெறமுடியாத பிற சாதியினர் அதில் உறுப்பினராக இருக்கமுடியாது என்பதால் தான், அத்தகையோரின் நிலங்களை விற்றுவிட ஆணையிட வேண்டியதாகிவிட்டது என்றும் சாத்திரியார் தன் விவாதங் களை அடுக்குகிறார்.[13] சபையின் உறுப்பினராவதற்கான கல்வித் தகுதி என்ன என்பது அவருக்குத் தெரிந்திருந்தும், பிறர் அதனை ஆழமாகப் பார்க்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் திரித்துக் கூறுகிறார். ‘மந்திரப்பிராமணம் வல்லான் ஓதுவித்து அறி வானை’த் தேர்வு செய்யலாம் என்றுதான் உத்திரமேரூர்க் கல்வெட்டுக் குறித்திருக்கிறதேயன்றி, ‘மந்திரப் பிராமணம் வல்லான்’ என்று மட்டும் கூறவில்லை.[14] மந்திரப் பிராமணத்தைக்

காதில் போட்டுக்கொள்ள–கேட்டுக்கொள்ளத் தெரிவதுதான் தகுதி. இதை யார்தான் செய்யமுடியாது? பிராமணர்கள் வேதம் போன்ற நூல்களைப் புரிந்துகொண்டு கற்கவில்லை, மனப் பாடம்தான் செய்துவந்தார்கள் என்பதை ஆய்வாளர் வெ. கிருஷ்ணமூர்த்தி சற்று விளக்கமாகவே நிறுவியுள்ளார்.[15] அதாவது, அக்காலத்தில் வேதங்களுக்கான பொருள் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும், ஆகவே, வேதம் படித்ததாகக் கூறுவது வெறும் மனப்பாடம் செய்ததைத்தான் என்றும் அவர் உறுதிப்படுத்துகிறார்.

எனவே, சபையின் பணிகளுக்கு வேத மந்திரங்களின் அறிவு எந்த வகையிலும் வேண்டியிருக்கவில்லை என்பதுடன், சபை உறுப்பினர்களாக இருந்த பிராமணர்களே, வேத மந்திர அறிவு இல்லாதவர்கள்தாம். காதில் கேட்டு அறிந்தவர்களை விட்டு விடுவோம்; தாங்களாகவே படித்து அறிந்தவர்களாக இருந்தவர் கள்கூட மனப்பாடம் செய்தவர்களேயன்றி, புரிந்து தெரிந்து, கசடறக் கற்றவர்கள் அல்லர்.

அடுத்து, இந்தச் சபையின் பணி என்ன என்பதைப் பார்த்தால், அது நில உற்பத்தி தொடர்பான செயல்களை மேற் பார்வை செய்வதுதான். எப்படியிருப்பினும், சதுர்வேதிமங்க லத்துச் சபைகளில் எப்பொழுதுமே வேத மந்திர உரையாடல் கள் நடைபெறவில்லை. நில உற்பத்தி அலுவல்களே நடத்தப் பட்டிருக்கின்றன. இதற்கு மந்திரமும் தந்திரமும் எதற்கு என்பது சாத்திரியாருக்குத் தெரியாதா? பலரும் கூடுகின்ற இடத்தில், நில உற்பத்தி தொடர்பான அலுவல்களை முடித்த பின்னர், வேத மந்திர உரையாடல்களை மேற்கொண்டிருந்திருப்பார்களா என்றால் அதற்கும் வாய்ப்பிருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், சதுர்வேதிமங்கலத்துச் சபை என்பது, அந்த ஊரில் வாழ்ந்த அனைத்துப் பிராமணர்களும் இடம்பெற்றிருந்த அவையன்று. உள்ளாட்சிப் பணிகளுக்காகச் சிலரை மட்டுமே கொண்டிருந்தது அது. அந்தச் சிலரும், வேத மந்திர அறிவையும் திறனையும் ஆற்றலையும் அடிப்படையாகக்கொண்டு தேர்ந் தெடுக்கப்பட்டவர்களல்லர். வேத மந்திர அறிவைப் பெறாத பிராமணர் உள்ளிட்டோரையும் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுத்துக்கொண்ட அவை அது. குலுக்கல் முறையில் என்ப தால், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருமே வேத மந்திர அறிவு பெறாதவர்களாக இருக்கவும் வாய்ப்புகளுண்டு. அப்படிப்பட்ட சபை எத்தகைய உயர் உரையாடல்களை மேற்கொண்டிருக்க முடியும்?

அதுவன்றி, சபைக் கூட்டங்களில் வீற்றிருந்தவர்களில் பிரம்மராயன் என்ற பிராமண அதிகாரிகள் மட்டுமல்ல,



தத்தனூர் மூவேந்த வேளான் போன்ற வேளாள அரச அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள்.[16] அதே போன்று, கோயில் கணக்குகளை மேற்பார்வை செய்தவர்களும் வேளாள அதிகாரி கள்தாம். ஒரு வேளை, கற்றறிந்த பிராமணர் சிலர் உண்மையி லேயே வேத மந்திர உரையாடல்கள்–விவாதங்கள் நடத்த விழைந்திருந்தால், ஒரே ஊரில் குடியிருந்த அவர்கள் மட்டும் எப்போது வேண்டுமென்றாலும் ஒன்றுகூடி இதைச் செய் திருக்க முடியும். ஏனெனில், உடல் உழைப்பில் எத்தகைய பங்களிப்பினையும் செலுத்தாதிருந்த அவர்களுக்கு, இதற்கான கால வாய்ப்பு அன்றாடம் கிடைத்திருக்கும். இதற்கும் சபை அலுவலுக்குமோ அல்லது இதற்கும் அந்த ஊரிலுள்ள பிரா மணர் அல்லாதாரின் நிலங்கள் விற்கப்படவேண்டும் என்பதற் குமோ முடித்தல் போட வேண்டியதில்லை. இருந்தாலும், கற்பனையிலேயே வரலாற்றை வரையறுத்து விடுகிறார் சாத்திரியார்.

பிராமணர்களுக்குத் தரப்பட்ட நிலங்களன்றி, பிறவற்றையும் கைப்பற்றவே பிராமணர் அல்லாதார் நிலங்கள் விற்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டதேயன்றி, அவர்களது கல்வித் தகுதிகளால் அன்று என்பது தெளிவாகவே புலப்படுகிறது.

**நிலவுடைமைக் கருத்துநிலை வெற்றி பெற்றதா?**

பிராமணர்களின் துணையுடன் அன்றைய நிலவுடைமை யாளர்களான வேளாளர்கள் தங்கள் நலன்களுக்கு ஏற்றதாக உருவாக்க முயன்ற கருத்துநிலை முரண்பட்டு நின்றதாகவே தெரிகின்றது.

ஒரு புறம் பண்பாட்டளவில், நாட்டார் நம்பிக்கை அடிப் படைகளும் வழிபாட்டுக் கூறுகளும் உடைமைப் பிரிவினரிடம் தொடர்ந்து இருந்துவந்தாலும், சமூக-பொருளியக் காரணிகளால் உடைமைகளற்ற பிரிவினரிடமிருந்து, உடைமையாளர்கள் எதிர்பார்த்த இணக்கப் போக்குகள் நிகழவில்லை. தொழில் முறையிலான சாதிகள் தோன்றிவிட்டது இதற்கான காரணியாக இருக்கலாம். ஆனால், விசயநகர காலத்துக்குப் பின்னர் இருந்தது போன்ற இறுக்கமான சாதி வேறுபாடுகளும் கட்டுப்பாடுகளும் சோழர் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. பறையர் இனத்தவர் உழுதொழிலில் ஈடுபட்ட உழுபறையராகவே அறியப்படுகிறார்கள். அவர்கள் தீண்டத்தகாதாராக அன்று கருதப்படவும் இல்லை.[17] தொழில் முறைகளில் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், சாதி அளவில் இறுக்கம் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், சமூக-பொருளியல் உறவுகளில் மிகவும் கடுமை நிலவியிருந்தது.

நிலவுடைமைக்குச் சார்பான கருத்துநிலைகள் அடித்தட்டு மக்களிடம் போய்ச்சேரவில்லை. சாதி அளவில் இறுக்கம் இல்லாதிருந்தபோதிலும், சமூக-பொருளியல் கடுமை, உடைமைப் பிரிவினரையும் உடைமையற்ற பிரிவினரையும் தனித்தனியாகவே வைத்துவிட்டது. இதனால், நாட்டார் நம்பிக்கைகளிலும் வழிபாட்டு முறைகளிலும் உடைமைப் பிரிவினருக்கும் உடைமை களற்ற பிரிவினருக்கும் இருந்த சில இணைவுகள், இந்த இரு பகுதியினரையும் பிணைத்துவைக்கப் பயன்படவில்லை. சமூக-பொருளிய முரண்களால், இந்தப் பிரிநிலை நீடிக்கவேண்டியதாகி விட்டது.

இதற்கு மற்றொரு காரணியையும் கருத்தில் கொள்ள வேண்டும். சமயப் பரப்பலிலும் ஒரு வகையான பிரிநிலை நிலவி வந்தது தெரிகின்றது. கிருத்துவம், இசுலாம் போன்ற சமயங் களுக்குச் சில சமூக-பொருளிய அடிப்படைகள் இருப்பினும், அவை பிற நாடுகளில் பரவியபோது, அடித்தட்டு மக்களையே முதலில் ஈர்க்க முயன்றன. இனம், மொழி, நிறம், இடம் என்ற பாகுபாடுகளை அவை பார்க்கவில்லை. சமயப் பரப்பலின் நோக்கம் எதுவாக இருப்பினும், விரிவாக்கத்தின்போது கீழ்த்தட்டு மக்களையும் மேல்தட்டு மக்களையும் அவை பிரித்து நோக்க வில்லை. ஆளும் ஆதிக்கப் போக்குகளுக்குச் சார்பாக அவை செயல்பட்டபோதுகூட, அடித்தள மக்களை அரவணைத்து ஆதரவைப் பெற்றுக்கொள்ளவே அவை முயன்றன. ஆதிக்கப் போக்குகளுக்குச் சார்பாகச் செயல்பட, சமய அடிப்படையில் அடித்தள மக்களைப் பயன்படுத்துவதே நோக்கமாக இருந்ததால், அவர்களை இணைத்துக்கொண்டன.

ஆனால், ஆரியம், தன் ஒழுகலாறுகளின் பரப்பலில் ஈடுபாடு காட்டவேயில்லை; அப்படிப்பட்ட பரவலை விரும்பாததுடன், தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்வதன் வாயிலாகவே தன் பிறப்புயர்வைச் சிறப்பித்துக் காட்ட முயன்றது. தனது மொழி யான சமக்கிருதத்தையும் வேதங்களையும் பிற படைப்புகளையும் பிறர் தீண்டக்கூடாதனவாகவே ஆரியம் ஒதுக்கிவைத்துக் கொண்டது. தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ளும் அதன் முயற்சிகளால், ஆரியம் இன்றும் தனிமைப்பட்டுக் கிடக்கிறது. இந்த நிலைமைகளால், ஆரிய முறைமைகள் கோயில்வழியிலோ, நம்பிக்கைவழியிலோ மக்களை ஈர்க்கவும் கட்டுப்படுத்தவும் முடியாமல் போய்விட்டது.

சைவமும் வைணவமும் இதில் சிறிது நெகிழ்ச்சி கொண் டிருந்தாலும், உடைமைப் பிரிவினருக்கு அப்பால் அவை செல்ல முயலவில்லை. தங்களை நோக்கி வந்த வேடரான கண்ணப்பரை யும் புலையரான திருநாளைப்போவாரையும் அது அங்கீகரித்துக் கொண்டதே தவிர, இதைப் பயன்படுத்தி வேடர்களையும் புலையர்களையும் சைவத்தில் இணைத்துக்கொள்ள விழைய வில்லை. அவர்களிடம் செல்லவும் விரும்பவில்லை. நில உற்பத்தியின் தேவைகளையொட்டி, இறைவன் முன் யாவரும் இணை என்ற கருத்துநிலையை முன்வைத்திருந்தாலும், நடைமுறையில் சைவம் கீழே இறங்கிவரவில்லை. பொருளியல் காரணிகளால், உடைமைப் பிரிவினர், உடைமையற்ற பிரிவினர் என்ற பகுநிலை கூரிய முரண்களுடன் தொடர்ந்ததே இதற்கான பின்புலமாகும். இதனால்தான், நிலவுடைமைக்குச் சார்பான கருத்துநிலைகள், உடைமைப் பிரிவினரை வலுப்படுத்தத் துணை நின்றனவேயன்றி, உடைமைகளற்ற பிரிவினரை, அந்தக் கருத்தமைவுக்குள் ஈர்த்துக் கொள்ள முடியாமல் போனது.



இதனால், உடைமைப் பிரிவினரின் நலன்களைக் காக்கும் செயல்பாடுகளை, உடைமைகளற்ற பிரிவினர் வேறு வழியின்றி வல்லாண்மையால் ஏற்றுக்கொள்ளும் நிலைதான் தொடர்ந்தது; நிலவுடைமைக் கோயில்களின் ஆண்டவன் பெயரில், உழைக்கும் மக்களை அரவணைத்துச் செல்லக்கூட அவர்களால் முடிய வில்லை.

**நிலவுடைமை அரசின் பகுதியே கோயில்**

நிலவுடைமை அமைப்பின் கருவியாக, நிலவுடைமை முறையின் உறுப்பாக, நிலவுடைமை உற்பத்தி உறவுகளை நெறிப்படுத்தும் அரங்கமாகக் கோயில்களும் கோயில்களின் வழியே மன்னர்களின் தலைமையில் நிலவுடைமைப் பகுதி யினரும் செயல்பட்டு வந்தனர் என்பதையே இச்செய்திகள் யாவும் தெளிவாகப் புரியவைக்கின்றன. நிலவுடைமை அமைப்பின் கட்டுக்கோப்பையும் உற்பத்தியையும் உற்பத்திக்கு அடிப்படையான நீர் வளங்களையும் உற்பத்தி முறைகளையும் உற்பத்தி உறவுகளையும், வடிவமைத்து முறைப்படுத்திக் கொள்ளக் கோயில் என்ற அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். நிலவுடைமையாளர்கள் கைக்கொண்டிருந்த மேலாண்மையை அரசன் தனது மேற்பார்வையில் வழிநடத்தி னான். நிலவுடைமை அமைப்பையும் அதன் நலன்களையும் வலுப்படுத்துவதே அரசன், அதிகாரிகள், உள்ளூர் அமைப்புகள் போன்ற அனைத்து மேலாண்மை உறுப்புகளின் பணியாகவும் அவர்களது ஆணைகள்–முடிவுகளின் அடிப்படையாகவும் அமைந்திருந்தன.

மீண்டும் பிரடெரிக் எங்கெல்சின் சொற்களில் விளக்க மாகப் பார்க்கலாம்:[18]

வர்க்க விரோதங்களைக் கட்டுக்குள் வைக்கவேண்டியதன் தேவையிலிருந்து அரசு தோன்றியதாலும் அதே பொழுதில், அவ்வர்க்கங்களுக்கிடையே நடந்து வந்த மோதல்களுக்கிடையிலிருந்தே தோன்றியதாலும் அரசு, பொது விதியாகவே, மிகவும் வலிமை வாய்ந்த, பொருளாதார முறையில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாக ஆகிறது; அந்த வர்க்கம், அரசின் வழியாக, அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக ஆகிறது; இந்த வழியில் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஒடுக்கவைத்துச் சுரண்டிக்கொண்டிருப்பதற்கு அது புதிய சாதனங்களைப் பெறுகிறது. இப்படித்தான் பண்டைக் காலத்திய அரசு, எல்லாவற்றுக்கும் ஆண்டைமாரின் அரசாக இருந்தது; அதே போன்றுதான் நிலவுடைமை அரசு என்பதும் விவசாயப் பண்ணையடிமைகளையும் நிலவுடைமையாளர்களுக்கு உழைப்பவர்களையும் ஒடுக்கி வைத்திருப்பதற்கு அமைந்த நிலவுடைமையாளரின் அரசாக இருந்தது.

ஒரு பெரும் நிலவுடைமை நிறுவனமாக இருந்த கோயில்கள் இதற்கு விலக்கல்ல என்பதைச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

மாபெரும் கோயில்கள் பலவற்றை அமைத்து, அவற்றுக்கு நிலம் உள்ளிட்ட மிகுந்த உடைமைகளை அளித்து, நிலவுடைமை நலன்களோடு இயைந்த தனி நிறுவனங்களாக அவற்றை அன்றைய உடைமைப் பகுதியினர் உருவாக்கியதற்கு இந்தப் பின்னணியே அடிப்படைக் காரணியாகும்.



## இயல் 11

# தொகுப்புரை

இந்நூல் நுவலும் பொருள் யாவற்றையும் தொகுத்துக் கூறுவதாகத் தொகுப்புரை எனும் இந்த இயல் அமையவில்லை. எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள்கள், அந்தந்த இடங்களிலேயே பெரும்பாலும் போதுமான விளக்கங்களைப் பெற்றிருக்கின்றன. இருப்பினும், இடைவெளிகளை இணைத்துத் தொடர்புக் கூறுகளை விளக்குவதாகவும், இந்நூலின் பொதுப் போக்குகளை எடுத்துக்காட்டுவதாகவும், அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது ஏற்படும் எண்ணவோட்டங்களை வெளிப்படுத்துவதாகவுமே இந்தத் தொகுப்புரை அமைகிறது.

சோழர் காலக் கோயில்களுக்கும் அன்றைய மக்கள் திரளின் பல்வேறு பகுதியினருக்குமான சமூக-பொருளிய- பண்பாட்டு உறவுகளினால் ஏற்பட்டிருந்த விளைவுகளும் போக்குகளும் முரண்களுமே இந்நூலில் பெரிதும் விவரிக்கப்பட்டுள்ளன.

கோயிலை ஒரு தனிப் பொருளிய அமைப்பாக எடுத்துக்கொண்டு, அதன் வரவு-செலவு விவரங்களைத் தொகுத்து, பொருளியச் செயல்பாடுகளை ஆராய்வது இந்நூலின் நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, கோயில் ஒரு சமூக-பொருளியல் அமைப்பாக உருப்பெற்றதற்கான பின்புலத்தையும், அதையொட்டிய அதன் செயல்பாடுகளையும் வெளிக்கொண்டு வருவதே இந்நூலின் அடிப்படையாக இருந்தது. அதனால்தான், கோயில் ஒரு நிலவுடைமை நிறுவனமாக எப்படி விளங்கியது, அந்த நிறுவனத்தைப் பேணிக் காக்க அரசின் பங்களிப்பு யாது, அந்த நிறுவனத்தை நிலவுடைமையாளர் எவ்வாறு விரிவாக்கிப் பயன் கொண்டனர் என்பன விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுகளின் களம்**

ஒரு நிறுவனமாகக் கோயில் அமைந்திருக்க அடிப்படையாக வேண்டியிருந்தது கட்டமைப்பு ஆகும். அந்தக் கட்டமைப்புக்கு அடித்தளமாக, கோயில் நிலங்களையும் வேறு வகையிலான உடைமைகளையும் கொண்டிருந்தது. அந்த உடைமைகளில் இருந்து வருவாய் பெற உற்பத்தி முயற்சிகள், அந்த

உற்பத்தி முயற்சிகளில் உற்பத்தியாளர்களோடு ஏற்பட்ட உறவுகள் என்று இந்த ஆய்வுகளின் களம் விரிந்துகொண்டே செல்கிறது.

கோயிலின் தோற்றம், கோயிலுக்கும் மக்களின் வெவ்வேறு பிரிவுகளுக்கும் இருந்த உறவுகள், அந்த உறவுகளின் விளைவுகள் என்ற நோக்கில் இந்த ஆய்வுகள் சென்றிருந்தாலும், இவை யாவுமே முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுவிட்டன என்று கூறிவிடமுடியாது. இவற்றின் சில கூறுகளும் போக்குகளும் மட்டுமே எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், களத்தினை விரிவுபடுத்தி, ஆய்வு எல்லைகளையும் அகலப்படுத்திக் கொண்டுசெல்ல இந்நூல் ஒரு தோற்றுவாய்.

**வழிபடும் இடம் நிறுவனமாக மேம்படல்**

வழிபடும் இடமாக இருந்த கோயில், ஒரு நிறுவனமாகச் சோழர் காலத்தில் மேம்படுத்தப்பட்டது. அதற்கேற்ப, கோயில் மேலும் பல சமூக-பொருளிய-பண்பாட்டுச் செயல்பாடுகளை மேற்கொண்டது. ஒன்றோடொன்று இணைந்த இந்த இரண்டு மாறுதல்களுக்கும் அடிப்படைக் காரணியாக அமைந்தது, நில உற்பத்தி விரிவாக்கம் ஆகும். நில உற்பத்தி விரிவாக்கத்தினால் ஏற்பட்ட சமூக அசைவியக்கங்களின் ஒரு பகுதியாகவே கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும் விளங்குகின்றன. இந்தக் கோயில்கள், இனக்குழு மக்கள் வழிபட்டுவந்த நாட்டார் கடவுளர்களுக்கான கோயில்களிலிருந்து மாறுபட்டவை; வழிபடப்பட்ட கடவுளர்களும் வேறானவர்கள்; வழிபாட்டு முறைகளும் புதிதானவை; வழிபாட்டினை நடத்திவைக்கவும் தனியே சிலர் புகுந்துவிட்டனர். உற்பத்தி வளர்ச்சியினால் புதிதாகத் தோன்றிய நிலவுடைமைப் பிரிவினரின் நலன்களை எதிரொலிக்கின்ற நம்பிக்கை முறைகளாகவே கோயில்களும் வழிபாடுகளும் அமைந்தன.

**கோயிலின் வழிபாட்டுச் செலவுகள்**

இந்தப் புதிய முறையிலான வழிபாடுகளை நடத்தவும் வழிபாட்டினை நடத்திவைப்பவர்களைப் பேணவும் ஏற்பட்ட செலவுகளை ஈடுகட்டக் கோயில்களுக்கு மேலும் வரவுகள் வேண்டப்பட்டன. தங்கள் இல்லத்தினரின் நுகர்வுகளுக்காகச் சிறு அளவில் நிலங்களைப் பயிரிட்டு வந்தவர்களும், நிலவுரிமை யற்ற உழுகுடிகளும், உடல் உழைப்புப் பணியாளர்களும், கைவினைஞர்களும் புதிய கோயில்களுக்கு வந்து, புதிய கடவுளர்களை வழிபடவில்லை. அவர்கள் தங்கள் நம்பிக்கை களின் தொடர்ச்சியாக நாட்டார் கடவுளர்களையே வழிபட்டு வந்தார்கள். இதனால், இந்தக் கோயில்களில் வழிபடுபவர்களாக



இருந்த நிலவுடைமையாளர்களே கோயில்களின் அன்றாடச் செலவுகளை ஏற்கவேண்டியிருந்தது. நிலவுடைமையாளர்களின் செல்வ வளத்துக்கு ஏற்ப, அவர்களது கோயில்களின் செலவு களும் மிகுதியாக இருந்தன. தங்களைப் போலவே, தங்கள் கடவுளருக்கும் அவர்கள் பொன் அணிகலன்களைப் பூட்டி அழகு பார்த்தார்கள். மதிப்பு மிக்க இந்தப் பொன் அணிகலன் களைக் காக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. மேலும், கோயில் திருவிழாக்கள், பிராமணர்களுக்கு உணவு, ஊழியர் ஊதியம், பிற வகைச் செலவுகள், கோயில் தொடர்பான பணிகள் என இவை யாவற்றையும் நிலவுடைமையாளர்களே செய்யவேண்டிய நிலையில் இருந்தார்கள்.

இத்தகைய பொதுச் செலவுகளைத் தாங்கள் தனித்தனி யாகச் செய்வதற்கு மாற்றாக, நிலவுடைமையாளர்கள் கோயி லுக்கு நிலங்களைக் கொடையாகப் பெற்று, அந்த நிலங்களி லிருந்து கிடைத்த உற்பத்தி வருவாயைப் பயன்படுத்திக் கொண்டார்கள். நிலவுடைமையாளர்கள், தங்கள் கோயிலுக்கு, தாங்கள் கொண்டிருந்த நிலங்களைக் கொடையாகக் கொடுத் தது மிகக் குறைவுதான். வழிமுறையாகத் தங்கள் நுகர்வுக்காக நிலத்தில் பயிரிட்டுவந்த சிறு உழவர்களிடமிருந்த நிலங்களை, ‘குடிநீக்கா’மலோ, ‘குடிநீக்கி’யோ கோயிலுக்குக் கொடையாக எடுத்துக்கொண்டார்கள். நிலவுடைமையாளர்களின் கோயில் களோடு எத்தகைய தொடர்பும் உறவும் வழிபாட்டுரிமையும் இல்லாத சிறு உழவர்களிடமிருந்த நிலங்கள் இப்படிப் பறித்துக்கொள்ளப்பட்டன. இத்துடன் இது நின்றுவிட வில்லை. கோயிலுக்காக நிலம் இழந்தவர்கள், தங்கள் நிலங்களிலேயே உழுகுடிகளாக–குத்தகையாளர்களாக ஆக்கப் பட்டார்கள். கோயில்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய மேல்வாரத்தின் பங்கு உயர் அளவில் முடிவு செய்யப்பட்டு, தங்கள் உழைப்பின் பெரும் பயனை உழுகுடிகள் இழக்க வேண்டியதாகிவிட்டது. நிலவுடைமையாளர்களைவிட மிகுதி யாக, உடைமையற்ற பிரிவினரே குடிக்காசு போன்ற பல வரிகளையும் கோயிலுக்கோ அல்லது ஊர் அவைக்கோ செலுத்தவேண்டியிருந்தது. இந்த வரிகளும் பளு நிறைந்தவை யாகவே இருந்தன.

கோயிலில் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு நிலவுடைமையாளர்கள் செய்த இந்த ஏற்பாடுகள், மன்னனுடைய துணையுடன், அவனது ஆணை கள் வழியாகவும் செயல்படுத்தப்பட்டன. நிலவுடைமை அமைப்பின் ஒரு பகுதியாக இருந்த அரசினுடைய செயல்பாடுகள்,

உடைமைப் பிரிவினரின் நலன்களைக் காக்கும் முயற்சிகளாகவே அமைந்தன. நிலவுடைமைப் பிரிவினர், மறைமுகமாகக் கோயில்களை முன்னிறுத்தி உழைக்கும் மக்களிடமிருந்து பயன்களைப் பெற்றுக்கொண்ட சுரண்டல் முறை வேறு பல வகைகளிலும் தொடர்ந்தது.

**கோயிலின் பொதுச்செலவுகள்**

கோயில் பணிகளை நிறைவேற்றுவதுடன் மட்டும் கோயில் தொடர்பான வருவாயினைச் செலவிடுவது நின்றுவிடவில்லை. நிலவுடைமைப் பிரிவினரின் பல்வேறு பொதுத் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கும் கோயில் என்ற அமைப்பைப் பயன்கொள்ள முனைந்தனர். கல்வி, கலை, மருத்துவம், வங்கி என்பன போன்ற பல முனைகளில் கோயில் பங்குகொண்டதற்கு இதுவே அடிப்படையாகும். அன்றைய சமூகம் பெற்றிருந்த அனைத்து வளர்ச்சி வாய்ப்புகளையும் துய்ப்பதற்குக் கோயில் என்ற அமைப்பு துணை புரிந்தது. இதனால், கோயிலின் செலவுகளும் மிகுந்தன. இந்தச் செலவுகளுக்காக, மேலும் கோயில் கொடைகளைப் பெற்றது. ஆனால், வழக்கம் போலவே கொடைகள் பெரும்பாலும் எளிய உழைப்பாளர்களிடமிருந்து வலுவில் பறித்துக்கொள்ளப்பட்ட நிலங்களாகவே இருந்தன.

**கோயிலின் எஞ்சிய வருவாய்**

இத்துடன், இந்தச் சுரண்டல் நின்றுவிடவில்லை. கோயில் தொடர்பான வழிபாட்டுச் செலவுகள், நிலவுடைமையாளரின் தனி வாழ்க்கை வசதிகளுக்கான கலை, கல்வி போன்ற பல பொதுச் செலவுகள், காவல், ஏரி-குளங்களின் பேணுகை, கோயில் செய்யவேண்டியிருந்த பிற வகையான பொறுப்புகள், நில உற்பத்தி மேம்பாடு என இருந்த கட்டமைப்புச் செலவுகள் ஆகிய அனைத்தையும் செய்து முடித்த பின்னரும்கூட பெரும்பாலான கோயில்களிடம் எஞ்சிய–உபரி வருவாய் இருந்தது. கோயிலுக்குக் கிடைத்த வருவாயைவிடச் செலவுகள் குறைவாகவே இருந்தன. இந்த எஞ்சிய வருவாயையும் நிலவுடைமையாளர்களே பகிர்ந்துகொண்டனர். இதில் வேறு யாரும் உரிமை கொண்டாடியிருக்கமுடியாது. இது அவர்களுக்குக் கிடைத்த கூடுதல் பரிசாகவே–கொள்ளையாகவே அமைந்திருந்தது. கோயிலின் பெயரில் நிலங்களை வாங்குதல், ஏரி-குளம் அமைத்தல் என்பன போன்ற நிலையான உடைமைகளை உருவாக்குவதும் இந்த எஞ்சிய வருவாயிலிருந்தே நிறைவேற்றப்பட்டது. கோயிலின் எஞ்சிய வருவாயை இவ்வாறு நேரிடையாகப் பயன்படுத்தியதன்றி, நிலவுடைமையாளர்கள் தங்களுக்குள் மறைமுகமாகப் பகிர்ந்துகொண்ட முறைமைகளை மேலும் நுணுகிப் பார்த்து வெளிப்படுத்தவேண்டும்.



நிலவுடைமையாளர்களின் நலன்களுக்காக, அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கோயில் என்ற அமைப்பு மிக வெளிப்படையாகவே பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இந்த நிலைமைகள் கோயிலின் பங்களிப்பினை விரிவுபடுத்தின. சமூக-பொருளியல் மையமாகக் கோயில் உருப்பெறத் தொடங்கியது.

**கோயிலின் உழுகுடிகள் நிலை**

கோயிலுக்காக நிலமிழந்த உழவர்கள், வேறு வழியின்றி யாவற்றையும் ஏற்கவேண்டியதாயிற்று. அத்துடன், உழுகுடிகளாக அவர்கள் கோயிலுக்குத் தரவேண்டியிருந்த பங்களவான மேல்வாரம் மிகுதியாகவே இருந்தது. இந்த அளவு அவ்வப்போது மேலும் மிகுதிப்படுத்தப்பட்டது. அந்த நிலங்களில் உற்பத்திக்காக உழுகுடியினரின் இல்லத்தினர் பாடுபட்ட உழைப்பின் ஊதியத்தைக்கூட அவர்களால் பெறமுடியவில்லை. மேல்வாரத்தைத் தர முடியாத நிலை ஏற்பட்டபோது, அவர்கள் நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு, வேறு உழுகுடிகள் அமர்த்தப்பட்டார்கள். மேல்வாரம் கொடுக்க முடியாத உழுகுடியினர், நிலவுடைமையாளர்களுக்கு அஞ்சி ஊரைவிட்டே ஓடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆனால், இவற்றையெல்லாம் உடைமைப் பிரிவினர் பொருட்படுத்தவில்லை. கோயிலின் பெயரிலும், இறைவன் பெயரிலும் தங்கள் நெருக்குதல்களைத் தொடர்ந்தனர். கோயிலை முன் எடுத்துக் காட்டாகக் கொண்டு, நில உறவுகள் தொடர்பான பல முறைமைகளை உருவாக்கிக்கொண்டனர்.

வழிமுறையாகப் பயிரிட்டுவந்த நிலங்களிலிருந்து உழவர்கள் வெளியேற்றப்பட்டமையாலும், உழுகுடிகள் மேல்வாரமாக மிகு அளவில் நில உற்பத்தியைக் கொடுக்கவேண்டியிருந்ததாலும், பல்வேறு மிகு வரிகளைச் செலுத்த இயலாமல் கீழ்நிலைப் பிரிவினர் துயருற்றதாலும் ஏற்பட்ட போராட்ட உணர்வுகள் அவ்வப்போது வெடித்தன. இவை வரி கொடுக்க மறுத்தல், குத்தகையான மேல்வாரத்தைத் தர மறுத்தல், வரி எதிர்ப்புக் குரல் கொடுத்தல், மன்னனிடம் முறையிடல், முடியாத நிலையில் ஊரைவிட்டு வெளியேறுதல் என்ற பல வடிவங்களில் இவை இருந்தாலும், இயக்கமாகத் திட்டமிட்டு இயங்க இயலாமையாலும், வல்லமைகொண்ட உடைமைப் பிரிவினரை எதிர்கொள்ள முடியாமையாலும் இவை யாவும் எதிர்ப்புக் குரல்களாக மட்டுமே முடங்கிவிட்டன. இந்த

எதிர்ப்புக் குரல்கள் பெரும்பாலும், வேளாளர், பிராமணர் ஆகியோரையும் இவர்கள் தொடர்புள்ள கோயிலையும் மையமாகக் கொண்டிருந்தன.

**நிலவுடைமையாளர் கையில் கோயில் வளங்கள்**

நீர்வளத் தொழில்நுட்ப மேம்பாட்டினால், பெரிய ஏரி களை அமைத்து, பரந்த அளவில் நீரைத் தேக்கி வைப்பதும், அதை ஒழுங்கமைத்து வாய்க்கால்கள் வழியாக நிலத்துக்கே நீரைக் கொண்டுசேர்ப்பதும், மழையில்லாத காலத்தும் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதும் இயலுவதாயின. இவற்றைப் பயன்கொள்வதற்கு ஏதுவாக, நில உற்பத்தி விரிவாக்கமும் வேளாண் தொழில்நுட்ப வளர்ச்சியும் அமைந்தன. ஆனால், இயற்கையாகக் கிடைக்கும் மழை நீரையும் ஆற்று நீரையும் கொண்டு நில உற்பத்தி செய்ய முடியாத இடங்களில் ஏற்பட்ட வேளாண் விரிவாக்கம், செயற்கையாக அமைக்கப்பெற்ற நீர்வளத்தினைச் சார்ந்திருந்தது. பெரிய அளவில் ஏரிகளை உருவாக்குவதும் வாய்க்கால் வழிகளை அமைப்பதும், நீர்வளத் தொழில்நுட்ப அறிவையும் பெரும் மனித உழைப்பு ஆற்றலை யும் பொருள் செலவையும் பொருத்தே இருந்தன. எனவே, இவற்றை எளிய மக்கள் குழுக்களால் நிறைவேற்ற முடிய வில்லை. இதனால், இப்பணிகளை மன்னர்களும் பெரும் நிலவுடைமையாளர்களும், ஊர், கோயில் போன்ற அமைப் பினரும் மேற்கொண்டுவந்தனர். இதன் விளைவாக, நீர்வளங் களான ஏரி, குளங்கள் போன்றவை, இவர்களுடைய பிடிக்குள் சென்றன. கூட்டு உழைப்பாலும் முயற்சியாலும் காடுகளைப் பண்படுத்தி உற்பத்திக்கு ஏற்ற விளைநிலங்களாக மாற்றி னாலும், பயிர் செய்வதற்கு நீர் வேண்டப்பட்டது. இந்த நீர் வள வாய்ப்புகளைத் தங்கள் கைக்குள் கொண்டிருந்தவர்கள், பண் படுத்தப்பட்ட நிலங்களில் பங்குகளைப் பெறுகின்ற நிலை ஏற்பட்டது. நீர் வள வாய்ப்புகளை வைத்துக்கொண்டு நில உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் வல்லமை ஒரு சிலருக்குக் கிடைத்தது. இவ்வாறு, நீர்வள வாய்ப்புகளைக் கட்டுப்படுத்தும் இடத்தில் கோயிலும் இருந்தது. கோயில்கள் வழியாக நிலவுடைமையாளர்களான வேளாளரே இதனைப் பெரிதும் இயக்கினர்.

அரசன் ஆணைகளைப் பயன்படுத்தியும், நீர்வள வாய்ப்பு களைத் தங்கள் பிடியில் வைத்துக்கொண்டும் கோயில் நிலங் களைப் பெறுவது தொடர்ந்து நடைபெற்று வந்தது. இத்துடன், பிராமணர்களுக்கான கொடை, அரசு அதிகாரிகள், படைத் தலைவர்கள் போன்றோரது பணிகளுக்கான பணிசெய்காணி



ஒதுக்கீடு என்று வேறு பல முறைகளிலும் எளிய சிறு உழவர் களது விளைநிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. பறித்துக் கொள்ளப்பட்டன என்பது இன்னும் பொருத்தமானதாக இருக்கும்.

**கோயில் மேலாண்மை**

நிலங்கள், நீர்வள வாய்ப்புகள், இல்ல மனைகள், ஆடுமாடுகள், பொன் அணிகலன்கள், வேறு அறக்கட்டளைகள் வழியிலான விளைபொருள் வரவுகள், வரிகள் என்பன போன்ற பலவாறான வருவாய் இனங்களைக் கோயில்கள் பெற்றிருந்தன. இவற்றைக் கோயிலோடு தொடர்புடைய உள்ளூர் வேளாளர் களே பெரிதும் மேலாண்மை செய்துவந்தனர். இதேபோன்று, உள்ளாட்சி அமைப்புகளும் அந்தந்த ஊர்களில் இருந்த வேளாளர், பிராமணர், வணிகர் போன்ற நிலவுடைமைப் பிரிவினரிடமே இருந்து வந்தன. நிலங்களையும், நீர்வள வாய்ப்புகளையும் நிலவுடைமையாளர்களே கொண்டிருந்த தாலும், நில உற்பத்தி, நீர் பாய்ச்சுதல், நில வரி என்பன போன்றவற்றின் மேலாண்மையே உள்ளாட்சிகளின் மையப் பணிகளாகப் பெரிதும் இருந்ததாலும், ஊர், சபை, நகரம் என அழைக்கப்பட்ட உள்ளூர் அமைப்புகள் யாவும் நிலவுடை மைப் பிரிவினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

உள்ளூர் அலுவல்களின் ஆட்சியும் கோயில் பணிகளின் மேலாண்மையும் நிலவுடைமைப் பிரிவினரான வேளாளர் போன்றவர்களிடமே பெரிதும் இருந்ததால், இந்த இரண்டு வேறுபட்ட அமைப்புகளின் செயல்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்புகளும், இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப ஒன்றுடன் ஒன்று கலந்து, பிணைந்து மயங்கிக் கிடந்தன. இதனால், இந்த இரு வேறு அமைப்புகளுக்கும் முரண்பாடுகள் இருந்தன எனக் கொள்ளவேண்டியதில்லை. விலக்காகச் சில இடங்களில் முரண்களோ வேறுபாடுகளோ ஒரோவழி இருந்திருப்பினும், இந்த இரு வேறு அமைப்புகளும் நில உடைமை நலன்களைப் பேணுதற்கென்று செயல்பட்டமையால், அவை ஒன்றுக் கொன்று இணங்கியே இயங்கிவந்தன. ஒரு சில இடங்களில் கோயில் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் மேலாண்மை செய்ததும், வேறு சில இடங்களில் உள்ளாட்சிப் பொறுப்பு களைக் கோயில்கள் நிறைவேற்றி வந்ததும் இயல்பாகவே இருந் திருக்கின்றன. கள நிலைமைகளுக்கேற்பவே இவை அமைந் திருந்தன. எடுத்துக்காட்டாக, நீர்வளங்கள் யாவும் கோயிலுக்கு உரித்தாக இருந்த இடத்தில், உள்ளாட்சிப் பொறுப்புகள் கோயிலிடமே இருந்திருக்க வாய்ப்புகள் மிகுதி. ஏனெனில்,

உள்ளாட்சியின் மையப் பணிகளே நில உற்பத்தியும் நீர்ப் பங்கீடும்தாம். இந்த நிலையில், தனியொரு உள்ளாட்சி அமைப்பு, அத்தகைய ஊருக்கு இருக்கவேண்டியதில்லை. இத்துடன் இயைபான வேறு சில ஆட்சிப் பணிகளையும், கோயிலே மேற்கொண்டிருக்க முடியும். அத்தகைய ஆட்சிப் பணிகள் பலவற்றைக் கோயில் ஏற்றுக்கொண்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

ஆனால், பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட ஊரில் அமைந்திருந்த கோயில், பிராமணரின் தனிக் கட்டுப் பாட்டில் இருந்ததாகத் தெரியவில்லை. உள்ளூரில் இருந்த கோயில் பெரும்பாலும், அந்த ஊரைச் சார்ந்த வேளாளர் போன்ற நிலவுடைமைப் பிரிவினராலேயே கட்டப்பட்டது. பிராமணர்கள் தாம் வாழ்ந்த ஊரில் கோயில் எதுவும் தாங்க ளாக எழுப்பவில்லை. அவர்களுக்குக் கொடையளிக்கப்பட்ட ஊர்களில் இருந்த நிலங்களும் முழு உரிமை கொண்டனவல்ல; இதனால், நிலவுடைமையாளர் என்ற வகையில் அவர்களுக்குக் கோயிலில் உரிமைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. பிராமணர் வாழ்ந்த ஊரில் அமைந்திருந்த கோயிலின் மேலாண்மை, அந்தக் கோயிலை எழுப்பிய வேளாளரிடமே இருந்திருக்கவேண்டும். பிராமணரின் சதுர்வேதிமங்கல ஊர் களை ஒட்டியும் அடுத்தும் வேளாள ஊர்கள் இருந்தமை இதைத்தான் குறித்து நிற்கிறது. இவை குறித்த தரவுகள் தொகுக்கப்பட்டு, இந்தப் பார்வையில் ஆய்வுக்குட்படுத்தப் பட்டால், மேலும் தெளிவுகள் கிடைக்கக்கூடும். கோயில் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும், நிறுவனமாக உயர்ந்து, சமூக-பொருளியல் மையமாக விளங்கியது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை.

**நிலவுடைமையாளரின் சுரண்டலுக்குப் பயன்பட்ட கோயில்**

கோயில் ஒரு நிலவுடைமை நிறுவனமாக வளர்ந்து வலுப் பெற்றமைக்கான பின்புலத்தினைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கூறலாம்:

1 கோயிலுக்கு வேண்டிய வருவாய் பெரும்பாலும் உழைக்கும் மக்கள் வழியாகவே கிடைத்தது. இது கோயில் எடுத்துக்கொண்ட நிலங்களிலிருந்து தொடர்ந்து கிடைத்துவந்த மேல்வாரமாகும்.

2 எளிய மக்களின் உழைப்பைக் கோயிலின் பெயரை வைத்துக்கொண்டு பலவாறாக நிலவுடைமையாளரே துய்த்தனர்.



3 தங்கள் செலவில் அல்லாமல், கோயிலின் வரவுகளில் இருந்து தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் நிலவுடைமையாளர்கள் செய்துகொண்டனர்.

4 இவற்றுக்காக, உழுகுடிகளிடம் மிகு அளவில் மேல் வாரம் பெற்றதால் இது மக்களின் உழைப்பை முழுமை யாகச் சுரண்டுவதாகவே அமைந்திருந்தது.

5 வழிபாடு, பிற வாழ்க்கை வசதிகள், கட்டமைப்பு ஆகிய செலவுகளைக் கோயிலின் பொது வருவாயிலிருந்து செய்துகொண்ட நிலவுடைமையாளர், வருவாயில் எஞ்சியிருந்தவற்றையும் தங்களுக்குள் பகிர்ந்துகொண் டனர். இது சுரண்டலின் மற்றொரு தன்மையாகும்.

6 சுரண்டலுக்கு எதிரான உணர்வுகள் யாவும் கோயிலின் பெயரில் வல்லாண்மை கொண்டு அடக்கப்பட்டன.

7 சுரண்டலுக்கு வாய்ப்பாக உள்ளாட்சியின் துணை யுடன் ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றையும் கோயிலைக்கொண்டு நிலவுடைமையாளர் நடத்தி வந்தனர்.

8 தங்கள் நலன்களைக் காக்கவும் வேண்டியவற்றை நிறை வேற்றிக்கொள்ளவும் சுரண்டலைத் தொடரவும், எளிதாகவும் வெளிப்படையாகவும் தடையின்றியும் பயன்பட்டதால்தான் வழிபடுமிடமாக இருந்த கோயிலை ஒரு நிறுவனமாக நிலவுடைமையாளர் வளர்த்தெடுத்துப் பேணினர்.

கோயில்களின் வருவாயை முழுமையாக நிலவுடைமைப் பிரிவினரே நுகர்ந்துவந்தார்கள் என்பதனை வேறு வகையிலும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். கோயில் நிலங்களில் உற்பத்தி செய்து மேல்வாரம் கொடுத்ததன் வழியாக உழுகுடிகளே மிகு வருவாயைத் தேடித் தந்தனர். விளக்கெரித்தல் போன்ற அறச் செயல்களுக்கான கொடை நிலங்களில்கூட, உற்பத்தி செய்து மிகு அளவிலான மேல்வாரத்தைக் கொடுத்துக் கோயில் வருவாயைப் பெருக்கியவர்கள் உழுகுடியினர்தாம். இருந் தாலும், நிலவுடைமையற்ற பிரிவினருக்குக் கோயிலில் நுழைவு ஏற்பு, வழிபடு உரிமை, நுகர்வு வாய்ப்பு ஆகியன இருக்கவில்லை. இந்த நிலையில், வழிபாட்டு முறைகளாக இருந்தாலும், பிற வாழ்க்கை வசதிகளாக இருந்தாலும், அவை அவர்களின் நுகர்வுக்கு எட்டியிருக்க முடியாது. இதனால், கோயில் வளத்திலும் வருவாயிலும் அவர்கள் பங்குபெற வாய்ப்புகளே ஏற்படவில்லை. கோயிலில் அவர்களுக்கு உரிமைகள் இருக்க வில்லை என்பதால், கோயில் தொடர்பான நுகர்வுகளிலும்

அவர்கள் உரிமை பெறவில்லை என்பது உறுதியாகிவிடுகிறது. அவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கோயில் வருவாயி லிருந்து பயன் எதையும் பெறமுடியவில்லை.

ஒருபுறம் கோயில் அமைப்பாக–நிறுவனமாக வளர்ந்து வலுப்பெற்று வந்த சூழல், அதை ஆட்சி அமைப்பாகவும் நிலை நிறுத்துவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகள் நிலவுடைமையாளர் பிடியில் இருந்ததால், ஆட்சிப்பணிகள் சிலவற்றையோ, பலவற்றையோ அல்லது முழுமையையுமோ கோயில் இடத்திற்கேற்பச் செயல் படுத்தியது. இரண்டுமே நிலவுடைமையாளர்களைக் கொண்டு மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருந்ததால், ஆட்சி செய்யப் பட்ட அடித்தள மக்களைப் பொருத்தவரை நடைமுறையில் இரண்டுமே ஒன்றாகத்தான் இருந்தன; இது ஒரு மாறுதல் என்றுகூட அவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள். ஆட்சிப் பொறுப்பின் ஒரு பகுதியாக நீதி வழங்குதலையும் கோயில் செயல்படுத்தியிருக்கிறது. இதுவும்கூடப் புதுமையன்று.

இதனால் கோயிலை நிலம் உள்ளிட்ட உடைமைகள் கொண்ட, தனித்த ஆனால் பொது எனக் காட்டத் தக்கவாறான அமைப்பாக–நிறுவனமாக நிலவுடைமைப் பிரிவினர் பேணி வந்தார்கள். அத்துடன் அதனை, சமூக-பொருளிய மையமாக வும் வலுப்படுத்தினர்.

**சமூக அசைவியக்கத்தின் படிநிலை வளர்ச்சி**

கோயில் நிறுவனமாக வலுப்பட்டு சமூக-பொருளிய மையமாகத் தோற்றம் கொண்டதும், வேளாளர்கள் போன்ற உடைமையாளர்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டதும் சமூக அசைவியக்கங்களினால் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சியே யாகும். ஊருக்கு ஊர், இடத்துக்கு இடம் இந்தப் படிநிலை வளர்ச்சி, கள நிலைமைகளுக்கேற்ப மாறுபட்டிருக்கலாம். ஆனால், பொதுப் போக்குகள் என்று எடுத்துக்கொண்டால், இவை தெளிவாகவே புலப்படுகின்றன.

குறிப்பாக, உற்பத்தி வளத்துக்கு ஏற்பக் கோயிலின் சமூக-பொருளியச் செயல்பாடுகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. உற்பத்தி வளம் குறைவாக இருந்த இடங்களில், நிலவுடைமை யாளர்கள் வலுப்படாத நிலையில், கோயில்களின் தாக்கம் சிறிதளவே இருந்திருக்கும்; இது உள்ளாட்சிக்கும் பொருந்தும். இப்பகுதிகளில், கோயிலும் உள்ளாட்சியும் போதுமான கட்டமைப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் இருந்திருக் காது. இத்தகைய இடங்களில் சைவ, வைணவக் கோயில்கள் எழுந்திருந்தாலும், அவை வேளாளர் போன்ற உடைமை



யாளரின் சமூக-பொருளியச் செயல்பாடுகளின் குவிமையமாக உருவெடுத்திருக்க முடியாது. இந்தக் கோயில்களுக்கு நிலங்கள், நீர்வளங்கள், அணிகலன்கள் போன்ற உடைமைகளும் பெரு மளவில் இருந்திருக்காது; அல்லது மிகக் குறைவாக இருந் திருக்கலாம். இங்கெல்லாம், வலுப்படாத உடைமையாளர் களுடன், பிற பகுதியினரும் பங்குகொண்டு, ஊர் தொடர்பான முடிவுகளைக் கூட்டாகவே மேற்கொண்டிருப்பார்கள். இருந் தாலும், இந்த இடங்களில் ஏரி, குளங்களின் தோற்றத்தால் வேளாண் மேம்பாடு ஏற்பட்டபோது, இயற்கையாகவே கோயில் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சமூக-பொருளியப் பங்களிப்பு மேலோங்கியிருக்கும்.

**சைவ – வைணவக் கோயில்களுக்கே உடைமை**

சோழர் காலத்தில் சிவன், திருமால் போன்ற நிலவுடைமை யாளர் வழிபடும் மேம்படுத்தப்பட்ட கடவுளர்களின் கோயில் களுக்கே கொடைகள் பெரிதும் வழங்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி, வேறு வகையான உடைமைகளையும் அக்கோயில் கள் கொண்டிருந்தன.

வழிமுறையாகத் தங்கள் நிலங்களில் தம் நுகர்வுக்காகப் பயிர் செய்து வந்த சிறு உழவர்கள், மேல்வாரம் என்ற பெயரில் குத்தகையாகத் தமது உழைப்பினால் கிடைத்த விளைவில் அடுத்தவருக்குப் பங்கு கொடுத்து வந்த உழுகுடிகள், ஊழியத் துக்குத் தம் உழைப்பை அளித்துவந்த வேளாண் தொழிலாளர் கள், உழவுக் கருவிகளைச் செய்தளித்துவந்த கைவினைஞர்கள் என வேறுபட்ட எளிய மக்கள் அனைவருமே நாட்டார் கடவுளர்களையே வணங்கிக்கொண்டிருந்தார்கள். நாட்டார் கடவுளர்களுக்கான கோயில், நிலவுடைமையாளர்களது கோயில்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இவை இரண்டுக் கும் இடையே ஒப்புமையே காணமுடியாது.

**நாட்டார் கோயில்களின் நிலை**

நாட்டார் கோயில்கள், கீழ்க்கண்ட தன்மைகளைப் பெற்றிருக்கவில்லை என்பதுதான், அன்றைய சமூக-பொருளிய-பண்பாட்டுத் தளத்தில் நிலவிய முற்றான முரண்களைத் தெளிவாகக் காட்டுகிறது:

1 நாட்டார் கோயில்கள் அன்றைய நிலையில் கற்றளி களாக மாறவில்லை;
2 நிலங்கள் போன்ற உடைமைகள் எதுவும் இருக்க வில்லை;

3 யாரும் அவற்றுக்கு எப்பொருளையும் கொடையாகக் கொடுக்கவில்லை;

4 நாட்டார் கடவுளர்களை வழிபடுவோருக்குப் பொன் அணிகலன்கள் இல்லாததால், அவர்தம் கடவுளர்க்கும் அணிகலன்கள் அணியப்படவில்லை;

5 உடைமைகளும் கொடைகளும் இல்லாமையால், இவற்றைப் பதிவு செய்யவேண்டிய கல்வெட்டுக்களு மில்லை;

6 உடைமைகளே இல்லாத நாட்டார் கோயிலுக்கு முழுக் காலம் பணியாற்றும் பூசாரிகளும் தோன்றவில்லை;

7 உழைக்கும் மக்கள் அனைவரும் பங்கேற்கும் நாட்டார் கலைகள் நடைமுறையில் இருந்ததால், தனியான நடனக் கலைஞர் போன்றோரை நாட்டார் கோயில்கள் கொண்டிருக்கவில்லை;

8 உடைமைகளைக் காவல் செய்யவோ, ஊராரை அடக்கி ஆளவோ, உழுகுடிகளிடம் மேல்வாரம் பெறவோ, ஏரி நீரைப் பங்கிடவோ, வரிகளை வாங்கவோ தேவை யில்லாததால், மேலாண்மைக் கட்டமைப்பு எதுவும் உருவாகவில்லை;

9 நிலவுடைமை நலன்களைப் பேணக்கூடிய கட்டமைப் பாக நாட்டார் கோயில் விளங்காததால் மன்னனுடைய தலையீடும் துணையும் புகவில்லை;

10 மேலே கூறப்பட்ட காரணிகளால் நாட்டார் வழி பாட்டிடங்கள் சமூக-பொருளிய மையங்களாக மேம் படவில்லை.

**நாட்டார் கடவுளரையும் வழிபட்ட வேளாளர்**

நாட்டார் கோயிலுக்கும் உடைமையாளர்களின் மேம் பட்ட கோயிலுக்கும் ஒப்புமையேதும் இருக்கவில்லை. ஆனாலும், வேறு வகையான இணைவு ஒன்று இருந்தது. உடைமையாளர் கோயில்களில் இருந்த மேம்படுத்தப்பட்ட கடவுளர்களை, உழைக்கும் மக்கள் வழிபடவில்லையாயினும், நாட்டார் கடவுளர்களைப் பிராமணர் அல்லாத நிலவுடை மைப் பிரிவினர் தொடர்ந்து வழிபட்டுவந்தார்கள் என்பதே அது. இது ஒரு வகையான முரண் என்றாலும், இதற்கான சமூக-பொருளிய-பண்பாட்டுக் காரணிகள் இன்னும் தெளிவாக ஆய்வுசெய்யப்படவில்லை. தமிழ்க் கடவுளர் சிலவற்றின் ஆரியவயவாக்கம் முழுமையாக நடைபெற முடியாதது, ஆரியக் கடவுளர்கூடத் தமிழ்க் கடவுளர்களாக மட்டுமே இங்கு அறிமுகமாகவேண்டியிருந்தது, ஆரியப் பண்பாட்டு ஒழுகலாறு



கள் நிலவுடைமை நலன்களையன்றிப் பிறவற்றில் பெரிதும் கலக்க முடியாமலிருந்தது போன்றவை இதில் தொடர்பு படுத்திப் பார்க்கவேண்டியனவாக அமைகின்றன.

பிராமணர் அல்லாத நிலவுடைமைப் பிரிவினர் நாட்டார் கடவுளர்களை வழிபடுவது தொடர்ந்தாலும்,[1] அவர்கள் நாட்டார் கோயில்களில் வழிபாடுகள் நடத்தியது வேறு முறையில் முற்றிலும் மாறுபட்டு இருந்தது. அது மேனிலை பெற்றிருந்த சைவ, வைணவக் கோயில்களில் அவர்கள் நடத்திய புதிய முறை வழிபாடுகளைப் போன்று எந்த வகையிலும் அமையவில்லை. வழிபாட்டினை நடத்தி வைக்க, நாட்டார் கோயில்களுக்கு நிலவுடைமைப் பிரிவினர், பிராமணர்களை அழைத்துவரவில்லை; பால், நெய் சொரிந்து பூசனைகளையும் செய்யவில்லை. நாட்டார் கடவுளர்களை வழிபடும் முன்னைய வழக்காற்றின்படியே அவர்களது வழிபாடும் தொடர்ந்து இருந்தது.

இதைப் போன்றே, நில உடைமைப் பிரிவினர் நாட்டார் கோயில்களுக்கு நிலங்களையோ, வேறு வகையான உடைமை சார்ந்த கொடைகளையோ வழங்கியதாகவும் தெரியவில்லை; மன்னர்கள் வழியாகவோ, வேறு வழியிலோ கொடைகள் பெற்றதாகவும் பதிவுகளில்லை. இது மிகவும் தனித்துப் பார்க்க வேண்டியதாகும். தங்களுக்கென்று தனியாகவும் புதிதாகவும் உருவாக்கிக்கொண்ட சைவ, வைணவக் கோயில்களுக்கும், சில இடங்களில் பௌத்த, சமணக் கோயிகளுக்கும்கூடப் பெருமளவில் கொடைகள் கொடுத்தவர்கள், கொடைகளைப் பெற்றுக் கொண்டவர்கள், தாங்கள் வழிவழியாக வணங்கிவந்த நாட்டார் கோயில்களுக்கு ஏன் எதுவும் வழங்கவில்லை, வாங்கிக்கொள்ளவுமில்லை? இந்தப் போக்கு, புரிதல்களை வேண்டி நிற்கிறது என்பது மட்டுமல்ல, பல ஐயங்களையும் எழுப்புகின்றது.

**வழிபாடு நின்றுவிட்டது ஏன்?**

வழிபடுமிடங்களாகச் சைவ, வைணவக் கோயில்கள் சிறப்புப் பெற்றிருந்ததையும், இந்த வழிகளில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் விளக்கெறிப்பதற்கும் வேறு வகையான அறப்பணிகளுக்கும் ஈடுபாட்டுடன் கொடைகளை வாரி வழங்கியிருந்ததையும், பக்தி இயக்கம் போன்ற உணர்வுமிக்க வீச்சுடன் வழிபாடுவோர் கடவுளர்களோடு ஒன்றிக் கிடந் ததையும், *திருமுறைகள், பிரபந்தம்* போன்ற பாடல்களில் நெக்குருகப் பாடியிருந்ததையும் கிடைத்திருக்கின்ற பதிவுகளும் சான்றுகளும் தெளிவாகவே காட்டுகின்றன என்பது உண்மை

தான். என்றாலும், தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற மையக் கோயில்கள் மட்டுமன்றி, வேறு பல உள்ளூர்க் கோயில்களும் காலப் போக்கில் வழிபாடின்றி, வழிபடுவோரின்றிப் புறக்கணிக்கப் பட்டுக் கிடந்தது ஏன் என்பது புலப்படாமலேயே இருக்கிறது. அரசியல் மாற்றம், ஆட்சி மாற்றம் என்றெல்லாம் அமைதிப் படுத்திக்கொள்ளத் தக்கவாறு தரவுகளும் கிடைக்கவில்லை. வேறு குலத்தினர் ஆட்சியைப் பிடித்தாலும், கோயில் உடைமைகளில் தலையிடவில்லை என்பது முன் இயல்களில் விரிவாகவே விளக்கப்பெற்றுள்ளது.

வேறு குலத்தினர் ஆட்சியைப் பிடித்து, கோயில் உடைமைகளை எடுத்துக்கொண்டதாகவே வைத்துக் கொண்டாலும், கோயில்களை இடித்துவிடவில்லையே! கடவுளர் சிலைகளை அகற்றிவிடவில்லையே! மக்களைத் தடுத்துவிட வில்லையே! ஆட்சி மாற்றங்களால், மக்களின் இறை உணர்வு கள்கூடவா மாறியிருக்க முடியும்? உடைமைகளற்ற நாட்டார் கடவுளர் வழிபாடு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து இன்றுவரை உடைமைப் பிரிவினர், உடைமைக ளற்ற பிரிவினர், உடல் உழைக்கும் பிரிவினர் என அனைவரும் வழிபடுமாறுதானே இருந்து வருகிறது! அப்படியிருக்க, பல சைவ, வைணவக் கோயில்களில் மட்டும் வழிபாடு நின்று விட்டது ஏன்? வழிபடுவோர் புறக்கணித்துவிட்டது ஏன்?

வேறு ஒரு பின்புலத்தை நினைவுக்குக் கொண்டுவந்த பிறகு, இச்சிக்கலை மீண்டும் எடுத்துக்கொள்வது புரிதலுக்கு உதவி யாக அமையும். நிலவுடைமைப் பிரிவினர், நாட்டார் கடவுளர் களை வழிபடுதல் தொடர்ந்துவந்தபோதிலும், நாட்டார் பண்புக் கூறுகள் பல அவர்களது வாழ்க்கை முறையில் நீடித் திருந்தபோதிலும், நாட்டார் கடவுளர்களை மட்டுமே வழி பட்டுக் கொண்டிருந்த கீழ்த்தட்டு மக்களுடன் அவர்களுக்குப் பண்பாட்டு இணக்கம்–இயைபு ஏற்படவில்லை. சமூக-பொருளிய இணக்கம் இல்லாதபோது இது இயற்கைதான்.

சமூக-பொருளிய இணக்கமின்மைக்கு மேலாக, வேறுபாடு களும் முரண்களும் தொடர்ந்துகொண்டிருந்தன. சமூக-பொருளிய அடக்குமுறைகளைச் செயல்படுத்தக் கோயில் என்ற நிறுவனமும் பயன்பட்டது. சமூக-பொருளிய உரிமைகளைப் பறிக்கவும் கோயில் துணை நின்றது. அன்றைய நிலையில், கோயிலும் உள்ளாட்சியும் நிலவுடைமைப் பிரிவும் தனித்தனி யாக வேறுபடுத்திப் பார்க்கத் தக்கவாறான சூழ்நிலை இல்லாத வாறு, ஒன்று கலந்து கிடந்தன.



**வழிபடும் இடமாக கோயில் பார்க்கப்படவில்லையா?**

ஆனால், கோயிலின் இத்தகைய வளர்ச்சி, வலிமை, வல்லாண்மை அதை மேலும் மக்களிடமிருந்து பிரித்து வெகு தொலைவுக்குக் கொண்டுசென்றுவிட்டது. தாங்கள் வழிபடா விட்டாலும், யாரோ ஒரு பிரிவினர் வழிபடுமிடமாக இருந்த கோயிலைப் புனித இடமாக அல்லாமல், வேறு வகையாகப் பார்க்கும் மனநிலை உழைக்கும் மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. தங்கள் நிலங்களைப் பறிப்பதாக, உழைப்பின் பங்கைப் பெறுவதாக, வேலை தருவதாக, ஆட்சி செய்வதாக, அடக்கி யாள்வதாக, நீதி வழங்குவதாக, இன்னும் பலவாறாக அன்றைய கோயில் இருந்ததுதான் அவர்களுக்கு நடைமுறையில் நன்றாகத் தெரிந்தது.

இந்த நிலையில், மாபெரும் நிறுவனமாக வளர்ந்து நின்ற கோயில் என்பது, கீழ்நிலைப் பிரிவினரால், வழிபாட்டுக் கண் கொண்டு பார்க்கப்பட்டதைவிட, சமூக-பொருளியக் கண் கொண்டு பார்க்கப்பட்டதுதான் மேலோங்கி நின்றதாகத் தெரிகின்றது. அதனால், நிறுவனமாக மேலுயர்ந்தவுடன், அடக்குமுறைக் கருவியாக–உரிமைப் பறிப்பு அமைப்பாக–அடிமைப்படுத்தும் களமாக மட்டுமே கோயில் பார்க்கப் பட்டதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. மேம்படுத்தப்பட்ட கோயில்களில் வழிபாடுகளை மேற்கொள்ளாத நிலையில் இருந்த கீழ்த்தட்டுப் பிரிவினர், அக்கோயில்களை வழிபடு மிடங்களாகப் பார்க்காததில் வியப்பும் இருக்க முடியாது.

பதிவுகளையும் தரவுகளையும் கொண்டு நோக்கும்போது, நிலவுடைமையாளர்களைப் பொருத்தவரை கோயில், வழிபாடு என்பதெல்லாம் மேல் போர்வைதான் என்று நினைக்கத் தோன்றுவதையும் ஒதுக்கிவிடமுடியாது. இதனால்தான், காலப்போக்கில் சூழ்நிலைகள் மாறியவுடன், பல கோயில்களில் வழிபாடுகள் தடைபட்டுவிட்டதா என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது.

இவற்றுக்கு இயைபான மற்றொரு வளர்ச்சியையும் ஒப்பீட்டுக்கு எடுத்துக்கொள்வது உண்மை நிலையைப் புரிந்து கொள்ளத் துணைபுரிவதாக அமையலாம். கோயில் என்ற நிறுவனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் வலுப்பாடும் நில வுடைமை நலன்களை நிலைநாட்டுதற்கே ஏற்படுத்தப்பட்டன, பயன்படுத்திக்கொள்ளப்பட்டன என்பது விரிவாகவே இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிறுவனமாக உருவாக்கப் பட்ட கோயில்கள் யாவுமே நிலவுடைமையாளர்கள் வழிபட்ட சைவ, வைணவக் கோயில்களாகவோ, வேறு மேனிலைப்படுத்தப்

பட்ட கடவுளர்களின் கோயில்களாகவோதாம் இருந்திருக்கின்றன என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. எனவே, நிலவுடைமை நலன்களைப் பேணுகின்ற நிறுவன அமைப்புகளான சைவ, வைணவக் கோயில்களை மட்டுமே, வழிபடுமிடங்களாகப் பார்க்காமல், வேறு வகையாகப் பிற பகுதியினர் பார்க்கக்கூடிய நிலைமை இருந்திருக்கிறது என்பதிலும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இந்த வகையில், சமூக-பொருளிய-பண்பாட்டுச் செயல்பாடுகளுக்குத் துணையாகவும், அவற்றின் வழியான ஆதிக்கத்திற்கு வாய்ப்பாகவும், ஒடுக்குமுறைக்குக் கருவியாகவும் இருந்து வந்தவை சைவ, வைணவக் கோயில்கள் மட்டுமே. அதாவது, நிலவுடைமையாளர்கள், தாங்கள் வழிபட்ட கோயில்களின் வழியாக, அந்தக் கோயிலில் வழிபடாதவர்களை ஆதிக்கம் செய்துவந்தார்கள்.

இதற்குக் கோயிலின் உடைமைகளும் நிறுவன அமைப்பும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. இருப்பினும், பிராமணர் அல்லாத நிலவுடைமையாளர்கள், நிலவுடைமையற்றவர்கள் என இரு பிரிவினருமே வழிபட்டுவந்த நாட்டார் கடவுளர்களின் கோயில்கள் இத்தகைய சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கத்திற்கு உதவவில்லை. ஏனெனில், நிலவுடைமை கொண்ட நிறுவனங்களாக நாட்டார் கடவுளரின் கோயில்கள் இருக்கவில்லை.

**கோயிலின் சமூக–பொருளிய–பண்பாட்டு ஆதிக்கப் பின்புலம்**

இதிலிருந்து நமக்கு ஒரு தெளிவு கிடைத்துவிடுகின்றது. கோயில் வழியிலமைந்த சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கமும் செல்வாக்கும் ஆட்சியுரிமையும், அந்தக் கோயிலின் வழிபாட்டு முறைகளின் காரணிகளால் ஏற்படவில்லை; நம்பிக்கைகளின் அடிப்படைகளால் அமையவில்லை. மாறாக, நிலவுரிமைகளும் இன்ன பிற புறக் காரணிகளுமே சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கத்துக்கும் செல்வாக்குக்கும் ஆட்சியுரிமைக்கும் அடித்தளமாக அமைந்து கீழ்த்தட்டுப் பிரிவினரைக் கட்டுப்பட வைத்தன.

இதனால்தான், காலப்போக்கில் சூழ்நிலைகள் மாறியவுடன், பல கோயில்களில் வழிபாடுகள் தடைபட்டதைப் போன்றே, அந்தக் கோயில்களின் வழியாக நிறுவப்பட்டிருந்த சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கங்களும் நீடிக்க முடியாமல் போய்விட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இங்கு ஒரு முரணையும் மனத்தில் கொள்ளத் தவறிவிடக் கூடாது. பல சைவ, வைணவக் கோயில்களில் வழிபாடு தடைபட்டிருந்தாலும், அந்த கோயில்களுக்கிருந்த உடைமைகள் முழுமையாக இல்லாமல் போய்விட்டன என்று கூறிவிடமுடியாது.



காலத்துக்கேற்பக் கோயில் உடைமைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருப்பினும், உடைமைகள் தொடர்ந்துகொண்டிருந்தன. இருந்தாலும், அந்தக் கோயில்களின் சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கம் என்ற மேனிலை காலப்போக்கில் முற்றிலுமாகத் தகர்ந்துவிட்டது என்றுதான் கூறவேண்டும். இது ஏன் என்பது தனி ஆய்வாக அமையலாம். கோயில் நிலங்களின் மேலாண்மையினை நிலவுடைமையாளர்கள் கொண்டிருந்ததால், கோயில் வாயிலான ஆதிக்கம் என்பதே நிலவுடைமையாளர்களின் ஆதிக்கம் என்றாகி, கோயிலின் சிறப்பிடத்தை அவர்கள் உள்வாங்கிக்கொண்டிருக்கலாம்.

**தொடர்ந்த உடைமையாளர் ஆதிக்கம்**

ஆனால், சைவ, வைணவக் கோயில்கள் வாயிலாக நிலவுடைமையாளர்கள் செலுத்தி வந்த சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கம் மறைந்துவிட்டதேயன்றி, நிலவுடைமையாளர்களது ஆதிக்கமே தூக்கியெறியப்பட்டுவிட்டது என்று கருதிவிடக் கூடாது. உள்ளூரில் நிலவுடைமையாளர்களுக்கு இருந்த நிலவுரிமைகளை மையமாகக்கொண்டு, கீழ்த்தட்டு மக்களை ஒடுக்கக்கூடிய சமூக-பொருளிய-பண்பாட்டு மேனிலை அவர்களிடம் தொடர்ந்துகொண்டிருந்தது. இது அண்மைக் காலம் வரை ஊர்ப்புறங்களில் வலிமையுடன் செயல்பட்டு வந்தது. தொழில் வளர்ச்சி பெறாத ஊர்ப்பகுதிகளிலும் வேளாண் இயக்கம் வேரூன்றாத இடங்களிலும் இந்த நிலை இன்றுவரை 'ஊர்ப் பஞ்சாயத்து' என்ற பெயரில் தொடர்வதைக் காணமுடியும். குறிப்பாக, தமிழ்நாட்டின் மைய மற்றும் தென் மாவட்டங்களில் இந்த நிலை நீடிக்கிறது. ஆனால், தொழில் வளர்ச்சி ஏதாவதொரு வகையில் ஏற்பட்டுள்ள கோவை, ஈரோடு, கரூர், நாமக்கல் போன்ற மேற்கு மாவட்டங்களிலும், வேளாண் இயக்கம் ஆழமாக வேரூன்றியுள்ள தஞ்சை, நாகை, திருவாரூர் போன்ற கிழக்கு மாவட்டங்களிலும் 'ஊர்ப் பஞ்சாயத்து' தற்போது பெரும்பாலும் வலுவிழந்துவிட்டது; முற்றிலுமாக இல்லை என்றுகூடக் கூறிவிட முடியும்.

இந்த 'ஊர்ப் பஞ்சாயத்து'க்குக் களமாக, நிலவுடைமைப் பிரிவினரும், நிலவுடைமையற்ற பிரிவினரும் சேர்ந்து வழிபடும் உள்ளூர் நாட்டார் கடவுளர்களின் கோயில்கள் அமைந்திருக்கின்றன. இந்த நாட்டார் கடவுளரின் கோயில்களுக்கு நிலவுரிமைகள் இல்லையென்பதால், இக்கோயில்களின் வழியாக அல்லாமல், இக்கோயில்களை மையமாக வைத்து, நிலவுடைமை கொண்டவர்கள், சமூக-பொருளிய-பண்பாட்டு ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்திருக்கிறார்கள்; சில இடங்களில் ஆதிக்கத்தை முழுமையாக

இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு இன்றும் தொடர்ந்து வருகிறார்கள். கிபி 12, 13ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் அம்மன் வழிபாடு செல்வாக்குப் பெறத் தொடங்கியதன்[2] வளர்ச்சிநிலையை இங்குப் பொருத்திப் பார்க்கவேண்டியுள்ளது.

வழிபடுமிடமாக அல்லாமல், சமூக-பொருளிய-பண்பாட்டு நிறுவனமாகவே கோயில் பார்க்கப்பட்டது என்பதை இவையெல்லாம் உறுதிப்படுத்துகின்றன.

இது மேலும் ஆழமான ஆய்வுக்குரியது என்றாலும், எளிதில் ஒதுக்கிப் புறக்கணித்துவிடக் கூடியதன்று என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

**யாரிடமிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டன?**

தம் நுகர்வுக்கு உற்பத்தி என்ற நிலையிலிருந்து விற்பனைக்கு உற்பத்தி என்ற நிலை ஏற்பட்டதையொட்டிய சமூக அசைவியக்கங்களே கோயில்களின் உருவாக்கத்திற்குக் காரணிகளாக அமைந்தன. இவற்றில், ஒரு சிலரிடம் நிலம் குவிக்கப்பட்டதும், சிறு உழவர்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டதும் மைய நிகழ்வுகளாக அமைகின்றன. நிலங்கள் எடுக்கப்பட்டனவா, பறிக்கப்பட்டனவா, கொடுக்கப்பட்டனவா என்ற ஐயங்கள் இதில் எழுப்பப்படுகின்றன.

வளமிக்க விளைநிலங்களே கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் கொடைகளாக வழங்கப்பட்டிருக்கின்றன. இதன்றி, அதிகாரிகள், படைத்தலைவர்கள், போன்றோருக்குக் கொடுக்கப்பட்ட பணிசெய்காணிகளும் இருந்தன. இந்த நிலங்கள் எங்கிருந்து வந்தன, கொடை வழங்கியபோது யாரிடம் இருந்தன என்பதைப் பார்க்கவேண்டும். தொடக்கக் கட்டத்தில், ஊதியத்துக்குப் பணியமர்த்தி, மன்னர்களோ நிலத்தலைவர்களோ, காட்டு நிலங்களைப் பண்படுத்தியதாகத் தெரியவில்லை. இப்படி அவர்கள் பண்படுத்தியிருந்தாலும், குத்தகை உழவு முறை இல்லாத அந்த நாள்களில், பண்படுத்தப்பட்ட நிலங்களில் பயிர் செய்தற்கான வாய்ப்புகளே இருந்திருக்காது. தேவைக்கும் பயன்பாட்டுக்கும் மிகுதியான நிலங்களைப் பண்படுத்தியிருக்கக்கூடிய எண்ணமே அப்போது எழுந்திருக்காது. எனவே, பண்படுத்திய பிறகு பயிரிடாமல் தனியாக வைக்கப்பட்டிருந்த நிலங்கள் என்று எதுவும் யாரிடமும் அப்போது இருந்திருக்கவே முடியாது.

மாறாக, தங்கள் தேவைகளையொட்டித் தமது நுகழ்வுக்காக இனக்குழுக்கள்–குடிகள்தாம் கூட்டு முயற்சிகளினால் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டு வந்தார்கள். இதனால், விளைநிலங்கள் அவற்றைப் பண்படுத்திய இனக்குழுக்கள்–குடிகளின் கூட்டுப் பயன்பாட்டிலேயே தொடர்ந்து இருந்து வந்தன. வேளாண் வளர்ச்சியினால், இனக்குழு–குடிகளின் கூட்டு வாழ்க்கை முறை சிதைவுற்றாலும், நிலங்களைக் கூட்டாகப் பயிர் செய்தது தொடர்ந்துவந்தது. இல்ல உறவுகளும் தனிச் சொத்துரிமையும் ஏற்பட்டபோதுதான், பயிரிட்டு வந்தவர்களிடையே நிலங்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன. எப்படியிருப்பினும், நிலங்கள் கூட்டாகவோ, தனிப்பட்டோ அவற்றைப் பண்படுத்தியவர்களின் தலைமுறையினரால் தொடர்ந்து பயிரிடப்பட்டு வந்தன. இந்த நிலங்கள்தாம் பறிக்கப்பட்டு அல்லது எடுக்கப்பட்டு பிராமணர், கோயில், அதிகாரிகள், படைத்தலைவர் போன்றோருக்கு வழங்கப்பட்டன.



தலைமுறைகளாக, வழிவழியாகப் பயிரிட்டு வந்தவர்களையன்றி வேறு யாரிடமும் நிலங்கள் அப்போது இருந்திருக்க முடியாது. ஒரு சில நிலத்தலைவர்களிடம் சற்று மிகுதியாக நிலங்கள் இருந்திருக்கலாம். ஆனால், அத்தகையோரிடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டமைக்குச் சான்றுகள் எதுவுமில்லை. ஆகவே, தலைமுறைகளாகத் தம் இல்ல உறுப்பினர்களைக் கொண்டு தம் நுகர்வுக்காகப் பயிரிட்டு வந்த சிறு உழவர்களிடமிருந்துதான் நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

யாருக்கும் எதுவும் உடைமையாக இல்லாத இனக்குழுச் சமூக காலத்தில், நிலத்தை யார் பண்படுத்துகிறார்களோ அவர்கள் அந்த நிலத்தில் பயிரிடும் உரிமை பெறுகிறார்கள். அவர்களுக்கு அந்த நிலம் உடையது என்றும் கூறலாம். உடைமை என்ற பொருள் அன்றைய சமூக-பொருளிய உறவுகளில் இல்லை என்பதால், பயிரிடும் உரிமை என்ற சொற்கள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த உரிமை உலகமெங்குமுள்ள இனக்குழுச் சமூகங்களிடையே பொது வழமையாக இருந்தது. ஆனால், இத்தகைய உரிமைகளைப் பறிக்கவே, நிலங்கள் யாவும் மன்னனுக்கு உரியது, அதனால் மன்னன் விரும்பியபோது நிலங்களை எடுத்து யாருக்கு வேண்டுமானாலும் வழங்கலாம் என்ற புதிய தத்துவம் உருவாக்கப்பட்டது. அன்று, ஆட்சி எல்லை என்று எடுத்துக்கொண்டால்கூட, நில எல்லைகள் எதுவும் வரையப்பட்டிருக்கவில்லை. மக்களுடைய வாழிடங்களைக் கைப்பற்றுவதும், அந்த மக்களின் விளைநிலங்களில் வரி என்ற பெயரில் பங்கு பெறுவதும்தான் போர் முறையாக இருந்தது. நில எல்லையே இல்லாத காலத்தில், விளைநிலங்கள் யாவும் மன்னனுக்கு உரியன என்ற பொதுத் தத்துவம் பொருத்தமாகவும் இருந்திருக்க முடியாது. ஆகவே, வழிமுறையாக நிலத்தில் உரிமை கொண்டு பயிரிட்டுவந்த உழவர்களிடமிருந்தே நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பது உறுதியாகிறது.

முன்னர் மன்னன் யாருக்காவது கொடை வழங்கியிருந்து, அவ்வாறு நிலம் பெற்றவர்கள் பயிரிட்டு வந்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அப்போது குத்தகை யாருக்குச் சென்றது என்ற வினா எழும். இதற்கு விடை காணமுடியாது. ஒரு முறை கொடையளித்த பொருளைத் திருப்பிப் பெறுவதும் வழமையன்று. அரசனுக்கு எதிராகக் குற்றம் புரிந்திருந்தால்தான், கொடுக்கப்பட்ட கொடைகள் பறிக்கப்படும். அப்போதுகூட, இன்ன குற்றம் செய்தமைக்காக நிலங்கள் பறிக்கப்பட்டு இன்னாருக்குத் தரப்பட்டன என்ற விவரங்கள் பதியப்படும். ஆனால், பிராமணர், கோயில் போன்ற கொடைகளில் அத்தகைய விவரங்கள் பதியப்படவில்லை.

முன்னர் எளிய மக்களுக்குக் கொடையளித்ததாக ஒப்புக் கொண்டு பார்த்தால், அதை எடுத்து அல்லது பறித்து இன்னொரு உழைப்பாளிக்கு அல்லது உழவனுக்கு வழங்காமல், பிராமண ருக்கும் கோயிலுக்கும் மட்டுமே ஏன் கொடையளித்திருக்க வேண்டும்? 'குடிநீக்கா' முறையில், முன்னைய கொடையாளர் களை ஏன் குத்தகையாளர்களாகத் தகுதிக் குறைவு செய்ய வேண்டும்? அல்லது 'குடிநீக்கி' ஏன் கூலி உழைப்பாளர்களாக மாற்றவேண்டும்?

பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் மன்னரால் கொடை யளிக்கப்பட்ட விளைநிலங்கள், கொடையளிக்கப்படும் முன் யாரிடம் இருந்தன என்ற வினாவுக்கு வேறு வகையில் விடை காணமுடியவில்லை; மாறுபட்ட விளக்கமும் கூறமுடியவில்லை. யாரோ சிலர் பயிர் செய்துவந்த நிலங்கள் என்பதும், உற்பத்தி நிலங்கள் என்பதும் மட்டும் உறுதியாகத் தெரிகின்றது. மன்னர் முன்னர் கொடையளித்தவை, குத்தகை முறையில் பயிர் செய்யப் பட்டு வந்தவை என்பதெல்லாம் பொருத்தமாகத் தெரியவில்லை. இறுதியில், சிறுஉழவர்கள் தனித்தோ, கூட்டாகவோ தம் நுகர்வுக்காகத் தம் இல்லத்தினருடன் காலம்காலமாக வழிமுறை உரிமையில் பயிரிட்டுவந்த விளைநிலங்களே எடுக்கப்பட்டு பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் கொடையளிக்கப்பட்டன என்ற விளக்கமே ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமைந்துள்ளது. அதிகாரிகள், படைத்தலைவர்கள் போன்றவர்களுக்கான பணி செய்காணிகளும் இத்தகைய விளைநிலங்களேயாகும்.

**பிராமணர் நிலை**

பிராமணர்களுக்கான குடியேற்றங்களும் கொடைகளும் அவர்களது இருப்பும் இடைக் காலக் கோயில்களைப் பற்றிய ஆய்வில் நேரடியாகத் தொடர்பில்லாதவை போலத் தோன்றி னாலும், கோயில்களோடும் நிலவுடைமையாளரோடும் ஒன்றிக்



கிடந்த அவர்களைப் பற்றிய அடிப்படையான சில விளக்கங் களை இந்நூல் கொண்டுள்ளது. இவற்றைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்:

1 சங்க காலத்தில் பிராமணர் செய்த வேள்விகளுக்கு ஒரு சில மன்னர்கள் துணை நின்றிருந்தாலும், மன்னர்களது நம் பிக்கை முறைகளை அவை மாற்றிவிடவில்லை; மக்களும் அவற்றில் பங்கெடுக்கவில்லை.

2 பிராமணர் சமக்கிருதத்தைப் படித்தும் வேதங்களை ஓதியும் ஒரு சில வேள்விகளை நடத்தியும் வாழ்ந்தார்கள் என்றாலும், அன்றாட வாழ்க்கையில் தமிழ் மொழியையே பேசினர்; தமிழைக் கொண்டே வருவாய் தேடி வாழ்ந்தனர். சங்க காலப் புலவர் வாழ்க்கை முறை இதற்கான எடுத்துக் காட்டு.

3 வழிபடுமிடங்களில் தங்கள் முறைமைகளில் அவர்கள் வழிபாடுகளைச் செய்துவந்தார்கள். பிறருக்கு வழிபாடு களை நடத்தித் தந்தவர்களாகவோ, வழிபடுமிடங்களைச் சார்ந்து வாழ்ந்தவர்களாகவோ சங்க காலத்தையொட்டி இருக்கவில்லை. தமிழ் மக்கள், தங்கள் முறைமை களிலேயே பிராமணர் உதவியின்றி வழிபாடுகளைச் செய்துவந்தார்கள்.

4 வேளாண் வளர்ச்சியின் விளைவாகக் கோயில்கள் உருவாகி, அவற்றுக்கு நிலம் போன்ற நிலைத்த உடைமைகள் உண்டான பின்னர்தான், பிராமணர் கோயில்களோடு இணைந்து, அவற்றின்வழிக் கிடைக்கின்ற பயன்களைத் துய்க்குமாறு முழுக்காலக் கோயில் பணியாளர்களா னார்கள்.

5 வேளாண் விரிவாக்கம் ஏற்படும் முன்னர், பிராமணர் சிலர் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தாலும், அவர்கள் இங்கு குடியேற் றப்படவில்லை. வேளாண் விரிவாக்கத்திற்குப் பின்னரே விளைநிலப் பகுதிகளில் குடியமர்த்தல்கள் நிகழ்ந் திருக்கின்றன.

6 விளைபயன்களைத் துய்க்குமாறு பிராமணர்களுக்கு நிலங்கள் கொடையளிக்கப்பட்டிருந்தாலும், அவை பெரும்பாலும் முழு உரிமைகளுடன் வழங்கப்படவில்லை. விளைபயன்களின் பங்குகளைப் பெற்றுக்கொள்ளத் தக்க வகையில் மட்டுமே அவை இருந்தன.

7 குறிப்பிட்ட ஒரு நிலத்திலிருந்து கிடைக்கும் விளை பயனைக் குறிப்பிட்ட ஒரு பிராமணர் நிலையாகப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் இந்தக் கொடை

பெரிதும் அமையவில்லை. குடவோலை முறையில் சுழற்சியாகக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை நிலங்கள் மாற்றித் தரப்பட்டன. சுழற்சி முறைக்கு இரண்டு காரணிகள் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நிலத்தில் பங்குரிமையோ வேறு உரிமைகளோ கொண்டாட வாய்ப்பளிக்கக்கூடாது என்பது முதலாவதாகும். நிலங்களுக்கேற்ப விளைச்சல் வேறுபடும்போது, சிலர் மிகு அளவும் சிலர் குறை அளவும் பெறுவதைத் தவிர்க்கலாம் என்பது இரண்டாவதாகும். சில இடங்களில் கொடை நிலங்கள் யாவற்றிலும் கிடைத்த கூட்டு விளைவில் பங்குகள் மட்டுமே பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

8 சிறு உழவர்களிடமிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டுப் பிராணர்களுக்கு வழங்கப்பட்டதால், எதிர்ப்புணர்வுகளும் கசப்புணர்வுகளும் இருந்துவந்தன. அத்துடன், அவர்கள் உள்ளூரில் வரவேற்கப்படவுமில்லை.

9 பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகள், முழு உரிமை கொண்டனவாக இல்லை என்பதாலும், சிறு உழவர்களிடமிருந்து பறிக்கப்பட்டதால் எதிர்ப்புணர்வு தோன்றியிருந்ததாலும், மன்னர்களால் கண்காணிக்கப்பட்டன; மேற்பார்வை செய்யப்பட்டன. எதிர்ப்புணர்வுகளைக் குறைப்பதற்கும் அடக்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் வேளாள அதிகாரிகளே பெரிதும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டனர். பிராமணரின் சபைக் கூட்டங்களிலும் வேளாள அதிகாரிகள் கலந்து கொண்டு வழிப்படுத்தினர்.

10 நிலவுடைமையாளர்களாகப் பெரிதும் இருந்த வேளாளருக்கு அடங்கியவர்களாகவும் அவர்களுக்கு ஊழியம் செய்தவர்களாகவுமே பிராமணர் இருந்தனர்.

11 வேதம் ஓதவும் வேறு சில காரணிகளுக்காகவும் விளைநிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டிருந்தாலும், கோயில்களின் மேலாண்மை பிராமணர்களிடம் இருக்கவில்லை. வேளாளர்களே அவற்றைக் கொண்டிருந்தார்கள்.

12 வேளாளர் நலன்களைக் காக்கும் ஒரு சார்பு நீதியினை உருவாக்கப் பிராமணர் துணை பயன்பட்டிருக்கலாம். ஆனாலும், உடைமைப் பிரிவினர் நலன்களைக் காக்கும் இத்தகைய முறைமைகளை உருவாக்கித் தரும் அறிவுசார் திறத்தினர் அந்தந்தச் சமூக அமைப்பிலிருந்தே தோன்றுவார்கள் என்பதையும் இங்கு மறந்துவிடக்கூடாது.



13 மனப்பாடம் செய்ததாகவும் காலத்துக்கு ஒவ்வாத சமக்கிருத நூலறிவு கொண்டதாகவுமே பிராமணரின் கல்வி என்பது பெரிதும் இருந்துவந்தது. சமூக உற்பத்தி, அறிவியல், தொழில்நுட்பம் என்பன போன்ற அடிப்படைகளைக் கற்பதாகவோ, கற்றுத் தருவதாகவோ அவர்களது கல்வி அமையவில்லை.

14 அப்படி ஏதாவது கற்றிருந்ததாக வைத்துக்கொண்டாலும், அவற்றை அவர்கள் பயன்படுத்தவில்லை. பிராமணர் அல்லாதாருக்கு அவர்கள் கற்றுத் தரவில்லை என்பதால், அவர்களது கல்வி நடைமுறைக்கு வராமல், சமூகப் பயன்பாடு எதுவும் இல்லாமல் போய்விட்டது.

15 கல்வி, ஆட்சியமைப்பு, கலை, இலக்கியம், தத்துவம், வணிகம், அறிவியல், தொழில்நுட்பம் என எதிலும் பிராமணர் இடைக் காலத்தில் முன்நிற்கவில்லை; சமூகத்தைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லவுமில்லை.

16 வேளாண் உற்பத்தி, உற்பத்திக் கருவிகள் செய்தல், கட்டட உருவாக்கம், போர்க்கருவிகளின் உற்பத்தி என்பன போன்ற சமூக உற்பத்தி எதிலும் பிராமணரின் பங்களிப்பு இருக்கவில்லை.

17 தமிழ்க் கல்வி கற்பிக்க ஊர்கள்தோறும் பள்ளிகள் இருந்தன. ஆனால், பல ஊர்களுக்கு ஒரு சமக்கிருதப் பள்ளி மட்டுமே இருந்ததால், அது உறைவிடப் பள்ளியாகவும் மன்னனது உதவிகளை எதிர்பார்த்ததாகவும் இருந்தது.

18 பக்தி இயக்கத்தையும் சைவ-வைணவ நம்பிக்கைகளையும் ஆரிய-வேத முறைமைகளாகத் திருப்ப பிராமணர் மேற்கொண்ட முயற்சிகள், தொடக்கத்திலேயே வெற்றி பெறவில்லை. ஓர் அளவுக்குமேல் முயற்சிகளைத் தொடருமளவுக்கு அவர்கள் சமூக-பொருளிய-பண்பாட்டு வாய்ப்புகளைப் பெற்றிருக்கவில்லை.

19 சங்க காலத்தைப் போன்று, தங்களது தனிப்பட்ட வழிபாடுகளுக்குக் கோயிலில் வடமொழியைப் பிராமணர் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், பொது வழிபாட்டுக்கும், வேளாளர் போன்றவர்களுக்கு வழிபாடுகளை நடத்தித் தந்தபோதும் கோயில்களில் தமிழே வழிபடு மொழியாக இருந்தது.

20 பக்தி இயக்கத்தில் பங்குகொண்ட பிராமண ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழில் பாடி இறைவனுடன் 'கலந்தார்'களேயன்றி, சமக்கிருதத்தில் பாடி இறைவனிடம் 'தொடர்பு' கொள்ள முயலவில்லை.

21 பிராமணர்களின் சதுர்வேதிமங்கலச் சபைகளில் வேத மந்திர பிராமண விவாதங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஏனெனில், அதில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேத மந்திர பிராமண அறிவு வேண்டியிருக்கவில்லை. அவற்றைக் காதால் கேட்டிருந்த பயன் பெற்றிருந்தால் போதும். மேலும், வேளாண் உற்பத்தி தொடர்பான உள்ளாட்சிப் பணிகளைத்தான் சபை மேற்கொண் டிருந்ததேயன்றி, வேத விவாதங்கள் நடத்துவதையன்று.

22 வேத அறிவு என்பது, அவற்றை மனப்பாடம் செய்ததே யாகும். ஏனெனில், அக்காலத்தில் வேதங்களின் பொருள் கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன், பிராமணர் கல்வியில் ஒரு சிலரையன்றி மற்றவர்கள் மந்திர பிராமணங் களையும் பிற சமக்கிருத நூல்களையும் *பாராயணம்* செய்து ஒப்புவிக்கத்தான் கற்றுக்கொண்டிருந்தார்கள்; பொருள் புரிந்து கற்கவில்லை.

23 பிராமணர் பரவலாகச் சமக்கிருதக் கல்வியறிவு பெற்றிருந் தார்கள் என்று கருத முடியாது. அப்படிக் கற்றிருந்தால், அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையில் பேசுகின்ற தாய்மொழியை மறந்திருக்கமாட்டார்கள்–துறந்திருக்க மாட்டார்கள்.

24 பிராமணர் அல்லாதார் ஊர்களை இணைக்கவும் கட்டுப்படுத்தவும் எடுத்துக்காட்டுகளாக அமையவும் பிராமணர் குடியமர்த்தல்கள் பயன்பட்டன என்பது தவறானதாகும். ஏனெனில், பிராமணக் கொடைகள்தாம் கண்காணிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட்டிருக் கின்றன. உள்ளூருக்குப் புதியவர்களாகவும் வேளாண் தொழில் செய்யாதவர்களாகவும் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் இருந்த பிராமணர்கள் மற்ற ஊர்களைக் கட்டுப்படுத்தி, எடுத்துக்காட்டுகளாக அமைந்திருந்ததற்குச் சான்றுகளே இல்லை.

25 பிராமணர் வேளாண் நுட்பம் தெரிந்தவர் என்பதால் குடியமர்த்தப்படவில்லை. ஏனெனில், அவர்கள் குடியமர்த் தப்பட்டவுடன் வேளாண்மையை மேற்கொள்ளவில்லை.

26 சோழ நாட்டு வளமான விளைநிலங்களின் பெரும்பகுதி, பிராமணர்களுக்குக் கொடையளிக்கப்பட்டிருந்தது என்பது உண்மைக்கு மாறானதாகும். சோழநாட்டுக் கல்வெட்டுக்களில் கிடைத்த 1300 ஊர்ப் பெயர்களை வைத்துப் பார்க்கும்போது, 250 ஊர்களே பிராமண ஊர்களாக இருந்திருக்கின்றன. இது 19.25% மட்டுமே. கோயில் மற்றும் பிராமணர் கொடை தொடர்பான பதிவுகளே கல்வெட்டுக்களில் பெரிதும் இருக்கின்றன. எனவே, கோயில் கல்வெட்டுக்களில் பதியப்படாத வேளாள ஊர்களையும் கணக்கில் கொண்டால், இந்த அளவு இன்னும் குறைவாகவே இருக்கும்.[3]



27 அரசு அதிகாரிகள், படைத்தலைவர்கள் போன்ற உயர் பதவிகளில் இருந்த பிராமணரின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது.[4]

28 பிராமணர்களால் வேறு வகையான பண்பாட்டுத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

29 தமிழ்ச் சமூகம் ஆரியவயப்படுதற்கு மாறாக, பிராமணர்கள் தமிழ்நிலைப்பட்டிருந்த நிலை இங்கு ஏற்பட்டிருந்தது.

30 தமிழ்ச் சூழலில் பிராமணர் செல்வாக்கும் பங்களிப்பும் வரலாற்றாளர்களால் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

**பிராமணர் இருப்பின் காரணிகள்**

இத்தகைய நிலைமைகளில், பிராமணர்களின் கல்வியறிவு அல்லது அறிவுப் பங்களிப்பு அன்றைய நில உற்பத்தியிலோ, ஆட்சி அலுவல்களிலோ, வேறு வகையிலோ சிறப்பு வகையில் பயன்படாதிருந்தபோதிலும், மன்னர்கள் பல ஊர்களை வழங்கி அவர்களை ஏன் குடியமர்த்தினார்கள் என்பது ஆழமாக ஆய்வு செய்யப்படவேண்டும். வேதங்கள் ஓதியதற்கோ, மந்திரப் பிராமணங்கள் தெரிந்ததற்கோ மட்டும் அவர்கள் ஆயிரக் கணக்கில் அழைத்து வரப்பட்டார்கள் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. வேதங்கள் ஓதுவதும், மந்திரப் பிராமணங் களை ஒப்பிப்பதும் நன்மைகளைத் தரும் என்ற மூட நம்பிக்கை யினை மன்னர்களிடம் உண்டாக்கியதில் பிராமணர் வெற்றி பெற்றிருக்கலாம். செல்வமும் வளமும் உள்ளவர்கள், தங்களுக்கு வெற்றி கிடைக்குமெனில், நம்புகிறார்களோ இல்லையோ, இதுவும் இருக்கட்டுமே என்றும் இது பயன் தந்தால் நல்லதுதானே என்றும் கருதி பூசைகளையும் வேள்விகளையும் செய்வது இன்றுகூட இயற்கையாக இருக்கிறது. ஆனால், இதற்காக இவ்வளவு பெருந்தொகையினரான பிராமணர்களை அழைத்து வந்திருப்பார்களா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டி யுள்ளது. சங்க காலத்தில் பிராமணர் நுழைவு அழைத்துவரப் பட்டதால் ஏற்படவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். முதலில் வந்தார்கள், பின்னரே அழைத்து வரப்பட் டார்கள்.

நிலவுடைமைக்குச் சார்பான நீதி நெறிகளை உருவாக்கித் தந்ததால் பிராமணர் ஏற்கப்பட்டனர் என்பதும் முழு உண்மை

யாக இருக்க முடியாது. உடைமை அமைப்பின் நலன்களுக்கான அறமுறைகளையும் நீதிநெறிகளையும் உருவாக்கிக்கொள்ள, அந்தச் சமூக அமைப்பிலிருந்தே அறிவுத்துறையினர் தோன்றுவது உலகம் முழுவதும் இருந்து வந்திருக்கிறது. இது பிராமணரின் தனித்திறமையாகக் கொள்ளக்கூடியதன்று.

பிராமணர்களது இருப்பின் தேவையை அல்லது பயனை எடுத்துக்காட்டத் தக்கதான, நியாயப்படுத்தத் தக்கதான சான்றுகள் எதுவும் இலக்கியங்களிலோ, கல்வெட்டுக்களிலோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை. பிராமணர்களையன்றி வேறு பிறரால் செய்ய முடியாது என்று கூறக்கூடியவாறான சிறப்புப் பணி எதையும் அவர்கள் மேற்கொண்டிருந்ததாகவும் தெரியவில்லை. பிற வேளாள உடைமையாளர்களைப் போன்றுதான் அதிகாரி, படைத்தலைவர், அரச ஊழியர் என்றவாறான அரசப் பணிகளுக்குப் பிராமணர்களும் அமர்த்தப்பட்டிருந்தார்கள். பிராமணர் என்ற தனித்தகுதியோ, அவர்கள் பெற்றிருந்ததாக நம்பப்படும் வேறு சிறப்புத் தகுதிகளோ இப்பணிகளை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. பிராமணர் பரவலாகக் குடியேற்றப்பட்ட வகைமையும், அவர்களது அன்றாட வாழ்க்கை முறைமையும், பங்களிப்பும் பயனளிக்கக் கூடியவாறு இருந்தது என்று சொல்லும்படியாகவும் தரவுகளில் விவரங்கள் இல்லை.

இங்கு வேறு ஒரு பின்னணியினையும் புறக்கணித்துவிடக் கூடாது. பொதுவாக ஓர் இனத்தினர், தாம் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு நிலப்பகுதியிலிருந்து வேறொரு நிலப்பகுதியை நோக்கி நகர்வதற்கு ஒரு சில காரணிகள் இருக்கவேண்டும். பிற நாடுகளைக் கையகப்படுத்துதல், போர்த் தொழிலை மேற்கொண்டிருத்தல், சமயத்தைப் பரப்புதல், விளைநிலங்களைத் தேடி வருதல், வறட்சியால் இடம் பெயர்தல், வாழ்ந்த இடத்திலிருந்து விரட்டப்படுதல் என்பன போன்ற எக்காரணியைக் கொண்டும் சங்க காலத்தையொட்டிப் பிராமணர்கள் தெற்கு நோக்கி வந்ததாகக் குறிப்புகளில்லை. ஒருவேளை, அவர்கள் முன்னர் குடியிருந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்டிருக்கலாம். சங்க இலக்கியங்களில், வேதம் ஓதுபவர்களாகப் பிராமணர் அறியப்பட்டிருக்கின்றனரேயன்றி, வேறு வகையில் அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்த வேதத்தைக்கூட அவர்கள் இங்கிருப்பவர்களுக்குக் கற்றுத்தர வரவில்லை. எனவே, விரட்டப்பட்டவர்களாகவே தமிழகத்தில் தொடக்கத்தில் நுழைந்திருக்க வாய்ப்புகள் மிகுதி. படையெடுத்துவந்த மோரியரும் சமயம் பரப்ப வந்த பௌத்த-சமணரும் கூறப்படுவதுபோன்று, வேதம் தெரிந்த–வேள்விகள் செய்த பிராமணரே கூறப்பட்டிருக்கின்றனர்.



வேளாண் நுட்பம் தெரிந்தவர்களாக அவர்கள் எந்த இடத்திலும் சுட்டப்படவில்லை. பின்னர் தோன்றிய கல்வெட்டுக்களிலும் வேறு வகையாகக் கூறப்படவில்லை. சங்க கால நிலைமைகளுக்கு மாறாக, பல்லவர்-சோழர் காலத்தில் எதுவும் நடந்துவிடவில்லை.

மன்னர்களது பிராமணச் சார்பினால் மட்டுமே குடியமர்த்தப்பட்டார்கள் என்று எளிதாகவும் இதைக் கருதிவிட முடியாது. மன்னர்களிடம் பிராமணச் சார்பு இருந்தது என்பதைக் கூடத் தரவுகள் காட்டவில்லை. ஆனால், பிராமணச் சார்புக்கு ஏதோ வகையினாலான காரணியும் இருந்தாகவேண்டும். நிலங்கள் கொடையளிக்கப்பட்டன என்பதே பிராமணச் சார்பை உறுதிப்படுத்திவிடாது. அப்போது, ஏன் கொடையளிக்கப்பட்டது என்ற வினா எழுவதைத் தவிர்க்க முடியாது.

அன்றைய கட்டத்தில், வேளாளரின் ஏற்பும் ஒப்புதலும் இயைபும் இல்லாமல், பிராமணர்கள் பரந்த அளவில் நிலங்களைப் பெற்றிருக்க முடியாது; நீடித்து விளைநிலப் பகுதிகளில் வாழ்ந்திருக்கவும் முடியாது; கோயில் பணிகளில் நுழைந்திருக்கவும் முடியாது.

இதற்கான சில காரணிகள் பொருந்துவதாகத் தெரியலாம்; மேலும், வேறு சில காரணிகளைக் கற்பித்துக் கொள்ளலாம். ஆனால், பரந்த அளவில் பிராமணரின் குடியமர்வுக்கு அன்றைய உடைமைப் பிரிவினரான வேளாளர்கள் ஒப்புதல் தந்தமைக்கான சமூக-பொருளிய-அரசியல்-பண்பாட்டுக் காரணிகள் எவை என்பதைக் கண்டறியவேண்டும். இதுவரை கிடைத்திருக்கின்ற தரவுகளிலிருந்து பிராமணரின் இருப்புக்கான சமூக-பொருளிய-அரசியல்-பண்பாட்டுக் காரணிகள் எதுவும் நேரிடையாகவும் தெளிவாகவும் புலப்படவில்லை என்றாலும், முறையான திட்டமிட்ட ஆய்வுகள் விளக்கங்களைத் தரலாம். ஏனெனில், பிராமணரின் இருப்பு, அன்றைய நிலவுடைமை நலன்களுக்கு ஏதோவொரு வகையில் உகந்ததாக இருந்தது என்பதையும் மனதில் கொள்ளவேண்டியுள்ளது. ஏதோவொரு காரணி என்றில்லாமல் சில காரணிகளின் இணைவாகவும் இருக்கலாம்.

**வேளாளர்**

வேளாளரைப் பொருத்தளவில், அவர்களே இடைக் காலத்தில் செல்வாக்கு மிக்க பிரிவினராக விளங்கினர். ஆட்சியமைப்பின் அதிகாரிகள், படைத்தலைவர்கள், கோயில்களையும் பிராமணரின் சபைகளையும் மேற்பார்வையிட்டோர் என யாவற்றிலும் வேளாளர்களே பெரிதும் பங்கு பெற்றிருந்தனர். உள்ளாட்சிகளையும் கோயில்களையும் வேளாளர்கள் கட்டுப்படுத்தி வந்தனர். சிறு உழவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட விளைநிலங்கள்

நேரிடையாக வேளாளரிடம் கொடையாகக் கொடுக்கப்பட வில்லை என்றாலும், கோயில்கள் வாயிலாக வேளாளர்கள் விளைவுகளை எடுத்துக்கொண்டனர்.

கோயிலின் பெயரிலும் சுரண்டலை மேற்கொள்ள முடியும் என்பதை நடைமுறைப்படுத்தி, அந்தச் சுரண்டல் முறையை அமைப்பாக மாற்றி, அதற்காகக் கோயிலை மாபெரும் நிறுவன மாக வளர்த்தெடுத்து, அதன் முழுமையான பயனையும் வலிமை யையும் வசதிகளையும் வேளாளர் துய்த்துவந்தனர்.

பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகளாக இருந்தாலும், வேறு பல நலன்களாக இருந்தாலும், உழுகுடிகளின் மேலான கடுமையாக இருந்தாலும், யாவுமே வேளாளரின் ஏற்போடுதான் நடைபெற்றிருக்க முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது. வேளாண் விரிவாக்கத்தில் வேளாளர்களுக்குப் பங்களிப்பு உண்டென்றாலும், தங்கள் நலனுக்காக, உழவுக் கருவிகளை உருவாக்கிக் கொடுத்த கைவினைஞர்களை ஊருக்குள் முடக்கி, தொழில் நுட்பப் பட்டறிவுப் பகிர்வு ஏற்படாமல் செய்த தில் வேளாளரின் பொறுப்பு மிகுதியாகும்.

**பக்தி இயக்கம் – புதிய புரிதல்கள்**

வேளாண் விரிவாக்கத்தின் உணர்வு வகையிலான வெளிப்பாடு என்று பக்தி இயக்கத்தைக் கூறலாம். பக்தி இயக்கம் குறித்துக் கீழ்க்கண்ட தவறான விளக்கங்கள் அனைத்து ஆய்வாளர்களாலும் முன் வைக்கப்படுகின்றன:

1 உழைக்கும் எளிய மக்களும் பக்தி இயக்கத்தால் ஈர்க்கப் பட்டிருந்ததால், இது மாபெரும் மக்கள் இயக்கமாக இருந்தது.
2 இதனால் மக்களை, நிலவுடைமைப் பிரிவினரால் எளிதில் ஆளுமைப்படுத்த முடிந்தது.
3 சமூக-பொருளிய ஏற்றத் தாழ்வுகள் இருப்பினும், வெவ்வேறு பிரிவினரைப் பக்தி இயக்கம் ஒருமைப் படுத்தியது.
4 இறைவன் முன் யாவரும் இணை என்ற மாயையை உருவாக்குவதில் பக்தி இயக்கம் வெற்றி பெற்றது.

இந்த முடிவுகள் யாவுமே உண்மைக்கு மாறானவை என்பது மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது:

1 உழைக்கும் மக்கள் நாட்டார் கடவுளர்களையே தொடர்ந்து வழிபட்டு வந்தனர். சைவ, வைணவக் கோயில்களில் அவர்கள் ஏற்கப்படவுமில்லை, வழிபடவு



மில்லை. இந்த நிலையில் அவர்கள் சைவ, வைணவத்தின் பக்தி இயக்கத்தில் பங்கு கொண்டார்கள் என்பது பொருந்துவதாக இல்லை.
2 எளிய மக்களை வழிபாட்டுக்குக்கூட ஈர்க்க முடியாத பக்தி இயக்கம், அதில் நம்பிக்கையே கொண்டிராதவர்களை ஆளுமைப்படுத்த முடிந்தது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை.
3 சமூக-பொருளிய முரண்கள் தொடர்ந்திருந்தபோது, அதுவும் இறைவன் பெயராலேயே நிலங்கள் பறிக்கப் படுவதும் உழுகுடிகள் நெருக்கப்படுவதும் நடந்து கொண்டிருந்தபோது, நிலங்களை இழந்தவர்களையும் அடைந்தவர்களையும் பக்தி இயக்கம் ஒருமைப்படுத்தியது என்பது நடந்திருக்க முடியாது.
4 நடைமுறை வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் கொண்ட சமூகத்தில், இறைவனை வழிபடுவதில்கூட வேறுபாடுகள் காட்டிய அமைப்பில், ஆதிக்கப் போக்குகள் செல்வாக்குச் செலுத்திய பக்தி இயக்கம் முன்வைத்த ‘இறைவன் முன் அனைவரும் இணை’ என்ற மாயையில்–மயக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களே விழுந்திருக்கமாட்டார்கள்.
5 நாயன்மார் மற்றும் ஆழ்வார்களில் கீழ்த்தட்டுப் பிரிவினர் சிலர் இருந்தாலும், அவர்கள் தனியராக வந்தவர்களே யன்றித் தங்களுடன் தங்கள் சாதியினரையும் அழைத்து வந்தவரல்லர்.
6 எனவே, பக்தி இயக்கம் நிலவுடைமை கொண்டவர்களின் இயக்கமாக இருந்ததேயன்றி, பிற மக்களின் பங்கேற்பைப் பெறவில்லை.

**மேனிலையாக்கம்**

சமக்கிருதவயவாக்கம், ஆரியவயவாக்கம் என்றெல்லாம் அழைக்கப்படும் மேனிலையாக்கமும் தவறான புரிதல்களையே கொண்டுள்ளது. தமிழ்ச் சமூகமே ஆரியவயப்பட்டிருந்தது என்ற மயக்கத்தை உண்டாக்கக்கூடியவாறு வருணப் போக்குக் கொண்டவர்கள் இதை முன்னிலைப்படுத்தியுள்ளனர். முற்போக் காளர்களும் உண்மை நிலையறியாது உடன்பட்டிருந்த இக் கருத்துநிலை முழுமையாக விவரிக்கப்பட்டுத் திருத்தப் பெற்றுள்ளது. விசயநகர காலத்துக்கு முன்னைய நிலையினை, பின்னைய நிலைகளோடு பொருத்தியதன் விளைவே தவறான புரிதல்கள் என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

தங்கள் தாய் மொழியாகக் கருதும் சமக்கிருதத்தை முழுமையாகக் கைவிட்டு, தமிழைத் தழுவிக்கொண்டு வாழ்ந்த

பிராமணர்கள், தமிழகத்தை ஆரியவயப்படுத்தியிருந்தார்கள் என்பது ஏற்கும்படியாக இல்லை. அன்றைய தமிழ்நாட்டில், வாழ்க்கைப் போக்கிலும் வழிபாட்டு முறையிலும் பண்பாட்டு நிலையிலும் மொழி அளவிலும் வேறு வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்த ஆரியத்தால் முடியவில்லை.

ஆரியக் கடவுளர்களை, நாட்டார் கடவுளர்களோடு இணைத்தபோதுகூட தமிழ்க் கடவுளர்களாகவே இனங்காண வேண்டியிருந்தது. இந்த இணைப்பு முயற்சிகள்கூட, நில உற்பத்திப் பிரிவினரின் படிநிலை வளர்ச்சியினால்தான் ஏற்பட்டது என்று கூறவேண்டும். புதிய வேளாளர் நாட்டார் கடவுளரையும் மேனிலைப்படுத்திய கடவுளரையும் இணையாக வழிபட்டு வந்ததால், இக்கடவுளர்களின் இணைப்பும் இன்றியமை யாததாகிவிட்டது.

கல்வி, கலை, இலக்கியம், தத்துவம், ஆட்சியமைப்பு, வணிகம், அறிவியல், தொழில்நுட்பம் என்ற பல்வேறு துறை களிலும் பிராமணர் அல்லாதார் தலைசிறந்து விளங்கினார்கள் என்பதே தமிழ் அறிவுமொழியாகவும் பயன்பாட்டு மொழியாக வும் அமைந்திருந்ததை உறுதிப்படுத்துகிறது. இந்தத் துறைகளின் அறிவு சமக்கிருத மொழியில் மட்டும்தான் இருந்தது என்ற நிலை இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால், சமக்கிருத மொழியை அறியாததால், தமிழர்கள் இத்துறைகளில் தேர்ந்தவர்களாக விளங்கியிருக்க முடியாது. அத்துடன், சமக்கிருதம் அறிந்த பிராமணர் மட்டுமே இத்துறைகளில் ஈடுபட்டிருக்கமுடியும். இந்த இரண்டுமே இங்கு நடைமுறைப்படவில்லை. மாறாக, தமிழ் தான் அறிவுமொழியாக அமைந்து, மக்களுடைய பங்களிப்பைப் பெற்றது. தமிழ் கற்றதன் வழியாகவே பிராமணர் பல்வேறு துறை களில் ஈடுபட முடிந்தது.

தமிழ்நாட்டினர் ஆரியநிலைப்பட்டிருந்தார்கள் என்பதை விட, பிராமணர் தமிழ்நிலைப்பட்டிருந்தார்கள் என்று கூறுவது தான் அன்று நிலவிய சூழ்நிலைகளுக்கு மிகப் பொருந்துவதாகும்.

ஆரியப் போக்குகள் சில ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், அவை ஆரியவய வாக்கத்தின் விளைவுகளால் அல்ல. நிலவுடைமை நலன்களுக்கு வேண்டிய போக்குகள் எங்கிருந்தாலும் எடுத்துக்கொள்ளப் பட்டன, ஏற்றுக்கொள்ளப்பட்டன. நிலவுடைமை நலன்களுக்கு உதவக்கூடியதாக இருந்த அளவில் மட்டுமே ஆரியப் போக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, சாதி முறைகளைக் கூறலாம். இதில்கூட, நான்கு வகை வருணப் பாகுபாடுகள் இங்கு புறக்கணிக்கப்பட்டன.



**தரவுகளாகப் பக்தி இலக்கியங்கள்**

பக்தி இலக்கியங்களான *திருமுறைகள்*, *நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*, *பெரியபுராணம்* போன்றவை பக்தி உணர்வுகளோடு பார்க்கப்படுதற்கு மேலாக, இலக்கியங்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவதைப்போல, பக்தி இலக்கியங்களைப் பாராயணப் பாடல்களாக மட்டும் பார்க்காமல், இலக்கியங் களாகவும் ஆராயவேண்டும்.[5] அப்போதுதான், அவை தரவுகள் என்ற நிலையை அடையும். அக்காலத்திய சமூக-பொருளிய-பண்பாட்டு வெளிப்பாடுகளைக் காட்டக்கூடிய தரவுகளாகவும் அவை எடுத்துக்கொள்ளப்படும்போது, மனிதர்களுக்கும் கோயில் களுக்கும் இடையே இருந்த பக்தி உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட, சமூக-பொருளிய-பண்பாட்டு உறவுகளும் வெளிப்படலாம்.

**நிலமிழந்த பிரிவினருக்கு இன்றும் கோயில் வழிபாட்டு உரிமைகள்**

இன்று மேனிலை பெற்றுள்ள பல கோயில்களில், அவற்றில் வழிபாட்டினை மேற்கொண்டிராத சில பிரிவினருக்குச் சிறப்பு வகையில் தனி உரிமைகள் வழங்கப்பட்டு வருவதைக் காணலாம். கோயில் திருவிழாவின்போது முன்னிற்றல், தேர் வடம் பிடித்தலில் முன்வாய்ப்பு, தெப்பத்திருவிழாவில் முன்னிடம், பொன்னேர் பூட்டுதல் என்பன போன்ற பல சிறப்புகள் அப்பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்கு வழிமுறையாக வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டார் கடவுளரைத் தொழும் வழமை கொண்ட இவர்களுக்கு, மேனிலை பெற்ற கோயில்களில் வழிபடும் வழமை பெரிதும் இல்லாத இவர்களுக்கு, ஏன் இத்தகைய சிறப்புச் சலுகைகள் தரப்படுகின்றன என்பது ஆய்வுக்குரியதாகும். மூன்று நிலைகளில் இதனை நோக்க முடியும்.

1 நிலம் கொண்டிருந்த பல வேளாளர்கள், நிலங்களை இழந்த பின்னர், உழுகுடிகளாகவும் ஊதியப் பணியாளர் களாகவும் மாறவேண்டியதாகிவிட்டது என்பதனை முன்னரே பார்த்தோம். இவ்வாறு நிலமிழந்த வேளாளர் கள், நிலம் கொண்டிருந்தபோது பெற்றிருந்த சில சிறப்பு களையும் வாய்ப்புகளையும், தொடர்ந்து அடையாள மாகக் கடைப்பிடித்துவருவதாக இது இருக்கவேண்டும். தங்களுக்கு இருந்த உரிமைகளை நிலைநாட்டவோ அல்லது நம்பிக்கைகளின் எச்சங்களாகவோ அவர்கள் இயல்பாகவே இத்தகைய செயல்களைத் தொடர்ந் திருக்கலாம். காலப்போக்கில் இச்செயல்கள் மரபுரிமை களைக் காட்டும் சடங்குகளாக மாறியிருக்கலாம்.

2 நாட்டார் கடவுளர்கள் மேனிலைப்படுத்தப்பட்ட பின்னர், அத்தகைய கடவுளரின் கோயில்களோடு இம்மக்கள் பிரிவினருக்குத் தொடர்பறுந்து போயிருக்கும். இருந்தாலும், முன்னைய தொடர்புகளின் அல்லது நம்பிக்கைகளின் எச்சங்களாக அந்தக் கோயில்களில் சில வழிபாட்டு முறைகளை இந்த மக்கள் பிரிவினர் தொடர்ந்திருக்க வாய்ப்புகளுண்டு. காலப்போக்கில் அவை மரபுரிமை கொண்ட சடங்குகளாக மாறியிருக்கலாம்.

3 கோயிலுக்காக நிலம் இழந்த உழவர்களுக்குக் கோயில்களில் சில சிறப்புச் சலுகைகள் போன்று இத்தகைய வாய்ப்புகள் தரப்பட்டிருக்கலாம். நிலத்திற்கு ஈடு போன்றும் மதிப்புறு சலுகை போன்றும் காட்ட ஆதிக்கப் பிரிவினர் இது போன்ற ஏமாற்று முறைகளைக் கையாண்டிருக்கலாம். ஆனால், இது வழிபாட்டு உரிமையையும் கோயில் வளத்தில் பெறுகின்ற பங்குரிமையையும் மறுத்து, சடங்காக மட்டுமே மேற்கொள்கின்ற மரபுரிமையாகவே வழங்கப்பட்டிருந்தது அல்லது மாறியிருந்தது என்பதையும் பார்க்கவேண்டும்.

எப்படியிருப்பினும், இவை கோயில் வழிபாட்டுரிமைகளை மட்டும் அடிப்படையாகக்கொண்ட சலுகைகள் அல்ல. முன்னர் இருந்த நில உரிமைகளை நிலைநாட்டக்கூடிய சான்றுகளின் ஒரு பகுதியாகவே இவற்றைக் கருதவேண்டும். அத்துடன், கோயில்களின் பெயரில் நடத்தப்பட்ட நிலப் பறிப்புகளையும் இவை உறுதிப்படுத்துகின்றன என்றே தோன்றுகிறது. இவை குறித்த விரிவான ஆய்வுகள் உண்மை நிலைமைகளைத் தெளிவுறுத்தலாம். இன்று, சமூக-பொருளிய-பண்பாட்டு நிலைகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும் சில பிரிவினரின் உண்மையான இருப்புநிலையை அறிந்துகொள்ள இந்த ஆய்வுகள் மிக உதவும் என்பதோடு, தமிழக வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் துணைபுரியும்.

**உரிமை உணர்வுகளும் இணை எண்ணங்களும்**

இன்றைய உரிமைகளும் மக்களாட்சி முறைகளும் மக்கள் அனைவரும் இணை என்ற கருத்தோட்டங்களும், அன்றைய மக்களுக்கு அறிமுகம் இல்லாதவை; எனவே, சுரண்டுகிறோம் அல்லது சுரண்டப்படுகிறோம் என்பதையெல்லாம் அறியாமல் உடைமைப் பிரிவினரும் உடைமையற்ற பிரிவினரும், தமக்குக் கிடைத்த வாழ்க்கையை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், இவையெல்லாம் இயற்கை என்ற உணர்வுகளுடன் வாழ்ந்திருக்கலாம் என்று சிலர் கூற முற்படலாம். இதனால், கோயில்வழிச் சுரண்டல் என்பதை அன்றைய நிலையில் இயற்கையாக அமைந்த இயல்பு வழியிலான முறைமை என்றுதான் பார்க்கவேண்டும் என்று அவர்கள் கூறலாம்.



உரிமைகளும் மக்களாட்சி முறைகளும் மக்கள் யாவரும் இணை என்ற கருத்தோட்டங்களும் அன்று இல்லாமல் இருந்திருக்கலாம்; ஆனால், இணைக் கோட்பாடுகளே இருக்கவில்லை என்று கூறிவிடமுடியாது. இனக்குழு வாழ்க்கையில், மக்கள் யாவரும் இணையாகவே இருந்தனர்; தேவைக்கேற்ற பங்கீடு என்ற வாழ்முறை இயல்பாகவே அமைந்திருந்தது. இத்தகைய வாழ்முறையிலிருந்து வளர்ந்து முன்னேறியதுதான் மனித இனம். ஆனால், பின்னர் வந்த உடைமை முறை இணைவை மாற்றிவிட்டது; மறைத்துவிட்டது.

சமூக-பொருளிய-பண்பாட்டு வேறுபாடுகளால் பிளவுண்டு கிடந்தாலும், மனித இனம் உரிமைகளை உணர்ந்துகொள்ளவே இல்லை என்று கூறிவிட முடியாது. மிகை வரிகளை எதிர்த்ததும், வரி கொடுக்க மறுத்ததும், மிகு மேல்வாரத்தைப் புறக்கணித்ததும், ஊரைவிட்டு வெளியேறியதும் அவ்வப்போது, எங்காவது நடைபெற்ற விலக்கான நிகழ்வுகளாக இருந்தாலும், உழைக்கும் மக்களின் உரிமை உணர்வுகளையே வெளிப்படுத்துகின்றன. இடங்கை-வலங்கைப் பிரிவினர் ஒன்றுகூடிச் செய்த முடிவுகளும் உரிமை உணர்வுகளையே குறித்துநிற்கின்றன எனலாம். இந்த உணர்வுகளைப் பலர் வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம்; வெளிப்படுத்திய சிலரும் வெற்றி பெற முடியாது போயிருக்கலாம்; ஆனால், மனத்தில் இழையோடிய உணர்வுகளை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நிலவுடைமையாளரின் வல்லாண்மை என்ற பகையை வீழ்த்த முடியாததால், உழைக்கும் மக்கள் அடங்கிக் கிடந்தனர். ஆனால், அனைவரும் ஒன்றுபட்டு, இயக்கமாகத் திரண்டால், வல்லாண்மையை வீழ்த்த முடியும் என்பதை அவர்கள் அன்றைய நிலையில் அறிந்திருக்கவில்லை. பூசலில் ஒன்றிணைந்து செயல்பட்டு, பகையை எதிர்கொள்ளத் தெரிந்திருந்த இனக்குழு வீரம் அவர்களிடம் மறைந்து போயிருந்தது. நிலைத்த வாழ்க்கை முறை இதை மாற்றிவிட்டது.

தச்சர், கொல்லர் போன்ற கைவினைஞர்களின் தேவைகளினால், கண்மாளர்களுக்குக் கிடைத்த பல உரிமைகள் கல்வெட்டுகளில் பதியப்பட்டுள்ளன. நன்மை தீமைகளுக்கு இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது, காலணி அணிவது, இல்லங்களுக்குச் சாந்து இட்டுக்கொள்வது, இல்லங்களில் வாயில்களை அமைத்துக்கொள்வது என்பன போன்ற உரிமைகள்

வழங்கப்பட்டிருக்கின்றன.[6] இவர்கள் போராட்டங்களினால்தான் இந்த உரிமைகளைப் பெற்றார்கள் என்று கூறமுடியாவிட்டாலும், மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெறக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியிருந்தன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சூழ்நிலைகள் உருவானவுடன், உரிமைகளை மறுக்க முடியவில்லை என்பதும் புலப்படுகிறது. மேலும், சில உரிமைகளை விட்டுக்கொடுத்துத்தான், நிலவுடைமை நலன்களைக் காத்துக் கொள்ள முடியும் என்ற நிலை இருந்திருக்கிறது. உழைக்கும் மக்கள் எதிர்பார்த்தது, ஊதியத்தை மட்டுமன்று, சமூக உரிமைகளையும்தான் என்பதை இந்நிகழ்வுகள் காட்டுகின்றன. உரிமை உணர்வுகள், இணை எண்ணங்கள் போன்றன மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தன என்பது உறுதியாகிறது. உழைக்கும் மக்கள் வல்லாண்மையால் அடக்கப்பட்டுக் கிடந்தார்கள் என்றுதான் இதைக் கூறமுடியுமேயன்றி, அடங்கி வாழ்ந்ததை இயற்கையாக, இயல்பாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்று மதிப்பிட்டுவிடக்கூடாது.

சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயிலின் சமூக-பொருளிய-பண்பாட்டுச் செயல்பாடுகளை மதிப்பிடும்போது இவை யாவற்றையும் இயைபுடன் இணைத்துக்கொள்ள வேண்டும்.

**நிறைவுரை**

நிறைவு இயலான, இந்தத் தொகுப்புரை என்பது இந்நூலில் கூறப்பட்டுள்ள விவரங்களின் தொகுப்பு அன்று; கூறப்பட்டுள்ள விவரங்களை மேலும் புரிந்துகொள்வதற்கான இணைப்புரையாகவே இது அமைகின்றது.

இந்த நூலில், ஒரு சில பொதுப் போக்குகளே விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொதுப் போக்குகளின் புரிதல்களோடு, கோயிலின் சமூக-பொருளிய-பண்பாட்டுக் கூறுகளை மேலும் ஆய்வுக்குட்படுத்தும்போது, விளக்கங்கள் பெறவேண்டிய வேறு சில போக்குகளும் தெளிவு பெறும். புரிதல்கள் எப்போதுமே முடிவுக்கு வந்துவிடுவதில்லை; அவை மேலும் பல புரிதல்களுக்கு அடுத்தடுத்து வாய்ப்புகளேற்படுத்துகின்றன.

கோயில் போன்ற பொது நிறுவனங்கள்கூட, எப்படி மனிதனை மனிதன் அடக்கியாளப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது வியப்பைத் தரலாம். ஆனால், காலந்தோறும் ஆளும் வல்லரசுகள், தங்கள் நலன்களுக்காக இது போன்ற நிறுவனங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அல்லது தேவைக்கு ஏற்றதாக ஒன்றை உருவாக்கிக்கொள்ளும்.



கோயில் தொடர்பான ஆய்வுகளில், இரண்டு வெவ்வேறு கூறுகளை மனத்தில் கொள்ளவேண்டும்.

கோயில் என்ற மாபெரும் நிறுவனம் நம்மை வியக்க வைக்கின்றது என்பதாலேயே, அதைப் புரிந்துகொள்ளாமல் விட்டுவிடக்கூடாது. கோயில் என்ற நிறுவனத்தைப் புரிந்து கொண்டதாலேயே, அதன் கலை மேன்மையைக் குறைத்தும் மதிப்பிட்டுவிடக்கூடாது.

# குறிப்புகள்

*சுருக்க விளக்கம்: கஆஅ - கல்வெட்டு ஆண்டு அறிக்கை;*
*தெஇ - தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்; எஇ - எபிகிராபிகா இன்டிகா.*

## இயல் 1
## முன்னோட்டம்

1. 'கோயில் பொருளாதாரத்தில் அரசின் பங்கு', *செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு*, வரலாற்றுப் பேரவை, சென்னை, 1978, ப. 128.
2. 'பிற்காலச் சோழர் காலத்தில் கோயில் பொருளாதாரமும் அரசின் மேலாதிக்கமும்', *தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள் (பேராசிரியர் நா. வானமாமலையின் மணி விழா மலர்)*, பாளையங்கோட்டை, 1978, ப. 146.
3. *மேலது*, ப. 141.

## இயல் 2
## கோயில் ஒரு நிறுவனம்

1. *கஆஅ* 1911 : 317; 1911 : 368; *தெக* 3 : 28.
2. *தெக* 3 : 31.
3. *கஆஅ* 1912 : 199.
4. *கஆஅ* 1911 : 369; 1911 : 365; *தெக* 7: 543.
5. *கஆஅ* 1912 : 165.
6. *கஆஅ* 1902 : 540 (*தெக* 8 : 131).
7. *கஆஅ* 1912 : 236; *தெக* 17 : 789.
8. *தெக* 7 : 541.
9. *கஆஅ* 1912 : 209.
10. *கஆஅ* 1911 : 2; 1912 : 111; *தெக* 3 : 141.
11. *கஆஅ* 1912 : 133; 1912 : 100.
12. *தெக* 3 : 36.
13. *தெக* 3 : 35; 1911 : 305; 1912 : 129; 1912 : 219.
14. *கஆஅ* 1911 : 19.
15. *தெக* 26 : 276.

16. *கஆஅ* 1912 : 147.
17. *கஆஅ* 1912 : 149.
18. *தெக* 3 : 27.
19. *கஆஅ* 1910 : 322.
20. *கஆஅ* 1912 : 146.
21. *கஆஅ* 1912 : 139; 1912 : 140; 1912 : 142; 1910 : 262.
22. *தெக* 1 : 146; 8 : 5.
23. *கஆஅ* 1912 : 211.
24. *கஆஅ* 1912 : 128.
25. *கஆஅ* 1912 : 263.
26. *கஆஅ* 1912 : 153.
27. *கஆஅ* 1912 : 149.
28. *கஆஅ* 1912 : 128.
29. *கஆஅ* 1912 : 122.
30. *தெக* 26 : 301.
31. *கஆஅ* 1912 : 137.
32. *கஆஅ* 1912 : 135.
33. *கஆஅ* 1912 : 200.
34. *தெக* 3 : 75.
35. *கஆஅ* 1912 : 206.
36. *கஆஅ* 1911 : 368.
37. *எஇ* 5, *ப*. 197.
38. *கஆஅ* 1912 : 127.
39. *கஆஅ* 1909 : 295 (*தெக* 26 : 313).
40. *கஆஅ* 1912 : 133.
41. *கஆஅ* 1909 : 328 (*தெக* 26 : 347).
42. *கஆஅ* 1909 : 326 (*தெக* 26 : 345).
43. D.D. Kosambi, *The Culture and Civilization of Ancient India*, *பாப்புலர் பிரகாசம், மும்பை*, 1975, *பக்*. 196.

**இயல் 3**

**அரசின் பங்களிப்பு**

1. *கஆஅ* 1912 : 368.
2. *கஆஅ* 1912 : 235.
3. *கஆஅ* 1912 : 100.
4. *கஆஅ* 1911 : 371.
5. *கஆஅ* 1912 : 146.



6. *கஆஅ* 1912 : 103.
7. *கஆஅ* 1912 : 136.
8. *கஆஅ* 1912 : 13.
9. *கஆஅ* 1939-40 : 240.
10. *தெக* 2 : 59, 63, 86, 91, 93, 94.
11. *கஆஅ* 1910 : 111.
12. *கஆஅ* 1935-36 : 139.
13. *கஆஅ* 1930-31 : 45.
14. *கஆஅ* 1910 : 112.
15. *கஆஅ* 1911 : 103.
16. K.A. Nilakanta Sastri, *The Colas*, சென்னைப் பல்கலைக் *கழகம்*, 1975, *ப*. 654.
17. G.W. Spencer, 'Royal Initiative under Raja Raja I: Auditing of Temple Account', *IFSHR*, தொகுதி 7, *ப*. 437.
18. *கஆஅ* 1909 : 295.
19. V. Rangacharya, *A Topographical List of the Inscriptions of the Madras Presidency* (Collected till 1915), தொகுதி 1, சென்னை *அரசு*, 1919, *ப*. 459.
20. *கஆஅ* 1912 : 200.
21. *கஆஅ* 1912 : 209.
22. *கஆஅ* 1912 : 128.
23. *கஆஅ* 1909 : 290 (*தெக* 26 : 305).
24. *கஆஅ* 1901 : 266 (*தெக* 7 : 492).
25. *கஆஅ* 1918 : 59.
26. *கஆஅ* 1925 : 224.
27. *கஆஅ* 1925 : 179.
28. *கஆஅ* 1925 : 197.
29. *கஆஅ* 1911 : 371.
30. *கஆஅ* 1911 : 368.
31. இப்பொருள் குறித்த மேலும் பல கல்வெட்டுகளை ஆய்வுக்குட்படுத்தினால் கூடுதல் விவரங்கள் கிடைக்க லாம்.
32. *கஆஅ* 1911-12, பகுதி 2, *ப*. 68, பத்தி 29.
33. 'சோழர் காலத்தில் வரி எதிர்ப்பு இயக்கம்' (*ஆராய்ச்சி*, தொகு 4, எண் 1, அக்டோபர் 1974, பக். 67-78) என்ற எனது கட்டுரையில் இது விவரிக்கப்பட்டுள்ளது. (விரைவில் வரவுள்ள *வரலாற்று நோக்கில் இடைக் காலத் தமிழகம்* என்ற எனது கட்டுரைத் தொகுப்பில் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.)

34. *கஆஅ* 1910 : 253.
35. *தெக* 3 : 11.
36. *கஆஅ* 1912 : 221 : 1912-13, *பகுதி* 2, *ப*. 106, *பத்தி* 33.
37. *கஆஅ* 1911 : 311.
38. *கஆஅ* 1909 : 338 (*தெக* 26 : 357).
39. *கஆஅ* 1912 : 199.
40. *கஆஅ* 1910 : 254.
41. *கஆஅ* 1912 : 199.
42. *கஆஅ* 1925 : 172.
43. *கஆஅ* 1911 : 359.
44. *கஆஅ* 1912 : 201.
45. *கஆஅ* 1912 : 211.
46. D.N. Jha, 'The Temples as Landed Magnetes in Early Medieval South India (c.A.D. 700-1300)', *Indian Society: Historical Probings - In Memory of D.D. Kosambi*, *பீப்பிள்ஸ் பப்ளிசிங் அவுஸ், புதுடெல்லி*, 1977, *ப*. 214.
47. Y. Subbarayalu, *Political Geography of the Chola Country*, *தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை*, 1973, *ப*. 34; A. Appadorai, *Economic Conditions in Southern India (1000-1500 AD)*, தொகுதி 1, சென்னைப் பல்கலைக்கழகம், 1990, *ப*. 152.
48. *கஆஅ* 1961-62 : 449.
49. *கஆஅ* 1940-41 : 291.
50. V. Rangacharya, *Topographical List*, எண் 368, *ப*. 365.
51. *தெக* 1 : 84, 146.
52. *தெக* 1 : 85, 148.
53. *கஆஅ* 1901 : 220.
54. *கஆஅ* 1912 : 206.
55. *கஆஅ* 1917 : 330; 1917-18, *பகுதி* 2, *ப*. 147, *பத்தி* 30.

## இயல் 4
## கோயிலுக்கு எதிரான குற்றங்கள்

1. *கஆஅ* 1928-29 : 160; *பகுதி* 2, *ப*. 74, *பத்தி* 29.
2. *கஆஅ* 1928 : 114.
3. *கஆஅ* 1912 : 512.
4. *கஆஅ* 1912 : 490.
5. *கஆஅ* 1928-29 : 189, *பகுதி* 2, *ப*. 77, *பத்தி* 37.
6. *கஆஅ* 1898 : 1-2.



7. 'உடன் பிறந்தான்' என்ற சொல் கல்வெட்டுக்களில் பயின்று வருகிறது. *பார்க்க*: *தெக* 2 : 63, 64, 94, 95. இவற்றில் தமப்பன், பேரப்பன், சிற்றப்பன், பெண்டாட்டி, மாமன், மருமகன், மச்சுனன் என்பன போன்ற பல உறவுமுறைச் சொற்களும் இடம்பெற்றுள்ளன.
8. *கஆஅ* 1931-32 : 70, 71; *பகுதி* 2, *ப*. 58, *பத்தி* 20.
9. *கஆஅ* 1927 : 279; 1926-27, *பகுதி* 2, *ப*. 83, *பத்தி* 30.
10. *கஆஅ* 1927 : 308; 1926-27, *பகுதி* 2, *ப*. 84, *பத்தி* 30.
11. *கஆஅ* 1904 : 227.
12. *தெக* 5 : 1411.
13. *கஆஅ* 1932-33 : 162; *பகுதி* 2, *ப*. 66, *பத்தி* 25.
14. *கஆஅ* 1906 : 80.
15. K.A.N. Sastri, *Colas*, *ப*. 477.
16. *கஆஅ* 1920 : 577; *எஇ* 21, *ப*. 165.
17. *கஆஅ* 1918 : 393.
18. *கஆஅ* 1911 : 112; 1910-11, *பகுதி* 2, *ப*. 72, *பத்தி* 30.
19. *கஆஅ* 1917 : 244.
20. *தெக* 3 : 9.
21. *கஆஅ* 1929 : 189; 1928-29; *பகுதி* 2, *ப*. 77, *பத்தி* 37.
22. *கஆஅ* 1912 : 125.
23. K.A.N. Sastri, *Colas*, *ப*. 427.
24. *கஆஅ* 1926-27 : 279; *பகுதி* 2, *ப*. 84, *பத்தி* 30.
25. *கஆஅ* 1931-32 : 115; *பகுதி* 2, *ப*. 56, *பத்தி* 16.
26. *கஆஅ* 1912 : 202.

## இயல் 5
## கோயில் ஒரு நிலவுடைமை அமைப்பு

1. *தெக* 3 : 64.
2. *தெக* 3 : 75.
3. *கஆஅ* 1912 : 129, 219, 220, 222, 228.
4. *கஆஅ* 1920 : 593.
5. *கஆஅ* 1922 : 522; 1922-23, *பகுதி* 2, *ப*. 108, *பத்தி* 45.
6. *கஆஅ* 1910 : 254.
7. *பிற்காலச் சோழர் கால வாழ்வியல்* (வெளியிடப் பெறாத எனது பிஎச்டி பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம்), 1978, *பக்*. 22-33.
சோழர் காலம், கிபி 985க்கு முன்-பின் என்று பிரிக்கப்பட்டு, (1) நிலம் / நில உற்பத்திப் பொருள்கள், (2)

ஆடு / மாடு / பால் / தயிர் / நெய், (3) பொன் / காசு / அணிகள், (4) பிற என நான்கு வகையான இனங்களுக்கும் கொடை கொடுக்கப்பட்ட பாங்கு 24 அட்டவணைகளில் ஆராயப்பெற்றுள்ளன. பிரிக்கப்படாமல் இருந்த தஞ்சை (12 ஊர்கள்), திருச்சி (2), வடஆர்க்காடு (2), தென்னார்க்காடு (5), செங்கற்பட்டு (2) என 23 ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. 24ஆவது அட்டவணை, இவற்றின் சராசரியாகும். நிலக் கொடையின் வளர்ச்சி, தொடக்கத்தில் குறைவாக இருந்து, காலபோக்கில் வேளாண் வளர்ச்சியினையொட்டி மிகுந்திருப்பது இதில் உறுதி செய்யப்பட்டுள்ளது. நிலத்தின் மதிப்பு உயர்ந்து வந்ததையே இது காட்டுகிறது எனலாம்.

8. *தெக*3 : 142.
9. *எஇ*3, பக். 359-60 (*கஆஅ* 1888 : 8).
10. *எஇ*3, ப. 279 (*கஆஅ* 1894 : 167).
11. *கஆஅ* 1909 : 314.
12. 'Fight for Rights in the Later Chola Period', (*Social Scientist*, தொகுதி 2, எண் 8, 1973, பக். 61-66) என்ற எனது கட்டுரையைப் பார்க்க. (விரைவில் வரவுள்ள *வரலாற்று நோக்கில் இடைக் காலத் தமிழகம்* என்ற எனது கட்டுரைத் தொகுப்பில் இக்கட்டுரையின் தமிழ் வடிவம் இடம்பெற்றுள்ளது.)
13. *கஆஅ* 1905 : 120; 1895 : 189.
14. *கஆஅ* 1904 : 353; *புதுக்கோட்டைக் கல்வெட்டுகள்* 125.
15. தி. நா. சுப்பிரமணியம், *தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுகள்*, தொகுதி 3 பகுதி 2, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, ப. 98.
16. *மேலது*.
17. *தெக* 2 : 70.
18. த. வசந்தா, 'உழைப்பில் பங்கு பெறாதவர்களுக்கு நில உரிமை மாற்றம்', *நாவாவின் ஆராய்ச்சி*, எண் 47, 1999, பக். 49-60.
19. *தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுகள்*, தொகுதி 3, பகுதி 2.
20. K.A.N. Sastri, *Colas*, பக். 456-57.
21. *தெக* 4 : 391.
22. *தெக* 26 : 276.
23. *கஆஅ* 1911 : 464.
24. *கஆஅ* 1910 : 245.



25. நா. வானமாமலை, 'தஞ்சைக் கோயிலின் செலவும் நில வருவாயும்', *ஆராய்ச்சி*, எண் 14, பாளையங்கோட்டை, 1974, ப. 119.
26. *கஆஅ* 1927 : 143; 1926-27, பகுதி 2, ப. 85, பத்தி 31.
27. *கஆஅ* 1916 : 630.
28. *கஆஅ* 1938 -39 : 132.
29. *கஆஅ* 1918 : 410.
30. *கஆஅ* 1918 : 495.
31. *கஆஅ* 1910 : 93.
32. *தெக* 3 : 151.

## இயல் 6
## கோயில் — நில உற்பத்தியாளர் உறவுகள்

1. K.A.N. Sastri, *Colas*, ப. 581.
2. *கஆஅ* 1927 : 234; 1926-27, பகுதி 2, ப. 82, பத்தி 26.
3. *கஆஅ* 1918 : 1; 1917-18, பகுதி 2, ப. 152, பத்தி 41.
4. *கஆஅ* 1917 : 245, 1917-18, பகுதி 2, ப. 152, பத்தி 41.
5. *கஆஅ* 1918 : 429, 538; 1918-19, பகுதி 2, ப. 97, பத்தி 19.
6. *கஆஅ* 1925 : 209.
7. K.A.N. Sastri, *Colas*, ப. 576.
8. *தெக* 3 : 203.
9. *கஆஅ* 1925 : 188; 1924-25, பகுதி 2, ப. 85, பத்தி 21.
10. *தெக*. 8 : 193 (*கஆஅ* 1902 : 596).
11. *கஆஅ* 1908 : 189.
12. *கஆஅ* 1910 : 332; 1910-11, பகுதி 2, ப. 72, பத்தி 30.

## இயல் 7
## நிலவுடைமையாளர் பொறுப்பில் கோயில்

1. *தெக* 2 : 69.
2. *கஆஅ* 1898 : 2.
3. *கஆஅ* 1898 : 1.
4. எடுத்துக்காட்டாக, சுந்தரசோழ மூவேந்தவேளான் (*கஆஅ* 1912 : 221), ராசேந்திரசோழ மூவேந்தவேளான் (1912 : 146), ராஜராஜசோழ மூவேந்தவேளான் (1912 : 103), விக்கிரம சோழ படுவூர் நாடாள்வான் (1912 : 100).

5. நொபொரு கராஷிமா, *வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம்: 1 சோழர் காலம் (850-1300)*, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1995, பக். 85, 93.
6. *கஆஅ* 1929-30 : 200.
7. *கஆஅ* 1943-44 : 274.
8. *கஆஅ* 1912 : 500.
9. *தெக* 2 : 65.
10. நொபொரு கராஷிமா, *வரலாற்றுப் போக்கில்*, ப. 243; *கஆஅ* 1943-44 : 283.
11. *மேலது*, ப. 234; *கஆஅ* 1926 : 265.
12. *கஆஅ* 1928-29 : 200.
13. *கஆஅ* 1925 : 80.
14. Frederick Engels, *The Origin of the Family, Private Property and the State*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1972, ப. 169.
15. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், *பிற்காலச் சோழர் வரலாறு*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா மலை நகர், 1974, ப. 478.
16. க. கைலாசபதி, *பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்*, மக்கள் வெளியீடு, சென்னை, 1978, பக். 185-86.
17. *தெக* 2 : 6.
18. *தெக* 2 : 38.
19. *கஆஅ* 1925 : 481.
20. *கஆஅ* 1924-25; பகுதி 2, ப. 81, பத்தி 12.
21. Y. Zubritsky, V. Kerov, D. Metropolsky, *A Short History of Pre-Capitalist Society*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, ப. 122.
22. *கஆஅ* 1930-31 : 80; பகுதி 2, ப. 40. பத்தி 5.
23. *கஆஅ* 1925 : 406; 1925-26, பகுதி 2, ப. 86, பத்தி 25.

### இயல் 8
### நிலவுடைமையாளர் கையில் நீர் வளங்கள்

1. *புறநானூறு* 18 : 24.
2. *மதுரைக்காஞ்சி* 89.
3. *புறநானூறு* 18 : 18-30.
4. *பட்டினப்பாலை* 283-284.
5. *பதிற்றுப்பத்து* 24 : 27-30.



6. *புறநானூறு* 33 : 5.
7. *கஆஅ* 1921 : 382.
8. *க.ஆ.அ* 1914 : 105; 1906 : 347; 1919 : 140; 1915 : 264: 1935-36 : 72.
9. *கஆஅ* 1922 : 422.
10. *கஆஅ* 1935-36 : 141; 1939-40 : 233.
11. *கஆஅ* 1931-32 : 88; பகுதி 2, ப. 56.
12. *கஆஅ* 1936-37 : 225.
13. *கஆஅ* 1925 : 6.
14. *கஆஅ* 1918 : 59.
15. *கஆஅ* 1925 : 224.
16. த. வசந்தா, 'பண்டைத் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றத்தின் சில தன்மைகள்', *நாவாவின் ஆராய்ச்சி*, எண் 38-39, 1991, பக். 86-94.
17. *புறநானூறு* 29.
18. *புறநானூறு* 335 : 4-12.

### இயல் 9
### கோயில் என்ற பொருளியல் மையம் ஏன்?

1. ஆ. சிவசுப்பிரமணியன், *மந்திரமும் சடங்குகளும்*, மக்கள் வெளியீடு, சென்னை, 1999, பக். 24, 25.
2. *மேலது*, ப. 26.
3. க.த. திருநாவுக்கரசு, 'நாகரிகமும் பண்பாடும்', *தமிழ் நாட்டு வரலாறு - சங்க காலம் - வாழ்வியல்*, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை, 1983, ப. 212.
4. *பரிபாடல்* 19 : 46-57.
5. *பரிபாடல்* 9 : 72-75.
6. மா. இராசமாணிக்கனார், *பத்துப்பாட்டு ஆராய்ச்சி*, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970, பக். 581-2; நா. வானமாமலை, 'பரிபாடலில் முருக வணக்கம்', *ஆராய்ச்சி*, இதழ் 2 மலர் 3, சூன் 1971, பாளையங் கோட்டை, பக். 245-254.
7. *பரிபாடல்* 19 : 85-94; *திருமுருகாற்றுப்படை* 227-243.
8. *திருமுருகாற்றுப்படை* 177-188.
   N. Subrahmanian, *Sangam Polity*, ஆசியா பப்ளிசிங் அவுஸ், சென்னை, 1966, ப. 353. வளர்ச்சி பெற்ற வழிபடுமுறை அந்தணர்களால் பின்பற்றப்பட்டது என்று சுப்பிர மணியம் கூறுகிறார். ஆனால், அர்ச்சகர்களாக அவர்கள்

இருந்தார்களா என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை. *திருமுருகாற்றுப்படை* காட்டும் திருவேரகம் என்ற ஊரில் அந்தணர் வழிபாட்டு முறைகள் கூறப்படுதலை வைத்து அவர்கள் அர்ச்சகர்களாக இருந்தனர் என்று மா. இராசமாணிக்கனார் கொள்கிறார் (*பத்துப்பாட்டு ஆராய்ச்சி*, பக். 227-30). ஆனால், பாடல் வரிகள், அந்தணர்கள் அர்ச்சகர்களாக இருந்ததாக வெளிப் படுத்தவில்லை. மேலும், திருவேரகமன்றி, பிற ஐந்து இடங்களிலும் அந்தணர்கள் வழிபடுதலோ, வழிப் படுத்துதலோ *திருமுருகாற்றுப்படையில்* பாடப்பட வில்லை என்பதையும் மனதில் கொள்ளாமல் இருக்க முடியாது.

9. P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, ஆசியன் எசுகேசனல் சர்வீசஸ், புதுடெல்லி, 1983. ப. 611.
10. *பிற்காலச் சோழர் கால வாழ்வியல்* (வெளியிடப் பெறாத எனது பிஎச்டி பட்ட ஆய்வேடு), பக். 22-33. பார்க்க இயல் 5, குறிப்பு 7.
11. ஏ. ஏகாம்பரநாதன், *சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி*, ஜைன ஆய்வியல் கழகம், சென்னை, 1998, பக். 127-128.
12. ‘இடைக்கால தமிழகத்தில் வேளாண் வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள்’ எனும் எனது கட்டுரையினைப் பார்க்க (*நாவாவின் ஆராய்ச்சி*, எண் 47, சனவரி 1999, பக். 67-70). (விரைவில் வரவுள்ள *வரலாற்று நோக்கில் இடைக் காலத் தமிழகம்* என்ற எனது கட்டு ரைத் தொகுப்பில் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.)
13. R. Rajalakshmi, *Tamil Polity*, என்னெஸ் பப்ளிகேசன்ஸ், மதுரை, 1983, ப. 162.
14. C. Meenakshi, *Administration and Social Life Under the Pallavas*, சென்னைப் பல்கலைக்கழகம், 1997, ப. 211.
15. V. Venkayya, *Epigraphica Indica*, தொகுதி 8, பக். 292-295.
16. *மேலது*.
17. *பாண்டியர் செப்பேடுகள் பத்து* (வேள்விகுடிச் செப்பேடு கள்), தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, 1967, ப. 42.
18. *தெக* 13 : 317.
19. நீர்வளமுள்ள நிலப்பகுதிகளைப் பார்த்து, வளமற்ற பகுதிகளில் நிலவுடைமை கொண்டிருந்தவர்களும் பின்னர் கோயில்களை மையமாகக் கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிறுவினார்கள். இங்கெல்லாம் அரசியல், பொருளிய, பண்பாட்டுத் தாக்கங்கள் குறைவாகவே இருந்தன. ஆனால், சமூக ஆதிக்கம் ஓரளவு உண்டு என்று கூற முடியும்.



20. த. வசந்தா, ‘உழைப்பில் பங்கு பெறாதவர்களுக்கு நில உரிமை மாற்றம்’, *நாவாவின் ஆராய்ச்சி*, எண் 47, சனவரி 1999, பக். 49-60.
21. பார்க்க இயல் 6, குறிப்புகள் 9, 10.
22. *கஆஅ* 1910 : 277.
23. *புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள்* 186.
24. நொபுரு கராஷிமா, *வரலாற்றுப் போக்கில்*, பக். 84-85.
25. *பிற்காலச் சோழர் கால வாழ்வியல்* (வெளியிடப்படாத எனது பிஎச்.டி. ஆய்வேடு), 1978, பக். 71-83. மேலும், ‘இடைக் காலத் தமிழகத்தில் வேளாண் வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள்’ என்ற எனது கட்டுரையையும் (பக். 72-73) பார்க்க.
26. K.A.N. Sastri, *Colas*, ப. 464.
27. *மேலது*, பக். 285-298.
28. இரண்டாம் ராசராசன் இறந்த ஆண்டு 1163, 1166, 1173 என்றும், இரண்டாம் ராசாதிராசன் ஆட்சிப் பொறுப் பேற்ற ஆண்டு 1163, 1166 என்றும் வேறுபாடுகள் நிலவு கின்றன.
29. *எஇ* 21, பக். 184-193; *கஆஅ* 1924 : 433.
30. K.A.N. Sastri, *Colas*, ப. 493.
31. Henneth, R. Hall, *Trade and State Craft in the Age of Colas*, அபினவ், புதுடெல்லி, 1980, ப. 20.
32. *கஆஅ* 1925 : 403.
33. *கஆஅ* 1925 : 407.
34. *கஆஅ* 1925 : 231.
35. Subbarayalu, *Political*, பக். 42-44.
36. *மேலது*, ப. 43; *கஆஅ* 1912 : 262.
37. *கஆஅ* 1927 : 148; 1926-27, பகுதி 2, ப. 83, பத்தி 28; 1927-28 :113, 120; பகுதி 2, ப. 54, பத்தி 11; 1929-30 : 176; பகுதி 2, ப. 78, பத்தி 16.
38. K.A.N. Sastri, *Colas*, பக். 498, 499.
39. *கஆஅ* 1917 : 330; 1917-18, பகுதி 2, ப. 147, பத்தி 30; 1922 : 239; 1921-22, பகுதி 2, ப. 102, பத்தி 18; 1922-23 : 379; பகுதி 2, ப. 103, பத்தி 29; 1928-29 : 242; பகுதி 2, ப. 75, பத்தி 33.
40. இரா. பூங்குன்றன், ‘கரையோலை’, *வரலாற்றில் புது வெள்ளம்*, தொல்பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை, 1991, பக். 169-181.

41. *மேலது*. மறைந்த புலவர் பாகூர் குப்புசாமி அளித்த இக் கல்வெட்டு வரிகளை முனைவர் இரா. பூங்குன்றன் தமது கட்டுரையில் பயன்படுத்தியுள்ளார்.
42. *தெக* 3 : 142.
43. பார்க்க இயல் 7, குறிப்பு 12.
44. Frederick Engels, *Origin*, பக். 166-8.

### இயல் 10
### நிலவுடைமைக்குச் சார்பான கருத்துநிலை உருவாக்கம்

1. நா. வானமாமலை, 'ஒட்டப்பிடாரத்தின் கிராமத் தெய்வங்கள்', *நாவாவின் ஆராய்ச்சி*, எண் 50, அக்டோபர் 1999, சென்னை, பக். 5-12.
2. D.N. Jha, 'Relevance of Peasant State and Society to Pallava-Cola Times', in Noboru Karashima (ed.), *Indus Valley to Mekong Delta*, நியூ எரா, சென்னை, 1985, ப. 121.
3. கராஷிமா, *வரலாற்றுப்போக்கில்*, பக். 60, 63.
4. *தெக* 2 : 65.
5. விடுதலை இயக்கத்துக்கு இளைஞர்களை உருவாக்க 1922இல் வ.வெ.சு. அய்யரால் தொடங்கப்பட்ட நெல்லை மாவட்டம் சேரன்மாதேவிக் குருகுலத்தில், பிராமணச் சாதி மாணவர்களுக்கு *வேத*, *உபநிடதங்களும்* பிற சாதி யினருக்கு *தேவாரம்* போன்றனவும் கற்றுத்தரப்பட்டன. உணவும் வெவ்வேறு இடங்களில் அளிக்கப்பட்டது.
6. இன்றுகூட, கோயில்களில், தமிழ் அர்ச்சனையை ஏற்றுக் கொள்கின்ற மனநிலையில் பிராமணர்கள் இல்லை என்பது நோக்கத்தக்கது.
7. செல்வாக்கு மிக்க வணிக இல்லத்தில் பிறந்தவராகவும் ஈரோடு நகரமன்றத் தலைவராகவும் விளங்கிய பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், ஆரியச் சடங்களும் பிராமணப் பங்கேற்பும் இல்லாத கொங்கு வேளாளர் திருமணங்கள் பலவற்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருந் தார்; இதனால்தான், ஆரியச் சடங்குகளும் பிராமணப் பங்கேற்பும் இல்லாத சீர்திருத்தத் திருமணங்களை நடத்தும் எண்ணம் பெரியார் மனத்தில் முளைவிட்டது என்று ஈரோடு பகுதியில் பொதுவான ஒரு பேச்சு உண்டு. ஆரியச் சடங்குகளும் பிராமணப் பங்கேற்பும் இல்லாமல் மணம் செய்துகொண்டவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ் வதைப் பார்த்ததால், தொடர்பில்லாத மொழியில், தொடர்பில்லாதவர்கள் நடத்திவைக்கின்ற நிகழ்வுகளை மறுக்கவேண்டும் என்ற எண்ணம் பெரியார் மனத்தில் தொடக்கத்திலேயே தோன்றியிருக்கலாம்.
8. *பெரியபுராணம்*, சிறுத்தொண்ட நாயனார் புராணம், 22, 57-59.
9. K.A.N. Sastri, *Colas*, பக். 492-3, 578-9; C. Minakshi, *Pallavas*, பக். 176-82; N. Subrahmanian, *Tamil Social History*, தொகுதி 2, ஆசியவியல் நிறுவனம், சென்னை, 1999, பக். 139-146. இப்பட்டியல் மிக நீண்டது.
10. K.A.N. Sastri, *Colas*, ப. 493.
11. *மேலது*.
12. *கஆஅ* 1897 : 46.
13. K.A.N. Sastri, Colas, ப. 579.
14. *கஆஅ* 1898 : 1, 2.
15. வெ. கிருஷ்ணமூர்த்தி, 'சோழர் வளர்த்த வேதக் கல்வி', *சோழர் வளர்த்த வேதக் கல்வி முதலிய கட்டுரைகள்*, ஆய்வு வட்ட வெளியீடு, சென்னை, 1999, பக். 5-23.
16. பார்க்க இயல் 7, குறிப்பு 4.
17. 'சோழர் காலத்தில் 'தீண்டத்தகாதார்' யார்? ' எனும் எனது கட்டுரையினைப் பார்க்க (*நாவாவின் ஆராய்ச்சி*, எண்கள் 48, 49, ஏப்ரல் மற்றும் சூலை 1999). (விரைவில் வரவுள்ள *வரலாற்று நோக்கில் இடைக் காலத் தமிழகம்* என்ற எனது கட்டுரைத் தொகுப்பில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.)
18. Frederick Engels, *Origin*, ப. 168.



### இயல் 11
### தொகுப்புரை

1. இன்று வரை இந்த நிலை நீடிக்கிறது.
2. கிபி 12, 13ஆம் நூற்றாண்டுகளில் அம்மன் வழிபாடு செல்வாக்குப் பெறத் தொடங்கியதாக முனைவர் இரா. பூங்குன்றன் மதிப்பிடுகிறார்.
3. Subbarayalu, *Political*, ப. 34.
4. நொபுரு கராஷிமா, *வரலாற்றுப் போக்கில்*, பக். 84, 85.
5. கார்த்திகேசு சிவத்தம்பி, *மதமும் கவிதையும்*, மக்கள் வெளியீடு, சென்னை, 1999, பக். 11-30.
6. *தெக* 3 : 25; 5 : 238, 283; மேலும் பல பதிவுகள் உள்ளன.